அருள்நந்திசிவம் அருளிய

சிவஞானசித்தியார்

பரபக்கம்

மூலமும் விளக்கவுரையும்

விளக்கவுரை

முனைவர் பழ. முத்தப்பன்

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை

அருள் நந்தி சிவம் அருளிய

சிவஞானசித்தியார் - பரபக்கம்

மூலமும் விளக்கவுரையும்

விளக்கவுரை

முனைவர். **பழ. முத்தப்பன்**

முதல்வர்

செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி

திருச்சிராப்பள்ளி

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்

எண் 17, மா.பொ.சி. தெரு, எம்.ஜி.ஆர். நகர்,

சென்னை - 78.

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	சிவஞான சித்தியார் - பரபக்கம் மூலமும் விளக்கவுரையும்
விளக்கவுரை	:	முனைவர் பழ. முத்தப்பன்
பொருள்	:	தத்துவ நூல் உரை
பதிப்பு	:	முதற்பதிப்பு - 21.10.2003
நூலின் அளவு	:	21 x 14 செ.மீ.
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கம்	:	240 + 24 = 264
படிகள்	:	1000
விலை	:	ரூ. **75**
அச்சு	:	அண்ணாமலை பிரிண்டர்ஸ் திருச்சி - 8.
வெளியீடு	:	சு. கார்த்திகேய சிவம் செயலர், ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட் 17, மா.பொ.சி. தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 78.
நூல் கிடைக்குமிடம்	:	1. ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட் சென்னை - 78. 2. மீனாட்சி நூலகம் அரிமா நகர், பொன்னமராவதி - 622 407.

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

அம்மானே ஆகமசீலர்க்கு அருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூல் புலவாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்தளி அம்மானே

7-ம் திருமுறை ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

எழுபதாம் ஆண்டு நிறைவு விழா

ஈன்ற நல்தாயினும் இனிய பெருந்தாயாகிய இறைவன் உமையொருபாகன் சிவபெருமானின் திருவருள் துணையினாலும், ஸத்குருநாதர்களின் நல்லாசியாலும் எங்களது சென்னை ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்டின் மூலமாக ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்னும் கச்சியப்ப சிவாச்சார்ய சுவாமிகளின் அருள்வாக்கை மனத்தில் கொண்டு அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதன்வழி இன்று எங்களது அமைப்பின் உறுதுணையாளர் மதிப்பிற்குரிய **ஸ்ரீ இரா. செல்வகுமார்** அவர்களின் அன்புத் தாயார் ஸ்ரீமதி **கிருஷ்ணவேணி இராதாகிருஷ்ணன்** அவர்களின் 70வது பிறந்த நாள் விழா நடைபெறும் நன்னாளில் **''சிவஞானசித்தியார் ''** என்னும் ஞானப்பனுவலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பிறந்த நாள் விழா என்ற பெயரில் மேலைநாட்டு மக்களைப் போல் நம்மவர்களும் கூத்தும் கும்மாளமும் செய்கின்ற இன்னாளிலும் இதுபோன்ற நற்பணிகளை செய்யும் பெருந்தகைகள் இருக்கிறார்கள் என்பதை பார்க்கும் பொழுதுதான் மனம் நிம்மதியடைகிறது. மகிழ்கிறது. இதுபோன்று இன்னும் பல்வேறு நற்பணிகளையும் செய்வதற்கு அவர்களுக்கு எல்லா நலன்களையும் வழங்கித் துணை நிற்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சைவநெறி :

சிவபெருமானை முழுமுதற் பொருளாகப் போற்றி வழிபடும் சமயம் சைவசமயம். அன்பு நெறியை உலகெங்ஙனும் சிறந்து விளங்கச் செய்தலே இச்சமயத்தின் தலையாயக் கொள்கையாகும்.

''எவ்வுயிரும் பராபரன் தன் சன்னதியாகும்
இலங்கும் உடலனைத்தும் ஈசன் கோயில்''

''எவ்வுயிரும் நீங்காதுறையும் இறைசிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' எனவரும் அருள் மொழிகள் அக்கருத்தைத் தெளிய ஓதுவனவாகும்.

சைவம் என்ற பெயரில் காளாமுகம், பாசுபதம் முதலான பல சமயங்கள் விளங்கினும் சிறப்பு நிலையில் இப்பெயர் வைதிக சைவத்தையே குறிக்கும் என்பது ஆன்றோர் முடிவு. உலகத்து சமயங்கள் அனைத்தின் கொள்கைகளையும் தன்னுள் கொண்டுதான் அவற்றுள் ஒன்றாகாது அவற்றினின்றும் மேம்பட்டு மற்ற சமயங்களையெல்லாம் தனக்கு பரிவாரமாகக் கொண்டு ராஜாங்கத்தில் அமர்ந்து விளங்குவதே அழகிய வைதிக சைவத்தின் அருஞ்சிறப்பாகும்.

சிவநெறிக் கொள்கைகளை விளக்குகின்ற நூல்கள் பல அவை அனைத்திற்கும் மூலமாக விளங்குபவை வினையின் நீங்கிய இறைவன் அருளிய முதல் நூல்களாகிய வேதங்களும், சிவாகமங்களும் ஆகும்.

''தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்'' *ஞானசம்பந்தர்*
''பணியிலாகமம் சொல்லுந்தன் பாங்கிக்கே'' *திருநாவுக்கரசர்*
''அண்டர் தமக்காகம நூல்மொழியும்'' *சுந்தரமூர்த்தி சுவாமிகள்*
''ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' *மணிவாசகர்.*
''வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்'' *திருமூலர்.*

''நெறியார் சடையரைத் தீண்டி முப்போதும் நீடாகமத்தின்
அறிவால் வணங்கி அர்ச்சிப்பவர்''

''பன் மறையோர் செய் தொழிலும் பரமசிவாகம விதியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே''

நம்பியாண்டார் நம்பிகள்

''உம்பர் நாயகர் பூசனைக்கு அவர்தாம் உரைத்த
ஆகமத்து உண்மையே தலைநின்று''

சேக்கிழார் பெருமான்

''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்''

அருணந்தி சிவனார்

''உயர்ஞான மிரண்டாம் மாறாமலமகல அகலாத மன்று
போதத் திருவருள் ஒன்று
ஒன்றதனைத் தெவிய ஓதும் சிவாகமம் என உலகறியச் செப்பும்
நூலே'' *உமாபதி சிவம்*

எனத் திருமுறைகளும், சாத்திரங்களும் அக்கருத்தை எடுத்து இயம்புகின்றன. எனவே திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும், வேத சிவாகமங்களின் வழிநூல்கள் எனக் கொள்ளப்படும். அவை அவனருளாலே அவன் தாள் வணங்கி அருள்பெற்ற அருளாளர்களால் அருளப்பட்டதால் அவைகளையும் சிவபெருமானின் வாக்காகவே கொள்ள வேண்டுமென்பது சைவசமய கொள்கையாகும். அவற்றுள் திருமுறைகள் தோத்திரங்கள் எனவும் மெய்க்கண்ட நூல்கள் சாத்திரங்கள் எனவும் வழங்கப்பெறும். அவை திருவுந்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் ஈறாகிய பதினான்கு நூல்களாகும்.

''உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் – வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று''

என்னும் பழைய வெண்பா அப்பதினான்கு நூல்களையும் புலப்படுத்தும். அவற்றுள் திருவுந்தியாரும்,

திருக்களிற்று படியாரும், காலத்தால் முற்பட்டு விளங்கினும் முப்பொருள் உண்மையை நியாய வாயிலானே விளக்கிக் கூறுவதால் சிவஞான போதம் தலைமையும், சிறப்பும் பெற்று விளங்குகின்றது.

சிவஞான சித்தியார்

சிவஞான போதத்தை முதலாகக் கொண்டு அதற்கு விரிவுரையாகத் தோன்றியதே சிவஞான சித்தியார் என்னும் இந்த ஞான நூலாகும். இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இரு பகுதிகளையுடையது. பரபக்கம் என்பது பிறருடைய கொள்கைகளாகக் கூறுவதும் சுபக்கம் என்பது தம்முடைய கொள்கைகளாகக் கூறுவதுமாகும். சிவஞான போதத்தின் அவையடக்கத்துள் வரும் ''தம்மை உணரார் உணரார் உடங்கியைந்து தம்முள் புணராமை கேளாம் புறன்'' என்னும் பகுதியே பரபக்கம் என 301 திருவிருத்தங்களால் விரித்துக் கூறப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் ஸ்ரீமத் அருணந்தி சிவாச்சாரியார் முதற்கண் பரபக்கத்தை அருளிப் பின்னரே சுபக்கத்தை செய்தார் என்பது ஆன்றோர் முடிவு, பரபக்கத்தில் மறுக்கப்படுகின்ற சமயங்கள் பல இப்பொழுது இல்லை எனவே இதை கற்றுணர்தல் அவசியம் இல்லை என்பது சிலர் கொள்கை. ஆனால் புதிதாக சைவ சித்தாந்தம் பயிலத் துவங்கும் மாணவர்களுக்கு அவசியம் இல்லை என்றாலும் பின்னாளில் அவர்கள் மற்ற சமயங்களின் கொள்கைகளையும் அவற்றிற்கு சைவசித்தாந்தம் ஏன் உடன்படவில்லை என்ற காரணத்தையும் உணர்ந்து கொள்வதற்கு இதுபோன்ற நூல்கள் பெரிதும் துணைசெய்யும். எனவே இவைகளையும் கற்றுத் தெளிதல் நலம். பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும், என திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீன ஆதி பரமாசாரியார் ஸ்ரீலக்ஷாத்யாயீஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகளாலும், பாதி விருத்தத்தால் இந்தப் பார் விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைச் சாரும் நாள் என்னாளோ? என்னும் சிவராஜ யோகானுபூதிச் செல்வர் தாயுமான சுவாமிகளாலும் வியந்து போற்றும் பெருமையுடைத்து இந்த ஞானநூல். இந்நூலுக்கு உரைகள் பல இருக்கின்றன, என்றாலும்

காலம் கருதி திருச்சி செட்டிநாடு கல்லூரியின் முதல்வர் தமிழாகரர் முனைவர். **பழ. முத்தப்பன்** அவர்களின் எளிய உரையுடன் வெளியிடுகிறோம். மாணவமணிகள் படித்துப் பயனடைவார்களாக.

வடமொழியும், தென்தமிழும்

வடமொழி, தென்தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் முதலாசிரியர் சிவபெருமான் என்பதை முதலில் சைவர்கள் நன்றாக கருத்தில் கொள்ள வேண்டும். அவை இரண்டையும் இரு கண்களாகக் கொண்டு கற்றுணர்தல் வேண்டும். இன்று நம் நாட்டில் பலர் வடமொழியை புறக்கணிப்பதை பார்க்கும் பொழுது மனம் வேதனையடைகிறது. காரணம் சைவரல்லாதவர்கள் வடமொழியைப் புறக்கணிக்கலாம், ஆனால் சைவர்கள் அவ்வாறு செய்வது யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக் கொள்ளும் செயலை ஒக்கும். நம் நாட்டு மொழியை அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும், ஜெர்மானியர்களும், படித்து நூல்கள் எழுதுவதைப் பார்த்த பிறகும் சைவர்கள் அதைப் படிக்காமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும். வடமொழி என்பது ஒரு இனத்திற்கோ ஒரு மாநிலத்திற்கோ சொந்தமானதல்ல அது பாரத தேசத்தின் பெருஞ்சொத்து என்பதை நம் சைவர்கள் உணரவேண்டும்.

நன்னூல், சேனாவரையம் முதலிய இலக்கண நூல்கள் வடமொழி எல்லா தேசத்திற்கும் பொது என்று கூறுகின்றன. திருமுறை ஆசிரியர்களும்.

''ஆரியத்தொடு செந்தமிழ் பயனறிகிலா அந்தகர்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
செந்தமிழோடாரியனைச் சீரியானை
ஆரியந் தமிழோடிசை யானவன்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்
வடசொலும் தமிழ்ச்சொலும் தான் நிழல் சேர''

என்றெல்லாம் கூறியிருப்பதை உணர்ந்து தெளிதல் வேண்டும். இதுவரையில் நம் நாட்டில் மற்ற சமயங்களால் தான் சைவ சமயத்திற்கு கஷ்டங்கள் நேர்ந்ததை வரலாற்றால் அறிகிறோம். ஆனால் இன்றோ ஒரே சமயத்துக்குள் இருந்துகொண்டு மொழியின் பெயரால் அழகிய சமயத்தைப் பிரிக்க நினைக்கும் இவர்களைப் பார்க்கும் பொழுது இது கலியின் கொடுமையோ ஆணவத்தின் வலிமையோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. உண்மையில் இவர்கள் சிவபக்தர்கள் தானா என்றும் ஐயம் உண்டாகிறது. வடமொழி சைவர்களுக்கு தேவை இல்லை என்றால் ஞானசம்பந்தர் முதல் சிவனடியார்கள் அனைவரும் அதைப் போற்றுவானேன்? சிந்தியுங்கள். உண்மை நூல்களைப் படியுங்கள். தெளியுங்கள். பிறரால் பேசப்படுவதை மட்டும் வைத்துக் கொண்டு அவற்றை உண்மை என்று நம்பாதீர்கள். உண்மை என்ன என்று நீங்களும் ஆராயுங்கள்.

சைவ சமயம் சார்பான வடமொழி நூல்கள் பல இன்னும் வெளிவராமல் ஓலைச் சுவடிகளாகவே இருக்கின்றன. காரணம் வடநாட்டுச் சைவர்கள் இந்நூல்களை தென்னாட்டிற்குரியது என்று ஒதுக்குகிறார்கள். நம்மவர்களோ அது வடமொழி நூல் என்று ஒதுக்குகிறார்கள். உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப் போல விளங்குகின்றன அந்நூல்கள், அவற்றை வெளியிடுவதும் சைவர்கள் கடனே. இதுவரை எளியேனால் கூறப்பட்ட கருத்துக்களை மனத்தில் கொண்டு

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்னும் பொய்யாமொழிக்கிணங்க திருமுறைகளிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும், தாயுமானவர், அருணகிரிநாதர் போன்ற அனுபூதிச் செல்வர்களின் நூல்களிலும், திருவாவடுதுறை ஆதீனத்து பண்டார சாத்திரங்களிலும், தருமபுர ஆதீனத்து பண்டார சாத்திரங்களிலும் படித்துப் பாருங்கள். அவற்றுள் ஏதாவது ஒரு இடத்தில் வடமொழி

சைவர்களுக்கு அல்ல என்றோ அது வடநாட்டிற்குரியது என்றோ கூறுகிறார்களா என்று ஆராயுங்கள். அப்படியொரு கருத்தை உங்களால் காணவே முடியாது. சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்து சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமிழ்ப்பெரியார் திரு.வி.க. ஆகியோரது நூல்களைப் படியுங்கள். உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். பிறகு குறுகிய மனம் படைத்து இக்காலத்து அறிஞர்கள் சிலரின் நூல்களைப் படியுங்கள். சோற்றுக்குள் முழுப்பூசணிக்காயை மறைக்க முயலும் அவர்களது இயல்பு உங்களுக்குத் தானாகவே விளங்கும். பின்னர் வேற்றுமைகளை களைந்து எறிந்து விட்டு வடமொழியையும் நன்றாகப் படித்து இரு மொழிகளிலும் விளங்குகின்ற சைவநூல்களை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிய வேண்டும். ''சமயம் நமக்கு என்ன செய்தது என்று பார்க்காமல் சமயத்திற்கு நாம் என்ன செய்தோம் என்று பாருங்கள்'' என்னும் சுவாமி விவேகானந்தரின் வாக்கை கருத்தில் கொண்டு சைவசமயம் வளர ஒவ்வொரு சைவரும் தங்களால் இயன்றளவும் பணியாற்ற வேண்டும். அதுவே நமது கடன். இவைகளைச் செய்தால் மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சிவபக்தியும் சைவசித்தாந்தமும்

சைவசமயக் கொள்கைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதிகளாக விளங்குகின்றது. இவை உயிர்களை படி நிலையில் முக்திக்கு அழைத்துச் செல்கின்றது. ஞானத்தை அடைய வேண்டி இயற்ற வேண்டிய சாதனைகளாக முதல் மூன்று நெறிகளும் விளங்குகின்றன. கோடியில் ஒருவருக்கு வேண்டுமானால் முற்பிறவியின் பயனால் மிக விரைவிலேயே ஞானம் உண்டாகுமேயன்றி அனைவருக்கும் உடனே ஞானம் சித்திக்காது. எனவே சைவர்கள் அனைவருமே சரியாதி யோகாந்த நெறிகளை நன்றாக நிறைவேற்றிய பின்னர் தான் ஞானபாதம் படிக்கத் துவங்க வேண்டும் என்பதை ''யோகம் திகழ் புதல்வாகேள்'' எனவரும்

உண்மை விளக்கச் செய்யுளால் அறியலாம். ஆனால் இன்றோ பெரும்பாலானோர் சிவதீக்ஷை பெற்றுக்கொள்ளாமலும் சிவபக்தியோடு கூடிய வழிபாடுகளைச் செய்யாமலும் வெறும் நூலறிவால் மட்டுமே சைவசித்தாந்தம் பேசுகிறார்கள். அது சிறப்பன்று. அவர்கள் சாதன இயலையும், பயனிலையும் பற்றிப் படித்தும் பேசியும் இருக்கிறார்களேயன்றி அவற்றைத் தாங்கள் சொந்த வாழ்க்கையில் அனுஷ்டித்தும், அனுபவித்தும் உணர்வதில்லை. சைவசித்தாந்தம் என்பது வெறும் பேச்சோடு நின்று விடுவதா? சற்று சிந்தியுங்கள். சைவ சித்தாந்தம் என்பது ஞான அனுபூதி கல்லூரிகளில் சைவசித்தாந்தம் பயில்பவர்கள் சைவசித்தாந்த தத்துவ அறிஞர்களாகலாம். ஆனால் சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு பக்தியோடு நூல்களைப் படித்து அதன் வழி நடப்பவர்கள் தான் சைவசித்தாந்திகள் எனப்படுவர். எனவே சமய பிரசாரகர்கள் சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு சைவ சித்தாந்திகளாக சைவாசார சீலர்களாக விபூதி, ருத்ராக்ஷம் முதலிய சிவசின்னங்களோடு சிவபெருமானுடைய பெருமையை நினைக்குந்தோறும், பேசுந்தோறும் மயிர்க் கூச்சலிட, உடல் புளகாங்கிதம் அடையும் வண்ணம், சிவ பக்தியின் அவசியத்தையும், அடியார்களின் வரலாற்றையும், சிவபக்தியால் இயலாத செயல் ஒன்றும் இல்லை என்பதையும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

இறைவனருளாலும், பிரசாரகர்களது அறிவுரையாலும் சைவசமயியாக விரும்பும் மெய்யன்பர்கள் முதலில் உழவாரப் பணி முதலான சைவதருமங்களைச் செய்ய வேண்டும். சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு பின்னர் விசேஷ தீக்ஷை பெற்றுக்கொண்டு சிவவழிபாடுகளைச் செய்ய வேண்டும். அதற்குப்பிறகு தான் அவர்கள் சைவசித்தாந்த சாத்திரங்களைப் படிக்கத் துவங்கவேண்டும். அதை விடுத்து சாதாரண உலகியல் கல்வியைப் போல இந்த ஞானக் கல்வியையும் பல்கலைக்கழகங்களில் படிப்பது சிறப்பன்று, தவறும் கூட. பட்டத்திற்காக படிப்பவர்களும் நூலாராய்ச்சி செய்பவர்களும் படிக்கட்டும். தவறில்லை, ஆராய்ச்சி என்பது கணத்துக்குக் கணம் மாறுபடுவது. அதற்கு முடிவும் இல்லை. எனவே சைவ சித்தாந்திகளாக விரும்பும் சைவர்கள் தக்க குருவை அடைந்து

சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு வழிபாடுகளை செய்துகொண்டு பக்தியோடு சாத்திரங்களைப் படிக்க வேண்டும். படித்ததோடு நில்லாமல் தம்மால் இயன்றளவும் சமயத்திற்கு பணியாற்ற வேண்டும் அதுவே கற்றறிந்த மாந்தர் கடன். அதற்கு முக்கியமாக வடமொழி, தென்மொழி வேற்றுமையற்ற சைவாபிமானிகள் ஒன்றுகூடி சிவாகம பாடசாலை, தேவார பாடசாலைகள் இருப்பதைப் போல சித்தாந்த பாடசாலை என்ற பெயரில் நிறைய சிவஞான பயிற்சி பள்ளிகளைத் தொடங்கி மாணவர்களுக்கு தகுந்த ஆசிரியரைக் கொண்டு தீக்ஷை செய்வித்து பக்தி இலக்கியம் முதல் சிவாகமங்களின் ஞானபாதங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் வரையிலான பாடங்களை குருகுலக் கல்வி முறையில் 5 ஆண்டுகளுக்குப் பயிற்றுவித்து மாணவர்களை தமிழ், வடமொழி, ஆங்கிலம், ஆகிய மும்மொழி வல்லுநர்களாக்கி உலகெங்கிலும் உள்ள இந்து ஆலயங்களிலும் சைவ இந்து சபைகளிலும் சமயப் பிரசாரகர்களாக நியமித்தல் வேண்டும். இதுவே சைவாபிமானிகளின் கடன். இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சைவாபிமானிகளுக்கு அறிவுறுத்துமாறு சிவம் பெருக்கும் சீலர்களாகிய திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய சன்னிதானங்களையும், சைவ சமய வளர்ச்சிக்கு பாடுபடும் ஆர்வலர்களையும் சிரம் தாழ்த்தி வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சைவசமயம் சிறக்க ஆற்ற வேண்டிய பணிகள்

1. சைவசமய பிரசாரம் செய்தல்

2. ஒவ்வொரு சைவரும் அறிந்துகொள்ளவேண்டிய வகையில் சைவத்தின் கொள்கைகளை சிறு நூல் வடிவில் வெளியிடுதல்.

3. சைவர்கள் அனைவரும் தீக்ஷை, பெற்றுக் கொள்ள வழிசெய்தல்.

4. ஒவ்வொரு ஊரிலும் சைவசமய முகாம்கள் நடத்துதல்.

5. குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பக்தி இலக்கியங்களை படங்களுடன் வெளியிடுதல்.
6. ஆலயங்களிலும், சபைகளிலும் வாரம் ஒருமுறை சமய வகுப்புகள் நடத்துதல்.
7. பக்திமான்களாகவுள்ள சமயப் புலவர்களை ஆதரித்தல்.
8. ஞானபாதப் பயிற்சி பள்ளிகள் தொடங்குதல்.
9. சைவர்களை (பிரசாரகர்களை) தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழி வல்லுநர்களாக்குதல்.
10. மாணவர்களைக் கொண்டே வடமொழியில் உள்ள சைவநூல்களைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடுதல்.

நிறைவுரை

கல்லா நாயினும் கடைப்பட்ட நாயேனாகிய எளியேனுடைய கருத்துக்களில் பிழைகள் இருப்பின் ஆன்றோர்களும், சான்றோர்களும் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இந்நூல் வெளியீட்டிற்கு பல்வேறு வகைகளிலும் உதவி செய்த தமிழாகரர் முனைவர் பழ. முத்தப்பன் ஐயா அவர்களுக்கும், நிதியுதவி நல்கிய உயர்திரு. இரா. செல்வகுமார் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய குருமஹா சன்னிதானங்களுக்கும், பெரியோர்களுக்கும் நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த அண்ணாமலை அச்சகத்தாருக்கும் ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்
என் கடன் பணி செய்து கிடப்பதே
க. கார்த்திகேயசிவம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
**சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**
திருவாவடுதுறை - 609 803. (நாகை மாவட்டம்)
தொலைபேசி எண் : 04364 - 232021

*''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க''*

அருள் வாழ்த்துரை

ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் உறுதுணையாளர் திரு. ஆர். செல்வகுமார் அவர்களின் தாயார் திருமதி. **ராதாகிருஷ்ணன் கிருஷ்ணவேணி** அவர்களின் எழுபதாவது பிறந்த நாள் விழா சிங்கப்பூர் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் 21.10.03 அன்று நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ந்தோம்.

இவ்விழாவை முன்னிட்டு சென்னை ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் மூலமாக திருத்துறையூர் அருணந்திசிவனார் அருளிய **சிவஞான சித்தியார்** நூலின் பரபக்கத்தை மேலைச்சிவபுரி கணேசன் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் டாக்டர் **பழ. முத்தப்பன்** அவர்கள் எழுதிய உரையுடன் ளியிடயிருப்பது சிறப்புடையது.

திருமதி. **ராதாகிருஷ்ணன் கிருஷ்ணவேணி** அவர்கள் பல்லாண்டு வாழவும் விழாச் சிறப்புற நடைபெறவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

அம்பலவாண தம்பிரான் சுவாமிகள்

உ
குருபாதம்

கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26-வது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமபுரம், மயிலாடுதுறை(அஞ்சல்) - 609 001.

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

ஆசியுரை

வேத சிவாகம நெறிகளை மக்கள் வாழ்க்கையில் கிரியைகளாக வகுத்துரைக்க ஸ்ரீ அகோர சிவாசாரியார் பெயரால் அமைந்த அறக்கட்டளையின் மூலம் சிங்கப்பூர் திருமதி. **இராதாகிருஷ்ணன் கிருஷ்ணவேணி** அவர்களின் எழுபதாவது பிறந்தநாளில் சைவசித்தாந்த ஞானசாத்திரமாகிய சிவாஞானசித்தியார் பரபக்கத்தை உரையோடு வெளியிடுவதை அறிந்து மகிழ்கின்றோம்.

நூல் நன்முறையில் வெளிவந்து பயன் விளைக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசகர் மடாலய மகா சந்நிதானம்
''கொங்குமண்டல குலகுரு'' ''இறையருட் செம்மல்''
''ஆதிசைவ அருட் தோன்றல்''
அருள்ஞானச்சுடர் அருள்வாய் மொழி அண்ணல்
சிவதீக்ஷாவித்தகர்
ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்
கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம்
பல்லகவுண்டம்பாளையம் (அஞ்சல்)
விஜயமங்கலம் - 638 056. (ஈரோடு மாவட்டம்)
தொலைபேசி எண் : 242056, 242547 (STD 04294)

ஆசியுரை வாழ்த்துரை

சென்னை அகோர சிவாச்சார்யார் டிரஸ்ட் செயலாளர் சிவ ஸ்ரீ கார்த்திகேயசிவம் அவர்களுக்கு சந்நிதானத்திலிருந்து எழுதிய ஆசீர்வாதம். நலம். உங்கள் கடிதம் பார்த்து மகிழ்ந்தோம்.

மனித வாழ்வில் ஒவ்வொரு விசேஷ கால நிகழ்ச்சிகள் வரும்போது அதை நினைவு கூறும் வண்ணம் ஒரு புண்ணிய காரியத்தையோ தர்மச் செயலையோ செய்வது பெரும் பேறாகும். அவ்வகையில் திருமிகு. **இராதாகிருஷ்ணன்** திருமதி. **கிருஷ்ணவேணி** ஆகியோரின் எழுபதாவது பிறந்த நாள் விழாவில் **''சிவஞான சித்தியார்''** பரபக்கம் வெளியிடுவது பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

திருவாளர் **இராதாகிருஷ்ணன் கிருஷ்ணவேணி** தம்பதியரின் பீமரதசாந்தி எனும் பவளவிழா சிறப்போடு நிகழவும் அவர்கள் நீண்ட ஆரோக்கியத்தோடும் திடகாத்திரத்தோடும் திகழவும் அடுத்து முத்து விழா, கனகாபிஷேகம் காணவும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அந்த நாளில் சிவச்செல்வர் பழ. முத்தப்பன் அவர்களின் எளிய உரையுடன் வெளியிடப்படும். **''சிவஞான சித்தியார்''** பரபக்க நூல் சிறப்பொடு வெளியிடப்படவும். அதனைப் பலரும் பெற்று சைவ நன்னெறியில் நின்று பயன் பெறவும் ஆசீர்வதிக்கிறோம். அகோர சிவாச்சார்யார் டிரஸ்ட் மேலும் பல நற்பணிகளைச் செய்திடவும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

நிறைந்த ஆசிகள்

உ

சிவமயம்

வாழ்த்துரை

திருச்சிற்றம்பலம்

உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

-பெரியபுராணம்

சிங்கப்பூர் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில் மேலாண்மைக்குழு உறுப்பினர் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய **ஸ்ரீ ரா.செல்வக்குமார்** அவர்களின் அன்புத் தாயார் திருமதி **கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன்** அம்மையாரவர்களின் எழுபதாவது பிறந்தநாள் விழாவினையொட்டி சென்னை ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்டின் மூலமாக திருக்கயிலாய குருபரம்பரைப் புறச்சந்தானாச்சார்யர் நால்வருள் இரண்டாமவரான திருத்துறையூர் ஸ்ரீமத் அருணந்தி சிவாச்சார்யார் அருளிச்செய்த **''சிவஞானசித்தியார்''** - பரபக்கம் என்னும் நூலைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருச்சி செட்டிநாடு கல்லூரியின் முதல்வர் பேரறிஞர் முனைவர் **பழ. முத்தப்பன்** அவர்கள் எழுதியுள்ள எளிய உரையுடன் பதிப்பிட்டு 21.10.2003 அன்று சிங்கப்பூரில் வெளியிட இருப்பது மிகவும் போற்றுதற்குரிய சிவஞானதானமாகும்.

இத்தகைய பணியாளர் பெறும்பயன் ''சிவதருமோத்தரம்'' என்னும் ஆகமநூலில் சிவஞானதான இயலில் 96வது செய்யுளில் ''இத்தகைய புத்தகத்தை ஈந்தாரும் எழுத்து ஒன்றற்கு, அத்தன அமரர்புரத்து உறைவர் ஆயிரம் ஆர் கற்பம் உற'' எனக் கூறப்பட்டுள்ளது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

திருக்கயிலாய குருபரம்பரைப் புறச்சந்தானச் சார்யார்களில் முதல்வரான ஸ்ரீமத் மெய்கண்ட தேவரின் பிரதமசீடரும், இரண்டாவது புறச்சந்தானச்சார்யாருமான திருத்துறையூர் ஸ்ரீமத் அருணந்தி சிவச்சார்யார் சிவஞானசித்தியார் - பரபக்கத்தையே 301 செய்யுள்களில் முதற்கண் அருளி பின்னரே சுபக்கத்தை அருளினார்கள். பரபக்கத்தில் உலோகாயதன் மதம் முதலாக பாஞ்சராத்திரம் (வைணவம்) ஈறாகப் பதினான்கு புறச்சமயங்களின் தத்துவக் கோட்பாடுகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. சிவஞான சித்தியார் சுபக்கத்தில் ஸ்ரீமத் அருணந்தி சிவாச்சார்யார் மெய்கண்ட தேவரின் 12 நூற்பாக்களைக் கொண்ட சிவஞானபோதம் என்னும் நூலுக்கு 328 திருவிருத்தங்களில் விளக்கம் தந்து சைவசித்தாந்த பரநிலையை நிலை நாட்டியுள்ளார். பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும் எனச் சிவஞான சித்தியார் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நூற்கருத்துக்களை சாதாரண நிலையிலுள்ள மக்களும் புரிந்துகொள்ளத் தக்க முறையில் இந்நூலுக்குப் பேரறிஞர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் எளிய உரை எழுதித் தந்திருப்பது மிகமிகப் பாராட்டிற்குரியது. இப்பெருந்தகை இதற்கு முன் வாகீசமுனிவர் அருளிச்செய்த ஞானாமிர்தம் என்னும் தமிழ் நூலுக்கு எளிய உரையெழுதி அவ்வுரையுடன் அந்நூல் தமிழ்நாட்டில் பிள்ளையார்பட்டி என்னும் சிவத்தலத்தில் அண்மையில் சிவநெறிக்கழகமும், சென்னை ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்டினரும் இணைந்து நடாத்திய ஸ்ரீமத் அருணந்தி சிவாச்சார்ய குருபூஜையில் வெளியிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பேரறிஞர் மற்றுமுள்ள சைவசித்தாந்த சாத்திரங்களுக்கும் உரை எழுதி வெளியீடுகாண இறைவன் திருவருள் புரியப் பிரார்த்திப்போமாக.

இந்திய தத்துவஞான படிமுறை வளர்ச்சியைப் பூர்வபக்கம், உத்தரபக்கம், சைவசித்தாந்தபரம் ஆகிய நிலைகளை முற்றாகப் பயின்று, முடிந்த முடிவைச்

(சைவசித்தாந்தத்தை) சரியாக உணர்வதன் மூலமே மக்கள் ஆன்மலாபம் பெற இயலும்.

திருமதி கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன் அம்மையாரவர்களின் எழுபதாவது பிறந்தநாள் வைபவம் 21.10.2003 செவ்வாய்க்கிழமையன்று சிங்கப்பூரில் மிகச்சிறப்பாக நடைபெறவும், அம்மையாரவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு உடல்நலத்துடன் வாழ்ந்து மேலும் இத்தகை நற்பணிகள் பல செய்யவும், இங்கு குறிப்பிட்டுள்ள பிறந்த நாள் விழாவில் இந்த நூல் வெளியீடும் சிறப்புற நடைபெறவும் திருவருள் புரிய கயிலைநாதரைப் போற்றி வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

முத்திநெறி அறியாத மூர்க்ரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே

மாணிக்கவாசகர்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

கோலாலம்பூர்
மலேஷியா

சித்தாந்த கலாநிதி
டான்ஸ்ரீ மு.சோமசுந்தரம்

வாழ்த்துரை

சிவநெறிச் செம்மல்

சிவஸ்ரீ. இரா.ம. முத்துச்சாமி சிவாச்சார்யார்
ஸ்தாபகர். நம்பியாண்டார் நம்பி ஆஸ்ரமம்
திருமலை கீழப்பூங்குடி வழி
சிவகங்கை மாவட்டம்.

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட் செயலாளர் **க. கார்த்திகேய சிவம்** அவர்களுக்கு,

திருமதி **கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன்** அவர்களின் எழுபதாவது பிறந்த நாள் விழா சார்பாக சகலாகமபண்டித ஸ்ரீமத் அருள்நந்தி சிவாச்சார்யார் அருளிய சிவஞானசித்தியார் பரபக்கத்தை எளிய தமிழில் வெளியிடுவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி. வடமொழியில் மூலாகமங்களில் உள்ள ஞானபாதமும் மெய்கண்டார் முதலிய ஞானாசிரியர்களால் தமிழில் இயற்றப்பட்ட சித்தாந்த சாத்திரங்களும் மிகக்கடினமான பதப்பிரயோகங்களால் உரையில்லாமல் எளிதில் புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளது. அதனால் இந்நூலை தமிழாகரர் டாக்டர் **பழ. முத்தப்பன்** அவர்களின் எளிய உரையுடன் வெளியிட உள்ளது போற்றத்தக்க தொண்டு. இதற்கு காரண கர்த்தாவாக உள்ள திருமதி **கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன்** அவர்களுக்கும், உறுதுணையாளர் திரு. **ரா. செல்வக்குமார்** அவர்களுக்கும், செயலாளர் கார்த்திகேய சிவம் அவர்களுக்கும் நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் தந்து இதுபோன்ற சீரியதொண்டினை இயற்றுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அருள எனது ஆத்மார்த்த இறைவன் ஸ்ரீ மலைக்கொழுந்து ஈசனை வணங்கி வாழ்த்துகிறேன்.

முன்னுரை

சைவ சமயத்தின் கடவுட் கொள்கைகளைச் சித்தாந்த தத்துவங்களாக முதலில் வடிவு கொடுத்துக் காட்டியது திருமந்திரமேயாகும். சித்தாந்தம் என்ற சொல்லை முதன் முதல் கையாண்டதும் இந்நூலேயாகும். இந்நூலின் ஐந்தாம் தந்திரத்தில் சைவப் பிரிவுகள் வரையறுத்துக் காட்டப் பெற்றுள்ளன. இவ்வாறு பின் ஒரு காலத்தில் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் வளர்வதற்குத் திருமந்திரம் ஒரு ஊற்றுக் கண்ணாக இருந்தது. திருமந்திரக் காலத்திற்குப் பின்னால் 12-ம் நூற்றாண்டுவரை சைவ அடியார்களும், சமயக் குரவர்களும் தங்கள் தோத்திரப் பாமாலைகளில் தத்துவக் கருத்துக்களை ஆங்காங்கு சுட்டிச் சென்றனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வேதாந்தம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் ஆகிய சமயங்கள் தத்தம் கொள்கைகளைத் தத்துவ நூல்களாக வெளிப்படுத்தின. அச்சமயங்களோடு தன்னை வெளிப் படுத்திக் கொண்டிருந்த சைவ சமயமும் தத்துவ நூல்களைத் தனிவடிவுகளாகத் தரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இச்சூழலில் தோன்றியதுதான் சைவ சித்தாந்த சாத்திர நூலாகிய ஞானாமிர்தம். அதன் ஆசிரியர் வாகீசமுனிவர் தத்துவக் கொள்கைகளையும் பிறமத மறுப்புக்களையும் அந்நூலில் ஆசிரியப்பா வடிவத்தில் தந்தருளினார்.

ஞானாமிர்தத்திற்குப் பின்னர் அதே நூற்றாண்டில் திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் தோன்றிச் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு அடிகோலின. இம்மூன்று நூல்களுக்குப் பின்னர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் மெய்கண்டார் தொடங்கி வைத்த மெய்கண்ட பரம்பரையினர் சைவ உலகில் தோன்றிப் பெருமை சேர்த்தனர். மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு வழிநூலாகச் சிவஞான சித்தியாரை அருணந்தி சிவாசாரியார் அதே நூற்றாண்டில் வழங்கியருளினார். சிவஞான சித்தியார் இரு பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. முதல் பகுதி பரபக்கம் ஆகும். இரண்டாவது பகுதி சுபக்கம் ஆகும். முதற்பகுதியைப் பாடியதற்குக் காரணம், ''பரசமய நூல்கள் அனைத்தும் பசுநூல்கள், ஆதலால் அதை ஏற்றோர்

முத்தியடைய மாட்டார்கள். எனவே மெய்கண்டார் கூறிய ஞானநூலின் வழி பரசமயிகள் கூறும் கருத்துக்களை மறுக்கத் தன்னால் பாடப்பெற்றது'' என்று பரபக்கத்தில் வாழ்த்துப் பகுதியில் அருணந்தியார் குறிப்பிடுகிறார். சுபக்கம் மெய்கண்டாரின் வழி 12 சூத்திரக் கருத்துக்களின் விரிநூற் பகுதியாக அமைந்துள்ளது.

சிவஞானசித்தியார் பரபக்கத்திற்குத் திருவொற்றியூர் ஸ்ரீ ஞானப்பிரகாசரும், அவர் மாணவர் திருவொற்றியூர் ஸ்ரீ தத்துவப் பிரகாசரும், திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ வேலப்ப பண்டாரமும் உரை எழுதியுள்ளனர். இதில் தத்துவப் பிரகாசர் உரை விரிவான முறையில் பதவுரையோடும், விளக்க உரையோடும் அமைந்துள்ளது. பின்னர் அண்மைக்காலத்தில் திருவருள் அடைந்த மெய்ஞ்ஞான வள்ளல் சித்தாந்த வித்தகர் திருநெல்வேலி **சி.சு.மணி** அவர்கள் சிவஞானசித்தியார் முழுமைக்கும் எளிய தெளிவுரை செய்தருளினார்கள். திருவாவடுதுறை ஆதின சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய இயக்குநர் வணக்கத்திற்குரிய கு. வைத்தியநாதன் அவர்களும் உரையெழுதி வெளியிட்டுள்ளார்கள். இன்றைய கால கட்டத்தில் சைவசித்தாந்தக் கல்வி பயில்வோர் பெருகி வருகின்ற காரணத்தினாலும், பரபக்க உரை கிடைக்காத காரணத்திலும் இவ்விளக்கவுரை வெளியிடப் பெற்றுள்ளது. பழைய உரையைப் பின்பற்றியும் வழிபாட்டுக்குரிய சி.சு.மணி ஐயா அவர்களின் உரையைத் தழுவியும் பாடல்களுக்குப் பொருட்சுருக்கமும், விளக்கவுரையும் கொண்டு இந்நூல் வெளிவருகிறது.

4.10.2002-ல் பிள்ளையார் பட்டி திருத்தலத்தில் அகோர சிவாச்சார்யார் டிரஸ்டின் பதிப்பான ஞானாமிர்தம் எம்முடைய விளக்கவுரையோடு வெளியிடப் பெற்றது. அவ்விழாவில் சிவஞான சித்தியாரின் பரபக்க நூல் உரையுடன் கிடைத்தற்கு அரிதாக இருக்கிறது. அதனையும் இந்த டிரஸ்டினர் வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பெற்றது. இந்த வேண்டுகோளை ஏற்றுச் செயல்படுத்தியுள்ளார் இந்த டிரஸ்டின் செயலாளர் திரு. **க. கார்த்திகேய சிவம்** அவர்கள்

சிங்கப்பூர் வீரமாகாளியம்மன் ஆலய அறங்காவலர் திரு. **இராதாகிருஷ்ணன்** அவர்களின் குமாரர் திரு. **ஆர். செல்வகுமார்** அவர்களின் உறுதுணையால் இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த இவ்விரு பெருந்தகைகளையும் நினைந்து போற்றிப் பணிகின்றேன். நூல் அச்சாகுங்கால் இளைய தலை முறையினர்க்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற அருமை சிவாச்சாரியார் திரு. **க. கார்த்திகேய சிவம்** அவர்கள் சிங்கப்பூரிலிருந்து என்னோடு அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டதையும், நூல் வெளிவர அவர்கள் காட்டிய ஆர்வத்தையும் எண்ணிப் பார்க்கின்ற பொழுது அவர்களின் சீரிய தொண்டையும், நட்பையும் பாராட்டாமல் இருக்க முடியாது. அன்னார் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் பல்லூழிக் காலம் வாழ்ந்து இதுபோன்ற திருப்பணிகளைப் பல்லாற்றானும் செய்து சைவ உலகிற்குப் பெருமை சேர்க்க இறையருளை வேண்டுகிறேன்.

நூலைக் குறுகிய காலத்தில் நன்கு அச்சிட்டு உதவிய திருச்சி **அண்ணாமலை பிரிண்டர்ஸ்** உரிமையாளர் அன்புக்குரிய மேலைச்சிவபுரி திரு. **அ. தியாகராசன்** அவர்கள் எந்நாளும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள். நூல் வெளிவருவதற்கு உறுதுணை புரிந்த என் மகன் முனைவர். **மு. பழனியப்பன்** (தமிழ் விரிவுரையாளர், மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை), மற்றும் என் அருமைத்துணைவி **மு.அழகம்மை** ஆகியோரின் பணிகள் நினைவு கூறத்தக்கன.

பரபக்க விளக்கவுரையைச் சைவ உலகம் ஏற்றுச் சாத்திர நலம் பெற்றிட இறையருளைப் போற்றிப் பணிகின்றேன்.

அருணந்தி சிவாசாரியாரின் திருவடிகள் போற்றி!

திருச்சிராப்பள்ளி,
8.9.2003.

பழ. முத்தப்பன்.

உ
சிவமயம்

சிவாகமப் பிரவீணர்
சிவஸ்ரீ ந. கல்யாணராம சிவாச்சார்யார்
தலைமை அர்ச்சகர்,
ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயம்,
சிங்கப்பூர்

ஆசியுரை

வந்தே சுந்தர பரசிவகுடிலம் சித்தேஸ்வரம் சாஸ்வதம்

அன்னை ஸ்ரீ வீரமாகாளியம்மனின் திருவருள் துணையினால் சென்னை ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட் மூலமாக **சிவஞானசித்தியாரின்** பரபக்கம் முனைவர் **பழ. முத்தப்பன்** அவர்களின் எளிய உரையோடு வெளி வருவது சிறப்பானது.

அதிலும் சிங்கப்பூர் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய மேலாண்மைக்குழுத் தலைவர் திரு. **என்.ஆர். கிருஷ்ணன்** அவர்களின் துணைவியார் திருமதி. **ஆர். கிருஷ்ணவேணி அம்மாள்** அவர்களின் 70-ம் ஆண்டு பவளவிழா மலராக வெளிவருவது மிகவும் சிறப்பானதாகும்.

இந்நூல் வெளிவர பேருதவியாக இருந்து பணியாற்றிய திருவாளர்கள் **ஆர். செல்வக்குமார்** திரு. **க. கார்த்திகேயசிவம்,** திரு. **பால. சுகுமாரசிவம்** உள்ளிட்ட அனைவருக்கும் எல்லா நலன்களும் உண்டாகவும் மேலும் பல நூல்கள் வெளிவந்து சைவ சமயம் தழைத்து ஓங்கவும் எல்லாம் வல்ல திருமுது குன்றப் பெருமானின் திருவடிகளை வேண்டுகிறேன்.

அன்புடன்
ந. கல்யாணராமசிவம்

உ
சிவமயம்

பொருளடக்கம்

		பக்கம்
1.	காப்பு	1
2.	உலகாயதன் மதம்	12
3.	பௌத்தம்	45
4.	யோகசார மதம்	100
5.	வைபாடிகன் மதம்	105
6.	நிகண்டவாதி மதம்	106
7.	பட்டாச்சாரியன் மதம்	133
8.	பிரபாகரன் மதம்	153
9.	மாயாவதி மதம்	166
10.	பாஞ்சராத்திரி மதம்	207

சிவஞானசித்தியார் - பரபக்கம்

காப்பு

கணபதி வணக்கம்

ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகுஓட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே [1]

இப்பாடல் காப்புச் செய்யுள். காப்புச் செய்யுள், நூல் நன்கு முடிதல் பொருட்டு, கடவுளரை வணங்குவது. இக்காப்புச் செய்யுள் விநாயகர் மீது பாடப்பெற்றுள்ளது. இப்பாடல் விநாயகரை வணங்குவதால் அறிவினை மறைக்கும் அஞ்ஞானம் நீங்கும் என்பதை வலியுறுத்தி நூலின் காப்பாக அமைகிறது.

பொருள் :

கங்கையாற்றினையும், வளைந்த பிறைச் சந்திரனையும், கொன்றை மாலையினையும் சடையிலே அணிந்த சிவபெருமான் தன்னுடைய பிள்ளையாகத் தந்த தேவனாம் விநாயகர் - ஒரு கொம்பினையும், இரு செவியினையும், மூன்று மதத்தினையும், தொங்கும் வாயினையும், ஐந்து கரங்களையும் உடைய வாரணத்தான் (யானைமுகன்) ஆவார். அவரின் திருவடிகளை உருகும் உள்ளத்தோடு அன்பு கொண்டு இடைவிடாது இரவுபகல் முழுமையும் வணங்கினால், வணங்குவார் சிந்தையினது அஞ்ஞானத்தை ஓட்டுவார். மேலும், பிரமன், திருமால் செல்வங்கள் ஒரு பொருட்டன்று என்று நினைக்கும் அளவிற்கு வீட்டு இன்பத்தை அருளுவார்.

கோட்டன் - கொம்பை உடையவன், நால்வாய் - தொங்கும் வாயாகிய துதிக்கை, வாரணம் - யானை (யானைமுகன்), ஓட்டும் - அஞ்ஞானத்தை விலக்கும்.

சிவபெருமான்

ஆதிநடு அந்தம் இலா அளவில் சோதி
அருள்ஞான மூர்த்தியாய் அகிலம் ஈன்ற
மாதினையும் ஒருபாகத்து அடக்கி வானோர்
மகுட சூளாமணியாய் வையம் போற்றப்
பாதிமதி அணிபவளச் சடைகள் தாழப்
படர்ஒளி அம்பலத்து ஆடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம் [2]

இப்பாடல் கடவுள் வாழ்த்தாக அமைந்து சிவவணக்கம் கூறும் பாடலாகும்.

பொருள் :

முதலும் நடுவும் இறுதியும் இல்லாது விளங்கி அளவற்ற பேரொளிப் பிழம்பாகக் காட்சி தந்து, அருளாகிய ஞானத்தைத் தன்னுடைய திருமேனியாகக் கொண்டு, உலகம் அனைத்தையும் ஈன்ற உமையவளைத் தன்னுடைய இடப்பாகத்தே அடக்கி, வானோர்க்கு மகுடம் போன்று விளங்கி, உலகம் போற்ற பிறைச் சந்திரனை அணிந்து, சடைகள் தாழ ஒளிமிக்க அம்பலத்தில் நடனமாடுகின்ற சிவபெருமானது திருவடித் தாமரைகளை நமது தலையில் தாங்கி, தளராத பேரன்பு விளையும்படி வழிபடுவோமாக.

விளக்கவுரை :

அளவில்சோதி - அறியமுடியாத ஒளி என்பது இறைவன் உலகம் எல்லாம் நிறைந்திருந்தாலும் அறிய முடியாதவனாக உள்ளான் என்பதை உணர்த்துவதாகும். இங்கு அளவு என்பது அறியமுடியாத தன்மையைக் குறிப்பதாகும்.

அம்பலம் - திருஅம்பலத்தைக் குறிக்கும். திருஅம்பலம் உலகிற்குச் சுழுமுனையாகும். அதாவது உலகம் சுழல அச்சாணியாக விளங்கும் என்பது கருத்து.

சக்தி வணக்கம்

ஈசன்அருள் இச்சைஅறிவு இயற்றல் இன்பம்
இலயமொடு போகம் அதிகாரம் ஆகித்
தேசு அருவம் அருவுருவம் உருவமாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப்
பேசரிய உரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போகம் அவையளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்டு
ஆசுஅகலும் அடியார் உளத்து அப்பனுடன் இருக்கும்
அன்னைஅருட் பாதமலர் சென்னி வைப்பாம் [3]

இப்பாடல் சிவசக்தி வணக்கம் கூறுவதாகும். இறைவனின் திருவிளையாடல்களுக்குச் சக்தியே கருவியாய் நிற்கும் என்பது அறிவுறுத்தப்பெறுகிறது.

பொருள் :

ஈசனுடைய அருள் அவனது சக்தியாகும். அச்சக்தி அவனை விட்டு என்றும் நீங்காது. பராசக்தி, இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியா சக்தி எனப் பெயர் பெற்று விளங்கும். இலயம், போகம், அதிகாரம் என்ற மூன்று கூறுகளாக விளங்கும். இறைவனுக்கு அருவம், அருவுருவம், உருவம் என்ற வடிவங்களாக விளங்கும். இறைவனுக்குத் தேவியும் ஆகும். உலகமாகவும் விளங்கும். உலகப் பொருளாகவும் ஆகும். உலகத்து உயிரை எல்லாம் பிறப்பித்து, காத்து, அவற்றின்வினைகளுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை அவைகளுக்குக் கூட்டுவித்து, உயிர்கள் உரிய பக்குவம் அடைந்த காலத்து உயிர்களிடம் பிறப்பினை அறுக்கும், வீட்டுப்பேற்றினைத் தரும். இத்தகைய சிறப்பு மிக்க அடியவர் உள்ளத்தில் இறைவனோடு எழுந்தருளியிருக்கும் அன்னையின் அருட்பாத மலர்களை நம் தலைமீது வைத்து வணங்குவோம்.

இச்சை - இச்சாசக்தி, அறிவு - ஞானாசக்தி, இயற்றல் - கிரியா சக்தி, இன்பம் - திரோதான சக்தி, இலயம் - ஒடுங்குதல், போகம் - நுகர்தல், அதிகாரம் - உரிமை, தேசம் - உலகம்.

விநாயகர் வணக்கம்

இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
இடையூறு தீர்ந்து இனிதுமுடிய வேண்டித்
தயங்குபேர் ஒளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோடு ஆடிப்
பயந்த ஐங்கரம் நாற்றோள் முக்கண் இருபாதப்
பரியது ஒரு நீள்கோட்டுப் பெரிய பண்டிக்
கயம்தன்அடிக் கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்திலுற இருத்திமிகக் காதல் செய்வாம் [4]

காப்புச் செய்யுளாக முதற்பாடல் விநாயகரைப் போற்றியதுடன், வாழ்த்தின் அடிப்படையில் இப்பாடல் மீண்டும் விநாயகரைப் போற்றுகிறது.

பொருள் :

கூறப்புகுந்த சிவஞான சித்தியாராகிய இப்பெருந் தமிழ்நூல் செய்யுளுக்குரிய அனைத்து இலக்கணங்களும் பொருந்தி இடையூறு இன்றி இனிது முடியவேண்டி - நிலைபெற்ற பேரொளிப் பிழம்பாக எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன், மலைமகளாம் பார்வதி அன்னையோடு ஆடிப்பயந்த (பெற்ற) - ஐந்து கரங்கள், நான்கு தோள்கள், மூன்று கண்கள், இரண்டு திருவடிகள், நீண்ட ஒற்றைக் கொம்பு, பெருத்தவயிறு ஆகிய இவற்றை உடைய யானைமுகத்து வினாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளை வணங்கிச் சிந்தையில் நீங்காது நிறுத்திக் காதல் செய்து வணங்குவோமாக.

இருந்தமிழ் - பெருந்தமிழ், செய்யுள் ஆற்றால் - செய்யுளுக்குரிய இலக்கணங்கள், தயங்குதல் - விளங்குதல், மலைமாது - உமையவள், ஆடிப்பயந்த - கூடி உண்டாக்கிய, பண்டி - வயிறு.

முருகப் பெருமான் வணக்கம்

அருமறை ஆகமம்அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக்கு ஒத்துஉரைக்கும் அருட்குருவாம் குருளை
திருமறை மாமுனிவர்முனி தேவர்கள்தம் தேவன்
சிவன் அருள்சேர் திருமதலை தவநிலையோர் தெய்வம்
பொரும்அறையார் கழல்வீரர் வீரன் கையில்
பூநீர் கொண்டு ஓவாது போற்றும் அடியார்கள்
கருமறையா வகைஅருவிக் கதிவழங்கும் கந்தன்
கழல்இணைகள் எம்சிரத்தில் கருத்தில் வைப்பாம் [5]

இப்பாடல் முருகப் பெருமானுக்கு வணக்கம் கூறியதாகும்.

பொருள் :

அரிய மறைகளும், ஆகமங்களும், வேத அந்தங்களும், அரிய கலைகளும் கற்றுத் தேர்ந்த அகத்திய முனிவருக்கு அவற்றின் உண்மைப் பொருளைத் தெளிவித்த ஞானாசிரியராக விளங்குகின்றவன் இளையமுருகப் பெருமான் ஆவான். அவன் திருமறைகளில் வல்ல முனிவர்களுக்கு முனிவன். தேவர்களுக்கெல்லாம் தேவன். சிவபெருமானின் அருளால் தோன்றியவன். தவத்தோர்க்கு வழிபடு கடவுளாவான். வீரக்கழல் அணிந்த வீரர்களுக்கு வீரனானவான். பூவும் நீரும் கொண்டு இடைவிடாது தன்னை வணங்கும் அடியவர்கள் கர்ப்பப்பையில் புகுந்து மீண்டும் பிறவாத வண்ணம் வீடுபேற்றினைத் தருகின்றவன் ஆவான். இத்தகைய கந்தப் பெருமானின் திருவடி மலர்கள் இரண்டினையும் தலைமீதும் கருத்தினிலும் வைத்துப் போற்றுவோமாக.

அருட்குரு - ஞானாசிரியன், குருளை - இளமை, மதலை - மகன், கருமறை - கர்ப்பப்பை, கதி - வீட்டுப்பேறு.

குருவணக்கம்

பண்டை மறைவண்டு அரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்துஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இருதய கமலமுகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினி மேல்வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வோம் [6]

இப்பாடல் நூலாசிரியரின் ஞானாசிரியராகிய மெய்கண்டாருக்கு வணக்கம் கூறுவதாகும்.

பொருள் :

தொன்மையான வண்டுகள் ஒலிக்கவும், சிவ ஞானமாகிய சுவைமிக்க தேன் ஒழுகவும், சிவமணம் எங்கும்பரந்து வீசவும், அடியவர்களின் இதயத் தாமரைகள் மலரவும் ஆகிய இத்தகைய செயல்கள் நிகழ, இம்மண்ணுலகில் தோன்றி ஞானம் வழங்கியவர் மெய்கண்ட தேவர் ஆவார். மணம் பரப்பும் மலர்ப் பொழில்கள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில் மேவிய இத்தகு மெய்கண்ட தேவராம் ஞானாசிரியர் சைவத்திற்கு நாதன் ஆவார். அத்தகைய ஆசிரியரின் திருவடிக் கமலங்கள் தாமரை மலர்களை வென்ற அழகு பொருந்தியவையாகும். அத்தகு திருவடிகளைத் தலைமேல் கொண்டு என்றும் போற்றி வணங்குவோமாக.

விளக்கவுரை :

மறைகள் வண்டாகவும், சிவஞானம் தேனாகவும், சிவனருள் மணமாகவும், அடியவர்களின் இதயங்கள் தாமரை மலர்களாகவும் இப்பாடலில் உருவகம் செய்யப் பெற்றுள்ளது.

சிவகந்தம் - சிவமணம், கமலமொகை - தாமரை மொட்டுக்கள், காசினி - உலகம், கதிரோன் - சூரியன், புண்டரிகம் - தாமரை.

அவையடக்கம்

மால்அயன் மாமறை அறியா ஆதிமார்க்கம்
வையகத்து ஆகமம் வேதம் மற்றும் உள்ள
நூலையெலாம் உணர்ந்து இறைவன் கழலே நோக்கும்
நோன்மை அருந்தவர் முன்யான் நுவலுமாறு
வேலையுலாவும் திரைகள் வீசி யேறி
வேறுஏழும் ஒன்றாகி நின்றபோது
சாலவும்ஆன் குளப்படியில் தங்கி நின்ற
சலமதுதான் நேர் என்னும் தன்மைத்தாலோ [7]

இதுவும் அடுத்துவரும் பாடலும் நூல் மரபுப்படி அவையடக்கம் கூறும் பாடலாகும்.

பொருள் :

உலகத்து ஆகமம், வேதம் மற்ற எல்லா நூல்களையும் உணர்ந்து இறைவனின் திருவடிகளையே என்றைக்கும் நோக்கிக் கொண்டிருக்கும் தவம் நிறைந்தவர்கள் முன் - திருமாலும் நான்மறைகளும் அறிய முடியாத தொன்மையான சைவநெறியினை நான் சொல்லத் தொடங்குவது எவ்வாறு உள்ளது என்றால் - அலைகள் மோதுகின்ற ஏழுகடல்களும் ஒன்று சேர்ந்து நிற்கின்ற இடத்தில் பசுவின் குளம்படி பதித்த பள்ளத்தில் நீர்தேங்கி நின்றதுபோல் ஆகும்.

விளக்கவுரை :

அனைத்தும் அறிந்த முனிவர்கள் ஏழுகடல்களும் திரண்டது போன்ற தகுதி படைத்தவர்கள் ஆவர். ஆசிரியரோ பசுவின் குளம்படி பதித்த பள்ளத்தில் நிறைந்த நீர் போன்றவர் ஆவார் என்று உருவகம் செய்யப் பெற்றுள்ளது.

வேலை - கடல், திரை - அலை, குளப்படி - குளம்படி, சலம் - நீர்.

நீடுபுகழ் உலகுதனில் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயில்
கூடுமொழி மழலையொடு குழறி ஒன்றும்
குறிப்பு அரிது ஆயிடினும் மிகக்குலவிப் போற்றி
மாடு நமக்கு இது என்று கொண்டு வாழ்வர்
அதுபோல மன்னுதமிழ்ப் புலமையோர்என்
பாடுகவிக் குற்றங்கள் பாரார் இந்நூல்
பாராட்டா நிற்பர் அருட் பரிசினாலே [8]

இதுவும் அது.

பொருள் :

புகழ்மிக்க இவ்வுலகத்தில் ஆண்களும், பெண்களும் பாசத்தோடு தாம் பெற்றெடுத்த குழந்தைகளின் மழலை மொழியைப் பொருளற்றதாயினும் அதனைப் போற்றிப் பெருஞ்செல்வமாக ஏற்று மகிழ்ந்து வாழ்வார்கள். அதுபோல நிலைபெற்ற புகழை உடைய தமிழ்ப் புலவர்கள் என் பாடல்களில் காணப்படும் கவிக்குற்றங்களைப் பாராது தங்களுடைய அருட்தன்மையினால் இந்நூலைப் பாராட்டிப் போற்றுவார்கள்.

விளக்கவுரை :

இவ்விரண்டு பாடல்களில் முதல் பாடலில் தன்னை எளிமைப் படுத்திக்கொண்டு அடுத்த பாடலில் தன்நூலை ஏற்று ஆதரவு தரவேண்டும் என்ற விண்ணப்பத்தை அவையடக்கமாகப் பாடல்களில் தந்துள்ளார் ஆசிரியர்

நேயம் - அன்பு, பாசம் ; கூடுமொழி - தோன்றியமொழி, மாடு - செல்வம், மன்று - நிலைபெற்ற.

நூற்சிறப்பு

சுத்தவடிவு இயல்பாக உடைய சோதி
சொல்லிய ஆகமங்கள் எலாம் சூழப்போயும்
ஒத்துமுடியும் கூட ஓரிடத்தே
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவானாற் போல்
பித்தர்குணம் அதுபோல ஒருகால் உண்டாய்ப்
பின்னொருகால் அறிவின்றிப் பேதையோராய்க்
கத்திடும் ஆன்மாக்கள் உரைக்கட்டில் பட்டோர்
கனகவரை குறித்துப் போய்க் கடற்கேவீழ்வார் [9]

இப்பாடல் நூலின் சிறப்பைக் குறிப்பாகக் காட்டுகிறது.

பொருள் :

சுத்த ஞானத்தைத் தனக்கு இயல்பான வடிவாகக் கொண்ட இறைவன் கூறிய ஆகமங்கள் எல்லாம் பல்வேறு வகைப்பட்ட சமயங்களுக்கும் ஒத்து முடியக் கூடியதாக இருந்தாலும் மையமான ஒரு பொருளையே நோக்கி முடியக் கூடியதாய் அமைந்து ஞானபாதத்தை விளக்குவதாகும். (அது எதுபோல என்றால்) ஒரு ஊருக்குப் பல வழிகள் அமைந்து அவையனைத்தும் அவ்வூரையே நோக்கிச் செல்வது போன்றதாகும். (எல்லா ஆகமங்களிலும் முடிவு ஞானபாதமே என்பதை உணர்ந்து முத்தி அடைந்திருக்கும் ஆன்மாக்களைப் போல் அல்லாமல்) பித்தேறியவர்கள் ஒருகால் அறிந்து பின்னொருகால் அறிவில்லாது முத்தியைத் தரும் நெறியைக் காணாது பேதையராய் தத்தம் சார்ந்த சமயமே சிறந்தது என்று கத்துவர். அவர்கள் மகாமேரு மலையை நோக்கிச் செல்லுகின்ற வழியில் செல்லத் துணிந்து அவ்வழியில் செல்லாமல் மற்றொரு வழியில் சென்று கடலில் வீழ்ந்தவர் போன்றவர் ஆவர்.

விளக்கவுரை :

இப்பாடலில் ஆசிரியர் தனித்த ஓர் சமயத்தில் ஆழங்கால் படாது பலசமயக் கொள்கை உடையவர்கள் ஒருசமயம் (ஒரு பக்கம்) தெளிந்தவர் போல் காணப்பெற்று, பிறிதோர் சமயம் மயக்கம் உடையவராய்க் காட்சி தருவர்; அவர்கள் பித்தர்கள் ஆவர்; அவர்களைப் போல் அல்லாது இறைவன் அருளிய

ஞானபாதம் ஒன்றையே நோக்கிச் செல்லுகின்ற நூல் இது என்று குறிப்பாக உணர்த்துகின்றார்.

நூலின் அதிகாரியும், நூலின் வழியும், நூலின் பெயரும்

போதமிகுத் தோர், தொகுத்த பேதை மைக்கே
பொருந்தினோர் இவர்க்கு அன்றி, கதிப்பால் செல்ல
எதுநெறி எனும் அவர்கட்கு அறிய முன்னாள்
இறைவன் அருள் நந்திதனக்கு இயம்ப நந்தி
கோதில் அருட் சனற்குமா ரர்க்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழிஎம் குருநாதன் கொண்டு
தீதுஅகல எமக்கு அளித்த ஞான நூலைத்
தேர்ந்து உரைப்பன் சிவஞான சித்தி என்றே [10]

இப்பாடல் குரு பரம்பரையும், பாரம்பரியமாக நூல் வந்த முறைமையும் கூறுகிறது.

பொருள் :

ஞானம் உடையவர்களுக்கு நூலின் தேவை இல்லை. உலக வாழ்வைப் பெரிதும் பொருந்தி பேதமை உடையவர்க்கும் (அறியாமை உடையவர்க்கும்) நூலின் துணை தேவையில்லை. இத்தகைய ஞானம் உடையோர், பேதமை உடையோர் ஆகிய இருவருக்கும் இன்றி, வீட்டு நெறியைத் தேடி அதை நோக்கிச் செல்லுகின்ற சத்திநிபாதம் வாய்க்கப் பெற்றவர்களுக்காகச் சிவபெருமான் முதலில் நந்தியம் பெருமானுக்கு ஞானம் உரைக்க, அவர் குற்றமற்ற சனற்குமாரர்களுக்கு அதனை அருளிச் செய்தார். அவ்வாறு வழிவழியாக வந்த ஞானப்பொருளை எமது ஆசிரியராகிய மெய்கண்டார் அதனைக் குற்றம் நீங்கிய ஞானநூலாக (சிவஞானபோதம்) அருளினார். அவர் குற்றமற அருளிச் செய்த நூலின் வழியில் சிவஞானசித்தி என்ற பெயருடன் நான் உரைக்கலுற்றேன்.

விளக்கவுரை :

இப்பாடலில் நூலின் தலைமை அதிகாரியாகிய சிவபெருமானையும், நூலின் வழியாகிய நந்தியம்பெருமான்,

சனற்குமாரர், மெய்கண்டாரையும், நூலின் பெயராகிய சிவஞான சித்தியையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

போதம் - ஞானம், பேதமை - அறியாமை, கதி - முத்தி நெறி, குருநாதர் - மெய்கண்டார், ஞானநூல் - சிவஞானபோதம்.

நூற்கருத்து

இறைவனையும் இறைவனால் இயம்பும் நூலும்
ஈண்டு அளவும் பொருள் இயல்பும் வேண்டும் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்
மூதுலகில் எமக்கு இயன்ற முயற்சி யாலே
சிறையுலவும் புனல்நிலவித் தோன்றும் பேய்த்தேர்ச்
செய்கைபோல் உண்டாய பொய்கொள் மார்க்கத்
துறைபலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித்
துகள்தீர இந்நூலில் சொல்ல கிற்பாம் [11]

இப்பாடல் நூலில் சொல்லப்பெற்ற கருத்தினைச் சொல்வதாகும்.

பொருள் :

இறைவனைப் பற்றியும், இறைவனால் அருளப் பெற்ற முதல் நூலைப் பற்றியும், அளவைகளைப் பற்றியும், மெய்ப்பொருளைப் பெறக் கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைகள் பற்றியும், பெத்தமாகிய கட்டுநிலை பற்றியும், வீட்டுநிலை பற்றியும்; இவ்வுலகோர் அறிய இயன்றளவு இந்நூலில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது. (மேலும்) தூரத்தில் இருந்து பார்க்கும் பொழுது அலைமோதும் நீர் போலத் தோன்றி, அருகில் சென்று காணும்பொழுது மறைகின்ற கானல் நீர் போலக் காட்சிதரும் பொய்மை நிறைந்த பிற சமயக் கொள்கைகளை வினா விடையால் எடுத்துக் காட்டி, அவற்றின் பொய்மையை நிறுவி, மன மாசு அகற்றும் ஞானபாதத்தின் உண்மை நெறி இந்நூலில் சொல்லப் பெற்றுள்ளது.

அளவை - காட்சி முதலாகிய அளவைப் பொருட்கள், பெத்தம் - பாசம் பிடித்த நிலை, திரை - அலை, பொய்த்தேர் - கானல் நீர், கடாவிடை - வினாவிடை, துகள் - குற்றம்.

1. உலகாயதன் மதம்

நூலாசிரியர் இதுமுதல் 52 பாடல்களில் உலகாயதன் மதத்தின் கொள்கைகளையும், அவை பற்றிய மறுப்புக்களையும் தந்துள்ளார். இக்கோட்பாட்டினை உடையவர் இக்காலத்தில் கடவுள் மறுப்புக் கொள்கையினர் எனக் கூறப்பெறுவர். இவர்கள் இந்திய மெய்ப்பொருள் வரலாற்றில் 'பொருளே முதல்' என்ற கோட்பாடு கொண்டு தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தியவர்கள் ஆவர். இவர்தம் கொள்கை சார்வாகர் என்ற தத்துவ ஞானியால் முதன்முதலில் தோற்றம் பெற்றதால் சாருவாகம் என்று அழைக்கப் படுவதுண்டு. சாரு - இனிமை, வாக் - வாக்கியம், எனவே இனிமையான வாக்கியத்தை உடைய சமயம் என்ற பொருளில் சாருவாகம் என்று அழைப்பதும் உண்டு. கண்ணால் காணுகின்ற காட்சியாகிய அளவையை மட்டும் ஏற்கின்ற மெய்ப்பொருள் கொள்கையை அடிப்படையாகக் கொள்வது இம்மதம். இக்கொள்கையின் தோற்றக் காலம் பற்றிய துல்லியமான சான்றுகள் கிடைத்தில. தமிழில் மணிமேகலைக் காப்பியம் பூதவாதியாக இச்சமய வாதியைக் குறிப்பிடுகிறது. திருவாசகத்தில் 'உலகாயதன் என்னும் ஒண்டிறற் பாம்பின்' என்று இம்மதம் குறிக்கப் பெற்றுள்ளது. கடவுளை ஏற்றுக் கொள்ளாத சமயம் உலகாயதம் என்பதால் இதனை முதன்முதலாக ஆசிரியர் எடுத்துக் கொண்டுள்ளார் எனலாம்.

இந்திர புரோகிதன் இயம்பும்ஒரு நூலின்
தந்திரம் எனாதுஅறி வினோடு அருள்இலாமல்
சந்தணை புயத்துமண மாலைகள் தயங்க
உந்திஉல கத்தில்உல காயதன் உரைப்பான் [12]

இப்பாடல் முதல் 21 பாடல்களில் உலகாயதன் மதக் கொள்கைகளை இம்மதத்தாரே கூறுவதைப் போல் ஆசிரியர் படைத்துள்ளார்.

பொருள் :

இந்திரனின் புரோகிதனாகிய வியாழ பகவான் இயற்றிய நூலை அடிப்படையாகக் கொண்டு அறிவு, அருள் இல்லாது, சந்தனம் பூசப்பெற்ற தோளில், மணம் நிறைந்த மாலைகள் அணிந்து கொண்டு, உலகத்திற்கு உலகாயதன் தன்னுடைய கருத்துக்களைக் கூறுகின்றான்.

விளக்கவுரை :

ஒருமுறை அசுரர்களால் துன்பப்பட்ட இந்திரன் தவத்தை மேற்கொள்ள முயற்சித்த பொழுது வியாழன் (பிரகற்பதி) அவனை உலக இன்பங்களில் ஈடுபட உலகாயத நூலைச் செய்தான் என்ற புராணவரலாறு இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது.

ஈண்டு அளவை காட்சி, மனம் ஆதிஇரு மூன்றாய்
வேண்டும், அனு மானம்முதல் ஆனபல வேண்டா
பூண்டபொருள் பூதம்அவை புகழ்கடின சீதம்
தீண்டுஅரிய வெம்மைசல னத்தினொடு சேர்வே [13]

இப்பாடல் உலகாயதன் கொள்கையைக் கூறப்புகுகின்றது.

பொருள் :

உலகத்தில் அளவை என்று கூறப்படுவது காட்சி அளவை மட்டுமே. இக்காட்சி மனம் முதலாகிய ஆறுவகைப்படும். இவை தவிர அனுமானம் (கருதல்) முதலாகச் சொல்லப்பட்ட பிற அளவைகள் வேண்டாம். உலகத்தில் காட்சி அளவையால் காணப்படுகின்ற பூதங்கள் நான்குதான். அதாவது கடினம், குளிர்ச்சி, தொடுவதற்கு அரிய வெப்பம், அசைவு என்பவைகளே அவை. ஐந்தாவது பூதம் இல்லை.

விளக்கவுரை :

காட்சி அளவை - ஐயக்காட்சி, வாயில் காட்சி, விகற்பக் காட்சி, அந்வயக்காட்சி, வெதிரேகக் காட்சி, திரிபுரக் காட்சி என்பன. மனம் என்பது ஐயத்தைக் குறிப்பதாகும்.

ஐயக்காட்சி - பாம்போ கயிறோ என ஐயுறுவது.

வாயில் காட்சி - புலன்களால் அறிவது

விகற்பக் காட்சி - சாதி, குணம் இவற்றால் அறிவது.

அந்வயக் காட்சி - புகையால் நெருப்பை அறிவது.

வெதிரேகக் காட்சி - நாற்றத்தால் பூவை அறிவது.

திரிபுக் காட்சி - கயிற்றைப் பாம்பு என்று கொள்ளுதல்.

சாற்றுபெயர் ஆனவை தலம்புனல் கனல்பின்
காற்றும் எனலாம் இவை கலந்தகுணம் ஓதின்
நாற்றம்இர தம்உருவம் நற்பரிசம் ஆகும்
போற்றும்இவை நித்தஇயல் பாம்இவை புணர்ப்பே [14]

இப்பாடல் பூதங்கள் நான்கின் பெயரும் அவற்றின் குணங்களையும் கூறுகிறது.

பொருள் :

நிலம், நீர், தீ, காற்று எனக் கூறப்பட்ட நான்கு பூதங்கள் நாற்றம், சுவை, உருவம், ஊறு என்ற நான்கு குணங்களைப் பெற்றுள்ளன. இவை நான்கும் நித்தியமாகும் (அழிவில்லாதன). இவற்றின் புணர்ச்சியால் (கூட்டத்தால்) உலகத்துப் பொருள் யாவும் தோன்றுகின்றன.

தலம் - நிலம், கனல் - தீ, இரதம் - சுவை, பரிசம் - ஊற்றுணர்வு, புணர்ச்சி - கூடுதல்.

ஒத்துஉறு புணர்ச்சியின் உருக்கள்பல ஆகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோல்
புத்திகுண நற்பொறி புலன்கள் இவைஎல்லாம்
இத்தில்வரும் நீரினில் எழும்குமிழி ஒத்தே [15]

இப்பாடல் பூதங்களில் உருத்தோன்றும் முறைமை கூறுகிறது.

பொருள் :

மேற்குறித்த நான்கு பூதங்களும் ஒத்த அளவில் கூடுகின்றபொழுது உலகத்தில் காணப்படுகின்ற பல்வகைப் பொருள்கள் தோன்றுகின்றன. எதுபோல எனின் - குயவனின் சக்கரத்தில் வைக்கப் பெற்ற மண்ணிலிருந்து பல்வேறு வகைப்பட்ட குடம் தோன்றுவது போன்றதாகும். இவ்வாறு தோன்றிய பொருள்களுக்கு உள்ளே புத்தி, குணம், புலன்கள் ஆகியவை நீரில் தோன்றுகின்ற நீர்க்குமிழி போலத் தோன்றுகின்றன.

பூதம் அதின் ஒன்றுபிரி யப்புலன் இறக்கும்
நீதியினில் நிற்பன நடப்பனவும் முன்போல்
ஓதும்வகை யாகிஉறு காரியம் உலந்தால்
ஆதியவை யாம்இதனை அறிவதுஅறி வாமே [16]

இப்பாடல் பூதங்கள் பிரிவதையும், அவற்றின் வழி பிறபொருள் அழிவதையும் கூறுகிறது.

பொருள் :

மேற்குறித்த நான்கு பூதங்களின் கூட்டத்தால் தோன்றிய உயிரானது காற்று என்ற பூதம் பிரிந்தால் புலனை முதலில் இழக்கும். புலன்கள் இறந்ததால் அவற்றினுடைய குணம் முதலியனவும் இறக்கும். ஆதலால் நிற்பது, நடப்பது ஆகிய காரியங்கள் யாவும் கெட்டு, மீண்டும் அந்நான்கு பூதங்களுக்குள் அடங்கும். இவ்வாறு காரணத்தின்வழி காரியம் நடப்பதும், முடிவில் காரியங்கள் காரணத்தில் ஒடுங்குவதும் ஆகிய முறைமையை அறிதல் வேண்டும். இவ்வாறு அறிவதே ஞானம் எனப்படும்.

ஒன்று பிரிய - காற்று பிரிய, புலன் - இந்திரியங்கள், நீதியில் - முறைமையில், உலந்தால் - இறந்தால், அறிவாம் - ஞானமாம், இப்பாடல்வரை உலகாயதன் தன்மதக் கருத்துகளைக் கூறினான்.

இப்படி அன்றிக் கன்மம் உயிர்இறை வேறுண்டு என்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடும் குற்றம் என்னோ!
ஒப்பிலா மலடி பெற்ற மகன்ஒரு முயற்கொம்பு ஏறித்
தப்பில் ஆகாயப் பூவைப் பறித்தமை சாற்றினாரே [17]

இப்பாடல் இறைவன், கன்மம், ஆன்மா இவை இல்லை என்கிறது. இது முதல் பிறர் கருத்து மறுக்கப்பெறுகிறது.

பொருள் :

இவ்வாறன்றி வினை, உயிர், இறைவன் என்ற இவையெல்லாம் உண்டு என்று கூறி உலகத்தாரை மயக்குகின்ற

சமயவாதிகளுக்கு உலகத்தார் செய்த குற்றம் என்ன? அத்தகைய சமயவாதிகள் கூற்று எவ்வாறு உள்ளது என்றால் ஒப்பில்லாத மலடி பெற்ற மகன் ஒருவன் முயற்கொம்பில் ஏறி ஆகாயத்தில் பூத்த மலரைப் பறித்தான் என்று கூறுவது போன்றதாகும்.

விளக்கவுரை :

நான்கு பூதங்கள் கூடுவதால் உயிர் தோன்றி, நிற்பது, நடப்பது போன்ற செயல்கள் நடைபெற்று, ஒருநாள் காற்று எனும் பூதம் நீங்கியபின் அச்செயல்கள் அழிகின்றன என்பதுதான் உண்மை. அதை விடுத்துவிட்டு இறைவன், வினை இவை எல்லாம் உண்டு என்று கூறுவது உலகத்தாரை மயக்குவதாகும் என்று கூறி அவர்தம் கூற்றுக்கு மலடி உவமையை உலகாயதன் கூறுகிறான்.

செய்திடும் கன்மம் எல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடும் என்னில் இங்கே மாய்ந்திடும் ஏய்வது எங்ஙன்?
மெய்தரு தூலம் கெட்டுச் சூக்கமாய் மேவும் என்னில்
ஐயனே தீபம் போனால் அதன்ஒளி ஆவது உண்டோ [18]

இப்பாடல் கன்மம் இல்லை என்பதைக் கூறுகிறது.

பொருள் :

முன் பிறப்புக்களில் உயிர் செய்த வினைகள்தான் இப்பிறப்பில் பயன்தரும் என்று சிலர் கூறுவர். ஆனால் இப்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்கள் இப்பிறப்பு உடம்போடே கெட்டுப் போகும். அடுத்த பிறவிக்கு அவை எவ்வாறு வரும்? தூல வடிவை விடுத்துச் சூக்கும வடிவாய்ப் பொருந்தும் என்று கூறினால் அப்பதில் திரியோடு கூடிய விளக்கின் ஒளி அத்திரியை விட்டு விலகி நின்று தனியாக ஒளியைத் தரும் என்று கூறுவது (பேதமை) போன்றதாகும்.

கன்மம் - வினை, மாய்ந்திடும் - கெட்டுவிடும், இயைவது - மறு பிறப்பில் கூடுவது, தூலம் - தூல வடிவு, பரு உடம்பு, சூட்சுமம் - சூக்கும வடிவு (அரு உடம்பு)

மாய்ந்துபின் வயலில் இட்ட வைதழை பலிக்கு மாபோல்
ஏய்ந்திடும் கன்மம் என்னில் இட்டஇடத்து இசையும் மேனி
ஓய்ந்துவந் தவரை உண்ணப் பண்ணும் சோறு உதரத்து அற்றால்
வாய்ந்திடும் மலம் வயிற்றில் கொண்டிடும் வழக்கு வைத்தாய் [19]

இப்பாடல் கன்மவினை மறுப்பினை உணர்த்துகிறது.

பொருள் :

வயலில் உரமாக இடப்பெற்ற தழை போன்ற உரங்கள் தம் தன்மை கெட்டு அழுகி, பின்பு பயிருக்கு உரமாவது போல ஒரு பிறப்பில் செய்யப் பெற்ற கன்மம் தம் தன்மை கெட்டு அடுத்த பிறவியின் உயிருக்குப் பயனாகப் பொருந்தும் (என்று நீ கூறினால்) தழை உள்ளிட்ட உரங்கள் எங்கு இடப்பெற்றதோ அங்கேயே உரமாகிறது. வேறு இடத்திற்கு உரமாகாது. (எனவே ஒரு பிறவியில் செய்த கன்மம் அடுத்த பிறவியில் பயன்தரும் என்பது பொருந்தாது) மேலும் சோர்வுற்று வந்தவர் பசி நீங்க உண்ணுகின்ற சோறானது அவரின் வயிற்றில் சென்று கெட்டு மலமாக மாறுகிறது. அது பயன்தரவில்லையே. (எனவே உன்கூற்று பொருந்தாது)

மாய்ந்து - கெட்டு, பலிக்கும் - பயன்தரும், இசையும் - பயன்தரும், உதரம் - வயிறு, வழக்குவைத்தாய் - நீ சொல்வது எவ்வாறு பொருந்தும்.

உருவமும் உணர்வும் செய்தி ஒத்திரா கன்மம் என்னின்
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறைவு உண்டாகி
வருவதிங்கு என்ன கன்மம் செய்து முன் மதியிலாதாய்
பெருகுபூ தங்கள் தம்மின் மிகுகுறைப் பெற்றியாமே [20]

இப்பாடல் கன்மம் உண்டு என்பாரை மறுத்துக் கூறுவதாகும்.

பொருள் :

உலக உயிர்களின் உடம்பின் செயலும், உணர்வின் செயலும் ஒத்தவையாய் இல்லாமல் வேறு வேறாக இருப்பதற்குக் காரணம் அவ்வவற்றின் கன்மம் ஆகும் என்று

கூறுகின்றாய். அறிவற்றவனே, கையில் உள்ள விரல்கள் ஒன்றுக்கொன்று ஒத்திராமல் நீண்டும் குறுகியும் காணப்படுவதற்கு அவ்விரல்கள் முன்பிறப்பில் என்ன வினை செய்தன? (கூற இயலுமா) உடம்பும் உணர்வும் உயிர்களிடையே மாறி அமைவதற்குக் காரணம் நான்கு வகைப்பட்ட பூதங்கள் தம்முற் கூடும்போது மிகுந்தும் குறைந்தும் கூடுவதால் உண்டாகின்றன என்று கொள்ள வேண்டும்.

மதியிலாதாய் - உலகாயதர் கன்மம் உண்டு என்பாரை நோக்கிக் கூறுகின்ற சொல் ஆகும்.

இன்பொடு துன்பம் எல்லாம் எய்துவ கன்மம் என்னில்
நன்புனல் சந்த னாதிநணுகவும் அணுக ஒண்ணா
மின்பொலி அழலி னோடுமேவுவ நன்மை தீமை
என்செய்தது இயம்பிடாய் நீ இவையெலாம் இயல்ப தாமே [21]

இப்பாடல் முன்வினைப் பயன் உண்டு என்பாரை மறுப்பது.

பொருள் :

உயிர்களுக்கு ஏற்படுகின்ற இன்பதுன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் கன்மம் (வினைப்பயன்) என்றால் சந்தனமானது நீரில் குழைத்துப் பயன்படவும் செய்கிறது. மேலும் சந்தனக் கட்டையைத் தீயில் இட்டு மணம் நுகரவும் படுகிறது. அவ்வாறு நீரினும் நெருப்பினினும் சேர்ந்து மணம் தருவதற்கு அவை செய்த நன்மை தீமை என்ன? கூறுவாயாக. இவையெல்லாம் பொருள்களுக்குரிய இயல்பாகும்.

விளக்கவுரை :

நீரில் சந்தனம் குழைக்கப்படுவது இன்பத்திற்கும், தீயில் எரிக்கப்பெறுவது துன்பத்திற்கும் காட்டப் பெற்றுள்ளது. இப்பாடல் மூலம் உயிர்களின் இன்ப துன்பத்திற்குக் காரணம் பூதங்களின் துணையே அன்றி வினை அல்ல என்று மறுக்கப்படுகிறது.

காயத்தின் குணமது அன்றிக் கண்டதுஆன் மாஉண்டா யின்
மாயத்திற் சொல்லி டாதே மனமுதல் ஆறி னுக்கும்
நேயத்தது ஆக வேண்டும் அன்றியே நிகழ்த்தும் உண்மை
தேயத்தின் முயற்கொம்பு எல்லை செப்புவோர் செய்தி யாமே [22]

இப்பாடல் ஆன்மா உண்டு என்பதை மறுப்பதாகும்.

பொருள் :

உடம்பில் தோன்றுகின்ற குணம்தான் உயிர். நான்கு பூதங்களின் புணர்வால் ஏற்படுவது. அதனை விடுத்து ஆன்மா என்ற ஒரு பொருள் உண்டு என்று கூறுவது மயக்கத்தைத் தருவதாகும். ஆன்மா உண்டு என்றால் அது காட்சி அளவையால் காட்டப்பட வேண்டும். அதனை விடுத்து அனுமானத்தாலும் உரையாலும் ஆன்மா உண்டு என்று நிறுவுவது முயலுக்குக் கொம்பு உண்டு என்று கொண்டதோடு அதனது நீளத்தையும் பெருமையையும் கூறுவதை ஒக்கும்.

காயம் - உடம்பு, மனமுதல் ஆறு - காட்சி அளவைகள் ஆறு, முயற்கொம்பு எல்லை - முயற்கொம்பின் அளவு கூறுவது.

அருவமே இறைவன் ஆகில் அறிவின்று ஆகாயம் ஆகும்
உருவமே என்னில் பூதக் கூட்டத்தின் ஒருவன் ஆகும்
மருவிய இரண்டும் கூடி நிற்பவன் என்னின் மண்மேல்
இருவிசும்பு ஒருகல் ஏந்தி நிற்குமோ இயம்பி டாயே [23]

இப்பாடல் பூதமே உண்டு வேறு இறைவன் இல்லை என்று வலியுறுத்துகிறது.

பொருள் :

இறைவன் அருவமானவன் என்றால் அறிவு அவனுக்கு இல்லையாகும். ஆகாயத்தைப் போன்று வடிவு இல்லை என்றும் ஆகும். இறைவனுக்கு உருவம் உண்டு என்று கூறினால் பூதக்கூட்டத்தால் தோன்றுகின்ற பொருள்களில் அவனும் ஒருவனாக வேண்டும். அருவுருவம் உடையவன் என்றால் மண்ணின் மேல் பெரிய ஆகாயமானது (அருவம்) கல்லை ஏந்தி நிற்கிறது என்று கூறுவது போன்றதாகும்.

விளக்கவுரை :

ஆகாயத்தில் கல்லை எறிந்தால் கல் நிற்காது. கீழே விழுந்து விடும். ஆகாயம் உருவமற்றது. கல் உருவமுடையது. இறைவன் அருவமும் உருவமும் உடையவன் என்பது ஆகாயமும் கல்லும் சேர்ந்து நிற்பது போன்றது என்று நகையாடப் பெறுகிறது. இரு விசும்பு - விரிந்த ஆகாயம்.

பூதத்தே அன்ன மாசி அன்னத்தால் உடம்பு புத்தி
பேதித்தே மனமும் ஆகிப் பிரிந்தமை திருந்த இன்று
வேதத்தே உரைக்க என்னோ மேதினி யோர்கள் எல்லாம்
கேதத்தே வீழ்ந்து வேறு நெறியல கேட்குமாறே [24]

இப்பாடல் மனத்தின் தோற்றத்திற்குக் காரணம் கூறுவது.

பொருள் :

நிலமாகிய பூதத்திலிருந்து உணவு தோன்றுகிறது. உணவால் உடம்பும், உடம்பில் புத்தியும், புத்தியில் பேதிக்கப்பட்ட (மாறுபட்ட) மனமும் உண்டாகின்றன. இதுதான் உண்மையாகும். இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவை தோன்றி ஒடுங்கும் என்றிருக்க இவற்றை விடுத்து மாறுபட்ட கொள்கையைத் தங்கள் வேதம் இப்படிச் சொல்லுகிறது என்று நீ உரைக்கவும், அதனைக் கேட்ட உலகத்தோர் எல்லாம் உமது வேதத்தில் வீழ்ந்து துன்பத்தில் வருந்துவது ஏன்?

பூதத்தே - நிலமாகிய பூதம். பேதித்த - வேறுபட்ட உணர்வுகளை உடைய மனம். பிரிந்தமை - திருந்த, வேறுபட்டுத் தோன்றியவை - ஒடுங்க. வேதம் - உலகாயதரின் எதிர்மத வேதங்கள். மேதினி - உலகம்.

போகத்தை மண்ணில் கண்டு விட்டுப்போய் விண்ணில் கொள்ள
மோகத்தர் ஆகி அல்லல் முயன்றுஉழல் மூடர் எல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு விட்டுப் போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண எண்ணித் துயர்உறு வார்கள் அந்தோ [25]

இப்பாடல் அவ்வுலக இன்பம் இல்லை என்று வலியுறுத்துகிறது.

பொருள் :

ஐம்புல இன்பங்களை இவ்வுலகத்தார் அனுபவிப்பதைக் கண்டும் அதனை விடுத்து, மேலுலகத்தில் இதனினும் சிறந்த இன்பம் உண்டு என்று விருப்புற்று அதனைப் பெறுவதற்காக இவ்வுலகில் தன்னைத் துன்புறுத்திக் கொள்பவர்கள் மூடர்கள் ஆவர். (அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால்) தண்ணீர் வேட்கையுற்ற பொழுது தண்ணீர் கிடைத்தும் அதனை விட்டுவிட்டு வேறு எங்கோ ஓரிடத்தில் தண்ணீர் இருப்பதாகக் கேள்விப் பட்டு அதனைத் தேடி அலைந்து துன்புறுவதைப் போன்றதாகும்.

போகம் - ஐம்புல இன்பம் (சிற்றின்பம் என்பாரும் உண்டு) மோகத்தர் - ஆசையுற்றவர், உழல் - துன்பம், சோகித்து - தேடியலைந்து.

வாழவே வல்லை வாமி வலக்கைதா, என்னுயிர்க்குத்
தோழன் நீ உன்னை ஒப்பார் சொல்லிடின் இல்லை கண்டாய்
கோழை மானுடர் தீது என்னும் கொலை களவு ஆதி கொண்டே
சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடர்எனத் தோன்றினையே [26]

இப்பாடல் ஒத்த சமயத்தாரைப் பாராட்டுவது.

பொருள் :

வாம மார்க்கத்தை உடையவனே, வருக. உன் வலக்கையைத் தருக. என்னுயிர்த் தோழன் நீ. உன்னை ஒப்பார் என்று சொல்வதற்கு யாருமில்லை. கோழை மனிதர்கள் தீது என்று ஒதுக்குகின்ற கொலை, களவு ஆகியவற்றைக் கைக்கொண்டு அழகிய கூந்தலை உடைய பெண்கள் கூட்டத்தின் நடுவே ஒளிபொருந்தி நீ தோன்றுகின்றாயே.

விளக்கவுரை :

உலகாயதர் தம்மைப்போல் இவ்வுலக இன்பத்தை அனுபவிக்கின்ற வாமமார்க்கத்தாரை உடன் சேர்த்துக் கொள்வதை இப்பாடல் விளக்குகிறது. வாழவே வல்லை -

எம்மைப் போல் வாழ்வதற்கு வல்லமை உடையவரே - வாமி - என்பது வாமமார்க்கத்தைக் குறிக்கும். இம்மார்க்கம் சக்தி வழிபாட்டில் ஒருவகை என்பர். இவர்கள் சிற்றின்பத்தைப் பெரிதும் விரும்புபவர்கள் ஆவர். இவர்களும் உலகாயதர் போலக் கொலை, களவு, கள் இவற்றை ஒதுக்காதவர்கள் ஆவர். வலக்கைதா என்பது நட்புக்குரிய நிலையில் அன்பு பாராட்டுவதாகும்.

ஈசனார் அயனார் மாலோடு இந்திரன் தெரிவை மாப்பால்
பேசொணா வகைகள் எல்லாம்செய்து அன்றோ பெரியார் ஆனார்
ஆசையால் அவர்போல் நாமும் ஆகவே வேண்டுமாயின்
வாசமார் குழலாரோடும் வல்லவா கூடிவாழ்மின் [27]

இப்பாடல் சிற்றின்பத்தை வலியுறுத்தும் பாடலாகும்.

பொருள் :

ஈசன், நான்முகன், திருமால், இந்திரன் ஆகியோர் பெண்கள்பால் பேசுவதற்கு அரிய வகைகளில் எல்லாம் பேசி, செயல்கள் செய்துதான் பெருமை பெற்றவர்கள் ஆனார்கள். ஆதலால் அவர்களைப் போல நாமும் பெருமை பெற வேண்டுமானால் மணம் பொருந்திய கூந்தலை உடைய பெண்களோடு ஏற்றவாறு கூடிவாழ்தல் வேண்டும்.

விளக்கவுரை :

தேவர்கள் பெண் இனத்தாரைப் போற்றிப் பெருமை அடைந்ததை உலகாயதர் தமக்கேற்றவாறு உரைத்துக் கொண்டதைக் கூறும் பாடல் இது.

தெரிவை - பெண்கள், வாசமார் குழல் - மணம் பொருந்திய கூந்தல்.

தையலார் ஊடல் ஆடத்தாம் அவரோடும் கூடிச்
செய்ய தாமரையை வென்ற சீறடி செம்பஞ்சு ஊட்டி
மெய்யெலாம் பாதம்சூடும் வேடத்தார் மெய்யிற்கூடா
மையல் மானுடர் பொய்மார்க்க வேடத்தே மாய்கின்றாரே [28]

இப்பாடல் முன்னதை விரித்துக் கூறுவது.

பொருள் :

மகளிர் ஊடல் கொள்ள அவர்களின் ஊடலைத் தீர்ப்பதற்கு அவர்களோடு கூடிப் புணர்ந்து அவர்களுடைய தாமரையை வெல்லுகின்ற செம்மை நிறம் பொருந்திய கால்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பைத் தீட்டி அக்குழம்பின் நிறம் தம் உடம்பெல்லாம் படும்படி அவர்தம் கால்களில் வீழ்ந்து வணங்கி வாழ்தலே உண்மை வாழ்க்கையாகும். இதனை அறியாது பொய் வழியாகிய தவவழியில் வாழத் தலைப்பட்டுத் தங்களுடைய வாழ்க்கையைப் பொய் மார்க்கத்தில் செலுத்தி வாழ்கின்றார்களே. (பரிதாபத்திற்கு உரியதாம்)

மையல் மாந்தர் - மயங்கிய மக்கள், பொய்மார்க்கம் - தவமார்க்கம், மாய்கின்றார் - வீணாக வாழ்கின்றார்.

வாசமார் குழலினார்கள் மணிஅல்குல் தடத்தேமூழ்கி
நேசமார் குமுதச் செவ்வாய் அமுதினை நிறை உண்டு
தேசுலா மணிமென் தோள்மேல் சேர்ந்துவீற்று இருந்திடாதே
மாசுலா மனத்தோர் எல்லாம் மறுமை கொண்டு அழிவர் மன்னோ[29]

இதுவும் அது.

பொருள் :

மணம் நிறைந்த கூந்தலை உடைய பெண்களின் அல்குல் தடத்தில் மூழ்கி அவர்களின் குமுதம் போன்ற சிவந்த வாயில் ஊறுகின்ற அமிழ்தத்தை உண்டு, ஒளி நிறைந்த அவர்களின் தோள்களில் சேர்ந்து இன்புற்று வாழ்வதை விட்டு விட்டு, மாசு படிந்த மனத்தவராகி மற்ற சமயத்தார் மறுமை இன்பம் உண்டு என்று நம்பி வாழ்ந்து அழிந்து போகின்றார்களே.

குமுதம் - குமுதமலர், மறுமை - மறுமை இன்பம்.

மதிநிலா நுதலா ரோடு மணிநிலா முன்றில்ஏறி
முதிர்நிலா எறிப்பச் செவ்வாய் இளநிலா முகிழ்ப்ப மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள் மார்பு அகலமூழ்கும்
புதுநிலா வியநன் போகம் விடுவர்புன் சமயத் தோரே [30]

இதுவும் அது.

பொருள் :

பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியை உடைய பெண்களோடு நிலா முற்றத்தில் கூடி அவர்தம் புன்னகை தோன்றும் அழகில் மயங்கி அவர்களின் முத்துவடம் அணிந்த கொங்கைகள் மறையும்படி அவர்தம் மார்போடு சேர்ந்து புதுப்புது இன்பங்களை அனுபவிப்பதை விட்டுவிட்டுப் பிறசமய நெறியார் இன்பத்தை இழக்கின்றார்களே.

ஊடுவது உணர்வது உற்ற கலவிமங் கையரை உள்கி
வாடுவது அடியில் வீழ்ந்து வருந்துவது அருந்தவம் பின்
கூடுவது உணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவது இன்ப முத்தி இத்தில்நின் றார்கள் முத்தர் [31]

இதுவும் அது.

பொருள் :

பெண்களோடு ஊடுவது, அவர்களின் ஊடலைத் தீர்க்கக் கெஞ்சுவது, அவர்களோடு சேர்வது, அவர்கள் பிரிந்தபோது அவர்களை நினைந்து வாடுவது, ஊடலைத் தீர்க்க அவர்கள் காலில் விழுவது, அவர்களின் இன்பத்திற்காக வருந்துவது இவையே அருந்தவமாகும். பின் ஊடல் தீர்ந்த மங்கையரோடு கூடுவது அவர்கள் மீது வேட்கை கொண்டு மேலும் மேலும் தன் உணர்வு கெட்டுக் கலப்பது ஆகியவையே முத்தி எனப்படும். இத்தகைய இன்பத்தை அனுபவிப்பவர்களே முத்தி பெற்றவர்கள்.

ஆண் - பெண் ஊடல் நிகழ்ச்சியைத் தவம் என்றும், ஆண் - பெண் கூடல் நிகழ்ச்சியை முத்தி என்றும் இப்பாடல் கூறுகிறது.

கலவி - புணர்ச்சி, உள்கி - நினைந்து.

வீட்டினை உளதுஎன்று ஓடிமெலிவது இங்கு என்னை? வீடு
காட்டினோர் கண்டோர் கேட்டோர் கரியவை உண்டேல் காட்டீர்
நாட்டினில் அரசன் ஆணைக்கு இசையவே நடந்து நாளும்
நாட்டிய பொருள்கொண்டு இங்கே இன்பத்துள் இசைந்தி டீரே [32]

இதுவும் அது.

பொருள் :

முத்தியாகிய வீட்டின்பம் உண்டு என்று கருதித் தவம் செய்து உடல் மெலிவது ஏன்? வீட்டின்பத்தைக் காட்டியவரோ, கண்டவரோ, கேட்டவரோ யாரேனும் உண்டா. அல்லது அதற்குச் சாட்சியங்களாவது உண்டா? நாட்டை ஆளும் அரசனின் ஆணைப்படி கட்டுப்பட்டு நடந்து நாளும் பொருளை ஈட்டி, அந்தப் பொருளைக் கொண்டு இவ்வுலகில் இன்பத்தை அனுபவித்து வாழ்வீராக.

வீடு - முத்தி இன்பம், கரியவை - சான்றுகள்.

உலகாயதன் மதம் மறுதலை

உள்ளதாவது கண்டது என்றுஉரை கொண்டதுஎன் உலகத்து நீ?
பிள்ளை யாய்வளர் கின்றநாள் உனைப் பெற்ற தாயொடு தந்தையைக்
கள்ளமேபுரி காலன் ஆருயிர் உண்ண, இன்றுஒரு காணையாய்
கொள்ள வேஉளர் என்று கொண்டு விளம்பு மாறுவிளம்பிடே [33]

முன்பாடல் வரை உலகாயதரின் கொள்கையாகச் சிலவற்றை அவர்கள் கூறுவதுபோல் ஆசிரியர் கூறினார். இனி அக்கொள்கைக்குரிய மறுப்புக்களைச் சைவ சித்தாந்த அடிப்படையில் இனிவரும் பாடல்களில் தருகின்றார்.

பொருள் :

உலகாயதனே, காண்பதே உள்ளது என்று காட்சி அளவையை மட்டும் கொண்டு பிற அளவைகளைப் பொய் என்று நீ கொண்டது எவ்வாறு? இன்று நீ பிள்ளையாய் வளர்ந்துள்ளாய். உன்னைப் பெற்ற தாய் தந்தையர்களின் உயிரைக் கள்வனான எமன் உண்டுவிட்டான். (என்றால்)

'இன்று நீ ஒரு காளையாய் இருக்கின்ற உன்னைப் பெற்றவர்கள் இருக்கின்றார்கள் என்று கொள்வது காட்சி அளவையன்று, கருதல் அளவைதானே.

விளக்கவுரை :

தாய் தந்தையரை இழந்த குழந்தை வளர்ந்து இளமைப் பருவத்தில் தன் தாய் தந்தையரை நினைந்து போற்றினால் அது கருதல் அளவையாகும். ஏனென்றால் தாய் தந்தையர் இப்பொழுது காட்சி அளவைக்கு இல்லை. தான் இருப்பதால் பெற்றோர் உண்டு என்பது கருதல் அளவையாகிறது. எனவே இப்பாடல் மூலம் கருதல் அளவை நிறுவப்படுகிறது.

இடித்து மின்னி இருண்டு மேகம் எழுந்த போதுஇது பெய்யும்என்று
அடுத்த தும்அகில்சந்தம் உந்தி அலைத்து வார்புனல் ஆறுகொண்டு
எடுத்துவந்திட மால்வ ரைக்கண் இருந்து கொண்டல் சொரிந்தது என்று
முடித்ததும் இவை காட்சி அன்றுஅனு மானம் என்று மொழிந்திடே [34]

இப்பாடல் கருதல் அளவையே மேலும் வலியுறுத்துகிறது.

பொருள் :

இருண்ட மேகம் இடிஇடித்து மின்னுகின்ற பொழுது மழை பெய்யப் போகிறது என்றும், ஆற்றில் சந்தனக் கட்டைகள் மிதக்க வெள்ளம் பெருகி வருவதைக் காணுகின்ற பொழுது மலைப் பக்கத்தில் பலத்த மழை பெய்திருக்கிறது என்றும் நினைப்பது காட்சி அளவைக்கு உட்பட்டதல்ல. கருதல் அளவையாக அனுமானத்தினால் பெறப்பட்டவை என்பதை உணர்தல் வேண்டும்.

காண்ட லேஅனு மானம் ஆவதும் காட்சி முன்னதும் காட்சியேல்
பூண்டபூத உடம்பின் உள்வெழு போதம் என்கொடு கண்டனை
மாண்ட வாயின் மணங்கொள் ஞானம் உணர்ந்ததும்அது மானம்என்று
ஈண்டு பூதம் இயைந்தது இவ்வுடல் என்பது என்பிர மாணமே [35]

இப்பாடல் முன்னதை விரித்துக் கூறுவது.

பொருள் :

முன்பாடலால் அனுமானமாகச் சொல்லப்பட்ட செயல்களும் காட்சியில் தெரிவன என்று நீ வாதித்தால் (அதாவது) கண்ணுக்குப் புலப்பட்ட காட்சிகளைக் கொண்டே கருதல் அளவை தோன்றுகிறது என்று கூறினால் உடம்பாகிய நான்கு பூதங்களின் கூட்டத்தில் அறிவு தோன்றும் என்பதை எந்தக் காட்சியால் கண்டாய்? அறிவு உள்ளது என்பது அனுமானத்தால் ஆகும். மேலும் ஓசை முதலியவற்றை பொறிகளின் வாயிலாக அறியமுடியும் என்பதும், கருதல் அளவையால் ஆகும். பூதக்கூட்டங்களால் உருவம் தோன்றும் என்பதும் கருதல் அளவைதான்.

விளக்கவுரை :

இப்பாடலில் காட்சிகளால்தான் அனுமானம் தோன்றுகிறது என்பது மறுக்கப்பெற்று கருதல் அளவை தனித்தே தோன்றுகிறது என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

அனுமானம் - கருதல் அளவை, மனங்கொள் ஞானம் - உயிரில் தோன்றும் அறிவு, பிரமாணம் - சாட்சி.

பழுதிலா மறைகண்ட நூல்பழுது இன்றி உண்டது பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி இன்னது முடியும் என்பது முன்னமே
அழிவி லாததுகண்ட னம்அவை அன்றியும் சிலஆக மங்களின்
எழுதியேரப்படி ஏன்றுகொண்டு இருநிதி எடுப்பதும் எண்ணிடே [36]

இப்பாடல் உரை அளவையை வலியுறுத்துவது.

பொருள் :

குற்றமில்லாத வேத நூல்கள் மூலம் பழுதில்லாத சோதிடநூலில் வல்லவர்கள் இன்னது இவ்வாறு நடக்கும் என்று முன்கூட்டியே கூறுவதும், அவை அவ்வாறே நடப்பதும் நாம் காணுகிறோம். மேலும் நிலத்தில் இன்னென்ன புதைந்திருக்கின்றன என்று நூல்களின் வாயிலாகச் சிலர் கூறுவதும் அதனைக் கேட்டோர் நிலத்தைத் தோண்டிப் பொருளை எடுப்பதும் வாழ்வில் காண்கிறோம்.

விளக்கவுரை :

இவற்றுக்கு அடிப்படை காட்சி அல்ல, நூல் அளவே ஆகும் என்று கூறி - காட்சி அளவை மட்டுமே கொண்ட உலகாயதரை ஆசிரியர் மறுக்கிறார்.

பழுதிலா - குற்றமற்ற, அழிவிலாது - உண்மையாக நடப்பது, இருநிதி - செல்வம்.

பூதம் ஆனவை நித்தம் என்று புகன்றது என்னை? உருக்களாய்
ஆதலோடு அழிவாகும் ஆதலின் ஆக்குவோர் அவர் வேண்டிடும்
காதலோடு கடாதி மண்கொடு இயற்றுவோர் உளர் கண்டனம்
சீதநீரில் எழுந்த கொப்புள் நிகழ்ந்த மாருதச் செய்கையே [37]

இப்பாடல் பூதம் பற்றிய மறுப்புகளைக் கூறுகிறது.

பொருள் :

உன்னால் கூறப்பெற்ற நான்கு பூதங்களும் நித்தம் என்கின்றாய். அது பொருந்தாது. இவை கூடுகின்ற பொழுது உருவம் தோன்றுதலும் கெடுதலும் உண்டு. (அதாவது) பூதம் அழிவதால் உருவம் தோன்றும். பூதம் தோன்றுவதால் உருவம் அழியும் எனவே நித்தம் ஆகாது. பூதங்களைக் கூட்டியும் குறைத்தும் செயல்படுத்துவதற்குத் தலைவன் ஒருவன் வேண்டும். (எதுபோல என்றால்) மண்ணிலிருந்து குடம், பானை தோன்றுவதற்கு வனைகின்ற குயவன் வேண்டுவதைப் போல. மேலும் மழைநீரில் நீர்க்குமிழியும் நுரையும் தானே தோன்றாது. காற்றின் இயக்கத்தால் தோன்றுவதையும் காண்கிறோம். எனவே தோற்றுவிக்க ஒருவன் வேண்டும்.

கடாதி - குடம் முதலாகிய, இயற்றுவோர் - குயவன், சீதநீர் - குளிர்ந்த நீர், கொப்புள் - நீர்க்குமிழி, மாருதம் - காற்று.

நீரின் வந்துஎழு கொப்புள் நீரது வாய்எழும் நிகழ் பூதமும்
ஓரின் வேறுஉணர்வாய் எழாஅவை பூதமாகி உதித்திடும்
தேரின் நூறுஅடை காய்செறிந்துஅவை சேரவேறு சிவப்புஎழும்
பாரினில் பிரியாது புந்தி பழிப்பு உடம்பு கிடக்கவோ [38]

இப்பாடல் அறிவு பற்றிய கொள்கைக்கு மறுப்பு கூறுகிறது.

பொருள் :

நீரில் குமிழி தோன்றுவது போலப் பூதங்களின் சேர்க்கையால் அறிவு தோன்றுகிறது என்பது உன்னுடைய கொள்கை. (அது பொருந்தாது) நீர்க்குமிழி உடைந்து நீராகும். அதிலிருந்து வேறு ஒன்றும் தோன்றாது. அதுபோலத்தான் பூதங்களின் சேர்க்கையை ஆராய்கின்ற பொழுது அவற்றிலிருந்து வேறான அறிவு தோன்றாது. மேலும் சுண்ணாம்பு, பாக்கு, வெற்றிலை கூடி அவற்றில் இல்லாத சிவப்பு நிறம் தோன்றுவது போலப் பூதங்கள் கூடிய பொழுது அறிவு தோன்றும் என்பது உன்னுடைய மற்றொரு கொள்கையாகும். மேலும் பூதங்கள் பிரிந்த பொழுது உடலைவிட்டு அறிவு நீங்கும் என்பதும் உன் கொள்கை. (இவை பொருந்தாது) ஏனென்றால் வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பு இவை மூன்றும் கூடும்பொழுது தோன்றும் சிவப்பு பிறகு மாறுவதே இல்லை. அதுபோலப் பூதங்களின் சேர்க்கையால் உடம்பில் உண்டான அறிவு அவ்வுடலை விட்டு நீங்காது இருத்தல் வேண்டும். உலகில் அங்ஙனமின்றி உடல் கிடக்க புத்தி நீங்குவதால் உன் கொள்கை பழிப்புக்கு உரியதாகும்.

கொப்புள் - நீர்க்குமிழி, நூறு - சுண்ணாம்பு, அடை - வெற்றிலை, காய் - ப்பாக்கு, புந்தி - அறிவு.

கூறு சேர்வையின் வந்தபோது சிவப்பு எனும்குணம் ஒன்றுமே
வேறு வேறு புலன் குணங்கள் உடற்கண் வந்து விளைந்தது ஏன்?
நூறு காய்அடை கூடும் வேறுஒருவன் தனால்என நோக்கிநீ
தேறு,பூத செயற்கும் வேண்டும் ஒருத்தன் என்று தெளிந்திடே [39]

இதுவும் அது.

பொருள் :

பூதங்களின் சேர்க்கையால் அறிவு உண்டாகிறது என்பதற்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றும் சேரும்பொழுது அவற்றில் இல்லாத சிவப்பு நிறம் தோன்றுகிறது என்ற உவமை உம்மால் கூறப்படுகிறது. (இவ்வுவமை வழி) அக்கூட்டத்தால் சிவப்புநிறம் ஒன்று மட்டுமே தோன்றுகிறது. ஆனால் பூதங்களின் கூட்டத்தால்

உடம்பில் அறிவு மட்டும் தோன்றாது, குணம், ஐம்புலன்கள் எனப் பலவும் வந்து தோன்றுகின்றன. இந்த உவமையால் அதனை எப்படி விளக்கமுடியும்? மேலும் இம்மூன்றும் சேருவதற்கு அவற்றை ஒருவன் தன்வாயில் இட்டு மெல்ல வேண்டியுள்ளது. அதுபோலப் பூதங்களின் சேர்க்கையால் அறிவு உண்டாகின்றது என்றால் பூதங்களைச் சேர்ப்பதற்கு (வெற்றிலை மெல்லுபவனைப்போல) முதல்வன் ஒருவன் வேண்டும் என்பதையும் உணர்வாயாக.

சேர்வை - வெற்றிலை முதலிய மூன்றும் சேர்தல், வேறுவேறுபுலன் - ஐம்புலன்கள்.

ஆன ஐம்பொறி உண்டி நித்திரை அச்சம் மைதுனம் ஆதியாய்
ஊனில் வந்திடும் முன்பு இலாதவை என்றுரைக்கின், உலூ தைபோல்
வானின் வந்திடும் மாதர் ஆண்அலி ஆகிமானுடர் ஆதியாய்
யோனி பன்மையும் இன்று பூதம் உறும்புணர்ச்சி ஓர்தன்மையே [40]

இதுவும் அது.

பொருள் :

சிலந்தியினிடத்தில் நூல் தோன்றுவது போல முன்பு உடம்பில் இல்லாத ஐம்பொறி, நுகர்ச்சி, உறக்கம், அச்சம், மைதுனம் (மயக்கம்) இவை தோன்றுகின்றன என்பதும் உன் கொள்கை. அவ்வாறென்றால் ஆண், பெண், அலி ஆகிய மனித இனங்கள் தாய், தந்தையர் வழியாகத் தோன்றாது, (எவ்வாறு உடம்பில் முன்பு கூறியவை தானே தோன்றுகிறதோ அதேபோல) தானே வானத்திலிருந்து தோன்றுதல் வேண்டும். மேலும் பூதக்கூட்டம் ஒரே தன்மையாக இருப்பதால் அவற்றிலிருந்து தோன்றும் உடல்களும் ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும். ஆனால் உலகில் (உடல்கள்) மானிடர், விலங்கு, பறவை, செடி, கொடி போன்று பல உருவ வேறுபாடுகள் உள்ளன. எனவே உமதுகொள்கை பொருந்தாது.

ஐம்பொறி - ஐம்புலன்கள், உண்டி - அவற்றின் நுகர்ச்சி, நித்திரை - உறக்கம், மைதுனம் - மயக்கம், ஊனில் - உடம்பில், உலூ தை - சிலந்திப்பூச்சி, யோனி - உருவங்கள்.

ஐந்து நான்குஒரு மூன்று இரண்டுடன் ஒன்ற தாய்உடலங் களின்
வந்திடா உணர்வு இந்திரியங்களும் வன்னபன்மையும் இன்மையாம்
புந்தியோடிய வன்னபோக குணங்கள் பூத புணர்ச்சிதான்
தந்திடாது இவை பேதம் ஆயிட வந்தவா, வினைதந்தவா [41]

இப்பாடல் வினை இல்லை என்பதை மறுத்துரைக்கிறது.

பொருள் :

உலகில் உள்ள உயிர்களில் ஐந்தறிவு, நான்கறிவு, மூன்றறிவு, இரண்டறிவு, ஓரறிவு என்று பலவாறு வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அதற்கு ஏற்பவே பொறி, புலன்களும் கூடியும் குறைந்தும் உள்ளன. இதனால்தான் உயிரினங்கள் பலவாறாகக் காட்சி தருகின்றன. உடம்பில் உள்ள உயிரால் அறியப்படுகின்ற எழுத்துக்களும், நுகர்வுகளும், பண்பு வேறுபாடுகளும் நீ கூறுவதுபோலப் பூதங்களின் புணர்ச்சியால் விளையமாட்டாது. உயிர்களுக்கு அறிவும் அவற்றினுடைய நுகர்வுகளும் வேறுபட்டுக் காணப்படுவதற்குக் காரணம் அவை செய்த முன்வினைப் பயனே ஆகும். (எனவே நீ வினைஇல்லை என்று கூறுவது பொருந்தாது.)

ஐந்து முதல் ஒன்றுவரை கூறப்பட்ட எண்கள் அறிவின் வகைகளைக் குறிப்பிடுகின்றன. இந்திரியங்கள் - புலன்கள், வன்ன - உயிரினங்கள், புந்தியோடிய வன்னம் - அறிவால் அறியப்பட்ட எழுத்து, பேதம் - வேறுபாடு.

அறிவு பூதமது என்னில் வேறு புறத்து அறிந்தமை கண்டிலம்
செறிவு தான்உடலத்து எனில்சவம் ஆனபோது உடல் தேருமோ
குறிகொ ளாதுஉடல் வாயுவானதுகூடி டாமையின் என்னில் நீ
பிறிதராது உயிர்நிற்க ஞானம் உறக்கம் என்பிற வாததே [42]

இப்பாடல் பூதங்களே அறிவாகும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

பூதங்களே அறிவாகும் என்பது உம்கொள்கை. ஆனால் பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று இவற்றில் அறிவு காணப்படவில்லையே. (உடனே நீ) இந்த நான்கு பூதங்களும் உடம்பில் கூடிய பொழுதுதான் அறிவு தோன்றும் என்று கூறினால் அறிவு நீங்கி உடல் பிணமாக இருக்கும்பொழுது அறிவு காணப்படவில்லையே. (உடனே நீ) ஒருவன் இறக்கும் பொழுது அவன் உடலிலிருந்து உயிர் காற்று என்ற பூதமாக வெளியேறி விடுகிறது என்று மறுக்கக் கூடும். அவ்வாறானால் ஒருவன் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவனின் உயிர் நீங்குவது இல்லை. ஆனால் அவன் அறிவு நிகழ்வது இல்லையே ஏன்? எனவே பூதங்களின் கூட்டத்தால் அறிவு தோன்றும் என்பது பொருந்தாது.

வேறுபுறத்து - நான்கு பூதங்களிடத்தும், சவம் - உயிர் நீங்கிய உடலாகிய பிணம், வாயு - காற்று.

அறிவு உடற்குணம் என்னில் ஆனையது ஆதிஅந்தம் எறும்பதாம்
உறும், உடற்பெரிதான வற்றில் உதித்தி டும்பெரி தாகவே,
சிறுவு டற்செறி ஞானமும் சிறி தாயி டும்பரி ணாமமும்
பெறும், உடற்சிறிதாவதுஎன், பெரிதாவது என்சில பேசிடே [43]

இப்பாடல் உடலின் குணம் அறிவு என்பதை மறுக்கிறது.

பொருள் :

உடலின் குணம் அறிவு என்று நீ கூறுகின்றாய். உலகில் யானை முதலாக எறும்பு ஈறாக உடல்கள் பெருத்தும் சிறுத்தும் காணப்படுகின்றன. அறிவு உடம்பின் குணமாக இருக்குமானால் பெரிய யானைக்கு அறிவு பெரிதாகவும், சிறிய எறும்பிற்கு அறிவு சிறிதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இன்றி பெரிய யானைக்கு அறிவு சிறியதாகவும், சிறிய உடலை உடைய மனிதர்க்கு அறிவு மிகுந்தும் காணப்படுவது ஏன்?

ஆனை - யானை, உறும் - பெற்றிடும், ஞானம் - அறிவு, பரிணாமம்- வளர்ச்சி.

போத மும்மெலி வாகி யும்மலி பூதம் ஆனவை கூடலில்
பேத மோடு பெருத்து உடற்கள் சிறுத்த பெற்றிமை என்றிடில்
ஓது டற்பெரி தான வும்சிறிது ஆயிடா சிறிது ஆனவும்
நீதியில் பெரிது ஆயிடா முனம் உள்ள தன்மையின் நீடுமே. [44]

இப்பாடல் பூதக் கூட்டத்தால் உடம்பும் அதில் அறிவும் தோன்றுகிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

பூதங்கள் கூடுகின்ற பொழுது அவற்றினால் தோன்றுகின்ற அறிவு கூடியதாகவும் (பெருத்தும்), பூதக்கூட்டத்தின் அளவு சிறுத்தும் இருந்தால் சிறிய உடலில் மிகுதியான அறிவு தோன்றுகின்றது. பூதக்கூட்டத்தின் அளவு பெருத்திருந்தால் பெரிய உடம்பில் குறைந்த அறிவு தோன்றுகின்றது என்று நீ வாதிடுகின்றாய் (இதுவும் பொருத்தமில்லை) பூதங்களின் கூட்டமே உடம்பு என்றால் அது எப்பொழுதும் ஒரே அளவாகக் கூடவேண்டும். உடல் பெரிதாய்த் தோன்றிப் பின் சிறிது ஆதல் கூடாது. சிறிதாய்த் தோன்றிப் பெரிதாய் வளரக்கூடாது. ஒரே மரபாகத்தான் இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாது உலகில் பெரிய உடல் காலம் செல்லச் செல்லச் சிறிதாகிறது. சிறிய உடல் பெரிதாகிறது. எனவே பூதக்கூட்டத்தால் உடம்பும் அதில் அறிவும் தோன்றுகிறது என்பது பொருந்தாது.

இயல்பு காண்இவை என்னின் வேறிசை பெண்ணொடு ஆண்இரு தன்மையாம்
செயல்கொ ளாஇவர் செய்தி காரணம் ஆக வந்து செனிப்பதென்
இயல்ப தாம்உடல் பூதகாரியம் ஆவதும் இல்லை யாகுமால்
மயல தாம்வினை யால்ஒருத்தன் வகுத்த தன்மையின் வந்ததே. [45]

இப்பாடல் உடம்பு பேதப்படுவது இயல்பு என்பதனை மறுக்கிறது.

பொருள் :

பெருத்து, சிறுத்துத் தோன்றுவதெல்லாம் பூதக் கூட்டத்தின் இயல்பு என்று நீ கூறலாம். அதுவும் தவறு. ஏனென்றால் பூதக்கூட்டத்து இயல்பு ஒரே தன்மையாக இருத்தல் வேண்டும். ஆனால் பூதக்கூட்டத்தால் தோன்றும் உடல் பெண்ணாகவும் தோன்றுகிறது, ஆணாகவும் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுவதற்குக் காரணம் என்ன? எனவே பூதங்களின் இயல்பாலும், பூதங்களின் காரியத்தாலும் உடம்பு தோன்றவில்லை. ஒரு உயிரில் உடம்பு தோன்றுவதற்குக் காரணம் முன்வினைப் பயனைக் கொண்டு இறைவன் தோன்றுவிக்கின்றானே அன்றிப் பூதக்கூட்டத்தால் அல்ல.

செனிப்பது - பிறப்பு, மயலதாம் - மயக்கம் உடையதாம், ஒருத்தன் - இறைவன்.

காரணம் அவை என்றது என்னை கடாதி போல்நிகழ் காரியம்
நேர் அணைந்து சமைந்து நின்றிடும் என்பதும்அது நேர்கிலோம்
போர் அணைந்திடும் ஒன்றொடு ஒன்று பொருந்து மாயின்வருந்தியும்
நீர்அணைந்து ஒரு தீயின் நின்றது கண்ட தாயின் நிகழ்த்திடே. [46]

இப்பாடல் பூதக்கூட்டத்தால் ஆண், பெண் பகுப்பு உருவாகிறது என்பதனை மறுக்கிறது.

பொருள் :

மண்ணிலிருந்து குடம் முதலியன தோன்றுவதைப் போல, (ஆண், பெண் தோன்றுவதற்குக் காரணம் வேண்டாம்) ஆணும், பெண்ணும் கூடிய கூட்டத்தால் உருவங்கள் தோன்றுகின்றன என்று நீ கூறுவது பொருந்தாது. நான்கு பூதங்களும் இயல்பாக ஒன்றுக்கொன்று வேறுபட்டவை ஆகும். அவை ஒன்றோடு ஒன்று புணரமுடியாது. நீரோடு தீ கூடியிருப்பதை நீ காட்டமுடியுமா? சொல். போர் அணைந்திடும் - மாறுபடும்.

பூதம் மேவு புணர்ச்சி யேபுரி காய காரணம் ஆகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரணம் ஆவதென்
ஆதியேஉல கத்தில் ஆணொடு பெண்ணு மாய்அணை காரியம்
நாதன்நாயகி யோடுகூடி நயந்த காரணம் என்பரே. [47]

இப்பாடல் உடல் தோற்றத்திற்கு ஆண் பெண் உறவு மட்டும் காரணமாகா என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

பூதங்களின் கூட்டமே உடல் உருவத்திற்கு காரணம் என்று கூறிவிட்டு இப்பொழுது ஆண் பெண் தம்முள் காதலோடு கூடிய கூட்டமே உருவத்திற்குக் காரணம் என்று கூறுவது ஏன்? அநாதி காலத்தில் இறைவன் இறைவியோடு ஆணும் பெண்ணுமாய்க் கூடி உலக உயிர்களுக்கு இன்பத்தை விளைவித்ததனால் ஆண், பெண் கூடி உடம்புகள் தோன்றி வருகின்றன.

கந்தம் வெம்மை கலந்தி டும்புனல் கன்மம் என்செய்தது என்றனை
சந்த னம்தழல் சார நீர்இரு தன்மை யுற்றிடுமாறு அதுஓர்
தந்த கன்மம் இரண்டு அணைந்து தரும் சுகத்தொடு துக்கமும்
சிந்தி யாஎழு சீவன் உற்றிடும் வேறு உடற்கு இலை தேறிடே. [48]

இப்பாடல் வினை இல்லை என்பதை மறுக்கிறது.

பொருள் :

நீர், சந்தனம் முதலிய பொருள்களோடு கூடுவதால் குளிர்ச்சியும், நெருப்போடு சேர்வதால் வெம்மையும் கொள்கிறது. இவ்வாறு நீர் குளிர்ச்சியும், வெம்மையும் ஆகிய மாறுபட்ட தன்மையைப் பெற முன்வினை என்ன செய்தது? என்று கேள்வி கேட்கின்றாய் (அதாவது) வினைப்பயன் இல்லாமலேயே வேறுபட்ட இரு தன்மைகளைச் சேர்க்கையால் பெறுகின்றன. ஆதலால் வினை இல்லை என்கின்றாய். நீ கூறுகின்ற உவமையில் ஒரு பொருளுக்கு (அதாவது நீருக்கு) இரண்டு தன்மைகள் எவ்வாறு உண்டாயிற்று? முன்வினைப்

பயன் (கன்மம்) இரண்டு வகைப்படப் பொருந்தி இன்பதுன்பங்களைக் கொடுக்கும். அந்த இன்ப துன்பங்கள் உயிர்க்குத்தான் உண்டு, உடம்புக்கு இல்லை என்பதை அறிவாயாக.

கந்தம் - சந்தனம், தழல் - நெருப்பு, சீவன் - உயிர்.

இன்பம் எய்தி இருந்து நீவினை இல்லை இங்கு இயல்பு என்றிடின்
துன்பம் எய்திடு வான்என் மற்றிது சொல்லி டாய்சொல வல்லையேல்
முன்பு செய்திடு கன்மம் என்றுஅறி கன்ம மும்முதல் வன்அறிந்து
அன்பினால்உறு விக்கும் அப்பயன் ஆங்கு அமைப்பொடு அநாதியே.
[49]

இப்பாடல் வினைப்பயனைச் சாதிக்கின்றது.

பொருள் :

உலகில் இன்பத்தை அனுபவித்து மகிழும் நீ வினை இல்லை, அது உலக இயல்பு என்கின்றாய். அவ்வாறானால் துன்பத்தை அனுபவிப்பதற்கு எது காரணம்? அதற்குரிய காரணத்தை உன்னால் சொல்ல முடியாது. முற்பிறவியில் செய்த வினையின் பயனே இப்பிறவியில் இன்ப துன்பங்களாக இறைவன் அருளால் உயிரை வந்து பொருந்துகின்றன. இதனை அறிவாயாக. வினைப்பயன் முதல்வனால் அறியப்பெற்று அவனால் கூட்டுவிக்கப் பெற்று அனாதி காலத்திலிருந்து நிகழ்கின்றன என்பதை அறிவாயாக.

அநாதி - தொன்றுதொட்டு.

அநாதியேல் அமைவு இன்று எனின்மலம் மாயை கன்மம் அணுசிவன்
அநாதி, கன்மம் அணுக்கள் செய்ய அறிந்து கன்மம் உடற்செயா,
அநாதி காரிய மாம் உடல்கள் அசேத னம்அணையா அறிந்து
அநாதி ஆதி அமைக்க வேண்டும் அமைப்பி னோடும் அநாதியே.
[50]

இப்பாடல் இறைவன் வேண்டுவதில்லை என்பதை மறுத்துரைக்கிறது.

பொருள் :

வினைப்பயன் அநாதி என்றால் அதனைக் கூட்டுவிக்க இறைவன் தேவையில்லை (என்று நீ மறுக்கலாம்.) மலம், மாயை, கன்மம், உயிர், சீவன் இவை அனைத்தும் அனாதியே. வினையின் பயன்கள் தாமாகச் சென்று உயிர்களுக்கு உடலையும், பயனையும் கொடுக்காது. உடல்களும் அறிவற்ற பொருள் என்பதால் அவை உயிரை அறிந்து சேரமாட்டா. எனவே தனியே நின்ற உயிரையும் உடலையும் கூட்டுவிப்பதற்கு இறைவன் வேண்டும். எனவே இவையனைத்தும் அநாதியே என்பது தெளிவாகும்.

அமைவு - கூட்டுவிக்கும் இறைவன், அணு - உயிர், அசேதனம் - அறிவற்றது.

காணொணா கரணங்க ளுக்குஉயிர் கண்டிடாமையின் இன்றெனில்
காணு மோகடம் கண்ட கண்ணினைக் கண்டு நிற்பதும் கண்ணதே
காணொ ணாதுஉயிர் தானும் இப்படிக் கண்டி டும்கர ணங்களைக்
காணொ ணாகர ணங்க ளுக்குஉயிர் உண்மை யாவதும் கண்டிடே.

(51)

இப்பாடல் உயிர் இல்லை என்பதை மறுத்துரைக்கிறது.

பொருள் :

புறக்காரணங்களால் காணமுடியாத காரணத்தால் உயிர் என்று ஒரு பொருள் இல்லை என்கிறாய். கண் உடலைக் காணும். ஆனால் தன்னைக் காணுகின்ற கண்களை உடல் தனித்துக் காண இயலுமா. காண முடியாது. அது போலத்தான் உயிரானது அறிவுடைய பொருளாக இருப்பதால் கருவி, கரணங்களை அறியும். ஆனால் கரணங்கள் உயிரை அறியமாட்டா. எனவே ஆன்மா உண்டு என்பதை அறிவாயாக.

கரணம் - கருவிகள், கடம் - உடம்பு.

அங்கி யானது தானும் ஒன்றை அணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுஉயிர் தானும் இப்படிப் பற்றி யல்லது நின்றிடாது
எங்கு மாந்தயி லத்தை உண்டுஎழுதீப மானது ளிந்திடும்
அங்கதாம் உடல்நின்று கன்மம் அருந்தி ஆருயிர் ஆவதே [52]

இப்பாடல் உயிரின் தன்மையை நிலைநாட்டுகிறது.

பொருள் :

நெருப்பானது தான் ஒரு பொருளைப் பற்றி நின்றுதான் வெளிப்படும். தான் தனியாகத் தோன்றாது. உயிரும் நெருப்பைப் போன்றதாகும். அதாவது ஒரு உருவத்தைப் பொருந்தி தான் நிற்கும். எண்ணையினை உண்டு விளக்கானது ஒளியைக் காட்டும். அதுபோலத்தான் வினைப்பயனால் ஏற்பட்ட உடம்பைப் பற்றி நின்று உயிரானது ஆன்மா தன் வினையின் பயன்களை நுகரும்.

அங்கி - நெருப்பு, அணைந்து - பற்றி, பங்கியாது - வெளிப்படாது, தைலம் - எண்ணெய், உண்டு - குடித்து, கன்மம் அருந்தி - வினைப்பயனை அனுபவித்து

அறிவு தான்உட லத்தின் வேறதுவாய் இறந்து பிறந்திடின்
அறிவு முன்புளது இங்கு வந்தும் அறிந்தி டாமையது இன்றெனின்
அறிவை யோகன வத்து நீநன வத்தை அன்று உதரத்து இருந்து
அறியும் அவ்வறி வோம யக்கறிவு ஆத லால்அறி யாதுகாண். [53]

இப்பாடல் ஆன்மாவிற்கு அறிவும், அறியாமையும் உண்டென்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

அறிவானது உடலிலிருந்து வேறுபட்டு ஆன்மாவின் குணமாக அமைந்து உடலை விட்டு இறந்தும் பிறந்தும் திரியுமாயின் முப்பிறப்பிலுள்ள அறிவு, இப்பிறப்பிலும் தோன்ற வேண்டுமே என்று நீ கேள்வி கேட்கலாம். நீ கனவு காணும் பொழுது அக்கனவை நனவாகத்தான் அனுபவிக்கின்றாயே அன்றிக் கனவாக அறிவதில்லை. மேலும் நீ தாயின் கருவிலிருக்கும் பொழுது அறிந்த அறிவு உடம்பில் சேர்ந்தபிறகு மயக்கம் உடையதாயக் காணப்படும் என்பதை அறிவாயாக.

விளக்கவுரை :

கனவை நனவாகக் கொள்ளுதலன்றிக் கனவு என்று அறிவதில்லை. அதாவது கனவை நனவு என்று மயங்குகிறோம். அதுபோலக் கருவிலிருந்த அறிவானது உலகில் உடம்பில் பரிணாமம் அடைகின்ற பொழுது மயங்கிய அறிவாகத் தோன்றுமே அன்றி - தெளிந்த அறிவாகத் தோன்றாது. எனவே முன்பிறப்பு அறிவு இப்பிறப்பில் தெளிவாக வெளிப்படாது மயங்கிய நிலையிலேயே இருக்கும். எனவே ஆன்மாவுக்கு அறியாமையே குணம் எனக் கொள்ளவேண்டும்.

உதரம் - கருவறை, மயக்க அறிவு - அறியாமை.

இறந்தி டும்அறி வேபி றந்திடும்என்பது இங்குஇசை யாதுஎனின்
உறங்கி டும்பொழுது இன்றி நின்றுஉணர்வு இங்கு உதித்திடும் ஆறதோர்
பிறந்த இவ்வுடல் போக வேறுடல் பின்பு வந்தமை பேசிடின்
மறந்தி டும்கன வத்தில் வேறுடல் வந்த வாறு மதித்திடே. [54]

இப்பாடல் அறிவு பற்றிய செய்திகளைத் தெளிவாக்குகிறது.

பொருள் :

இறந்த அறிவே மீண்டும் பிறக்கும் என்று கூறுவது பொருத்தம் உடையது அல்லவென்று நீ வாதிடுகின்றாய் துயிலுகின்ற பொழுது கனவு காண்கிறோம். ஆனால் அதே உறக்கத்தில் புற நிலையில் நிகழுகின்ற எதனையும் நாம் உணர்வதில்லை. (பாம்பு உடம்பில் ஏறினாலும் நாம் உணராது தூங்குகின்றோம்) விழித்தவுடன் புறநிலைச் செயல்களை உணர்கின்றோம். (பாம்பைக் கண்டாலே அஞ்சுகிறோம்) தூங்குவதற்கு முன்னும், தூங்கி எழுந்த பின்னும் செயல்படுகின்ற அறிவு தூங்கும் பொழுது அறியாமை உடையதாகிறது. அது எப்படி என்றால் நனவை மறந்து கனவு காணும் உடம்பு அறியாது நிற்பது போல மீண்டும் கனவு மறைந்து நனவு வருகின்ற பொழுது மீண்டும் முன்பிருந்த

அறிவு தோன்றிவிடுகிறது. (இதே போலத்தான் முற்பிறவி அறிவு கருவில் குழந்தையாக இருக்கும்போது மயங்கிய அறிவாக இருந்து உடம்பாக மீண்டும் பரிணாமம் அடைகின்ற பொழுது தோன்றுகிறது.)

கரணம் வாயு விடத்து அடங்க அடங்கி வந்துஎழு காரியம்
மரண மான இடத்து மற்றிவை மாய்ந்து பின்பு வரும்செயல்
கிரண மார்கலை கெட்டு உதிப்ப இறப்பி னோடு பிறப்பையும்
தரணி யோர்கள் மதிக்கு உரைப்பர் உயிர்க்கும் இப்படிச் சாற்றிடே. [55]

இப்பாடல் முன்னதற்கு விளக்கம் கூறுகிறது.

பொருள் :

ஒருவன் மரணம் அடைந்தால் ஐம்புலன்களும் கெட்டு மீண்டும் பிறக்கின்ற பொழுது அவை மீண்டும் தோன்றுகின்றன. எதுபோல என்றால் ஒருவன் மயக்கம் அடைந்த பொழுது அவனது கரணங்கள் யாவும் செயல்படாது ஒடுங்கி, உயிரானது காற்றில் அடங்கி நிற்கும். (மூச்சு மட்டும் ஓடும்) பின்பு மயக்கம் தீர்ந்தவிடத்து அவனது கரணங்கள் உடன் செயல்படத் துவங்கும். (அதுபோலத்தான்) மேலும் திங்களின் ஒளி தேய்வதும் பின்னர் வளர்வதும் ஆகிய செயல்களை உடையதாக இருக்கிறது. அதுபோலத்தான் உயிரின் பிறப்பும் இறப்பும் ஆன்மாவிற்கு அமைகிறது எனலாம்.

கரணங்கள் - கருவிகள் (புலன்கள்) கலை - சந்திரனின் ஒளி.

பூத மானவை காரியங்கள் பொலிந்து மன்னி அழிந்திடும்
ஆத லால்ஒரு நாதன் இங்குளன் என்று அறிந்துகொள் ஐயனே
பேத மான கடாதி மண்ணினில் வந்த வாறு பிடித்திடில்
கோதி லாத குலால னால்வரு செய்கை என்று குறிப்பரே. [56]

இப்பாடல் இறைவன் உண்டு என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

ஐயனே, நீ கூறும் பூதங்களிலிருந்து இவ்வுலகத்துப் பொருள்கள் எல்லாம் தோன்றிக் காரியப்படுகின்றன. சிலகாலம் இருந்து அழிந்து போகின்றன. எனவே இவற்றை ஆக்கியும் காத்தும், ஒடுக்கியும் செயலாற்றுவதற்கு இறைவனாகிய தலைவன் உள்ளான் என்பதை அறிவாயாக. அதாவது மண்ணிலிருந்து குடம் முதலியவற்றை உருவாக்குவதற்குக் குயவன் இருப்பதைப்போல இறைவனும் பூதங்களைக் காரியப்படுத்தி இவ்வுலகத்தைப் படைக்கின்றான்.

வேதன் நாரணன்ஆர ணம்அறி யாவி ழுப்பொருள்பேதைபால்
தூத னாய்இரு கால்நடந்திடு தோழன் வன்மைசெய் தொண்டனுக்கு
ஆதலால் அடி யார்க ளுக்குஎளி யான் அடிக்கம லங்கள்நீ
காத லால்அணை ஈண்டன் வேண்டின இம்மையே தரும்கண்டிடே.
[57]

இப்பாடல் இறைவனின் பெருமை கூறுகிறது.

பொருள் :

இறைவனாகிய சிவபெருமான் பிரமன், திருமால், மறை இவற்றால் அறியப்படாத ஒப்பற்ற பரம்பொருள் ஆவான். ஆனால் அடியவர்க்கு எளியவன் ஆவான். ஆதலால்தான் தன் தோழனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகப் பரவை நாச்சியாரிடம் ஓர் இரவில் இரண்டுமுறை தூதனாக நடந்தான். அத்தகைய இறைவனின் திருவடித் தாமரைகளை அன்போடு வழிபாடு செய்வாயாக. நீ விரும்பிய இன்பத்தை இப்பிறப்பிலேயே வழங்க வல்லவன் அவனே.

வேதன் - பிரமன், நாரணன் - திருமால், ஆரணம் - வேதம், பேதை - பரவைநாச்சியார், வன்மைசெய் தொண்டன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பொன்கு லாவுமணிக்க லன்கள் மலம்பு கில்கை பொருந்திடா
மின்கு லாம்இடை யார்கள் தாம்உல கத்தின் வேட்கை விடும் பொருள்
புன்புலால் மல மூத்திராதி பொசிந்து நாறு புலைக்கலம்
என்கொ லாம்இவர் மேல்வி ழுந்தது இவற்றின் என்பெற எண்ணியே. [58]

இப்பாடல் பெண்மைச் சிற்றின்பத்தை விரும்பாது பேரருளை விரும்பவேண்டுவதை வலியுறுத்துகிறது.

பொருள் :

பொன்னால் செய்யப்பெற்று மணிகள் பொறிக்கப் பெற்று அணிகலன்கள் மலத்தில் வீழ்ந்தால் கையால் எடுத்தல் பொருந்தாது. அதுபோல மின்னலைப் போன்ற இடையுடைய பெண்களிடத்தில் கொண்ட கேளிக்கையைக் கைவிடுதலே நலம். அவர்கள் உடம்பு இழிந்த புலால், இரத்தம், மலம், சிறுநீர் பொருந்தி உள்ள உடலாகும். அவ்வுடலை விரும்புவது எதற்காக?

தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேத நீ
ரலெ டுத்த முடைக்கு ரம்பை அழுக்கி னோடு புழுக்குழாம்
நா லொ ழுக்கிடு கோழை யீரல் நுரைக்கும் மூத்திர பாத்திரம்
சேல்அ டர்த்தகண் ணார்களென்பது தேர் மலத்திரள் திண்ணமே. [59]

இதுவும் அது

பொருள் :

தோல், இரத்தம், இறைச்சி, கொழுப்பு, எலும்பு மச்சை, சுக்கில நீர் ஆகியவற்றால் அமைந்து தீ நாற்றம் வீசுவது இவ்வுடல். அழுக்கு மிகுந்து புழுக்கள் நிறைந்த கோழை ஒழுகும் கடல் இவ்வுடல். மூத்திரம் நிறைந்த பாத்திரம். இத்தகைய உடம்பை உடைய பெண்ணைப் பார்த்து சேல் மீன் போன்ற கண்ணை உடையவள் என்றெல்லாம் நீ பாராட்டுவது இழிவாகும்.

ஆசையுற்று உழல் சூகரங்கள் அசுத்த மேவி யளைந்துதின்
றேசு கித்தன வாயி டும்சுகம் ஏழை யோடுஉறும் இன்பம் நீ
மாச தற்றுஒளிர் நித்த சுத்த வளம்த ரும்சுக வாரிகாண்
ஈச னுக்கடி மைத்தி றத்தின் இயைந்து நாம்பெறும் இன்பமே. [60]

இதுவும் அது

பொருள் :

உடலால் வரும் இன்பத்தை விரும்பித் துன்பப்படுவது எத்தகையது என்றால் பன்றிகள் மலத்தில் புகுந்து அதனை உண்டு, அதனில் புரண்டு இன்பத்தை அடைந்தனவாய் மகிழ்வது போன்றதாகும். அத்தகைய சிற்றின்பத்தை விட்டு விட்டு இறைவனுக்கு அடிமை பூண்டு அதனால் விளைகின்ற இன்பமானது பேரின்பமாகும். அந்த இன்பமே குற்றமற்றது, நிலைத்தது, தூய்மையானது, சிறந்த இன்பப் பெருங்கடலும் ஆகும்.

சூகரம் - பன்றி, அசுத்தம் - மலம், சுகித்தல் - இன்பம் அனுபவித்தல், சுகவாரி - இன்பக்கடல்.

குரோத மேகுண மாய்இருந்தவர் சாந்திநன்மை குறிக்கொளார்
அராகமே அணை வார்கள் ஆசை அறுத்த இன்பம் அறிந்திடார்
பராவு தேவர் பராவுதூய பராப ரன்னடி பற்றிநீ
விராவி மெய்யில் விடாத இன்பம் விளைந்திடும் இது மெய்ம்மையே. [61]

இப்பாடல் இறைவனின் பெருமையைக் கூறுகிறது.

பொருள் :

கோபத்தையே குணமாகக் கொண்டவர்கள் பொறுமையால் விளையும் நன்மையை அறிய மாட்டார்கள். ஆசையையே இயல்பாக உடையவர்கள் ஆசையை அறுத்தவர்கள் அடைகின்ற இன்பத்தை அடைய மாட்டார்கள். (அதுபோல நீயும் சிற்றின்பத்தையே குணமாகக் கொண்டதால் பேரின்பத்தை அறியமாட்டாய்) தேவர்களும் போற்றுகின்ற

தூய்மையான வடிவத்தை உடைய பராபரனாம் இறைவனின் திருவடிகளை நீ விடாது பற்றிக் கொண்டால் முடிவற்ற பேரின்பம் உனக்குக் கிடைத்திடும். இது உண்மையாகும்.

குரோதம் - கோபம், சாந்தி - பொறுமை, அராகம் - பேராசை, பராவு - போற்றுதல், விராவி - பற்றுதல்.

காம மாதி குணங்க ளைச்சுகம் என்று கொண்டனை காதலால்
தூ மம் ஆரழல் அங்கி சீதம் மலிந்தபோது சுகந்தரும்
நாமமார்தரு சீதம் வெம்மை நலிந்த போது தரும்சுகம்
சேமமாகியஇன்ப மாம்மிகு தெய்வ நன்னெறி சேரவே. [62]

இப்பாடல் இறைவனின் நெறியைப் பெருமைப்படுத்துகிறது.

பொருள் :

காமம் முதலிய குணங்களை இன்பம் தருவன என்று நீ கருதுகின்றாய். (அது தவறானது) பனிக்காலத்தில் குளிர் மிகுதியாக இருக்கும் பொழுது புகையோடு கூடிய நெருப்பு இன்பத்தைத் தரும். கோடைக்காலத்தில் குளிர்ந்த பனி இன்பத்தைத் தரும். ஆனால் இவை காலத்தின் அடிப்படையில் மாறினால் (கோடைக்காலத்தில் நெருப்பு, பனிக்காலத்தில் குளிர்) இன்பத்தைத் தராது. என்றைக்கும் மாறாத பேரின்பத்தைத் தரவேண்டுமானால் இறைவனுடைய திருவடியைப் பற்றி ஞானநெறியில் செல்லுதல் வேண்டும்.

காமம் - சிற்றின்பம், தூமம் - புகை, ஆரழல் - நெருப்பு, சீதம் - பனி, சேமம் - ஆறாதசெல்வம், நன்னெறி - ஞானநெறி.

படிக்கும் நூல்கள் சிவாக மம்பசு பாச மோடு பதித்திறம்
எடுத்துஇ யம்புவது ஈசன் வார்கழல் ஏத்திடும் தொழில் என்றுமே
விடுத்திடும் பொருள் காம மாதிகள் வேண்டி டும்பொருள் ஈண்டுஅருள்
முடித்து மும்மலம் விட்டு நின்மல னோடுநின்றிடல் முத்தியே. [63]

இப்பாடல் சித்தாந்திகளின் பெருமை கூறுகிறது.

பொருள் :

(சைவசமயவாதிகளாகிய) நாங்கள் எப்பொழுதும் படிக்கின்ற நூல்கள் சைவ ஆகமங்கள் ஆகும். நாங்கள் எடுத்து உரையாடுவது பதி, பசு, பாசங்கள் என்ற முப்பொருள்களின் திறமே. சிவபெருமானைத் தொழுவதே எங்களின் இடைவிடாத தொழிலாகும். நாங்கள் வேண்டாம் என்று வெறுத்திடுபவை காமம் முதலிய பொருள்கள் ஆகும். நாங்கள் என்றைக்கும் விரும்புகின்ற பொருள் திருவருளே ஆகும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலக் கட்டிலிருந்து விடுபட்டு இயல்பாகவே பாசத்திலிருந்து நீங்கி நிற்பதே முத்தி. (என்று உணர்ந்தவர்கள்)

இப்பாடல்வரை உலகாயதன் மதக் கொள்கையை ஆசிரியர் மறுக்கிறார். மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை, நின்மலன் - மும்மலங்கள் இல்லாத இறைவன்.

பௌத்தம்

சௌத்திராந்திகன் மதக் கொள்கைகளும் மறுப்பும்

உலகாயதன் மதம் காட்சி அளவையை மட்டும்தன் அளவையாகக் கொண்டது. பௌத்தம் காண்டல் கருதல் ஆகிய இரண்டு அளவைகளையுமே தனது பிரமாணமாகக் கொண்டது. உரையளவையை ஏற்பதில்லை. எனவேதான் ஆசிரியர் பிறமதக் கொள்கையில் அடுத்து பௌத்தத்தை எடுத்துக் கொண்டுள்ளார். பௌத்த மதத்தின் துவக்குநராம் கௌதமபுத்தர் கி.மு. 520ல் தோற்றம் கொண்டவர் என்பது தத்துவக் கொள்கையின் முடிவாகும். குறிப்பிட்டுச் சொன்னால் சாக்ரடீசுக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பும், லவோசியஸ், மகாவீரர் ஆகியவர்களுக்குச் சில ஆண்டுகள் பின்பும், கன்பூசியஸ், பிதாகோரஸ் முதலியோரின் உடன் காலத்திலும் புத்தர் தோன்றினார் என்று குறிப்பிடுவர். கி.மு. 480களில் கௌதமபுத்தரின் மறைவுக்குப் பின்னர் பௌத்த .மதச் சங்கங்கள் தோன்றிப் புத்தமதக் கொள்கைகளை நாட்டில் பரப்பின. அத்தகைய சங்கங்களின் பிரிவுகள்தான் கி.பி. 2ஆம்

நூற்றாண்டில் தமிழகத்தில் நுழைந்து 12ஆம் நூற்றாண்டுவரை நிலவியிருந்தன. தமிழில் மணிமேகலை, குண்டலகேசி, பிம்பிசாரக்கதை, சித்தாந்தத் தொகை, அபிதம்ம அவதாரம் ஆகிய நூல்கள் பௌத்த மதக் கொள்கைகளைத் தருகின்றன.

பௌத்த மதக் கொள்கையினர் தம் வேறுபாட்டால் நான்கு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். சௌத்திராந்திகன் என்றும், யோகசாரர் என்றும், மாத்திமிகன் என்றும், வைபாடிகர் என்றும் அப்பிரிவினர் அழைக்கப்பெற்றனர். நூலாசிரியர் காலத்தில் தமிழகத்தில் நிலவிவந்த நான்கு பிரிவினரைப் பற்றி இதுமுதல் 79 பாடல்களில் கொள்கைகளும் மறுப்புகளும் அமைந்துள்ளன. அவை இனி வருமாறு.

நிதியார்வேதநூலின்நெறியலா அறங்கள்நாளும்
ஓதிஓர் ஐந்து சீலம் உடையராய் உடலம் மூடிப்
போதிநீள்மரத்தின்மேவு புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச் சௌத்திராந் திகன்முன் சாற்றும் [64]

இப்பாடல் சௌத்திராந்திகனை அறிமுகப்படுத்தும் பாடலாகும்.

பொருள் :

நீதிகள் நிறைந்த வேதநூல் வழக்கத்திற்கு மாறுபட்டு எழுந்த (பிடகநூலை) நூலை நாள்தோறும் ஓதுகின்றவர்கள். ஐந்து சீலங்களை உடையவர்கள். உடல் முழுவதையும் காவி உடையால் போர்த்தியவர்கள். போதிமரத்தைத் தெய்வத் தன்மை உடையதாகக் கொள்பவர்கள். இத்தகைய நால்வகைப் பௌத்தர்களில் ஒருவராகிய சௌத்திராந்திகன் தன் கொள்கையைச் சொல்லத் தொடங்குகிறான்.

புத்தர் நால்வர் - சௌத்திராந்திகன், யோகசாரன், மாத்திமிகன், வைபாடிகன், ஐந்துசீலம் - அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், சங்கிரகம்.

முழுதுணர்ந்து உலகில் கோறல் முதற்செயல் முனிந்து மற்றும்
பழுதிலா அருளி னாலே பரதுக்க துக்கன் ஆகித்
தொழுதுவா னவரும் போற்றத் தொல்பிட கங்க ளான
வழுவில்ஆ கமங்கள் சொன்ன மாதவன் நாதன் ஆவான். [65]

இப்பாடல் புத்தரின் பெருமையைப் பேசுகிறது.

பொருள் :

அறியவேண்டியவற்றை முழுமையாக உணர்ந்து உலகில் கொலை முதலிய குற்றங்களை வெறுத்து, குற்றமற்ற அருளினாலே பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தன் துன்பமாகக் கருதி, வானவர்கள் தொழுதுபோற்றுகின்ற தொன்மையான திரிபிடகம் என்னும் நூல்களை அருளிய நாதனாகிய புத்த பெருமானே முதல் தலைவன் ஆவான்.

முனிந்து - வெறுத்து, பரதுக்க - பிறர் துன்பம், தொல் பிடகங்கள் - திரிபிடகங்களாகிய நூல்கள்.

மருவிய அளவை காட்சி மானம்என்று இரண்டு இவற்றால்
கருதிய பொருள்கள் ஞான ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வரும்உரு அருவம் வீடு வழக்கென நான்கு அதுஆகித்
தரும்அவை ஒன்று இரண்டாய்த் தாம்விரிந்து எட்டின் ஆமே. [66]

இப்பாடல் இரண்டு அளவைகளை வற்புறுத்துகிறது.

பொருள் :

(பிடகநூலில்) அளவைகளாகக் கொள்ளப்படுவன காட்சி அளவை அனுமான அளவை என்ற இரண்டேயாகும். இவற்றால் அறியப்படுகின்ற பொருள்கள் இரண்டே ஆகும். அவை அறிவும் அறியப்படும் பொருளுமேயாகும். இவை இரண்டும் ஒரு கணத்தில் தோன்றி ஒரு கணத்தில் நின்று மறு கணத்தில் அழிவதாகும். அவற்றால் பெறப்படுவன (இரண்டு அளவைகளால்) உருவமும், அருவமும், வீடும், வழக்கும்

என்ற நான்காகும். அவை ஒவ்வொன்றும் இரண்டாக விரிந்து எட்டாக விளங்கும்.

மானம் - அனுமானம், ஞானம் - அறிவு, ஞேயம் - அறியப்படும் பொருள், கணபங்கம் - ஒரு நொடியில் தோன்றி மறுநொடியில் அழிவது.

உருஇயல் பூத மோடுஅங்கு உபாதான ரூப மாகும்
அருஇயல் சித்தம் கன்மம் என்றுஇரண் டாகும் வீட்டின்
மருஇயல் குற்றம் கந்தம் எனவழங் கிடும்வ ழக்கின்
இருஇயல் உள்ள தோடு அங்கு இல்லாதாம் இயம்பும் காலே. [67]

இப்பாடல் முன்பாடலின் விரிவை உணர்த்துகிறது.

பொருள் :

முன்பாடலில் கூறப்பெற்ற உருவம் முதலிய நான்கும் இரண்டிரண்டாய் விரியும். உருவம் என்பது பூதஉருவம் என்றும், உபாதாய உருவம் என்றும் விரியும். அருவம் என்பது சித்த அருவம், கன்ம அருவம் என்று விரியும். வீடு என்பது குற்ற வீடு, கந்தவீடு என விரியும். வழக்கு என்பது உள்வழக்கு, இல்வழக்கு என விரியும்.

மண்புனல் அனல்கால் பூதம் வலிகந்தம் இரதம் வன்னம்
எண்தரும் உபாதா னம்தான் இவையிரு நான்கும்கூடி
உண்டொரு பொருள் உருபம் உறுபலன் உபாங்கம் ஓடக்
கண்டது சித்தம் கன்மம் நன்றுதீது என்றல் காணே. [68]

இப்பாடல் முன்னதன் விரிவு உணர்த்துகிறது.

பொருள் :

பூதஉரு என்பது மண், புனல், அனல், காற்று ஆகும். உபாதய உருவம் என்பது வன்னம், நாற்றம், சுவை, உரு என நான்காகும். இவை எட்டும் கூடுகின்ற பொழுது பொருள் உண்டாகின்றது. அவ்வாறு தோன்றுகின்ற பொருளே உருவம் எனப்படும். இவை புலன்களைப் பற்றி அவற்றின் வழியே அறிவு தோற்றுகின்றபொழுது அது சித்த அருவம் எனப்படும்.

அவ்வாறு அறியப்பட்ட பொருள் நல்லது தீயது என்று பகுத்து உணரப்படும். அப்பொழுது அது கன்ம அருவம் எனப்படும்.

கந்தம் - நாற்றம், இரதம் - சுவை, வன்னம் - வடிவு

குற்ற வீடு அராகம் ஆதி குணங்களைக் குறைத்த லாகும்
மற்றவீடு உருவம் ஆதி ஐந்தையும் மாய்த்தல் ஆகும்
சொற்றரும் தொகைதொ டர்ச்சி மிகுத்துரை என்று மூன்றாய்
உற்றிடும் வழக்கு இரண்டும் ஒன்று மூன்றாகி ஆறாம். [69]

இப்பாடல் இருவகைக் குற்றம் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

குற்ற வீடு என்று கூறப்பெறுவது அராகம் முதலிய குணங்கள் குறைந்து முத்தி இன்பத்தை அடையும் பொழுது தோன்றுவதாகும். கந்த வீடு என்று சொல்லப்பெறுவது உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம், என்ற ஐந்து கந்தங்களும் முழுமையாகக் கெடுவதால் உண்டாவதாகும். வழக்கு என்று சொல்லப்பட்ட இரண்டும் ஒவ்வொன்றும் மூன்றாக அமைந்து ஆறாக விரியும். அவை தொகை உண்மை வழக்கு, தொகை இன்மை வழக்கு, தொடர்ச்சி உண்மை வழக்கு, தொடர்ச்சி இன்மை வழக்கு, மிகத்துறை உண்மை வழக்கு, மிகத்துறை இன்மை வழக்கு என்பனவாம்.

விளக்கவுரை :

இப்பாடலில் குற்றவீடு பற்றியும், கந்தவீடு பற்றியும், வழக்குகள் பற்றியும் ஆசிரியர் விரித்துரைப்பதால் அவரின் பிறமத அறிவு புலனாகின்றது.

ஒருவன் என்று ஓதப் பட்டான் உருவாதி ஐந்தும் கூடி
வருபவன் என்று உரைத்தல் தொகையுண்மை வழக்க தாகும்
உருவம் அங்கு ஆதி யாய ஐந்தையும் ஒருவன் இன்று
தருவது தொகையின் இன்மை வழக்கதாம் சாற்றும் காலே. [70]

இப்பாடல் வழக்கு பற்றி விரித்துரைப்பதாகும்.

பொருள் :

ஒருவன் என்று சுட்டப்படுகின்றவன் உருவம், வேதனை, ஞானம், குறி, வாசனை ஆகிய ஐந்தினோடும் கூடிவருபவன் என்று கூறுவது தொகை உண்மை வழக்காகும். உருவம் முதலிய ஐந்தோடும் கூடாமல் ஒருவன் நின்று தோன்றுவான் என்பது தொகை இன்மை வழக்காகும்.

காரண காரியத்தின் தொடர்ச்சியாய்க் காலம் மூன்றின்
சேர்வறத் தோன்றும் கெட்டு வழியென்கை தொடர்ச்சி உண்மை
ஓர்தரின் ஒருவனே எக்காலத்தும் உள்ளான் என்று
தேர்வது தொடர்ச்சி இன்மை வழக்கதாகும் செப்பும் காலே. [71]

இதுவும் அது.

பொருள் :

காரண காரியத்தின் தொடர்ச்சியாய் மூன்று காலம் என்ற மயக்கம் அறுத்து ஒரு பொருள் தோன்றி அடுத்த விநாடியே கெடுதல் தொடர்ச்சி உண்மை வழக்காகும். ஒரு கர்த்தாவே காரண காரியத்தின் தொடர்ச்சியாய் எக்காலத்தும் உள்ளான் என்று கூறுவது தொடர்ச்சி இன்மை வழக்காகும் என்று கூறப்படும்.

தோற்றிய பொருள்கள் எல்லாம் நாசமாம் என்று சொல்லும்
மாற்றம்முன் உரைத்தல் மற்றை மிகுத்துரை வழக்கின் உண்மை
போற்றிய பொருள்கண் கட்குப் போனது போல்மு திர்ந்து
வேற்றுமைப் பட்டது என்கை மிகுத்துரை இல் வழக்கே. [72]

இதுவும் அது.

பொருள் :

தோன்றிய பொருள்கள் எல்லாம் ஒரு கணத்தில் கெடும் என்பது மிகுத்துறை உண்மை வழக்காகும். இதற்கு மாறாகக் காரியம் கெட்டு காரணம் நிற்கும் என்று கூறுவது மிகுத்துறை இன்மை வழக்காகும்.

உள்வழக்கு இல்வ ழக்குஉள் ளதுசார்ந்த உள்வ ழக்கோடு
உள்ளது சார்ந்த இன்மை வழக்குடன் இன்மை சார்ந்த
உள்வழக்கு இன்மை சார்ந்த இல்வழக்கு என்றோர் ஆறாம்
உள்வழக்கு உளதுண்டு என்கை, முயற்கோடு இன்று இல்வ ழக்கே.
[73]

இதுவும் அது.

பொருள் :

முன்னர் கூறப்பட்ட உள்வழக்கும் இல்வழக்கும் ஆறாகக் கொள்ளப்படும். அவை உள்ளது சார்ந்த உள்வழக்கு, உள்ளது சார்ந்த இல்வழக்கு, இல்லது சார்ந்த உள்வழக்கு, இல்லது சார்ந்த இல்வழக்கு என்று முன்னதுடன் சார்ந்து ஆறாகும். அவற்றுள் உள்ளதை உண்டு என்று கூறுவது உள்வழக்கு. உதாரணமாக யானைக்குக் கோடு உண்டு என்று கூறுவது. இல்லதனை இல்லை என்று கூறுவது இல்வழக்கு. அது முயலுக்குக் கொம்பு இல்லை என்று கூறுவது.

உணர்வுசார்ந்து உணர்வு உதிக்கை உள்ளது சார்ந்த உண்மை
உணர்வுபின் இன்றாம் என்கை உள்ளது சார்ந்த இன்மை
உணர்வு முன்பு இன்றித் தோன்றல் இல்லது சார்ந்த உண்மை
உணரின்இல் லதுசார்; இன்மை உள்ளங்கை உரோம நாணே. [74]

இதுவும் அது.

பொருள் :

அறிவைச் சார்ந்து அறிவு உண்டாம் என்று கூறுவது உள்ளது சார்ந்த உள்வழக்கு. அறிவு கெட்டால் பின்னர் அறிவு உண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இன்மை வழக்கு. அறிவு முன்பு இல்லையாய் பின்பு உண்டாம் என்று கூறுவது இல்லது சார்ந்த உள்வழக்கு. உள்ளங்கையில் மயிர் உண்டு என்பதும் அம்மயிறால் செய்த கயிறு உண்டு என்பது இல்லது சார்ந்த இல் வழக்கு.

விளக்கவுரை :

இப்பாடல் வரை தன் மதம் கூறல் என்ற அடிப்படையில் கருத்துகள் கூறப்பெற்றுள்ளன.

சொன்னநால் வகையும் அன்றிச் சொல்லிடும் பொருள்கள் எல்லாம்
என்னையோ அறிகி லோம்பித்து ஏறியோ வானம் ஆன்மா
மன்னுகா.லங்கள் திக்கு மனமொடு வாக்கு இறந்திட்டு
உன்னுமோர் இறையும் உண்டென்று உரைப்பது நித்தம் அன்றே.
[75]

முன்செய்த பாடல்களின் முடிவு இதில் கூறப்படுகிறது.

பொருள் :

முன்னர் கூறப்பெற்ற உருவம், அருவம், வீடு, வழக்கு என்று பொருள்கள் நான்கு வகைப்படும். இவ்வாறு இல்லாது வானம் என்றும், ஆன்மா என்றும், நிலைபெற்ற காலங்கள் என்றும், திசைகள் என்றும், மனவாக்கால் அறியப்படாத தலைவன் உண்டு என்றும் கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல. இப்படிப் பொருள்கள் உண்டு என்று பித்தேறிச் சொல்கிறார்கள். எப்படித்தான் சொல்கிறார்கள் என்று அறிகிலோம். இவையாவும் நிலைப்பட்டவை அல்ல.

ஈங்கு வான் செயற்கு வராது இயம்பிய பொருள்கள் எல்லாம்
தாங்குவான் உளதே என்னில் தரித்திடாது அருவம் ஆதல்
ஓங்குவான் ஓசைக்கு ஆதி எனில்அது அங்கு உருவின் கூட்டம்
நீங்குவான் இன்றி எங்கும் நின்றதேல் எங்கும் இன்றே. [76]

இப்பாடல் வானம் பற்றிய பிறமதக் கருத்தை மறுக்கிறது.

பொருள் :

ஐந்தாவது பூதமாகப் பிறரால் சொல்லப் படுகின்ற வானம் எந்தச் செயலையும் செய்யாது. மற்றைய நான்கு பூதங்களின் புணர்ச்சியால் உண்டாகின்ற பொருள்களை வானம் என்ற பூதம் தாங்கிக் கொள்கிறது என்றால் ஆகாயம் அருவம் ஆதலால் அது எப்பொருளையும் தாங்காது. ஒருசிலர் ஓசைக்குப் பிறப்பிடம் வானம் என்று கூறுவர். ஓசை

தோன்றுவதற்கு உருவம் வேண்டும். எனவே வானத்தில் ஓசை தோன்றுகிறது என்பது பொருந்தாது. வானம் எங்கும் நிறைந்திருக்கிறது என்று கூறுவதும் உண்டு. ஆனால் அது எங்கும் இல்லை என்பதே உண்மை. ஆகவே வானம் என்ற ஒரு பூதம் இல்லை.

போதமுண்டு உயிர்கட்கு என்னில் வாயில்ஐம் புலனும் நூலும்
ஆய்தலின் தொட்டுத் தீட்டுக் கலப்பினில் அறியும் என்னில்
ஏதம்உண்டு இரவிற்பச்சை சிவப்புடன் ஏய்ந்த போது
கேதம் நின்று என்னோ என்னும் ஐயமுன் கிடத்த லாலே. [77]

இப்பாடல் சௌத்திராந்திகனின் வினாக்களைக் குறிப்பிடுகிறது. ஆன்மா என ஒன்று இல்லை என்கிறது.

பொருள் :

உயிர்களுக்கு அறிவு உண்டு என்று (சித்தாந்தி) கூறுகிறீர்கள். அவ்வாறென்றால் உயிர் அறிவதற்குப் பொறிகள், புலன்கள், நூல்கள் ஆகியவற்றினைக் கொண்டு பொருள்களை அறிவது ஏன்? (நான் கூறுவது தவறு என்று கூறி) உயிரானது பொறிகளோடு கலந்தும், ஐம்புலன்கள் வழியாகத் தீண்டியும், நூல்களைக் கற்றும் அறிகின்றன என்று கூறுவாயாகின் (சித்தாந்திகள்) இருட்டில் பச்சை, சிவப்பு நிறங்கள் கிடக்க அவற்றைத் தொட்டும் தீண்டியும் பொருந்தியும் இது என்ன நிறம் என்று அறியாமல் உயிர் கலங்குவது ஏன்? ஆதலால் நீ கூறுவது குற்றமாகும்.

விளக்கவுரை :

சித்தாந்திகள் கூறுவது போல உயிர்களுக்கு அறிவு உண்டு என்றால் தானே அறியாமல் பொறிகளாலோ புலன்களாலோ அல்லது படித்தோ அறிவைப் பெறுவது ஏன்? என்பது முதல்வினா. இருட்டறையில் பல நிறங்களில் பொருள்கள் கிடந்தாலும் அவற்றைத் தொட்டு, தீண்டி, இது என்ன பொருள்? இது என்ன நிறம்? என்று சொல்வதற்கு முயன்றும் சொல்ல முடியாது கலங்குவது ஏன்? என்பது இரண்டாவது வினா.

போதம் - அறிவு, ஏதம் - ஏற்கமுடியாது. ஏய்ந்தபோது - கிடந்தபோது.

அறிந்திடா வாயில் இன்றேல் அறிவின்றாம் ஐந்தும்பற்றி
அறிந்திடும் அறிவுஉண்டு என்னில் ஐந்தினும் அறிவுஒன் றாக
அறிந்திட வேண்டும் சாரின் அறிந்திடும் என்னில் உன்னை
அறிந்திலோம் புத்தன் என்றிங்கு அழகிது சொன்ன வாறே. [78]

இப்பாடல் இந்திரியங்கள் இல்லையாயின் ஆன்மா அறியாது. எனவே ஆன்மா இல்லை என்கிறது.

பொருள் :

உயிரானது ஐம்பொறிகள் இல்லை என்றால் எந்தப் பொருளையும் அறியாது. அதே நேரத்தில் ஐம்பொறிகளுக்கு அறிவில்லை. ஆதலால் ஐம்பொறிகளையும் பற்றி நின்று அறிகின்ற அறிவு உயிருக்குத்தான் உண்டு என்று நீ (சித்தாந்தி) கூறினால் ஐந்து பொறிகளால் அறியப்படும்பொழுது ஒவ்வொரு புலனும் ஒரே நிலையில் அறியவேண்டும் ஒவ்வொரு பொறிக்கும் புலனாகும் குணம் வேறுவேறு ஆதலின் அவற்றை உயிர் சார்ந்து வெவ்வேறு புலனாம் குணங்களை உயிர் அறியும் என்றால் அதுதானே குற்றம் கூறுவது. மேலும் உயிரானது பொறிகளைச் சார்ந்துதான் அறிகிறது என்றால் உன்னை அறிவுடையவன் என்று எவ்வாறு கொள்ள முடியும்?

விளக்கவுரை :

ஆன்மா சார்பால் அறிவது என்றால் நீயும் புத்தன் ஆகிறாய் என்று நான்காவது வரியில் கூறப்பெற்றுள்ளது.

ஞானஞே யங்கள் அன்றி ஞாதிரு என்று சொல்ல
ஆனதிங்கு அறிவோ அன்றோ அன்றெனில் அவனி போலும்
தானதிங்கு அறிவே என்னில் சமைத்திடு நன்ப ருப்புப்
போனகம் தனக்குத் தானே கறியெனப் புகன்ற தாமே. [79]

இப்பாடல் ஆன்மா என ஒன்று இல்லை என்கிறது.

பொருள் :

அறியும் பொருளும் அறியப்படும் பொருளும் என இரண்டே உள்ளன. இவை தவிர அறியும் பொருளாகிய உயிர் என்ற மூன்றாவது பொருள் உண்டு என்று கூறினால் அது அறிவுடையதா? அல்லது அறிவற்றதா? என்ற கேள்வி எழும். அந்த உயிர் அறிவற்றது என்றால் அது நிலத்தைப் போலச் ஜடப் பொருளாகும். அறியும் பொருள்தான் என்றால் பருப்பும் அரிசியும் கலந்து சமைக்கப்பட்ட பருப்புச் சோற்றுக்குத் துணைக்கறி எது என்று கேட்டால் அச்சோறுதான் துணைக்கறியும் ஆகும்.

சிறப்புரை :

உயிர்கள் அறிவுடையன என்றால் அதைத் தனியாக உயிர் என்றும் அது அறிவுடையது என்றும் சொல்வது ஏன்? உயிரையே அறிவுடையான் என்று ஒரே பெயரில் கூறிவிடலாமே. (இது எதுபோல இருக்கிறது என்றால்) பருப்பைக் கலந்து சமைத்த பருப்புச் சோற்றைச் சோறு என்றும், பருப்பு கலந்த துணை உணவு என்றும் கூறுவது போன்றதாகும்.

உயிரினை அருவ தென்னில் உருவுடன் உற்று நில்லாது
உயிரினை உருவ தென்னில் உடலினில் உடல் அடங்காது
உயிரினை அணுவ தென்னில் உடல்பல துவார மோடும்
உயிரினை நித்தம் என்னில் உணர்வுஉத யாந்தம் இன்றே. [80]

இப்பாடல் ஆன்மா உரு அரு அடிப்படையில் இல்லை என்கிறது.

பொருள் :

உயிர் அருவம் என்று கொண்டால் உருவமாகிய உடலோடு அது பொருந்தி நிற்காது. ஆதலால் உயிர் அருவமன்று என்று கொள்ளுதல் வேண்டும். உயிர் உருவமென்று கொண்டால் ஒரு உருவில் மற்றொரு உயிர் கூடி நிற்காது. எனவே உருவமும் அன்று. இவற்றை விடுத்து உயிர்

அணு போன்றது என்றால் ஒன்பது துளைகள் உள்ள உடம்பில் அது தங்கி நிற்காது, ஏதாவது ஒரு துளையில் ஓடிவிடும். எனவே அணுவும் அன்று. உயிரானது நித்தம் என்று சொன்னால் உயிரின் அறிவும் நித்தம் என்று கொள்ளவேண்டும். அவ்வாறு உலகில் காணப்படவில்லை. எனவே உயிர் நித்தமும் இல்லை.

எங்குமாய் நின்றது ஆன்மா என்றிடின் எங்கும் இன்றாம்
தங்கிடும் நிறைவு தத்தம் சரீரங்கள் தோறும் என்னின்
மங்கிடும் உடலத் தோடே வடிவினில் ஓரி டத்தே
அங்கது நின்றது என்னில் அடிமுடி அறிவின்று ஆமே. [81]

இப்பாடல் ஆன்மா இல்லை என்பதை வேறுவகையாய் வற்புறுத்துகிறது.

பொருள் :

உயிர் எங்கும் நிறைந்திருக்கிறது என்று கூறினால் அது பொருந்தாது. உலகத்தில் பல்வேறு வகைப்பட்ட உயிரினங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் உயிரானது பல்வேறு வகைப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. எனவே உயிரானது ஒரே தன்மையாய் எங்கும் நிறைந்திருக்கிறது என்பது பொருந்தாது. (உயிரானது எங்கும் நிறைந்திருக்கிறது என்பதற்கு உலகில் நிறைந்திருக்கிறது என்று பொருள் கொள்ளாமல்) உயிர் தான் நிற்கும் உடல் முழுவதும் நிறைந்திருக்கிறது என்று கூறினால் உடல்கெடும் பொழுது உயிரும் கெடவேண்டும். உயிரானது உடலின் ஓர் உறுப்பைத் தனக்கு இடமாகக் கொண்டு தங்கியிருக்கும் என்று கூறினால் அதுவும் இல்லை. ஏனென்றால் உடம்பில் தலைமுதல் கால்வரை அறிவு நிகழ்வதைக் காணுகின்றோம். ஆதலால் அறியும் பொருளாகிய உயிர் என்பது ஒன்று இல்லை.

சாற்றிய காலம் இங்குத் தங்கிய வாறிது என்னை
தோற்றுவித்து அளித்துப் போக்கும் தொழில்இவை காலம் என்னில்
போற்றிய பொருளில் புக்குப் பிணங்கிடும் பொருட்பின் இன்றாம்
தேற்றிய இல்வ ழக்குத் திரவியத்து இயல்பின் ஆமே. [82]

இப்பாடல் காலம் என ஒன்று இல்லை எனக் கூறுகிறது.

பொருள் :

உம்மால் (சித்தாந்தி) கூறப்பட்ட காலம் என்பது எத்தகையது? பொருள்களைத் தோற்றுவித்தல், காத்தல், போக்குதல் போன்ற செயல்களைக் காலம் என்று சொன்னால் மூன்றுவிதப் பொருள்களோடு கூடுகின்ற பொழுது காலம் மயங்கி விடும். தோற்றம் முதலிய மூன்று செயல்களை உடைய பொருள்கள் அழியும் பொழுது காலமும் இல்லாததாகி விடும். எனவே பொருள்கள் மூன்று வகைப்பட்டன என்று கொள்ளலாமே அன்றிக் காலம் மூன்று வகைப்பட்டது என்று கூறுவது பொருத்தமில்லை. அது இல்வழக்காகும்.

பிணங்கிடும் - மாறுபடும், திரவியம் - பொருள்

எனக்குநீ கிழக்கு இருந்தாய் ஆகின்மேற்கு என்றாய் என்பால்
எனக்குமேற்கு இருந்தான் என்பால் கிழக்கென இயம்பும் திக்குத்
தனக்கு நாம் கொள்வது எப்பால் சாற்றிடாய் இல்வ ழக்குத்
தனக்குஉள தாகும் உண்மை தான்இல தாகும் அன்றே. [83]

இப்பாடல் திசை என ஒன்று இல்லை எனக் கூறுகிறது.

பொருள் :

எனக்குக் கிழக்குப் பகுதியில் ஒருவன் இருந்தால் அவன் என்னை மேற்குப் பகுதி என்பான். எனக்கு மேற்குப் பகுதியில் இருக்கின்ற ஒருவன் என்னை கிழக்கே இருப்பவன் என்று கூறுவான். எனவே நான் ஒருவனே மேற்கிலும் கிழக்கிலும் இருந்தேன் என்று சொல்லப்பட்டால் அது எவ்வாறு பொருந்தும்? எனவே திசை என்பதை வரையறுத்துக் கூறமுடியாது. ஆதலால் திசை என்பதும் இல்வழக்காகும்.

உலகினைப் படைத்தான் என்றாய் ஒருவனிங்கு உள்ளது ஆயின்
உலகினைப் படைக்க வேண்டா இல்லையேல் படைக்க ஒண்ணாது
உலகினுக்கு உபாதா னம்தான் உள்ளதாய்க் காரி யத்தாம்
உலகினைப் படைக்கில் அங்கும் உளதிலது ஆவது உண்டோ. [84]

இப்பாடல் உலகம் படைக்கப்படாதது எனவே படைப்பானும் இலன் என்று கூறுகிறது.

பொருள் :

உலகைப் படைத்தவன் இறைவன் என்றாய் அவ்வாறானால் இவ்வுலகம் முன்பு உள்ளதாய், அமைந்துவிடும் முன்பு உள்ளதை ஒருவன் படைக்க வேண்டியதில்லை. முன்பு இல்லை என்றால் இல்லாத பொருளை ஒருவன் படைக்க வேண்டியதில்லை. (இல்லை, இல்லை) உலகம் முதலில் காரண நிலையின் நின்றது, பின்பு காரிய உருவில் இறைவன் படைத்திட்டான் என்று நீ (சித்தாந்தி) வழக்கிட்டால் காரியம் என்பது ஒரு காலத்தில் அழியக் காரணம் நிற்கவேண்டும். எனவே உலகமாகிய ஒரே பொருள் காரண நிலையில் உள்ளதாகவும் காரியநிலையில் இல்லாததாகவும் கொள்ளப்பட வேண்டும். அதனால் ஒரு பொருளுக்கு இரு தன்மைகள் உள்ளன என்பது பொருத்தமில்லை.

உபாதானம் - காரணம்

உள்வது கடாதி போல உதிப்பித்தான் என்று உரைக்கின்
மெள்ளவே எங்கு நின்று விதித்தனன் உலகின் மீது
வள்ளல் தான் நின்றான் என்னில் வந்ததாம் உலகம் முன்னே
தள்விடாது எங்கும் நிற்கில் எங்குமுன் தந்த தாமே. [85]

இப்பாடல் இறைவன் என்பவன் ஒருவன் இல்லை என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

உலகம் என்பது மண்போன்ற ஒரு முதற்பொருள். இறைவன் என்பவன் குயவனைப் போன்ற நிமித்த காரணன். குயவன் எவ்வாறு மண்ணைப் பிசைந்து குடம் முதலியவற்றை ஆக்குகின்றானோ அதுபோல இறைவன் உலகத்தைப் பல்வேறு வகையாக உதிக்கச் செய்கின்றான் என்று நீ கூறலாம். (குயவன் நிலத்திலிருந்து கொண்டு குடத்தை உருவாக்குகின்றான். அதுபோல) இறைவன் உலகத்தைப் படைக்கும்போது எங்கேயிருந்து கொண்டு படைத்தான்? உலகத்தில் நின்று கொண்டு படைத்தான் என்றால் முன்னரே உலகம் உண்டு என்பது பெறப்பட்டு விடும். இல்லை இல்லை இறைவன்

நீக்கமற எங்கும் நிறைந்திருந்து அவன் உலகத்தைப் படைத்தான் என்றால் அந்த எங்கும் என்பது முதலாய் அமைய அதுதான் இறைவனைத் தந்தது என்று பொருள் கொள்ள நேரிடும்.

இல்லது கருணை யாலே இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகம் கூற்றமும் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை என்னோ வலியினால் வேண்டிற்று எல்லாம்
பல்கவே படைத்தான் ஆயின் பித்தரைப் பணிந்தி டாயே. [86]

இப்பாடலும் உலகம் ஒருவனால் படைக்கப்படுவதில்லை என்பதால் இறைவன் இல்லை எனக்கூறுகிறது.

பொருள் :

இறைவன் இல்லாத உலகத்தைத் தன் கருணையினால் படைத்தான் என்றால் உலகத்தில் உயிர்களைக் கொல்லும் சிங்கத்தையும், புலியையும், பாம்பையும், உயிரை உண்ணுகின்ற எமனையும் படைத்த இறவனுக்குக் கருணை உண்டு என்று எவ்வாறு கூறமுடியும்? இறைவன் எல்லாம் வல்லவன். ஆதலால் பல்வேறு வகைப்பட்ட உயிரிகளைப் படைத்தான் என்று நீ மறுமொழி கூறினால் காரண காரியத் தொடர்பில்லாமல் ஒன்றோடு ஒன்று பகை கொண்ட உயிர்களைப் படைப்பது என்பது பித்தர்களின் செயலாகும். (ஆதலால் உன் இறைவன் பித்தனாவான்). பித்தர்களை வணங்குவாயாக.

பெறுவதிங்கு என் படைத்துப் பெற்றது விளையாட்டு என்னில்
சிறுமழவு இறைய தாகும் செய்திடும் கன்மத்து என்னின்
உறுபெறும் கன்மம் செய்வோர் முன்புள் ஆவர் உண்மை
அறிவுறின் ஞாலமெல்லாம் அநாதியென்று அறிந்திடாயே. [87]

இப்பாடலும் உலகம் படைக்க உண்டானது இல்லை என்பதால் இறைவன் இல்லை என்கிறது.

பொருள் :

உலகம் ஏன் படைக்கப்பட்டது என்றால்? அது இறைவனின் திருவிளையாட்டு என்று பதில் தருகின்றாய்.

அப்படியானால் உன் இறைவன் சிறுபிள்ளை போன்று விளையாடும் இயல்புடையவன் ஆவானா? இல்லை, உயிர்களை அவற்றின் வினைக்கீடாக இறைவன் படைக்கின்றான் என்றால் வினை இயற்றிய உயிர்கள் இறைவனுக்கு முன்னராவர். ஆகையால் உண்மையாக நீ ஆராய்ந்தால் இறைவன் என்பது இல்லை, உலகம் முழுவதும் அநாதி என்பது புலனாகும்.

உருவொடு நின்றான் என்னில் உருவம்முன் படைத்தார் வேண்டும்
உருஅவன் இச்சை என்னில் உலகெலாம் இச்சை யாகும்
உருவுல கத்து லோர்கட்கு உறுவது கன்மால் என்னில்
உருவுடை யோர்கட்கு எல்லாம் உற்றது கன்மத்தாமே. [88]

இப்பாடலும் இறைவன் இல்லை என்கிறது.

பொருள் :

இறைவன் உருவம் உடையவன் என்று சொன்னால் அவனுடைய உருவத்தைப் படைக்க ஒருவன் வேண்டும். ஒருவன் அவனுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும். இல்லை, இறைவன் தனது விருப்பத்தாலேயே தன் உருவத்தைத் தானே படைத்துக் கொண்டான் என்று நீ பதில் சொன்னால் உலகத்தில் உள்ளவர்களும் அவரவர் விருப்பப்படியே தங்களுடைய உருவத்தை எடுத்துக் கொண்டனர் என்று ஆகிவிடும். இல்லை உலகத்தில் உள்ளவர்களின் உருவம் அவரவர்களின் வினைக்கீடாகத் தரப்பட்டது என வாதிட்டால் உருவம் உடைய இறைவனும் அவனது வினைக்கீடாகவே உருவத்தைப் பெற்றான் என்றமைந்து அவனும் வினைக்கேற்பத் தோன்றினான் என்பதும் பெறப்பட்டு விடும்.

இச்சை - விருப்பம்

அருவெனில் பவத்தின் நின்றும் எடுத்திடான் ஆகா யம்போல்
மருவினன் நிழல்போல் என்னின் மருவினோர்க்கு ஆகும் மாட்சி
பெருகிய அறிவுண்டு என்று பேசிடின் நேசத் தோடும்
கருதிட உருவம் வேண்டும் இல்லையேல் கருத லின்றே. [89]

இப்பாடலும் மேற்சொன்ன கருத்தை வலியுறுத்துகிறது.

பொருள் :

இறைவன் அருவமுடையவன் என்றால் அவன் வான்போலச் செயலற்றவன் என்றாகி உயிர்களைப் பிறவிக் கடலிலிருந்து எடுக்கின்ற வல்லமை உடையவன் அல்லன் என்பது பெறப்படும். யாவரும் சென்றடைவதற்குரிய நிழல் போன்றவன் என்று நீ சொன்னால் அவனைச் சென்றடைபவர்களுக்கு நிழல் தருவான் என்றமைந்து அவன் வியாபகம் அல்லன் என்றாகிவிடும். எங்கும் அவன் நிறைந்திருக்கின்ற முற்றறிவினன் என்று நீ கூறுவதால் அவனுக்கு உருவம் உண்டு என்று கொள்ளுதலே தகும். ஏனென்றால் அறிவு என்பது ஒன்றைப் பற்றி நிற்குமே அன்றித் தனித்து நிற்காது.

எங்கள்நூல் அநாதி யாக இறைவன் உண்டு என்னும் என்னின்
உங்கள்நூல் உரைப்பார் இன்றி ஓதுவது அழகி தாகும்
அங்கவன் தன்னை நூல்கொண்டு அறிந்தனம் அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோம் என்னின் ஈதுஒர் ஆச் சரிய மாமே. [90]

இப்பாடல் உரையளவையாம் நூல் பிரமாணத்தை இல்லை என மறுத்துரைக்கிறது.

பொருள் :

எங்களுடைய ஆகம நூல்கள் இறைவன் அநாதியாக உள்ளவன் என்று கூறுவதால் அதனை நாங்கள் அறிந்தோம் என்று நீ கூறலாம். அவ்வாறென்றால் அந்நூல்களைச் செய்தவர் யார்? ஒருவரும் எழுதாமலேயே வேத ஆகமங்கள் தோன்றின என்று சொன்னால் பொருந்தாது. இறைவன்தான் வேத ஆகமங்களைத் தந்தான், அவற்றைக் கொண்டுதான் அவனை அறிந்தோம். என்று நீ கூறுவது ஆச்சரியமானதாகும்.

உற்றெழு மரங்கள் ஆதி உயிரின்றிப் பூத ரூபம்
பற்றிஇப் பாரின் மீது பாங்கினால் பலவு மாகிப்
புற்றொடு மயிர்கொம்பு ஆதி போலவே தோன்றி மாயும்
மற்றுள யோனி கட்குப் பயனென வழங்கும் அன்றே. [91]

இப்பாடல் அஃறிணை உயிர்கள் ஆன்ம உயிர்கள் ஆகா எனக் கூறுகிறது.

பொருள் :

நிலத்தில் தோன்றுகின்ற புல் முதல் மரங்கள் உயிர்கள் ஆகமாட்டா. நிலம், நீர், தீ, காற்று என்ற பூதங்களின் சேர்க்கையால் அவை தோன்றுகின்றன. பிற உயிர்களின் உடம்பில் உரோமம், கொம்பு தோன்றுவதைப் போன்று நிலத்தில் அவை தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றி வளர்ந்து கெடுகின்றன. இவை ஏன் இவ்வாறு தோன்றுகின்றன என்றால் பிற உயிர்களுக்குப் பயன்படுவதற்காகவே தோன்றின.

கொன்றிடல் ஆகாது என்றும் கொன்றவை கொண்டு நாளும்
தின்றிடல் ஆகும் மண்ணோடு ஒத்திடும் செத்த வெல்லாம்
ஒன்றிய வாசம் ஊட்டி உண்ணுநீர் வைத்த வர்க்கோ
சென்றுநின்று உண்ட வர்க்கோ புண்ணியம் செப்பி டாயே. [92]

இப்பாடல் பிற உயிர்களைக் கொல்லல் ஆகாது, தின்றால் பாவமில்லை என்கிறது.

பொருள் :

உயிர்களைக் கொல்லுதல் கூடாது. ஆனால் பிறரால் கொல்லப்பட்டவற்றின் இறைச்சியை உண்பது தவறாகாது. ஏனென்றால் அவை செத்தன ஆதலால் மண்ணை ஒக்கின்றன. எனவே உண்ணலாம். வழிப்போக்கர் செல்லுகின்ற சாலையில் உள்ள தண்ணீர்ப் பந்தலில் களைத்து வருகின்ற, தாகம் உடையவர்கள் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுகின்றனர். இதனால் ஏற்பட்ட புண்ணியம் நீர் உண்டவர்க்கு அன்றித் தண்ணீர்ப் பந்தல் வைத்தவருக்கே சேரும். (அதுபோல விலங்கின் இறைச்சியை உண்டவர்க்கு அன்றிக் கொன்றவர்க்கே பாவம் சேரும்)

ஓங்கிய உருவ மோடும் வேதனை குறிப்பி னோடும்
தாங்குபா வனைவிஞ் ஞானம் தாமிவை ஐந்துங் கூடிப்
பாங்கினால் சந்தானத்திற் கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய் அழிவது முத்தி இன்பம். [93]

இப்பாடல் முத்தி இன்பம் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் இவை ஐந்தும் கந்தம் எனப்படும். இவை காரண காரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன ஆகும். இவையே பிறப்பிற்குக் காரணமும் ஆகும். இவற்றால் துன்பம் ஏற்படும். இவை கெட்டு ஒழிந்து போவதே முத்தி இன்பமாகும்.

அழித்திடும் அராக மாதி அகற்றிநல் லறங்கள் பூரித்து
இழித்திடும் புலன்கள் போக்கி இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை எட்டையும் பாரித்து எல்லாம்
ஒழித்திடு ஞான சீலம் சமாதியின் உறுதி யாமே. [94]

இப்பாடல் சமாதியின் முறைமை பற்றிக் கூறுகிறது.

பொருள் :

பிறருக்குத் தீமை செய்கின்ற கேடுகளை முற்றிலும் நீக்கி நல்ல அறங்களைச் செய்தல் வேண்டும். இழிவு சேர்க்கும் சிற்றின்பங்களைப் போக்கி இன்பம் துன்பம் இரண்டினையும் அழித்துப் பிறர் பழித்திடாத நல்வாழ்க்கை எட்டினையும் கடைப்பிடித்தால் ஞானசீலத்தில் ஒழுகி சமாதிநிலையை அடையலாம்.

சிறப்புரை :

புத்த சமயத்தின் அறங்கள் எட்டு: நற்காட்சி, நல்ஊற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்முயற்சி, நல்ஒழுக்கம், நல்லவரோடு இணங்கியிருத்தல் என்பனவாகும். இத்துடன் சௌத்திராந்திகரின் கொள்கைகள் நிறைவு பெறுகின்றன.

சௌத்திராந்திகன் மதம் மறுதலை

அனைத்தினையும் உணர்ந்தான்எம் இறைவன் என்றுஇங்கு
அறியாது புத்தநீ அறைந்தாய் என்றும்
அனைத்தினையும் அறிந்திடான் அளவி லாமை
ஒன்றொன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின்
அனைத்தினையும் அளவிறந்தது என்ன வேண்டா
அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம்
அனைத்தினையும் அறியாது கணத்தில் தோன்றி
அழிதலால் அறிந்தமைஇன் றாகும் அன்றே. [95]

இப்பாடல் முதல் 134 ஆம் பாடல்வரை சௌத்திராந்திகரின் மதம் பற்றிய மறுதலைக் கருத்துக்கள் அமைந்துள்ளன. புத்தமதத்தாரை நேரே விளித்துக் கேள்வி கேட்டுப் பதில் உரைப்பது போலப் பாடல்களை ஆசிரியர் அமைத்துள்ளார். பெரும்பாலும் புத்த ஜாதகக் கதைகளில் கூறப்படுகின்ற செய்திகளைக் கொண்டே இம்மறுப்புக்கள் அமைகின்றன. பாடல் அமைப்பினையும் எண்சீர் விருத்தமாக ஆசிரியர் மாற்றியுள்ளார். இப்பாடல் புத்தமதத்தாரின் நிறுவனர் பற்றிய செய்திகளை மறுத்துரைக்கிறது.

பொருள் :

அனைத்தையும் உணர்ந்தான் எம் இறைவன் என்று புத்தமதத்தாரே அறியாது நீ கூறினீர். (என்றும் மானுடராய்ப் பிறந்த ஒருவன்) அனைத்தையும் அறிதல் என்பது இயலாது. உலகப் பொருள்கள் அளவிட்டு அறிய முடியாது விரிந்ததாகும். அவ்வாறு இல்லை அனைத்துப் பொருள்களையும் ஒன்றொன்றாக அறிந்தான் என்று நீ கூறினால் அப்படி அறியுமிடத்துச் செலவு, கலப்பு, நீக்கம் இவற்றால் அறிதல் வேண்டும். அவ்வாறு அறிதலை அளவிறந்த அறிதல் என்று கூற இயலாது. (உடனே நீ) எம் இறைவன் தனது அளவில்லாத ஞானத்தால் அறிந்தார் என்று கூறலாம். அதுவும் பொருந்தாது. மனித அறிவினால் அனைத்தையும் அறியமுடியாது. மேலும் உனது கொள்கைப்படி அறிவு என்பது கணந்தோறும் தோன்றி மறுகணத்தில் மறையும் என்று கூறுவதால் உமது கடவுள் அனைத்தையும் அறிந்தவன் என்று கூற இயலாது.

சிலபொருளை உணர்ந்தவற்றின் திறத்தே ஓட்டிச்
சிந்திப்பன் எப்பொருளும் என்னில் சென்று
பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப்
பயின்றுவரும் ஆதலால் பார்க்கும் ஆறென்
உலகுதனில் ஒருபொருள் அங்கு உணரும்போதில்
உற்றுணர்தல் ஆராய்தல் தெளிதல் உண்டாய்
நிலவும் அத னால்உணர்வு பன்மை முன்பின்
நின்றிடாது என்பை எல்லாம் நினைப்பது எங்கே. [96]

இப்பாடல் புத்தமத நிறுவனர் முழுதும் உணர்ந்தவர் என்ற கருத்தை மறுக்கிறது.

பொருள் :

உலகத்தில் உள்ள சில பொருட்களை நன்கு அறிந்து அதன்மூலம் எல்லாப்பொருளையும் பற்றி எமது கடவுள் சிந்தித்தான் என்று நீ விடை கூறினால் அறிவால் அறியப்படுகின்ற பொருள்கள் பலவாகும். அவற்றின் இயல்புகளும் வேறுபாடுகளும் பல்வேறு வகைப் பட்டவையாகும். அவற்றில் ஒன்றைப் பற்றி அறிந்து அதன்மூலம் பிறவற்றையும் அறிந்தான் என்று எவ்வாறு சொல்ல முடியும்? உலகத்துப் பொருள்களில் ஒன்றை உணரும் பொழுது உற்று, உணர்ந்து, ஆராய்ந்து, தெளிதல் வேண்டும். இவ்வாறு ஒரு பொருளை அறியும் பொழுது பல நிலைகள் உள்ளன. உன்னுடைய கொள்கையோ முன்கணத்தில் தோன்றிய அறிவு அடுத்த கணத்தில் இல்லை என்று இருக்கும்பொழுது எவ்வாறு ஒரு பொருளை ஆராய்ந்து தெளிந்தவன் அதன்மூலம் பிற பொருளை ஆராயமுடியும்?

முத்திநிலம் கண்டு அறங்கள் மொழிந்தான் ஆயின்
முதன் முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்
ஒத்திடும் தேன் நெய்கூட்டி உண்டிறந்தோன் ஒருவன்
உலகினில் வந்து இதுதீதென்று உரைத்தால் ஒக்கும்
செத்ததுபின் என்றுரைக்கின் கதியில் செல்லாத்
தேரனுரை நீர் பெருகிச் சென்று ஆறாகும்
அத்தின் அளவறியாது இக்கரையோர் தம்மை
அக்கரைக்கே செல்லவிடும் ஆசை யாமே. [97]

இப்பாடல் புத்தர் முத்தியிடம் கண்டு - இவ்வுலகமும் கண்டு அறம் கூறினார் என்பதை மறுக்கிறது.

பொருள் :

உம்முடைய புத்தராகிய கடவுள் முத்தியடைந்து அதன்பின்னர் அறங்களை மொழிந்தான் என்று நீ கூறினால் மாய்ந்த ஒருவன் மீண்டும் வந்து அறத்தை எடுத்துரைத்தான் என்பதாகும். இது எவ்வாறு உள்ளது என்றால் நெய்யும் தேனும் கலந்த உணவை அருந்திய ஒருவன் இறந்து மீண்டும் வந்து நெய்யும் தேனும் கலந்து உண்டால் நஞ்சாக மாறிக் கொல்லும் என்று கூறியதை ஒக்கும். இல்லை இல்லை உரைத்தது முன்னர், இறந்தது பின்னர் என்று கூறினால் அதுவும் ஏற்புடையதன்று. ஏனெனில் அறம் உரைக்கும்பொழுது முத்திப்பேற்றை அவர் அடையவில்லை என்பதாகும். மேலும் அவருடைய உரை முத்திப் பேற்றைத் தருவது அல்ல என்பதும் ஆகும். இது எவ்வாறு இருக்கிறது என்றால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற ஆற்றின் ஆழத்தையும் அளவையும் அறியாத ஒருவன் இக்கரையில் நின்று கொண்டு இங்குள்ளோர் யாவரையும் அக்கரையில் கொண்டு சேர்த்து விடுவேன் என்று கூறுவது போன்றதாகும்.

நீர்போல நின்றுயிர்கட்கு அளித்தி டாதே
நெருப்பாய துயர்ப்பிறப்பில் நிகழ்ந்து நின்று
பாரோர்கட்கு அளித்தபடி வலையில் பட்ட
பலகலைமான் கண்டு ஒருநீள் கலைபாய்ந்துஓடி
நேரேசென்று அவ்வலைக்கே நேர்ந்தால் ஒக்கும்
நீள்பாவக் குழியில்விழும் நீர்மை யாகும்
ஆரோஇங்கு அவனொப்பார் அறத்தை ஆக்கப்
பிறந்து அறமாக் கினன்என்னில் அடங்கஆமே. (98)

இப்பாடல் இறைவன் பிறப்பிற்குரியவன் என்பதனை மறுத்துரைக்கிறது.

பொருள் :

ஒரு மதத்தின் இறைவன் நீரும் அதன் சுவையும் போல எல்லா உயிர்களிடத்திலும் நீக்கமற நிறைந்து நின்று

உயிர்களுக்கு அருளையும் முத்தியையும் அளிப்பான் என்று கூறுவதே பொருத்தமான கொள்கையாகும். அதனை விடுத்து நெருப்பு போன்ற துன்பத்தைத் தருகின்ற இவ்வுலக வாழ்வில் பிறந்து தானும் துயரங்களை அனுபவித்து உலகோர் வாழ்வதற்காக அறநெறிகளை உரைத்தான் (எம் கடவுள்) என்று நீ கூறுவது பொருந்தாது. (இது எவ்வாறு இருக்கிறது என்றால்) ஒரு மானானது வேடன் விரித்த வலையில் பலமான்கள் அகப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து அவற்றைக் காப்பாற்றுவதாக நினைத்துத் தான் நேரே சென்று அவ்வலையில் சிக்கிக் கொள்வதை ஒத்ததாகும். மேலும் பிறப்பாகிய குழியில் விழுந்து அதன் மூலமே இறப்பு பிறப்பற்ற வழியைக் காட்டுவது போன்றதும் ஆகும். எம் இறைவன் உலகத்தார்க்கு அறம் உரைப்பதற்காகவே பிறந்தான் என்று நீ கூறினால் ஒவ்வொரு மனிதனும் பிறந்தது அறவழியினை உணர்த்துவதற்காகவே என்று பொருள்படும்.

கலை - மான், பாவக்குழி - பிறப்பாகிய துன்பம்.

அலகிறந்த யோனிகளில் புகுந்த எல்லாம்
அறத்தை அளித்திடஎன்னில் அவற்றின் எல்லாம்
நிலவுவது கன்மத்தால் ஆகும் அன்றி
நினைந்ததோர் இச்சையினால் நிகழ்ந்தான் ஆகில்
உலகுதனில் உள்ளோர்க்கும் அதுவே யாகும்
ஒருத்திவ யிற் றினில்இருந்து அங்குஉதரம் தள்வித்
தலமதில்வந் தான்என்னில் தாயைக் கொன்றான்
தருமத்தை இன்று எனக்குச் சாற்றிடேலே. [99]

இப்பாடல் புத்தர் அவதாரத்தின் செய்திக்கு மறுப்பைத் தருகிறது.

பொருள் :

புத்தர் எண்ணற்ற பிறப்புக்களை எடுத்தது இவ்வுயிர்களுக்கு அறவழியைக் காட்டுவதற்கே என்று நீ கூறினால் அவர் பல பிறவிகளை எடுத்தது வினைப்பயனால் தான் என்று ஆகும். அதனை நீ மறுத்து பல பிறப்புக்கள் எடுத்தது தமது விருப்பத்தாலே அன்றி வினைப்பயனால் அல்ல என்று நீ மறுத்தால் உலகத்தாரின் பிறப்பும் அவ்வாறே

ஆகிவிடும். ஒரு தாயின் வயிற்றினைப் பிளந்து கொண்டு புத்தர் பிறந்தவர். எனவே உலகத்தார் பிறப்போடு அவர் பிறப்பை ஒப்பிட்டுக் கூறுவது தவறு என்று நீ கூறினால் பிறக்கும்போதே தாயைக் கொன்றவரின் அறத்தை எங்களுக்கு நீ கூறிட வேண்டாம்.

விளக்கவுரை :

புத்தமதத்தைத் தோற்றிய கௌதம புத்தரின் பிறப்பைக் குறிப்பிடுகின்ற புத்த ஜாதகக் கதைகளில் தாயின் வயிற்றை வலப்பக்கமாகப் பிளந்து கொண்டு பிறந்தார் என்ற செய்தி காணப்படுகின்றது. அவருக்குப் பின்னே பிறந்த பல புத்தர்களும் அவ்வாறே பிறந்தனர் என்ற செய்தியும் காணப்படுகிறது.

அரியினொடு நரி உழுவை ஆதியாக
ஆனபோது அறம்திரிந்து கோறல் ஆதி
பரிவினொடும் செய்தனனாம் இல்லை யாகில்
பசிதனக்குத் தின்பது அவன்பழுதை யேதான்
கருதில் அவன் பரதுக்க துக்கன் ஆகில்
கணவன் இழந்தோர்கட்கும் கண்ணி குத்தித்
திரியுமவர் துயரினுக்கும் இரங்கு வோன்தன்
செயல் அறத்துக்கு அழகியதாம் செப்பும்காலே. [100]

இப்பாடல் பல பிறப்புகளில் பிறந்து புத்தர் அருள் பாலிப்பவர் என்பதை மறுக்கிறது.

பொருள் :

ஆதி புத்தர் பல்வேறு பிறப்புக்களை எடுத்து ஒவ்வொரு பிறப்பிலும் அறத்தைக் கூறியவர் என்று நீ கூறினால் பல பிறப்புக்களில் சிலவாகிய சிங்கம் புலி போன்ற பிறப்புக்களும் அடங்கி, அப்பிறப்புக்களில் பிற உயிர்களைக் கொன்று தின்று அறநெறியைத் தந்தவர் என்றும் பொருள்படும். அவ்வாறு இல்லை பல உயிர்களை அவர் கொன்று தின்றதில்லை என்று நீ மறுத்தால் அப்பிறப்புக்களில் பசிக்கு அவர் கயிறைத் தின்றா வாழ்ந்தார் (இறைச்சிதானே) மேலும் அவர் தானெடுத்த பிறப்புக்கள் தோறும் பிறர் துன்பத்தைக் கண்டு தானும்

துன்பப்பட்டார் என்று நீ கூறினால் கணவனை இழந்தோர் படுகின்ற துயரத்திற்கும் வலைவீசிப் பிற உயிர்களைப் பிடித்துக் கொல்லுகின்ற தொழிலாளர் துயரத்திற்கும் தான் துன்பப்பட்டார் என்று பொருள்பட்டு கேலிக்குரியதாகும்.

விளக்கவுரை :

கணவன் இழந்தோர் என்பதற்குக் கணவனை விட்டு நீங்கிச் சோரம் போனவள் என்று பொருள் கூறுவாரும் உண்டு. பாடலில் இரு துன்பங்கள் சுட்டப்படுகின்றன. கணவனை இழந்தவர்கள் தங்கள் வினைப்பயனால் துன்பப்படுவர். வலைஞர் தங்களின் செயலால் பாபம் செய்து துன்பப்படுவர். எனவே இருவரின் துன்பத்திற்குப் புத்தர் இரங்குவது வேடிக்கை என்று கூறுவதே ஆசிரியர் எண்ணம் எனக் கொள்ளலாம். மேலும் வலைஞர் வலையில் பட்ட விலங்கைக் கொல்வதால் அவருக்குத் துன்பம் இல்லை. விலங்கே துன்பப்படும். எனவே பாவத்தால் அவர் இம்மை வினையால் இம்மையில் துன்புறுவர். கணவனை இழந்தோர் மறுமை வினையால் இம்மையில் துன்பப்படுகின்றவர்கள் என்று கொண்டால் பொருள் சிறக்கும்.

பழுதை - கயிறு, பரதுக்கன் - பிறர் துன்பம், கண்ணி குத்தித்திரியுமவர் - வேடர். இங்கு கண்ணி-வலையைக் குறித்தது.

ஒரு பொருளைத் தேடி அதற்கு உரையும் தேடி
உரைப்பதன்முன் உணர்விறக்கும் உனக்கு நூல்என்
மருவிவரும் சந்தான வழியில் என்னின்
வாயுரைத்த தேஉரைத்து வழங்கும் ஆகும்
பெருகுவது கெட்டு என்னில் அதுபோல் ஆம்பின்
பித்துரைத்தது அறியாது பேதை சொல்லும்
தருவது நூல்எப்பரிசு முதல்நடுவோடு இறுதி
தான்விருத்தம் இன்றியது சாற்றி டாயே. [101]

இப்பாடல் புத்தமதத்தாரின் கொள்கையைக் கொண்டே அவர்தம் வேதநூல் பற்றிய கருத்தை மறுக்கிறது.

பொருள் :

(புத்தனே, உன்னுடைய கொள்கை எதுவும் ஒரு கணத்தில் தோன்றி மறு கணத்தில் அழிவது என்பதாகும். அந்த அடிப்படையில்) ஒரு பொருளைப் பற்றித் தேடி அதற்குரிய உரையும் தேடி, அதனை உரைப்பதற்கு முன்னே அந்த அறிவு கெடும். இக்கொள்கையுடைய உனக்கு ஆதாரமாக விளங்குகின்ற நூல் எவ்வாறு தோன்றியது? (என்று நாங்கள் கேட்டால்) இதற்குப் பதிலாகத் தொடர்ந்து வரும் சந்தான வழியில் எம்முடைய மதத்தின் ஆதார நூல்கள் எழுந்தன என்று நீ பதில் கூறக்கூடும். அவ்வாறென்றால் முதலில் கூறப்படும் ஓரெழுத்தே மீண்டும் மீண்டும் தோன்றுமே தவிரப் பல எழுத்துக்கள் சேர்ந்து சொல்லும், சொல்லின் தொடரும் தோன்ற முடியாது. அதற்குப் பதிலாக முன் தோன்றியவை கெடும்போது அதன்பின் தோன்றுவதாகிய அறிவு வளர்ந்து வரும் என்று சொன்னால் அதுவும் ஏற்புடையதன்று. ஏனென்றால் ஒரு கணத்தில் தோன்றியது கெட்டால் அடுத்த கணத்தில் தோன்றுவதும் அதே அளவுடையதாகத்தான் இருக்க முடியும். எனவே உனக்கு அறநூல் உண்டு என்று கூறுவது பித்தர் கூறியதும் பேதை கூறியதும் போன்றதாகும். நூல் என்பது தோற்றம், நடு, இறுதி, என்று மாறுபாடு இல்லாமல் தொடர்ந்து வருவதாகும். எனவே உனக்கு நூல் என்பது பழுதுபட்ட நூலேயாகும்.

விளக்கவுரை :

புத்தமதத்தின் கொள்கை தோன்றுகின்ற ஒன்று ஒரு கணத்திலே தோன்றி மறுகணத்திலே அழிவதாகும். அவ்வாறு இருப்பதால் எழுத்து ஒலிகள் சேர்ந்து சொல்லாகி, தொடராகித் தோன்றுகின்ற நூல் இருக்க இயலாது.

சந்தானம் - ஒன்று தோன்றி அடுத்த கணம் அழியும் போது தன் பதிவினை நிறுத்தி நீங்கும். அப்பதிவு அடுத்த கணத்தில் தோன்றும் அறிவுக்குப் புலனாகும்.

விருத்தம் - மாறுபாடு

முன்னாகப் பலஅறங்கள் புரிந்துஎம் இறைவன்
முழுதுணர்ந்து இங்குஅருளினால் உயிர்கள்முத்தி அடையப்
பின்னாகப் பிடகநூல் உரைத்தான் என்று
பேசினாய் இவன்முன்பு பேரறங்கள் புரிநூல்
சொன்னார்ஆர் இவனைப்போல் முன்னொருவன் என்னில்
அவனுக்குச் சொன்னார்ஆர் எனத்தொடர்ச்சி யாகி
அன்னாய்பின் அனவத்தைப் படும்ஒருவன் இன்றாம்
ஆராஉன் பாழிஇருப்பார் இதனை அறையே. [102]

இப்பாடல் இம்மதத்தாரின் வேதநூல் தோன்றிய விதத்தை மறுத்துரைக்கிறது.

பொருள் :

(புத்தனே) எங்கள் இறைவன் முன்னதாகிய பல அறங்களின் வழிநின்று முத்தியடைந்து முழுமையும் உணர்ந்து பின்னர் தம் பெரும் கருணையினால் உலகத்து உயிர்கள் எல்லாம் முத்தி பெறத் தன்னுடைய திரிபிடகநூலை உரைத்தான் என்று நீ கூறுகின்றாய். அவ்வாறென்றால் புத்தர் முத்தியடைவதற்கு முன்னர் பல அறங்களைக் கடைப்பிடித்தான் என்றால் அந்த அறங்களைக் கூறும் நூல்களைச் செய்தவர் யார்? இதற்குப் பதிலாக இவரைப் போன்று முன்காலத்தில் வாழ்ந்த புத்தர் இவருக்குச் சொன்னார் என்று கூறினால் அது வரம்பின்றிச் சென்று அநவத்தை என்ற குற்றத்திற்கு இடந்தரும். எனவே அறநூல் சொன்னவர் ஒருவரும் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டி வரும். மேலும் உன்னுடைய பாழி என்று சொல்லக்கூடிய பள்ளியில் தெய்வமாக இருப்பவர் யார்? என்பதையும் கூறுவாயாக.

அநவத்தை - வரம்பின்றி ஆராய்ந்து முடிவு காணாதிருத்தல்.

இந்நூலைச் சொன்னவன்தான் இங்கிருந்தான் என்னில்
இவன் இருந்தி ஏத்துமவன் எங்கிருந்தான் எவனோ
அந்நூலோ குருவந்த அடைவும் உனக்குஇல்லை
அடைவுதரின் முடிவின்கண் அநாதி போதன்
சொன்னானாம் அவைவேதா கமங்கள் ஆகும்
சுருக்கி ஊண் தவம்புரியச் சொல்லுவது எல்லோரும்
உன்நூல் கண்கழுவாதே உதிப்பதன்முன் புலாலோடு
உன்பான்ஓர் ஊன்பிரியான் உரைத்தது ஒரு நூலே. [103]

இப்பாடல் பிடக நூலை மறுத்து வேத ஆகமங்களைச் சிறப்பிக்கின்றது.

பொருள் :

எம்முடைய மதத்தின் திரிபிடக நூலைச் செய்தவன்தான் எங்கள் பாழியில் இருந்தான் என்றும், அவன் எங்களால் வணங்கப்பட்ட தெய்வம் என்றும் நீ சொன்னால் இவனை வாழவைத்து அருள்தந்த இவனால் வணங்கப்பட்ட தெய்வம் யாது? அத்தெய்வம் எங்கிருந்தது? அது உரைத்த நூல் யாது? இதற்கெல்லாம் உன்னிடத்தில் பதில் இல்லை. முதல்நூல், அதை இயற்றிய குரு, அவனது மாணவன், அவனுக்கு மாணவன் என்று சொல்லுகின்ற அளவுக்குக் குருபரம்பரை நிலையும் உன்னிடத்தில் இல்லை. எங்கள் மதத்தின் அடிப்படையில் இதற்குப்பதில் சொன்னால் சம்ஹார காலத்தில் எங்கள் வேத ஆகமங்களை அருளிச் செய்தவன் அநாதிபோதன் என்று சிறப்பிக்கப் பெறுகின்ற ஈசுவரன் ஆவான். அந்நூலில் கூறப்படுபவை ஒழுக்கம், உணவைச் சுருக்கிப் புரிகின்ற தவம் ஆகியவையாகும். உன்னுடைய ஆகமநூலோ கண் கழுவாது, சூரியன் உதிப்பதற்கு முன்னே புலாலுடன் உண்பானாகிய சாப்பாட்டுப் பிரியன் சொன்னதாகும்.

அடைவுதரின் - பதில்தரின்

முன்நூலும் வழி நூலும் சாா்புநூலும்
மூன்றாகும் உலகத்து மொழிந்த நூல்கள்
இந்நூலின் உன்நூலிங்கு எந்நூல் என்னில்
இந்நூல்காண் என்நூலென்று இயம்ப மாட்டாய்
உன்நூலும் ஒருநூலாய் உரைப்பது என்னே
உலண்டு நூல் பருத்திநூல் சிலம்பி நூல்கள்
அந்நூலும் அல்லாதே பொய்ந்நூல் கொண்டிங்கு
அறநோற்றுத் திரிந்தவாறு அழகி தாமே. [104]

இப்பாடல் பிடக நூலை மறுத்து, நகையாடுகிறது.

பொருள் :

உலகத்து நூல்கள் என்பது முதல், வழி, சார்பு என மூன்றாகும். இப்பிரிவில் உன்நூல் எப்பிரிவுக்குரியது? என்று கேட்டால் அதற்குப் பதில் சரியாகச் சொல்ல மாட்டாய். ஆகவே உன் நூலை நூலாக உரைப்பது ஏன்? உன்னுடைய நூல் உலண்டுப் பூச்சியினின்று தோன்றுகின்ற நூல், பருத்தியிலிருந்து தோன்றுகின்ற நூல், சிலந்திப் பூச்சியில் தோன்றுகின்ற நூல் போன்றதாகும். மேலும் அத்தகைய பொய்நூல் கொண்டு அறத்தைச் செய்து திரிந்து கொண்டிருப்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது.

விளக்கவுரை :

புத்தரின் நூல் முதல்நூல் என்று சொல்ல முடியாததாகையால் அந்த அடிப்படையில் திரிபிடக நூலை ஆசிரியர் நகையாடுகின்றார்.

புத்தனவன் பொன்றக் கெட்டுப் போனான் என்று
போற்றுவது இங்குஆரைநீ பொய்த்தவஞ் செய்புத்தா
செத்தவர்க்குச் சிலகிரியை செய்ய இங்குச்
செய்தவர்க்கும் புண்ணியமாம் என்று செப்பின்
நித்தம்உயிர் ஆதலால் பலிக்கும் செய்தி
நினைந்துதரு வானும்உளன் உனக்கு இவ்வாறில்லை
வைத்தசுடர்த் தீபம்அற மாய்ந்தக்கால் அதற்கு
மருவுதிரி நெய்கூட்டு மதிகேடு உன்வழக்கே. [105]

இப்பாடல் இம்மதத்தின் நிறுவனரின் சிறப்பின்மையைக் கூறுகிறது.

பொருள் :

பொய்த் தவத்தை மேற்கொண்ட புத்தனே, உன்னுடைய இறைவன் உலகில் பிறந்து அறத்தைக் கூறிக் கெட்டுப் போன புத்தர் என்கிறாய். அவ்வாறு மறைந்து போன புத்தரை வணங்குவதால் என்ன பயன்? இதற்கு நீ இறந்தவரை நினைத்து இயற்றப்படும் கிரியைகள் இயற்றியவர்களுக்கும் புண்ணியத்தைத் தரும் என்று கூறலாம். இது உனக்குப்

பொருந்தாது. உயிர் அழியாதது என்ற கொள்கை உடையவர்க்கே பொருந்தும். ஏனெனில் அவர்கள் அழிந்தது உடலே அன்றி உயிர் அல்ல என்ற கொள்கையை உடையவர்கள். அவர்கள் செய்கின்ற கிரியைகள் பலிக்கும். ஆதலால் உயிர் பயன்தரும். உனக்கு இத்தகைய கொள்கை இல்லை. உன்னுடைய பதில் ஏற்றிய தீபத்தில் ஒளியானது அணைந்து போக அதில் நெய்யும் திரியும் இட்டு அதைத் தூண்டிக் கொண்டிருக்கின்ற அறிவு போன்றதாகும்.

நூலுரைத்தான் ஒருவன்உளன் என்று அனுமானத்தால்
நூல்கொண்டு இங்கு அறிந்தாற்போல் நூலாநூலின்
பாலுரைத்த கொருள்களெல்லாம் அனுமானம் என்னில்
பரலோக பாதாள லோகங்கள் ஒருசொல்
லால்உரைத்த நூலின்றி அறையாய் இன்றேல்
அவையறிந்த படியென்உனது அனுமானம் அன்றே
மேலுரைக்கும் பிரமாணம் உனக்கில்லை காட்சி
அனுமானம் விட்டபொருள் விளக்குவது ஆகமமே. [106]

இப்பாடல் பிடக நூலை பிரமாணத்தால் மறுக்கிறது.

பொருள் :

காணுகின்ற நூலைக் கொண்டு இந்த நூலை உரைத்தவன் ஒருவன் உளன் என்று அனுமானத்தால் உணரலாம் என்பதை ஒத்துக் கொள்கிற நீ, அந்த நூலில் உரைத்த பொருளெல்லாம் சிறப்புடையது என்பதையும் அனுமானத்தால் உணரலாம் என்கிறாய். இந்த அடிப்படையில் காட்சி அளவையையும், அனுமான அளவையையும் ஏற்றுக்கொள்கிறாய். வேத ஆகமங்கள் மேலுலகத்தையும் கீழுலகத்தையும் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இச்செய்திகளைக் காட்சி அளவையிலோ, அனுமான அளவையிலோ அறிய முடியாது. நூல் அளவையால் தான் அறியமுடியும். எனவே நூல் (உரை) அளவையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நீ உடன்படாய். உடன்படாவிடில் நீ கூறிய திரிபிடக நூல் பிரமாணம் ஆகாது.

பிரமாணம் - அளவை.

எப்பொருளும் அநித்தமென இயம்பிடுவை அநித்தம்
இல்லதற்கோ உள்ளதற்கோ உளதிலதா னதற்கோ
செப்பிடின் இல்லதற்கு இல்லது என்றும்இல்லை
சென்றடைவது உள்ளதற்கேல் உள்வது என்றும் உண்டாம்
அப்படிதான் உளதிலதாம் அப்பொருளுக்கு என்னின்
உளதுஇலது ஆகாது இலதும்உள்வது ஆகாது
இப்பொருளுக்கு அநித்தமிலை என்றொன்றைக் காட்டாய்
எனில்தோன்றும் பொருள் நின்றிங்கு இறுதியாமே. [107]

இப்பாடல் புத்தமதத்தின் பொருட்கொள்கையை விவாதிப்பதாகும்.

பொருள் :

புத்தனே, எல்லாப் பொருளும் நித்தமில்லை அநித்தம் என்று கூறுகின்றாய். அத்தகைய அநித்தமாகிய பொருள் இல் பொருளா, உள் பொருளா, அல்லது இல்லதும் உள்ளதுமாகிய பொருளா? இல்லாத பொருள் எப்பொழுதுமே இல்லாததாகும். உள்பொருள் ஒருபோதும் இல்லாமல் போகாது. என்றைக்கும் இருக்கும். உளது, இலது பொருள் என்றால் உள்ளது இல்லது ஆகாது. இல்லாதது உள்ளது ஆகாது. எனவே எப்பொருளும் அநித்தம் அன்று. இப்படி நாங்கள் கூறினால் அநித்தமற்ற நித்தப் பொருள் ஒன்றினைச் சுட்டிக் காட்டு என்று நீ கேட்கலாம். அதற்குப் பதில் உலகில் தோன்றுகின்ற ஒவ்வொரு பொருளும் தோன்றிச் சிலகாலம் நின்று பின் அழிவது என்பதுதான் உண்மை என்பதேயாம்.

அங்குரம்வித்தின் கேட்டில் தோன்றும் அதுபோல
அனைத்துருவும் கெட்டுவழி யாகும் என்னின்
அங்கவற்றுக்கு ஆக்கக்கேடு அறைந்தாய் எல்லாம்
அநித்தமெனும் உரைமறந்தாய் அருகனும் ஆனாய் நீ
இங்குமுளை இலைமரமாய் எழுந்துஈண்டிச் செல்லாது
இறந்ததே எழுந்தபடி நில்லாது என்னின்
மங்கியிடாதே பால தருணவிருத் தையாய்
வரும்வடிவு திரிந்துநின்று மாயும் காணே. [108]

இப்பாடல் முன் பாடல் கருத்தினை மேலும் விளக்குகிறது.

பொருள் :

புத்தனே, விதைக்கப்பட்ட வித்தானது கெட்டு அதிலிருந்து முளை தோன்றும். அதுபோலத்தான் ஒன்றின் அழிவிலிருந்து மற்றொன்று தோன்றுகின்றது என்று நீ கூறுகின்றாய். அப்படியானால் முதலில் நீ சொன்னது எல்லாப் பொருளும் அநித்தம் என்பதாகும்: ஆனால் இப்பொழுதோ ஒரு உருவம் தோன்றிக் கெடுகிறது என்றும், அந்தக் கேட்டிலிருந்து மற்றொன்று தோன்றுகின்றது என்றும் கூறுகின்றாய். முன்சொன்னதை மறந்து விட்டு உருவங்களுக்குரிய தோற்றக் கேடுகள் உள்ளது என்கிறாய். ஆதலால் சமணரைப் போன்ற கொள்கை உடையவன் ஆகின்றாய்.

விதையிலிருந்து முளை தோன்றி, முளையிலிருந்து விதை தோன்றி அதிலிருந்து மரம் தோன்றுகிறது. எனவே ஒன்றின் அழிவிலிருந்து மற்றொன்று தோன்றுகிறது என்பதால் நாங்கள் எந்தப் பொருளையும் நித்தம் என்று கொள்ளாது அநித்தம் என்று கொள்ளுகின்றோம் என்று நீ விடை கூறலாம். உன்னுடைய கொள்கை எல்லா இடத்திலும் பொருந்தாது. உதாரணமாக ஒரு குழந்தை பிறந்தது என்றால் உருவம் கெடாமலே அக்குழந்தை பாலனாய், இளைஞனாய், விருத்தனாய், பலவகைப் பருவங்களை அடைகின்றது. இத்தகைய மாறுபாடுகளை அடைந்த உடலே சிலகாலம் வாழ்ந்து பின் ஒரு காலத்தில் அழிகின்றது.

அங்குரம் - முளை, அருகன் - சமணன்

உடல்பூதம் எனில் – ஒன்றுக்கு ஒன்றுபகை ஒன்றா
உதிரசுக் கிலம்என்னின் மரத்தின்உரு, கல்லின்
இடமாகத் தவளைஉரு வந்தவாறு இயம்பாய்
இருவினைகாண் எனில்வினைகள் இரண்டுஉருவாய் நிற்கும்
திடமாக வன்னம்உரு எனில் உண்ண உண்ணச்
சென்றுவள ருங்காயம் தேயும் உணர்வுஎன்னின்
மடவோனே அருஉணர்வுஇங்கு அசேதனமாய் உருவாய்
வராது வரும்இல்லாது எனின்மலர்வான் வருமே. [109]

இப்பாடல் உடல் உருவத்தைப் பற்றிய விவாதத்தைக் கூறி இம்மதத்தாரின் கொள்கையை மறுக்கிறது.

பொருள் :

புத்தனே, பூதங்களின் சேர்க்கையால் உடல் உருவங்கள் தோன்றுகின்றன என்பது உன் கொள்கை. ஆனால் பூதங்கள் ஒன்றுக்கொன்று பகையாகும். எனவே அவற்றின் கூட்டத்தால் உருவம் தோன்றுகிறது என்பது பொருந்தாது. உயிர் உருவம் தோன்றக் (சுக்கிலம்) காரணம் என்றால் மரத்தில் புழு தோன்றுவதற்கும், கல்லில் தேரை தோன்றுவதற்கும் காரணம் என்ன? மற்றொரு வகையாக நீ பதில் கூற முற்படலாம். புண்ணிய பாவங்கள்தான் கூடி உருவமாகின்றன எனக் கூறலாம். அதுவும் ஏற்புடையதல்ல. அவை இரண்டும் கூடுவதில்லை. உண்ணுகின்ற உணவினால் தான் உருவம் வளர்கிறது என்று (மற்றுமொரு கோணத்தில்) நீ கூறலாம். இளமைப் பருவத்தில் உணவால் வளருமே அன்றி முதுமைப் பருவத்தில் உணவு குறையாமல் இருக்கும் பொழுதே உருவம் ஏன் தேய்கிறது? எனவே அன்னத்தின் சாரம் உருவம் ஆகாது. இல்லை உணர்வினால்தான் உருவம் உண்டாகிறது என்றால் உணர்வு அருவமானது, அறிவுடையது. ஆனால் உருவமோ அறிவற்றது. இல்லாத பொருள் ஒன்றே உருவமாய்த் தோன்றும் என்றால் இல்லாத பொருள் என்றைக்கும் இல்லாதது தான். எனவே உன்னுடைய கொள்கைகள் ஆகாயப்பூ போன்ற பொய்மை உடையதாகும்.

என்றுமிலாது ஒன்றின்றாய் வரும்உருவம் வித்தின்
எழுமரம்போல் எனின்வித்தின் உண்டாய்நின்று எழும்காண்
நின்றதேல் வித்தின்மரம் கண்டதில்லை என்னின்
நெல்கமுகாய் நீளாது நெல்லாயே நீளும்
ஒன்றில்ஒன்றுஅங்கு இலாமையினால் உதியா, காரணம் பெற்று
உதிப்பது காரியம், அதுவும் உள்வதாகும்
மன்றமதிக் கலைபோலக் கந்தம் ஐந்தும்
மருவியுளது எனும்உரையும் மறந்தனையோ இன்றே. [110]

இப்பாடல் இல்லாதது உண்டு என்ற இம்மதத்தார் கொள்கையை மறுக்கிறது.

பொருள் :

நான் கூறுவதே உண்மை. முன்பு இல்லாததே உருவமாக வருகிறது என்று கூறி அதனை விளக்க நீ முதலில் வித்து இருக்கிறது. மரம் இல்லை, பின்னர் இல்லாத மரம் தோன்றுகிறது, அதனைக் கண்ணாரக் காண்கின்றோம் என்று கூறி உன் கருத்தை வலியுறுத்தலாம். அது தவறு. வித்தினிடத்தில் மரம் நுட்பமாக இருக்கிறது. விதை - காரணம். மரம் - காரியம், ஆனால் நீ மரம் நுட்பமாக இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளாது வித்தை எப்படித்தான் உற்றுப் பார்த்தாலும் மரம் தோன்றவில்லை என்கிறாய். நெல் வித்திலிருந்து நெல்தானே தோன்றுகிறது. கமுக மரமா தோன்றுகிறது. எனவே இல்லாதது உண்டாகாது. இவை காரண காரியம் ஆகும். உன் கொள்கை - கந்தங்கள் ஐந்தும் கூடி உருவம் உண்டாகிறது என்பதுதானே. இது காரண காரியம் தானே.

உருவம்எலாம் பூதஉபா தாய சுத்தாட்
டக உருவம் என்னின் நீ உலவத்துக்கு
மருவும் அனலோடுநீர் மண்கந்தம் இரதம்
வன்னம்இலை வன்னிக்கு வளிநீர்மண் வாசம்
தரும்இரதம் இலைநீர்க்குத் தழல்கால்மண் கந்தம்
தான்இல்லை தலத்தினுக்குச் சலம்அனல்கால் கூடி
வருவதுஇலை இந்திரிய விடயமான
மாபூதங் களும் அறியாய் மதிகெட்டாயே. (111)

இப்பாடல் உருவங்களின் தோற்றம் பற்றிய கொள்கையை மறுக்கிறது.

பொருள் :

புத்தனே உருவங்கள் யாவும் பூத உருவங்கள் நான்கும் உபாயதாய உருவங்கள் (குணம்) நான்கும் ஆகிய எட்டும் கூடியே தோன்றுகின்றன என்பது உன்னுடைய கொள்கை. அவை எட்டும் ஒன்றோடு ஒன்று கூடாது. எவ்வாறு என்றால் காற்றினுடைய குணம் சலித்தல் ஆகும் (அசைதல்) அது தீயின், நீரின், மண்ணின் குணங்களாகிய உருவம், சுவை, மணம் இவற்றோடு கூடுவதில்லை. அதுபோல நெருப்பானது மற்ற

மூன்றின் குணங்களோடு கூடுவதில்லை. நீரானது மற்ற மூன்றின் குணங்களோடு கூடுவதில்லை. அதுபோல நிலத்தின் குணம் மற்ற மூன்றின் குணங்களோடு கூடுவதில்லை. எனவே இவை எட்டும் கூடி உருவமாகின்றன என்ற உன்னுடைய கொள்கை தவறானதாகும். மேலும் நீ பூதங்களும் அவற்றின் குணங்களும் புலன்களுக்குப் புலப்படுகின்றன என்பதையும் அறியாதவன் ஆகின்றாய்.

விளக்கவுரை :

உபாதாயம் - பூதங்களின் குணங்கள், காற்றின் குணம் - அசைதல், நெருப்பின் குணம் - வடிவம், நீரின் குணம் - சுவை, மண்ணின் குணம் - மணம்.

மருந்து எண்ணெய் தனில்மருந்து நின்றாற் போல
மறைந்துஎட்டும் சூக்குமமாய் மருவும் என்னில்
திருத்துமவன் மருந்து எண்ணெய் சேர்ந்தாற்போலச்
சேர்ப்பவன்வேறு உண்டுஎல்லா உருவும் எட்டும்
பொருத்தியதேல் ஒருதன்மை யாம்பொருள்கள் ஒன்றின்
குணமொன்றில் புகாது, அறைகை பொருளறியாய்பூத
உருப்பொருள்வேறு உபாதாயப் பொருள்வேறு காட்டாய்
உபாதாயம் பூதகுணம் குணகுணியாம் உலகே. [112]

இப்பாடல் சூக்குமமாக நின்று பின் தூலமாக உருவங்கள் உருவாகின்றன என்பதை மறுக்கிறது.

பொருள் :

(எட்டும் கூடுவதில்லை என்று நாம் கூறியதற்கு) சில நோய்களைத் தீர்த்திடப் பயன்படும் மருந்து எண்ணெயில் எண்ணையும் மருந்தும் தனித்தனியாகத் தோன்றாமல் எண்ணெயினுள் மருந்து மறைந்து நின்று நன்மை தருவது போல, பூத உருவமும் உபாதாய உருவமும் கூடித் தூலம் கெட்டு, சூட்சும்மாய் நிற்பதுபோல உருவம் தோன்றுகிறது என்று நீ கூறலாம். அப்படியானால் எண்ணையையும் மருந்தையும் கூட்டுகின்ற மருத்துவன் ஒருவன் உள்ளான் என்பதை நீ ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதுபோலவே பூத உருவத்தையும் உபாதாய உருவத்தையும் கூட்டுகின்ற

இறைவன் உள்ளான் என்பதை ஏற்றுக் கொள்கின்றாயா? நீ கடவுள் இல்லை என்ற கொள்கை உடையவன் ஆயிற்றே. மேலும் இவை எட்டும் கூடி உருவம் உண்டாகிறது என்றால் உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் ஒரே தன்மை உடையதாக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லை. மேலும் ஓர் உருவத்தின் குணம் மற்றொன்றில் கூட இயலாது. மேலும் பூத உருவத்தையும் அதன் உபாதாயத்தையும் தனித் தனியே பிரித்துக் காட்ட முடியாது. உபாதாயம் என்று நீ கூறுவது பூதங்களின் குணமே ஆகும். அந்தக் குணத்தை உடையதுதான் இவ்வுலகம்.

விளக்கவுரை :

எண்ணெய் மருந்தாக வேண்டுமானால் எண்ணெயில் மருந்துத் தன்மையைச் சேர்க்க வேண்டும். அதைச் சேர்ப்பவன் மருத்துவன் ஆவான். சாதாரண எண்ணெய் வேறு, மருந்து எண்ணெய் வேறு. எனவே பௌத்தர் கூறுகிற இவ்வுவமை தெளிவாக மறுக்கப்படுகிறது.

அழிந்துணர்வை உணர்வுதரும் எனின் அழிந்தது ஆக்காது
ஆம் உணர்வில் பொருள்வினைகள் அணையா வாகும்.
அழிந்திடுவது ஆக்கிஎனின் முன்னொருகா லத்தே
அறிவு இரண்டு நில்லாதங்கு அறக்கேடுஇன்றி
அழிந்துணர்வை உணர்வுதரும் எனின்நித்தா நித்தம்
அடையும் உணர்வுக்கு அநித்த மாயேசெல்லாது
அழிந்தெருவை ஆக்குவதுபோல் ஆக்கும் என்னில்
ஆம்பொருள்வேறு அழிந்து சத்தி கிடந்து ஆக்கும் அவையே.
[113]

இப்பாடலில் அறிவு, உணர்வு இரண்டும் வெவ்வேறு என்பதை வினாவிடை மூலம் வலியுறுத்தி, உணர்வு அநித்தியம் என்ற புத்தரின் கொள்கை மறுக்கப்படுகிறது.

பொருள் :

(முன்கூறிய எம் மறுப்புக்கு நீ விடையாக) புத்தனே, முதலில் தோன்றிய அறிவு கெட்டு, அதன் பின்னர் வேறு ஒரு அறிவை அது உண்டாக்குமென்று நீ கூறுகிறாய். கெட்டஅறிவு

மற்றொன்றை ஆக்க இயலாது. ஏனென்றால் அது கெட்டுவிட்டது. கெட்டது மற்றொன்றை எவ்வாறு ஆக்க முடியும்? மேலும் அறிவு கெடுக்கின்றது என்றால் அதனால் அறிந்த பொருளையும் அதன் அடிப்படையில் செய்ய வேண்டிய செயல்களையும், கெட்ட அறிவால் அறிந்து செய்ய இயலாது. (இவ்வாறு நாம் கூறுவதற்கு) அவ்வாறு அன்று, முன்தோன்றிய அறிவு பின் மற்றொன்றை உருவாக்குவதற்குத் தான் கெடும் என்று நீ விடை கூறலாம். அவ்வாறென்றால் ஒரே நேரத்தில் இரண்டு அறிவுகள் உள்ளன எனப்பட்டுக் குற்றமாய் முடியும். உடன் அதற்கு ஒரு பதிலுரையாக முதலில் தோன்றிய அறிவு, முழுமையும் கெடாது, சிறிதளவு நின்று ஓரறிவைத் தோற்றுவித்துக் கெடும் என்று நீ கூறலாம். ஆனால் அறிவின் உணர்வு நித்தம், அநித்தம் என்ற இயல்பினை உடையது. ஆனால் நீ உணர்வுக்கு அநித்தம் மட்டும்தான் என்று கூறுவது பொருந்தாது. இந்த அடிப்படையில் வயலுக்கு இடுக்கின்ற உரம் தான் அழிந்து பயிரை வளர்ப்பது போல முன்தோன்றிய அறிவு கெட்டுப் பின்னோர் அறிவை உண்டாக்குகிறது என்று நீ உவமையில் கூறலாம். உரமும் எருவும் பருப்பொருளாகிய தன்மை (தூலம்) மாறிக்கொட்டு நுண்மை நிலை அடைந்து (சூக்குமம்) அதன் விளைவாகப் பயிரை நன்கு வளர்க்கிறது. அதே போலத்தான் முந்தைய அறிவு முழுவதும் கெடாது என்று கொண்டு உணர்வு அநித்தியம் என்று கூறுகின்றாய். ஆனால் தோன்றும் பொருள் வேறு, உணர்வு வேறு, என்பதால் பயிர் வேறு, உரம் வேறு என்று கொண்டு அறிவு வேறு, அறிவினால் ஆகும் பொருள் வேறு என்று கொள்ளவேண்டும்.

கேடிலாச் சந்தானத்தே பலிக்கும் என்று
விளக்கும்நீ சந்தானம் நித்தம் ஆகும்
ஓடுநீர் போல் அழிந்தாம் உணர்வொழுக்கம் என்னில்
ஒழுகுநீர் இட்டதெல்லாம் உடன்கழிதல் போலத்
தேடுபொருள் சீலம்பா வனைகுறிவிஞ் ஞானம்
சென்ற உணர் வோடுஏகும் நின்றுணர்வின் ஏயா
நீடுநீர் முன்னொழுகிக் கெடாதுநிறைந்து ஓடும்
நிகழ்உணர்வும் கேடின்றி நிறைந்து செலும்காணே. [114]

இப்பாடல் முன் கருத்துக்குப் புத்தரின் மறுப்புரையும் அதற்கு மறுப்பும் கூறுகிறது.

பொருள் :

உணர்வு கெடாத தொடர்ச்சியாலே அறிவு விழைகிறது என்று கூறுகிறாய். அப்படியானால் அத் தொடர்ச்சியை அநித்தம் (நிலையில்லாதது) என்று எவ்வாறு கூறுகிறாய்? ஒரு ஆற்றில் ஓடுகின்ற நீர் முன்சென்றது விலக அதற்குப் பின் வந்து அந்த இடத்தை நிறைவிக்கிறது. அதனாலேதான் ஆறு எப்பொழுதும் நீர் நிறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. அதுபோல அறிவு தொடர்ந்திருப்பதாகக் காட்சி தருகிறது என்று நீ மறுமொழி கூறுகின்றாய். அதுவும் பொருந்தாது. ஏனென்றால் ஓடுகின்ற நீரின்கண் உண்டானவை எல்லாம் அந்நீரோடே ஓடிவிடும். பின்னர் செல்லுகின்ற நீர் முன்னவற்றைக் கூடாது. அது போலத்தான் முன் அறிவால் தேடிய சீலம், பாவனை, குறி, விஞ்ஞானம் இவையெல்லாம் முன் அறிவோடு கெடுமே தவிரப் பின்னர் உண்டாகின்ற அறிவோடு கூட மாட்டா. (உடனே நீ) ஆற்றில் ஓடுகின்ற நீர் ஒழுகும் தன்மை (தொடர்ந்து ஓடும்) கெடாமல் விரைந்து ஓடுவது போல அறிவும் இடையறாமல் தோன்றும் என்று நீ கூறலாம். அப்படியென்றால் அறிவு அநித்தம் இல்லை. நித்தம் என்றே கொள்ளவேண்டும்.

சந்தானம் காரணமோ காரியமோ இரண்டின்
தன்மையதோ காரணமும் காரியமும் நித்தம்
வந்ததாரும் சந்தானம் தொடர்ச்சிஎனின் அதற்கும்
வருநித்தம் தோற்றக்கேடு அடைதலின்மற்று ஒன்றேல்
ஐந்தான கந்தங்கள் அன்றாய் நித்தம்
அடைபொருளாம் அறிவும்அறிவு அடைவும்இன்றிச்
சிந்தாமுன் பின்னாகிப் பின்முன் ஆகித்
திரிந்துவரும் திரிவறிந்து தேரா தோரே. [115]

இப்பாடல் அறிவு அநித்தியம் என்பதனை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

ஒன்றன்பின் ஒன்றாக வரும் தொடர்ச்சியான சந்தானம் என்று நீ கூறுவது காரணத்தையா? காரியத்தையா? இரண்டும் இணைந்ததா? ஒன்றின் காரணம் என்றாலும் அது எப்போதும் இருக்கும். காரியம் என்று கூறினால் அதுவும் நித்தம்.

இரண்டும் உடையது என்றால் அதுவும் நித்தம். ஆனால் நீயோ அநித்தம் என்று வாதிடுகின்றாய். எனவே உன் கொள்கை தவறு. (இவ்வாறு நாம் கூறுவதற்கு உடனே) இல்லை, சந்தானம் என்பது மற்றொரு அறிவு, அது புலன்களிலிருந்து வேறுபட்டது என்று விடை கூறலாம். அப்போதும் அது நித்தமாகிறது. மேலும் ஒரு முரண்பாடும் ஏற்பட்டு விடும். இந்திரியங்களால் ஒரு பொருள் அறியப்படுகிறது என்பதற்கு மாறாக அறிவினால் இந்திரியங்கள் அறியப்படுகின்றன என்ற தவறு ஏற்பட்டு விடும். இது உண்மைக்கு மாறானது. தேறாத தேறனே, ஆராய்ந்து பார்ப்பாயாக.

விளக்கவுரை :

உருவம் தோன்றுதல் பற்றிய விவாதத்தில் ஒன்று கெட்டு ஒன்று தோன்றுகின்ற அடிப்படையில் அதாவது சந்தானத்தின் அடிப்படையில் உருவம் தோன்றுகிறது என்பது பௌத்தரின் கொள்கை. அது இங்கு ஆராயப்படுகிறது. பௌத்தரின் அடிப்படைக் கொள்கை கணத்தில் தோன்றி கணத்தில் பொருள் அழிவதாகும். ஆதலால் சந்தானமாகிய தொடர்ச்சியில் ஒன்று கெட்டு ஒன்று தோன்றாது. ஒன்று கெடுகிறது, தோன்றுகிறது என்று பௌத்தர் கூறுகின்றனர். எனவே எதுவும் நிரந்தரமில்லை, அநித்தம் என்பது அவர்தம் கொள்கை. ஆனால் இதை நூலாசிரியர் மறுக்கும்பொழுது கெட்டுத் தோன்றுவது என்றாலேயே ஏதோ ஒரு நேரத்தில் இருந்து கொண்டுதானே இருக்கிறது. அதாவது உரமாகவோ, பயிராகவோ இருந்து கொண்டுதானே இருக்கிறது. எனவே அநித்தியமல்ல, நித்தியம் என்று மறுக்கிறார்.

ஒருகாலத்து உணர்வுகெட்டாம் எனின்உதிப்பூறு ஒன்றாம்
ஒருபொருளின் திரிவுனக்குக் காலம் ஆனால்
வருகாலம் நிகழ்காலம் கழிகாலம் என்று
வழங்குவதென் பொருள்வரவு நிலைகழிவால் இன்றேல்
திரிகாலம் செப்பிடாய் பொருட்செயலும் ஒன்றாம்
செயல்மூன்றும் ஒருகண்த்தே சேரும் என்னில்
தருகாலம் மூன்றாகும் தாமரைநூறு இதழில்
தன்ஊசியும் காலம் மூன்றினையும் தருமே. [116]

இப்பாடல் காலம் என ஒன்று இல்லை என்பதை மறுக்கிறது.

பொருள் :

ஒரு காலத்தில் அறிவு கெடும். மறுபடியும் உதிக்கும் என்று நீ கூறுகின்றாய். அப்படியானால் உதித்தலும் கெடுதலும் ஒரே காலத்தில் நடைபெறுகின்றன என்றாகும். மேலும் நீ ஒரு பொருள் அடைகின்ற மாறுபாடே காலம் என்கிறாய். அதுவும் தவறு. ஆனால் காலம் என்பது எதிர்வு, நிகழ்வு, இறந்தது என மூன்று வகைப்படும். அதை நீ ஏற்றுக்கொள்கிறாய். அப்படியானால் தோன்றுதல், நிலைத்தல், அழிதல் என்ற அடிப்படையில்தானே அந்த முக்காலம் கொள்ளப்படுகிறது. மூன்றும் தனித்தனி தானே. மூன்றும் ஒருங்கே நிற்கும் என்று கொள்வது பொருந்தாது. நூறு தாமரை இதழ்களை அடுக்கி ஒரு ஊசியில் குத்தினால் ஒரு கணத்திலேயே நூறு இதழ்களையும் ஊசி துளைத்து விடும். அவ்வாறு துளைப்பதிலே கூட மூன்று காலமும் உண்டு. எனவே காலம் இல்லை என்று நீ கூறுவது தவறு.

உணர்வுகா ரணம் உணர்வுக்கு எனின்நித்தம் உணர்வுக்கு
உண்டாகி நின்றுணர்வை உதிப்பி யாதுஇங்கு
உணர்வுசந் தானவிடத்து ஒழிந்தால் பின்னை
உண்டாகாது உடலுணர்வுக்கு உபாதானம் என்னின்
உணர்வு உடலின் இடையறாது உதிக்க வேண்டும்
உடலுணர்வின் வினையினால் உணர்வு உதிக்கும் என்னில்
உணர்வுவினை உளதுஒடுங்காது உணர்வுதரும் செய்தி
உணர்வைவினை தரின்ஒருவன் செயல்வினை யின்று ஆமே.
[117]

இப்பாடல் அறிவு பற்றிய கருத்தைத் தொகுத்து மறுக்கிறது.

பொருள் :

முந்தித் தோன்றிய ஒரு அறிவின் காரணமாய்ப் பின்னர் வேறு அறிவு உண்டாகும் என்றும், அறிவு அநித்தம் என்றும் நீ கூறுகிறாய் இது தவறு. அநித்தமாகிய அறிவு நித்தத் தன்மை பெற்று அதன்பின் வேறு ஒரு அறிவைத் தோற்றுவித்தல்

இயலாது. மேலும் ஒன்றன்பின் ஒன்றாக அறிவு தோன்றுகிறது என்றால் முன்னது கெடுதலால் பின்வருகின்ற அறிவு என்ற ஒன்று தோன்றுவதற்கு இடமே இல்லை. உடம்புதான் அறிவுக்கு உபாதாயமாக நின்று அறிவைத் தோற்றுவிக்கிறது என்று நீ விடை கூறினால் அதுவும் பொருந்தாது. உடலுக்கு அறிவைத் தோற்றுவிக்கும் தன்மை இருக்குமானால் அதனை இடையறாது தோற்றுவிக்க வேண்டும். அதாவது உறக்கத்திலும் கூட இடையீடு இல்லாமல் அறிவு தோன்ற வேண்டும். இல்லை பொறிகளின் செயல்பாட்டால் அறிவு தோன்றும் என்று கூறினால் அதாவது உடம்பின் செயலே அறிவைத் தோற்றுவிக்கும் என்றால் அந்தச் செயலாகிய வினையும் அறிவும் ஒன்று என்று கொள்ள நேரிட்டு விடும். அத்துடன் பொறிகள் எப்பொழுதும் செயல்பட்டு வருவதால் அவற்றால் தோன்றுகின்ற அறிவும் அழியாது என்று பொருள் கொள்ள நேரிட்டு விடும். உணர்வு வினையைத் தருகிறது. வினை - உணர்வைத் தருகிறது என்ற தொடர்ச்சி கூறினால் கன்மம் இல்லாததாகி விடும். ஆனால் நீ கன்மத்தை ஒத்துக் கொள்கிறாய்.

வினையுணர்வு தரும்வினையை உணர்வுதரும் என்றும்
விளம்பின் நீஉணர்வுபோல் வினையினுக்கு
நினைவுவரும் ஒன்றையொன்று நிகழ்த்தி டாபின்
நிலையின்மை யால்நிகழ்த்திக் கெடுதல் செய்யா
கனல்விறகில் பிறந்ததனைப் பொடிசெய் தாற்போல்
கருத்து வினையில் தோன்றிக் கழிக்கும்வினை என்னின்
முனம்உணர்வு பிறந்தனவே வினைகெடுக்கும் முன்பின்
உதியாது முகிழ்நெருப்பின் விற்குஉதியா ஆறே. [118]

இப்பாடல் கன்மம் அறிவினை உண்டாக்கும் என்பதனையும், அறிவு கன்மத்தினை உண்டாக்கும் என்பதனையும் மறுக்கிறது.

பொருள் :

கன்மம் அறிவை உண்டாக்கும் என்றும், கன்மத்தை அறிவு உண்டாக்கும் என்றும் நீ கூறுகின்றாய். அவ்வாறு என்றால் அறிவுக்கு நினைவு உண்டானாற்போலக் கன்மத்துக்கு

நினைவு உண்டாக வேண்டும். ஆனால் கன்மத்திற்கு அறிவு இல்லை என்பது உண்மை. இந்த அடிப்படையில் ஒன்று மற்றொன்றைத் தோற்றுவிக்க முடியாது. கன்மம் அநித்தம் ஆதலால் ஒன்றையொன்று உண்டாக்கிக் கெடமுடியாது. (உடனே நீ) விறகிலே நெருப்புத் தோன்றி அந்த விறகையே எரித்துச் சாம்பலாக்குவதைக் காணுகின்றோம். அதுபோல அறிவுகன்மத்திலே பிறந்து மீளவும் அக்கன்மத்தைக் கெடுக்கும் என்று நீ கூறினால் முன் பிறந்த அறிவு பிறந்தபோதே கன்மத்தைக் கெடுத்து விடுகிறது. அவ்வாறு இருக்கும்போது அக்கன்மம் அறிவை எப்படி உண்டாக்க முடியும்? முடியாது. அறிவும் பின்னர் கன்மத்தை உண்டாக்க முடியாது. எதுபோல என்றால் விறகில் உண்டாகிய தீ விறகை எரித்தபிறகு மீண்டும் விறகை உண்டாக்க முடியாதவாறு போல.

பேயும் நர கருஞ்சுரரும் பிரமருமாய் உலகில்
பிதாமாதா ஆதாரம் ஒன்றும் இன்றிக்
காயமொடு தாம்வருவர் என்றுரைப்பை காயம்
காரியமாய் வருதலினல் காரணம்உண் டாகும்
ஆயும்உணர் வோசுத்த அட்டகமோ கன்மம்
வடித்ததோ வடிவுசெய்து வைத்தாரும் உண்டோ
ஆயும்அறிவு உண்டாகில் அறைந்திடாய் உலகுக்கு
ஆதிதுணை நிமித்தகா ரணம்அறிவது அறிவே. [119]

இப்பாடல் மானிடர் அல்லாதார்க்குக் காரணம் அன்றி உடம்பு உண்டு என்பதை மறுக்கிறது.

பொருள் :

பேய் என்றும், நரகர் என்றும், தேவர்கள் என்றும், பிரும்மா போன்றவர்கள் என்று சொல்லப்படுவார் உலகில் மாதா, பிதாக்கள் இன்றி உடம்போடு கூடிய வடிவுடையவராய் வருவர் என்று (புத்தர்) நீ கூறுகிறாய், நீ கூறுவது தவறு. உடம்பு என்பது ஒரு காரியப் பொருளாகும். காரியம் காரணம் இல்லாமல் வர இயலாது. காரண காரிய தொடர்ச்சி ஒவ்வொரு பொருளுக்கும் உண்டு. மேலே கூறப்பெற்ற உடம்பாகிய காரியம் நீ கூறுகிற சுத்த அட்டகத்தாலா? அல்லது கன்மத்தாலா? அல்லது வேறு ஒரு காரணத்தாலா? எந்தக்

காரணத்தால் அவ்வடிவைப் பெற்றார்? ஒன்றன் தோற்றத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்ற மூன்று உண்டு. அதனை அறிவாயாக.

உருவாதி கந்தங்கள் ஐந்தும் கூடி
ஒருவன்வேறு ஒருவன்இலை என்றுரைக்கும் புத்தா
உருவாதி ஐந்தினையும் உணர்பவன் வேறுஎன்ன
உணரும்விஞ் ஞானம்என்றாய் ஞானம்உணர்ந் தவர்ஆர்
உருவாதிபொருள் காட்டித் தனைக்காட்டும் சுடர்போல்
உணர்வுபிறி தினையுணர்த்தித் தனையுணர்த்தும் என்னின்
உருவாதி பொருளினையும் சுடரினையும் காணும்
உலோசனம்போல் உணர்வுபொருள் உணர்பவன் வேறுஉண்டே.
[120]

இப்பாடல் ஆன்மா என்ற ஒன்று தனியே இல்லை என்ற கொள்கையை மறுப்பது.

பொருள் :

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்று கூறுகின்ற ஐந்து குணங்கள் கந்தங்கள் எனப்படும். இவை ஐந்தும் கூடி தோன்றுவதே ஆன்மா. ஆன்மா என்ற ஒரு தனித்த பொருள் இல்லை. சித்தம் அல்லது புத்தி என்ற விஞ்ஞானமே இந்தக் கந்தங்களை அறியும் என்று உன்னுடைய கொள்கைகளைக் கூறுகிறாய். அப்படியானால் அந்தச் சித்தத்தை உணர்ந்தவர் யார்? உடனே நீ இதற்குரிய விடையாக, ''ஒரு விளக்கு எவ்வாறு தன்னையும் காட்டி, தனக்கு அருகிலுள்ள பொருளையும் காட்டுகிறதோ'' அதுபோலப் புத்தி தன்னையும் அறிந்து தன்னை அடுத்த பிறபொருளையும் அறியும் என்று நீ கூறுகின்றாய். விளக்கைக் கண்டு விளக்கின் துணையினால் பிற பொருளை உணருகின்ற தன்மை (உலோசனம்) கண்ணுக்கே உண்டு. விளக்குக் காணும் தன்மை இல்லை. எனவே சித்தத்தையும் விஷயங்களால் அறியும் இந்திரியங்களையும் உணருகின்ற ஆன்மா என்ற ஒன்று உண்டு.

காயமுடன் இந்திரியம் மனம்நான் என்று
கதறுவாய் காயம்உறக் கத்து அறியாவாகும்
வாயில்களும் அப்படியில் ஒன்றைஒன்றங்கு அறியா
மனம்கணத்திற் கெடும்கால மூன்றின்வரவு அறியாது
ஆயும்உணர் வாகிஉடல் பொறிமனம்மூன்று அறிந்தாங்கு
அவைநானல் லேன்என்றும் அறிந்தும்மனத் தாலே
ஏயும்ஒரு பொருள்கருதி இந்திரியப் பாலே
இசைவித்துக் காயத்தால் இயற்றுவது ஆன் மாவே. [121]

இப்பாடல் உடலும், இந்திரியமும், மனமும் ஆன்மா அல்ல என்று கூறுகிறது.

பொருள் :

உடல், புலன்கள், மனம் என்று கூறுகின்றவையே ஆன்மா ஆகும். இதைத்தவிர ஆன்மா என்று ஒன்று இல்லை என்று கதறுகின்ற புத்தனே, உடல் உறக்கத்தில் அறியாமை உடையது. பொறிகளும் அவ்வாறுதான். மேலும் பொறிகள் விழித்திருக்கும் காலத்தில்கூட ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாது. உனது கொள்கைப்படி கணத்தில் கெடும் அது முக்காலங்களை அறிகின்ற அறிவும் அற்றது. எனவே இவை மூன்றும் ஆன்மா அல்ல. ஆன்மா என்பது உடல், பொறி, மனம் இம்மூன்றினையும் அறிந்தும் அவை மூன்றும் ஆன்மா இல்லை என்று அறிந்தும், இவற்றின் மூன்றிலிருந்தும் வேறுபட்டு நின்று அறிந்தும், மனத்தால் பொருந்தத் தக்கதொரு பொருளைக் கருதி இந்திரியங்களால் காட்டக் கண்டு உடம்பால் செயல்படுவது ஆன்மா ஆகும் என்பதை அறிவாயாக.

கதறுவாய் - கூப்பாடு போடுகின்றாய். காயம் - உடல், நான் - ஆன்மா.

கழிந்தவுணர் வேபின்னும் இயானறிந்தேன் என்று
கருதலின்அவ் வுணர்வுஅறிந்தது என்னின் முன்னே
மொழிந்தமொழி நான்மொழிந்தேன் என்றால் வாய்தான்
மொழிந்ததோ மொழிந்தவன்வேறு ஆனாற் போல
எழுந்தஉணர்வு எல்லாம்கொண்டு யானறிந்தேன் என்றது
எதுஅதுகாண் உயிருணர்வால் வாக்கால் மற்றை
ஒழிந்தகாயம்தன்னால் உணர்ந்துரைத்துச் செய்தங்கு
உணர்வினுக்கும் ஆதார மாய்நிற்கும் உயிரே. [122]

இப்பாடல் மனம்தான் ஆன்மா என்ற கொள்கைக்கு மறுப்புக் கூறுகிறது.

பொருள் :

முன் ஒரு பொருளை ஆராய்ந்து, மறுகணத்தில் அது கெட்டு, அதனால் உண்டாகியதை நான் அறிந்தேன் என்று கூறுகின்ற பொழுது உணருகின்ற உணர்வே ஆன்மா ஆகும். வேறு ஒன்று இல்லை என்று நீ கூறுகின்றாய் ''நான் சொன்னேன்'' என்று ஒருவன் சொல்லும்பொழுது பேசியது வாயாகும். பின் அதனை எடுத்துச் சொல்வதும் வாய்தான். அவ்வாறு பேசியது வாயாக இருக்க நாம் அதனைக் குறிப்பிடும்பொழுது பேசியது வாய் என்று கூறாது ஒருவன் பேசினான் என்று கூறுகின்றோம். அவ்வாறென்றால் ஒருவன் உண்டு அல்லவா. அது போலவே இந்திரியங்களின் வழியாக யாவற்றையும் அறிந்தவன் இதனை நான் அறிந்தேன் என்று கூறும்பொழுது எவ்வாறு முன்பு வாயைச் சொல்லாது ஒருவனைச் சொன்னோமோ அதுபோல அறிந்தவனும் ஒருவனாக வேண்டும். அந்த ஒருவன்தான் ஆன்மா. எனவே மனத்தால் அறிந்து, வாக்கால் கூறி, உடம்பால் செயல்பட்டு, உணர்வுக்கு ஆதாரமாய் நிற்பது உயிராகிய ஆன்மா ஆகும்.

இந்திரிய வீதியெழும் சித்தம் நெஞ்சத்து
எழும்சித்தம் எனவிரண்டும் ஒன்று கெட்டே ஒன்று
வந்துஎழுவது எனில்கனவில் கண்டபடி நனவின்
வாய்திறவார் நனவுகண்ட படிகனவிற் காணார்
அந்தன்உரு வண்ணங்கள் அறிந்திடான் இன்றேல்
அறிகனவும் இறந்துஉணர்வும் அறிந்துஉறக்கம் அடைந்தால்
உந்துவதோர் சந்தானம்இல்லை உணர்வு உதிப்ப
உயிர்கனவு நனவினையும் உணரும் காணே. [123]

இப்பாடல் இந்திரியங்கள் ஆன்மா என்பதை மறுக்கிறது.

பொருள் :

புத்தனே, நீ சித்தம் (அறிவு) என்பதை இருவகையாகக் கூறுகிறாய். ஒன்று புலன்களின் தொழிலால் ஏற்படுகின்ற

சித்தம். மற்றொன்று நெஞ்சமாகிய மனதில் தோன்றும் சித்தம். முன் சித்தம் கெடப் பின் சித்தம் தோன்றும் என்பது உன் கொள்கை. அவ்வாறாயின் கனவில் கண்டதை நனவில் கூறமுடியாது. (இது மனசித்தம்) நனவில் கண்டதைக் கனவில் கூறமுடியாது. (பொறிசித்தம்) எவ்வாறெனில் பிறவிக் குருடன் பிறர் வடிவத்தையும் வன்னத்தையும் அறியாமை போன்றதாகும். எனவே இரண்டு அறிவு உண்டு என்று கூறுவது தவறு. நன்கு உறங்குகின்ற பொழுது நனவு, கனவு என்ற இரண்டும் தொடர்பு அற்றுப்போகும். அதாவது மன அறிவும் இந்திரிய அறிவும் சேருவதற்கோ, தோன்றுவதற்கோ வாய்ப்பில்லை. ஆனால் தூங்குவதற்கு முன் உள்ள அறிவும் விழித்து எழுந்தபின் ஏற்படும் அறிவும் நம் அனுபவத்தில் உணரக்கூடியதாக உள்ளது. அதாவது ஆன்மா என்ற ஒன்று இல்லையானால் கனவு, நனவு அற்றுப்போன நல்உறக்கத்தின் முன்பிருந்த உணர்வையும், பின் எழுந்த பிறகு இருந்த உணர்வையும் ஆன்மா என ஒன்று இல்லை என்றால் உணரமுடியாது.

ஒருகாலத்து ஓரிடத்தில் ஒருணர்வேல் செவிதான்
ஒன்றுணராது இருசெவியும் உணரும் ஓசை
ஒருகாலத்து இருகண்ணும் செவியும் மனமும்
ஒருவனைக்கண்டு அவனுரைகேட்டு
உணர்ந்திடும் ஐம்பொறியும்
ஒருகாலும் உணராஉன் ஞுணர்வின்றிப் பொறிகள்
ஒன்றொன்றாய் உணர்வதுஉன் ஞுணர்வைந்தும் உணரா
ஒருகாலும் பொறிவிகற்பித்து உணராஉன் ஞுணர்வுக்கு
உள்ளதுகாண் விகற்பம்இரண் டும்முணர்வது உயிரே. (124)

இப்பாடல் பொறிகளையும் மனதையும் கொண்டு அறிவது ஆன்மா என்கிறது.

பொருள் :

ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஓர் உணர்வுதான் தோன்றும் என்பது புத்தனே உனது கொள்கை. ஒன்று என்றால் கண் இரண்டாயிற்றே. இரண்டும் பார்க்கிறதே. செவி இரண்டாயிற்றே. இரண்டும் கேட்கிறதே ஒருவன் பேசுகின்ற பொழுது இரு செவிகளும் கேட்கின்றன, இரு கண்களும்

பார்க்கின்றன, மனமும் அவன் சொல்வதைக் கேட்கின்றது. எனவே ஒன்றுதான் உணர்ந்திடும் என்பது பொருந்தாது. மேலும் பொறிகளோடு மனமும் கூடாவிட்டால் ஒரு காலும் ஒன்றை அறியமுடியாது. எனவே பொறிகள் அறிகின்ற பொழுது மனம் எதனுடன் கூடுகின்றதோ அந்தப் பொறி உணர்வே ஏற்படும். அதுவுமன்றி ஒருபொறி அறிந்ததை மற்றொன்று அறிவதில்லை. எனவே பொறியோடும் மனத்தோடும் கூடி அறிகின்ற பயனைப் பெறுகின்ற ஒன்று இருக்க வேண்டும். அதுதான் ஆன்மா என்று அறிவாயாக.

விளக்கவுரை :

மனம் எந்தப் புலனில் பதிகிறதோ அந்தப் புலன் அறிவுமிக்கு இருக்கும் என்பதற்கு, ''ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள'' (பெரிய புராணம், தடுத்தாட் கொண்ட புராணம், பா.106) என்ற சேக்கிழார் கூற்று நினைவு கொள்ளத் தக்கது.

விகற்பம் இரண்டு - பொறியோடு மனம் வேறுபடுத்தி அறிந்த ஆற்றல்.

அருவுணர்வு மாய்ஆறும் மாறி மாறி
அங்கங்கே தோன்றியிடில் அகத்துநிலை இன்றி
உருவினொடு பாலதருண விருத்த அவத்தை
உண்டாகாது உறக்கத்தின் உடல்தட்ட அழைப்ப
வருவதுணர்வு எங்கிருந்து நெஞ்சிலிருந்து என்னில்
வாயில்வினை அறிந்துஎழுப்ப ஆயுஅறி யாதாம்
திரியொழிய இடிஞ்சில்தொடத் தீபம் எழாது அடக்கம்
சென்றபொழு தால்உணர்வு நின்றநிலை செப்பே. [125]

இப்பாடல் பொறியும் மனமும் கூடி அறுவகையாய் அறியும் என்ற கொள்கையை மறுக்கிறது.

பொருள் :

மனமானது உருவமற்றது, உணர்வாயுள்ளது. இந்த மனம் பொறிகள் ஐந்தோடு கூடி ஆறு ஆகித் தமக்குள் மாறி மாறிப் பொருந்துவதால் அறிவு தோன்றுகிறது என்பது புத்தனே உனது

கொள்கை. உனது கொள்கைப்படி மனம் அருவமாகையால் அதற்கு உருவம் இல்லை. எனவே அது உருவமாகிய உடலோடு கூடிக் குழந்தை மனம், இளமை மனம், முதுமை மனம் என்று பருவநிலையில் வேறுபாடு அடைதல் கூடாது அல்லவா. மேலும் உறக்கத்தில் நன்கு உறங்கியவனைத் தட்டி எழுப்பினால் அவனுக்கு உறக்கத்தில் இல்லாது இருந்த அறிவு எழுந்தவுடன் தோன்றுகிறதே, அது எங்கிருந்து தோன்றுகிறது? நெஞ்சிலிருந்து (மனம்) தோன்றுகிறது என்று நீ விடை கூறினால், சத்தாதி விஷயங்களில் செல்லும் தொழிலை அறிந்து செலுத்துவதற்கு நெஞ்சாகிய மனம் அறியாது. (அதாவது தட்டி எழுப்புகின்ற ஓசையை உணர்ந்து அதன்வழி அறிவைப் பெறுகின்ற நிலை நெஞ்சாகிய மனத்துக்கு இல்லை. அந்த அறிவு ஆன்மாவுக்கு மட்டுமே உண்டு). நெஞ்சுக்கு (மனத்துக்கு) இல்லை. இது எதுபோல இருக்கிறது என்றால் எரிகின்ற விளக்கில் திரி முழுவதும் எரிந்து அவிந்த பிறகு அகலைப் பற்றிக் கொண்டு எரிவது என்பது போன்றதாம். ஒருவன் மூர்ச்சையுற்று விழுந்த போது அவனிடத்தில் அறிவு எங்கிருக்கிறது என்பதற்கும் பதில் நீ கூறவேண்டும்.

விளக்கவுரை :

உருவமற்ற மனம் பொறிகளோடு கூடி அறிவைப் பெறுகிறது என்பது புத்தர் கொள்கை. இதை இரண்டுவிதமாக ஆசிரியர் மறுக்கிறார். முதலில் மனம் அருவமற்றது என்பதைக் குழந்தை மனம், இளமை மனம், முதுமை மனம் என்று கூறி மனம் பருவமாகிய உருவத்தை உடையது என்று கூறி மறுக்கிறார். மனம் இந்திரியங்களோடு கூடி அறிவைப் பெறுகிறது என்பதை இரண்டாவதாக மறுக்கிறார். தூக்கத்திலிருந்து ஒருவனை ஓசை ஏற்படுத்தி எழுப்பினால் அவன் எழுந்து செயல்படுகிறான். தூக்கத்தில் அந்த அறிவு எங்கிருந்து வந்தது? புத்தன் நெஞ்சத்தில் இருந்தது என்கிறான். அதாவது மனம் நெஞ்சோடு கூடி அறிகிறது என்கிறான். இதனை ஆசிரியர் மறுக்கிறார். மனமானது சத்தாதி விஷயங்களுடன் உடனே கூடி அறியமுடியாது. விளக்கு எரியத் திரி வேண்டும். திரி எரிந்து விட்டால் அகல் எரியாது. அகலில் விளக்குத் தோன்றத் திரி வேண்டும். அதுபோல மனமானது சத்தாதி விஷயங்களோடு கூடி அறியவேண்டுமானால் ஆன்மா என்ற ஒன்று வேண்டும், மனமே அறியாது என்று கூறி மறுக்கின்றார்.

இச்சைவெறுப்பு இயற்றல் இன்பம் துன்பம் ஞானம்
இவை அணுவின் குறியாகும் இவற்றில் இச்சை
நச்சிநுகர்ந்து ஒருபழத்தை இனம்கண்டு முன்பு
நான்நுகர்ந்த கனியின் இனம்என்று நச்சல்பின்பும்
மெச்சவெறுப்பு ஆதிகளும் இப்படியே யாகும்
இவைமுன்பும் பின்பும்உணர்ந் திடுத லாலே
நிச்சயகர்த் தாஒருவன் உவன்என்று நல்லோர்
நிறுத்திடுவர் வெறுத்திடுவர் நின்னுடைய பொருளே. [126]

இப்பாடல் ஆன்மாவின் இயல்புகளைக் கூறுகிறது.

பொருள் :

ஆசை, வெறுப்பு, தொழில் செய்தல், இன்ப துன்பம் அனுபவித்தல், அறிவு இவை ஆன்மாவின் இயல்புகளாகும். இவற்றுள் அணு என்பது முன்னொரு பழத்திற்கு ஆசைப்பட்டு அதனைப் பெற்று நுகர்ந்து பின்பு அதனை ஒப்பதொரு பழத்தைப் பார்க்கின்ற பொழுது முன்பு நான் சுவைத்த பழத்தின் இனம் இது என்று பின்பும் அதற்கு ஆசைப்படுவதாகும். வெறுப்பு முதலியவையும் இத்தன்மையவே ஆகும். எனவே ஆசை, செயல், அறிவு ஆகிய மூன்றினையும் முன்பு அறிந்து பின்பும் அறிவதினால் அறிவது எதுவோ அதுவே ஆன்மாவாகும் என்று கூறுவர் பெரியோர். நீ ஆன்மா என்ற ஒன்று இல்லை என்று கூறுவதை அவர்கள் ஏற்கமாட்டார்கள்.

அணு - ஆன்மா, குறி - இயல்பு, நச்சி - விரும்பி, கர்த்தா - ஆன்மா

எப்பொருட்கும் இரந்தரமாய் இடம்கொடுத்து நீங்காது
இருள்ஒளிதான் அன்றிஇரண் டினுக்கும்இட வகையாய்
ஒப்பில்குணம் சத்தமதாய் வாயு ஆதி
உதித்தொடுங்க நிற்கும்வான் உயிர்முன்னே சொன்னோம்
செப்பிடும்கா லம்பொழுதுநான் ஆதி யாகித்
திரிவிதமாய்த் தீமைநன்மை செய்யும் திக்குத்
தப்பில்குணக் குக்குடக்குத் தெற்குவடக்கு ஆதி
தானாகித் திரியாதே நின்றுபலம் தருமே. [127]

இப்பாடல் இல்லை என்று கூறுகின்ற புத்தரின் கொள்கையை மறுக்கிறது.

பொருள் :

எல்லாப் பொருள்களும் இயங்குவதற்கு இடம் கொடுத்தும், எங்கும் நிறைந்தும் தான் இருள் ஒளி அன்றி அவை இரண்டும் தங்குவதற்கு இடம் தந்தும், காற்று முதலிய நான்கு பூதங்களும் தோன்றி நடுங்குவதற்கு ஆதாரமாக இருப்பதுவும் எதுவோ அதுவே வான் ஆகும். அதனை நீ இல்லை என்று கூறுவது பொருந்தாது. நான் சொன்ன உயிரை நீ இல்லை என்று சொல்வதும் பொருந்தாது. காலம் என்பது காலை, நண்பகல், மாலை எனப் பலவகைப்பட்டு முக்காலம் வகைப்பட விளங்கும். அந்தக் காலத்துக்கு ஏற்ப நன்மையும், தீமையும் மாறி மாறி வருகின்றன. நீ காலம் இல்லை என்று கூறுவதும் தவறு. திசை நான்கு வகைப்பட்டு அதற்குடைய பயன்களைத் தவறாது செய்கின்றது. அதனையும் நீ இல்லை என்று கூறுவது பிழையாகும்.

காரியமாய் உலகமெலாம் இருத்த லாலே
கடாதிகள்போல் காரியகர்த் தாஒருவன் வேண்டும்
ஆரியமாய் அறம்பொருளோடு இன்பம்வீடு எல்லாம்
அறைந்துஉயிர் கட்குஅறிவுசெயல் அளிப்பதுநூல் அந்நூல்
சூரியராய் உள்ளவர்கள் ஓத ஓதிக்
கொண்டுவர லால்முன்னே குற்றம் இன்றிச்
சீரியபேர் அறிவுடையோன் செப்ப வேண்டும்
செயலினுக்கும் கரிவேண்டும் சிவன்உளன் என்றுஅறியே.
[128]

இப்பாடல் இறைவன் இல்லை என்பதை மறுப்பது.

பொருள் :

காரியப் பொருளாக உலகம் இருக்கிறது. அதாவது மண்ணால் செய்யப்பட்ட குடம்போல அது இருக்கிறது. எனவே குடத்தைச் செய்யக்குயவன் ஒருவன் இருத்தலைப் போல உலகத்தைத் தோற்றுவிக்க ஒருவன் வேண்டும் அவனே இறைவன். நீ வேதங்கள் இருப்பதை ஒத்துக்கொள்கிறாய். அந்த வேதங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உயர்ந்த பொருளை உணர்த்துகிறது. நல்லோர் பலரும் தொன்று தொட்டு அதை ஓதி வருகின்றனர். இத்தகைய

வேதங்கள் குற்றமில்லாத சீரிய அறிவுடையவன் ஒருவனால் சொல்லப்பட வேண்டும். மேலும் அவ்வேதங்களால் சொல்லப் படுகின்ற செயல்முறைகளுக்குச் சகல சாட்சியாய் ஒருவன் வேண்டும். அவனே இறைவன்; அவன்தான் எம் சிவன். அவனை நீ அறிவாயாக.

மரங்கள்உயி ரல்லஎன்று மறுத்துச் சொன்னாய்
வாடுதல்பூ ரித்தலான் மரங்கள்உயி ராகும்
திரங்குநீர் பெறாதுஒழியின் பெறில்சிரத்தை சேரும்
சீவன்அல எனில்உலகில் சீவன் எல்லாம்
உரம்கொள்வது ஊண்பெறில், சோரும்ஊண் பெறாவேல்
உலர்ந்தமரம் நீர்பெற்றால் உய்யாதுஉன் னுயிர்கள்
கரந்தசினை முட்டைகட்கு வாயில்இன்று வாயில்
கண்டிலதேல் பூத்துக்காய்த்து எழல்மரங்கள் உயிரே [129]

இப்பாடல் மரம் முதலிய அஃறிணை பற்றிய இம்மதத்தாரின் கொள்கைகளை மறுக்கிறது.

பொருள் :

புத்தனே, மரங்கள் முதலியவை உயிரற்றவை என்று மறுக்கிறாய். மரங்கள் மெலிந்தும் பருத்தும் காணப்படுவதால் அவை உயிருள்ளவை. அதாவது நீர் பெறாதபொழுது வாடுகின்றன. நீர் பெற்றபொழுது பூரிக்கின்றன. இதனால் மரத்திற்கு உயிர் உண்டு என்று அறிவாயாக. மரம் முதலியவற்றிற்கு இந்திரியங்கள் இல்லை என்பதால் (புலன்கள்) மரத்திற்கு உயிர் இல்லை என்று நீ கூறலாம். உயிரைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் முட்டைக்கும், சினைக்கும் பொறிகள் இல்லை. அதுபோலவே மரம் முதலியவற்றிற்கும் பொறிகள் வெளிப்படையாகத் தோன்றா. குஞ்சு பொரித்த பிறகு முட்டைக்கும் சினைக்கும் இந்திரியங்கள் பின்பு தோன்றக் காண்கிறோம். அதுபோல மரம் முதலியவற்றிற்கு இல்லை என்று கூறலாம். மரம் முதலியவற்றிற்கு இந்திரியங்கள் வெளிப்படையாகக் காணப்படவில்லை என்றாலும் அவை பூத்து, காய்த்து, வளர்தலைக் காண்பதால் இந்திரியமும் உயிரும் மரத்திற்கு உண்டு என்று அறியலாம்.

ஒருமரத்தின் உயிரொன்றேல் கொம்புஒசித்து நட்டால்
உய்யும்உயிர் ஒன்றுபல வாமோ என்னில்
கருமரத்தின் வித்துவேர் கொம்புகொடி கிழங்கு
கண்கலந்து கொள்ளும்உயிர் அண்டம் வேர்ப்புத்
தருபிறப்புச் சராயுசங்கள் சனனமும்பெற் றாற்போல்
தானடையும் உற்பீசம் தலம்நடவாது என்னில்
பெருநிலத்தில் காலிலார் நடப்பரோ பேதாய்
பிறப்பின்விதம் அநேகம்காண் பேசுங் காலே. [130]

இப்பாடல் மரத்திற்கும் உயிர் உண்டு என்கிறது.

பொருள் :

மரத்திற்கு உயிர் உண்டு என்று கூறுகின்றீர்களே, ஒரு மரத்தின் கிளையை ஒடித்து நட்டால் அந்தக்கிளை துளிர்க்கிறது. அப்படியானால் ஓர் உயிர் பல உயிர்கள் ஆகுமோ? என்று நீ கேட்கலாம். மரம் - வித்து, வேர், கிளை, கொம்பு இவற்றிலும், கொடியானது கிழங்கு, கணுக்கள் இவற்றிலும் தோன்றுகின்றன. எவைபோல என்றால் முட்டை, வியர்வை, கருப்பப்பை என்ற பல இடங்களிலிருந்து உயிர்கள் தோன்றுவது போல. அப்படியானால் முட்டை இவற்றிலிருந்து தோன்றுகின்ற உயிர்கள் நிலத்தின் நடக்கின்றனவே, வித்திலிருந்து தோன்றுகின்ற உயிராகிய மரம் உலகத்தில் நடக்கவேண்டுமே என்று நீ கேட்கலாம். பிறப்பு பலவகைப்பட்டது. அதில் மரம் ஒன்று. அதற்குக் கால் இல்லை. அதனால் நடக்கவில்லை. பேதையே உணர்ந்து கொள்.

கொம்பு - கிளை, பொசித்து - ஒடித்து, உற்பீசம் - வித்தில் தோன்றும் முளை, கண் - கணு, அண்டம் - முட்டை, சராயிசம் - கருப்பப்பை, சனனம் - பிறப்பு.

தின்னும்அது குற்றம்இலை செத்ததுஎனும் புத்தா
தின்பையெனக் கொன்றுஉனக்குத் தீற்றினார்க்குப் பாவம்
மன்னுவதுஉன் காரணத்தால் தின்னா தார்க்கு
வதைத்துஒன்றை இடாமையினால் வதைத்தவர்க்கே பாவம்
என்னில்உனை ஊட்டினர்க்குப் பாவஞ் சேர
என்னதவம் புரிகின்றாய் புலால்கடவுட்கு இடாயோ
உன்உடலம் அசுசியென நாணி வேறோர்
உடல்உண்ணின் அசுசியென உணர்ந்திலைகாண் நீயே. [131]

இப்பாடல் ஊன் உண்ணுதல் கொள்கை பற்றிய மறுப்பைக் கூறுகிறது.

பொருள் :

ஓர் உயிரைக் கொல்லுதலே பாவம். இறந்த விலங்கின் ஊன் உண்ணுதல் பாவமில்லை என்கிறாய். புத்தனே, நீ உண்ணுவதால் தானே உன்னைக் கருதி ஓர் உயிரை ஒருவன் கொல்லுகிறான். உன்னால் அவனுக்குப் பாவம் விளைகிறது. தின்னுவோர் இல்லை என்றால் உயிரைக் கொல்லுவாரும் இல்லை. உனக்கு ஊன் தருபவருக்குப் பாவம் சேரும்படியாக நீ தவத்தை மேற்கொள்ளுகிறாய் (அழகிது). நீ ஊனை உண்ணுகின்ற பொழுது உன் கடவுளுக்கும் அதனை வழங்குகின்றாய். உன்னுடைய உடலை அசுசி (தூயதன்று) என்று கொள்ளுகின்ற நீ மற்றொன்றின் உடலாகிய ஊனைத் தூய்மையற்றது என்று கருதாதது உண்கின்றாயே, வேடிக்கைதான்.

விளக்கவுரை :

இக்கருத்துக்கு,

''தினல்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்''

என்ற 256ஆம் திருக்குறள் அரண் ஆகும். ''என்ன தவம் புரிகின்றாய்'' எனக் கேட்டு நீ பண்ணுவது தவம் இல்லை என்பதைப் பெறவைக்கிறார்.

குடைநிழலும் கண்ணாடிச் சாயையும்போல் பிறப்புக்
கொள்ளும்உணர்வு என்னிற்கா ரணம்அழிய அழியும்
அடைநிழல்போல் கந்தம்ஐந்தும் அழியும்உனக்கு இங்கே
அவையழிந்தால் அருங்கதியின் அணையும்உணர்வு இன்றாம்
இடைகனவின் எழும்உணர்வு நனவுணர்வு ஆனாற்போல்
எழும்உணர்வு கன்மத்தால் நிணைந்தகதி என்னின்
மிடைசிணையும் அந்தனும்முட் டையும்உயிர்விட் டக்கால்
மேவுவதுஎன் பிறப்பினுடல் விடாதுகன்ம உணர்வே [132]

இப்பாடல் உடலைவிட்டுக் கன்மவினை நீங்காது பிறப்புத் தோறும் வரும் என்பதனை வலியுறுத்துகிறது.

பொருள் :

குடையில் நிழல் தோன்றினால் அதன் நிழலும் குடைபோலவே தோன்றும். கண்ணாடியின் முன்னே ஒரு பொருளைக் காட்டினால் அந்தப் பொருளைப் போலவே கண்ணாடியிலும் சாயை தோன்றும். அதுபோலத்தான் ஐந்து கந்தங்களும் அழிய உடலானது அழிந்து (நிழல், சாயை போல) மற்றொரு உடல் தோன்றும் என்று புத்தனே நீ கூறுகின்றாய். ஆனால் இது தவறு. குடையும் கண்ணாடியும் கருவியாகிய காரணங்கள். அவற்றில் தோன்றுகின்ற நிழலும் ஒளியும் காரியங்கள். காரணம் அழிந்தால் காரியமும் அழியும். அது உமக்கே தெரியும். ஐந்து கந்தங்களும் கெடும் என்பது உம்முடைய அடிப்படைக் கொள்கை. அவ்வாறானால் அவை கெடும்பொழுது அவற்றோடு கூடிய அறிவும் கெடுமல்லவா? உடனே நீ கூறலாம். கனவில் தோன்றிய அறிவு விழித்தெழுந்தவுடன் மீண்டும் உண்மை அறிவாகத் தோன்றுகின்றது அல்லவா? அதுபோல வினையின் காரணமாக மீண்டும் தோன்றி அறிவு நற்கதியை அடையும் என்று கூறலாம். அதுவும் தவறு. சினையும், குருடனும், முட்டையும் உயிர் அகன்றபிறகு பெறுகின்ற கதி யாது? பிறப்பின் உடலைக் கன்ம உணர்வு விடாது.

விளக்கவுரை :

சினையும், அந்தகனும், முட்டையும் பூர்வ கன்மத்துக்கு ஈடாகத் தொழிலை மறந்து கிடப்பதால் நற்கதி அடைவதில்லை.

ஐந்துகந்தம் சந்தானத்து அழிதல்பந்த துக்கம்
அறக்கெடுகை முத்தியின்பம் என்றறைந்தாய் கந்தம்
ஐந்தும்அழிந் தால்முத்தி அணைபவர்யார் என்ன
அணைபவர்வேறு இல்லைஎன்றாய் ஆர்க்குமுத்தி இன்பம்
ஐந்தின்உணர் வினுக்கென்னில் அழியாதஅவ் வுணர்வுஉண்டு
ஆகவே எவ்விடத்தும் உருவாதி கந்தம்
ஐந்தும்உள வாம்அதுவும் பந்த மாகி
அரந்தைதரு முத்தியின்பம் அறிந்திலைகாண் நீயே. (133)

இப்பாடல் புத்தரின் முத்தி பற்றிய கருத்துக்கு மறுப்புக் கூறுகிறது.

பொருள் :

முத்திநெறி பற்றிப் பேசுகின்ற புத்தனே, ஐந்து கந்தங்களும் ஒன்றன் பின் ஒன்றாக வருவதால் துன்பமும், அவை ஒன்றன்பின் ஒன்றாகக் கெடுவதால் முத்தியும் ஏற்படுகிறது என்று கூறினாய். ஆனால் ஐந்து கந்தங்களும் கெட்டபிறகு முத்தி அடைவது யார்? என்று கேட்டால் ஒருவருமில்லை என்று விடை கூறுகின்றாய். அவ்வாறென்றால் முத்தி இன்பத்தை நுகர்வது யார்? ஐந்து கந்தங்களும் கூடியபோது தோன்றுகின்ற அறிவே முத்தி இன்பத்தை நுகர்கிறது என்றால் அந்த ஐந்து கந்தங்கள் அப்பொழுது கெடவில்லை என்பதுதானே பொருள். அவை கெடாதபோது மீண்டும் துயரமும், முத்தியும் என்று கூறுவது எல்லாம் வழுவாகும். எனவே உனக்கு முத்தி இன்பம் பற்றித் தெளிவான கருத்து இல்லை.

அநாதிமுத்த ணாய்ப்பரணாய் அசலணாய் எல்லா
அறிவுதொழில் அனுக்கிரகம் உடையஅரன் கன்மம்
நுணாதிகம்அற்று ஒத்தவிடத் தேசத்தி நிபாதம்
நுழைவித்து மலங்கனெலாம் நுங்க நோக்கி
மணாதிகர ணங்களெலாம் அடக்கித் தன்னை
வழிபடுநல் அறிவுஅருளி மாக்கருணைக் கையால்
இணைதபிறப் பினில்நின்றும் எடுத்து மாறா
இன்பமுத்திக் கேவைப்பன் எங்கள்முத்தி இதுவே. [134]

இப்பாடல் புத்தருக்குத் தன்மதக் கருத்தைச் சித்தாந்தி தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

பொருள் :

அநாதி காலந்தொட்டு மலங்களால் கட்டப் படாதவன், யாவற்றுக்கும் முதல்வன், எங்கும் பரந்திருப்பவன், அசைவற்றவன், யாவற்றையும் ஒருங்கே அறிகின்ற அறிவுடையவன், எதனையும் செய்யும் பேராற்றல் உடையவன், அருளை வழங்குகிறவன் அவனே எங்கள் சிவபெருமான். உயிர்களின் இருவினைப் பயன்கள் ஒத்து இருவினை ஒப்பு நிகழ்கின்ற காலத்துத் திருவருள் சத்தியை உயிரிடத்தில் சத்திநிபாதமாக நிகழ்வித்து உயிர்களைப்

பற்றியிருக்கக் கூடிய மலங்கள் யாவும் நொறுங்குமாறு திருக்கடைக்கண் சாத்துகின்றவன். (மறை முதலிய) அறக் கரணங்களையும் (பொறி முதலிய) புறக்கரணங்களையும் அடக்கி ஆளுகின்றவன், ஆன்மாக்கள் தன்னை வழிபடுவதற்குரிய நெறிகளை அருளுகின்றவன், தன்னுடைய பெரிய கருணைக் கையால் உயிர்களைப் பிறவிப் பெருங்கடலில் வீழாமல் எடுத்து முத்தி இன்பம் தருகின்றவன், இதுவே எங்கள் சைவம் காட்டுகின்ற முத்தியாகும்.

நுனாதிகம் - குறைந்து, நுங்க - நொறுங்க, இனாத - இன்னாத

இவ்வாறு சௌத்திராந்திகனின் கருத்துக்களை மறுத்து சைவ தத்துவத்தை நிலைநாட்டுகிறார் ஆசிரியர்.

யோகசார மதம்

பௌத்தத்தின் நான்கு பிரிவுகளில் விஞ்ஞானபாதம் என்று சொல்லப்பெறுகின்ற யோகசாரமும் ஒன்றாகும். இக்கொள்கை மஹாயான புத்த மதத்தைச் சார்ந்ததாகும். மஹாயானம் என்பதற்கு பெரியது அல்லது உயர்ந்தவழி என்று பொருள்படும். இந்த மஹாயான பௌத்தம் திபெத்து, மங்கோலியா, சீனா, கொரியா உள்ளிட்ட இடங்களில் வழங்கி வருகிறது எனலாம். இவர்களுடைய அடிப்படைக் கொள்கை, புறத்தே காணுகின்ற பொருள்கள் எதுவுமே இல்லை, யாவுமே மனத்தின் சிருஷ்டி, அறிவான், அறிவு, அறியப்படும் பொருள் என மூன்றுள் அறிவு மட்டுமே உள்ளது. அந்த அறிவு ஒன்றே அறிவோனையும், அறியப்படும் பொருளையும் பிரிந்து புறத்தனபோல் காணப்படுகின்றது. மனத்துக்குப் புறத்தே எதுவும் இல்லாதபோதும் இருப்பது போலக் காட்சி அளிப்பதற்குக் கனவு ஒன்றே நல்ல சான்றாகும் என்று இந்தியத் தத்துவஞானம் என்ற நூலில் கி.லெட்சுமணன் (ப.168) அவர்கள் குறிப்பிடுவார்கள். அருணந்தி சிவாசாரியார் ஒரு பாடலில் இவர்தம் கொள்கைகளைக் கூறித் தன் மறுப்பை இரு பாடல்களில் தந்துள்ளார்.

போதமே பொருளாய்த் தோன்றும் பொருளதாய் எழலால்போதம்
லாதனை அதனால் கூடி வருதலால் வடிவி லாமை
ஆதலால் கனவே போலும் சகம்உளது அறிவே யாம்என்று
ஓதினான் ஓதா னாய உணர்வினால் யோகா சாரன். [135]

பொருள் :

அறிவுதான் பொறிகளாய், பொறிகளுக்குப் புலப்படும் பொருளாய் வருகிறது. பொறிகளின் செயல்பாட்டினால் உணர்வுகள்(வாதனை) தோன்றுகின்றன. அறிவுக்கு வடிவம் இல்லை. நிலையற்ற இவ்வுலகம் கனவு போன்றது. அறிவு ஒன்றே உள்பொருளாகும் என்பது யோகசாரன் தன் கருத்தை உணராத அறிவினால் வேறுபட்டுக் கூறினான்.

போதம் - அறிவு, எழல் - தொழிற்படல், வாதனை - உணர்வு, சகம் - உலகு, ஓதினான் - கூறினான், ஓதானாகிய உணர்வு - உணராத அறிவினால்

யோகசாரன் மதம் மறுதலை

போதமும் தவிர வேறுஓர் வாதனை புகன்றாய் போதம்
வாதனை இரண்டுஉண்டு என்னாய் போதம்வா தனையும் என்னில்
காதலால் பொருளி னோடு கலந்துபின் எழும்க ருத்தாம்
வாதனை கனவு கண்ட பொருளின்மேல் வரும்க ருத்தே. [136]

இப்பாடல் ஆசிரியரின் மறுப்பை உணர்த்துகிறது.

பொருள் :

யோகசாரா, உன்னுடைய கொள்கைப்படி அறிவு என்ற ஒன்றைத் தவிர வாதனை என்ற ஒன்றைக் கூறுகின்றாய். இல்லை, இல்லை, வாதனைதான் அறிவு என்று நீ கூறினால் அதுவும் தவறு. ஏனென்றால் அறிவும் வாதனையும் ஒன்றாக முடியாது. அறிவு பொருள்களைப் பற்றும் பொழுது அதனால் விளைகின்ற விருப்பத்தால் பொருள் நோக்கிய அறிவு பலநிலைகளில் (உணர்வில்) செல்லுகிறது. எனவே வாதனையாகிய உணர்வு வேறு, அறிவு வேறு, கனவு காலத்தில் கூட ஒருவன் நனவில் கண்ட பொருள்களையே உணர்ந்து அனுபவிக்கின்றான். நீ

உலகத்தைக் கனவு போன்றது என்று சொல்வது தவறாகும். எனவே நீ கூறுவது மயக்கத்தினால் ஆகும்.

அறிவதே பொருளது ஆகில் அகம்சடம் என்ன வேண்டும்
பிறிபொருள் ஆகும் பேதித்து இதம்பிர பஞ்சம் என்னில்
உறுபொருள் உருவம் தோய்ந்தால் உணர்வும் அவ்வுருவாய் நிற்கும்
செறிபொருள் அதுவாய் நிற்கும் தெளிபளிங்கு அதுவே போல. [137]

இதுவும் அது.

பொருள் :

யோகசாரா, அறிவு ஒன்றுதான் உண்டு, அந்த அறிவுதான் உலகம் என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது என்று கூறுகின்றாய். நீ அப்படிச் சொன்னதினால் அறிவு ஒன்றுதான் உள்பொருள், வேறு எதுவும் இல்லை எனப்படும். அவ்வாறானால் நான் என்பது என் உடம்பு என்று முடியும். உண்மை அதுவல்ல. அறிவும் அறிபொருளும் வேறுபாடு உடையவை. இரண்டும் ஒன்று என்று சொன்னால் காணுகின்ற சடப்பொருள் எல்லாம் நான் என்ற அறிவாகக் கொள்ள நேரிடும். இல்லை அறிவு வடிவத்தில் பொருந்தி நிற்கிறது என்று கொண்டால் அது தன்னைச் சேர்ந்த பொருளின் வன்னத்தைக் கொண்டு அவ்வன்னம் போலே காட்சியளிக்கின்ற பளிங்கு போன்றதாகும்.

விளக்கவுரை :

யோகசாரர் அறிவையும் அறியப்படும் பொருளையும் ஒன்றாகக் கருதுவர். ஆசிரியர் அதை மறுத்து அறிவுவேறு, அறியப்படும் பொருள் வேறு என்ற உண்மையை வலியுறுத்துகிறார். அறிவு - அருவம், பொருள் - உருவம், இரண்டும் ஒன்று என்றால் காணுகின்ற சடப்பொருள் எல்லாம் அறிவாகிவிடும். உடம்பு வேறு, நான் என்ற உயிர் வேறு. உடம்பாகிய பொருளும் அறிவும் ஒன்று என்றால் என்னுடம்பு என்பது நான் உடம்பு ஆகிவிடும். (என் வேறு, உடம்பு வேறு) சடப்பொருளில் அறிவு பொருந்தி நிற்கிறது என்றால் அது பளிங்கினைப் பளிங்கு என்று சொல்லாமல் அது காட்டுகின்ற பொருளாகக் கொள்ள நேரிடும். பளிங்கு வேறு அதை அடுத்த பொருள் வேறு.

மாத்யமிகன் மதம்

மஹாயானப் பௌத்தத்தில் ஒன்று மாத்தியமிகன் மதம். தத்துவ வரலாற்று ஆசிரியர்கள் பௌத்த மதத்தின் நால்வகைப் பிரிவுகளை வைபாடிகன், சௌத்திராந்திகனை முதலில் வைத்து, அடுத்து மாத்தியமிகத்தை இரண்டாவதாக வைப்பர். அதன்பின் யோகசாரரை மூன்றாவது கட்டமாக வைப்பர். மாத்தியமிகத்தை ஸ்தாபித்தவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியதேவர் ஆவார் என்றும் அவர்கள் குறிப்பிடுவார்கள். இம்மதம் அறிவு என்பதையே ஆட்சேபிப்பதாகும். எதைப் பற்றியும் எதுவும் கூறமுடியாது என்ற தீவிரவாதத்தை உடையவர்கள். இம்மதம் பற்றி அருணந்தியார் ஒரு பாடலில் கூறி மறுப்பை இரு பாடல்களில் அமைத்துள்ளார்.

அவயவம் பொருளாய்த் தோன்றும் அவயவம் அழிந்தால் பின்னை
இவைபொருள் என்ன வேறுஒன்று இலாமையால் பொருள்கள்
இன்றாம்
அவைபொருள் இலாமை யாலே அறிவும்இன் றாகும் என்று
நவைதரு மொழியி னாலே நவிலும்மாகத் தியமி கன்தான். [138]

பொருள் :

அறிவும் இந்திரியங்களும் கூடி உலகப் பொருள்கள் தோன்றுகின்றன. இவை அழிந்து விட்டால் பொருள்களும் அழிகின்றன. ஆதலால் ஒன்றும் இல்லை என்று பொருள் பட்டுப் பொருளும் இல்லை என்பது பெறப்படும். பொருள்கள் இல்லை என்பதால் அதனைப் பொருந்தி நின்ற அறிவும் இல்லை என்று இப்படிக் குற்றத்தைத் தரும் சொல்லாலே கூறுவான் மாத்தியமிகன். (நவை - குற்றம்)

மாத்தியமிகன் மதம் மறுதலை

கடத்தினில் அவய வங்கள் படத்தினில் புகாமல் காத்தும்
படத்தினில் அவயவங்கள் கடத்தினில் புகாமல் கொண்டும்
இடத்தினில் நிற்கும் ஆகும் அவயவி இரண்டும் கூடி
உடைத்து ஒருபொருள் உண்டாகப் பொருளும்உண்டு
உணர்வும்உண்டே. [139]

இப்பாடல் மாத்தியமிகன் கொள்கையை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

மாத்தியமிகனே, நீ இந்திரியங்களாகிய அவயவமே பொருள் என்றும் தனியாகப் பொருள் இல்லை என்றும் கூறுகின்றாய். அது தவறு. குடத்தில் மண் உள்ளது. ஆனால் நூல் இல்லை. துணியில் நூல் உள்ளது. மண் இல்லை. எனவே துணி வேறு, குடம் வேறு என்பது பெறப்படும். பண்பும் பொருளும் சேருகின்ற பொழுதுதான் ஒரு பொருள் உண்டாகின்றது. அது குடம் என்றும் துணி என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது ஒரு பொருளில் அவயவம் உண்டு, அவயவி உண்டு, இதுபோலப் பொருளாகிய முதலும் உண்டு, ஆன்மாவாகிய அறிவும் உண்டு.

சிறப்புரை :

குடம் அவயவம் - குடத்தில் உள்ள மண் அவயவி, உடம்பு அவயவம், உணர்வு (அ) உயிர் (அ) ஆன்மா - அவயவி, ஆனால் இம்மதத்தார் உடம்பு மட்டும் தான் உண்டு, ஆன்மா இல்லை என்கின்றார்கள். உடம்பு அழிவதால் உடம்பாகிய பொருள் அதாவது எதுவும் இல்லை என்கின்றனர். இதனை ஆசிரியர் மறுத்து இப்பாடலில் விளக்கம் தருகிறார். (படம் - துணி)

கருவியும் ஒவியும் வேறு கருதிடும் கருத்தும் நிற்கப்
பொருள்புண ராமை யாலே போதம்வந்து எழுவது இன்றாம்
மருவிடும் பொருள் உண்டாக வந்து எழும் புந்தி ஆனால்
பொருள்உளது ஆகும் ஆகப்போதமும் உள்ளதாமே. [140]

இதுவும் அது.

பொருள் :

இந்திரியங்களும் அவற்றின் குணங்களாகிய ஓசை முதலியவைகளும் இவற்றில் தனித்து நின்று அறிவதாகிய அக கரணங்களும் (மனம் உள்ளிட்ட) தனியாக இருந்தாலும் அவை ஆன்மாவோடு பொருந்தாதபோது அறிவு தோன்றுவதில்லை. ஏனென்றால் ஆன்மாதான் ஒரு பொருளை இன்னதென்று அறியும் அறிவினை உடையது. எனவே ஆன்மா உண்டு

என்பதனை அறிவாயாக. மேலும் ஆன்மாவுக்கு அறிவு உண்டு என்பதையும் அறிவாயாக.

கருவி - ஐம்பொறி, (இந்திரியங்கள்) ஒளி - குணம், கருதிடும் கருத்து - அந்தக்கரணங்கள், பொருள் - ஆன்மா, போதம் - அறிவு.

வைபாடிகன் மதம்

ஈனயான பௌத்த மதத்தின் ஒரு பிரிவான இதனை விளங்க வைத்தவர்கள் தின்னாகரும், தருமகீர்த்தியும் ஆவர். இவர்தம் கொள்கைகளை ஒரு பாடலிலும் மறுப்பை ஒரு பாடலிலும் அருணந்தியார் குறிப்பிடுகின்றார்.

அரிசனம் நூறு கூட அருணம்வந்து எழுந்தால் போல
விரிசகம் பொருள்கள் ஞானம் விரவிட மேவித் தோன்றும்
தெரிசனம் இதுவே என்று தெளிந்திடும் தேரர் வீடு
பரிவொடும் அடைவீர் என்று பகரும்வை பாடி கன்தான். [141]

பொருள் :

மஞ்சளும் சுண்ணாம்பும் சேருவதால் புதிதான சிவப்பு நிறம் தோன்றும். அதுபோல உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களும் இந்திரியங்களின் விஷயமான அறிவும் கூடினபோது உலகத்துப் பொருள்கள் உள்ளதாகத் தோன்றுகின்றன. இதுவே ஞானதரிசனம் (அறிவுக்காட்சி) இதைத் தெரிந்தவர்களே வீடு பேற்றினை அடைவார்கள் என்று கூறுகிறார் வைபாடிகர்.

அரிசனம் - மஞ்சள், நூறு - சுண்ணாம்பு, விரிசகம் - விரிந்த உலகம்.

வைபாடிகன் மதம் மறுதலை

பொருளது புறம்பது ஆகும் போதம்அந் தரமது ஆகும்
தெருவிடின் இரண்டும் சென்று சேர்ந்திடும் ஆறது இன்றாம்
அருவுஉணர்வு உருவம் ஞேயம் ஆதலி னாலும் கூடா
உருஅரு உடைய வைபா டிகற்குஇனி மாற்றம் இன்றே. [142]

இப்பாடல் வைபாடிகருக்கு மறுப்புக் கூறுகிறது.

பொருள் :

அறியப்படுகின்ற பொருள்கள் புறத்தில் உள்ள பொருள்களாகும். அதனை அறிகின்ற அறிவோ அகத்தில் உள்ளதாகும். எனவே தெளிவாகச் சிந்திக்கும் இடத்து அகத்திலே உள்ள அறிவும் புறத்திலே உள்ள பொருளும் பொருந்துவதில்லை. மேலும் அறிவு அருவமானது, பொருள் உருவமுடையது.

எனவே அருவமும் உருவமும் ஒன்றோடு ஒன்று பொருந்தும் என்பது பொருந்தாது. இது தவிர வைபாடிகரை மறுப்பதற்கு ஒன்றும் இல்லை.

சமணரில் நிகண்டவாதி மதம்

இந்தியநாட்டு மிகப் பழைய சமயங்களுள் ஒன்று சமண சமயம். இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் தனக்கெனத் தனியிடத்தைச் சமணம் பெற்றுள்ளது. சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தானகவாசி சமணம் என்ற மூன்று பிரிவுகள் கொண்டது இச்சமயம். வெண்ணிற ஆடையை அணிந்து கொள்கின்றவர் முதல் பிரிவினர். திசையை ஆடையாக உடையவர் இரண்டாவது பிரிவினர். உருவ வழிபாட்டை ஏற்காதவர் மூன்றாம் பிரிவினர். இவருள் திகம்பர சமணர் மட்டுமே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். திகம்பர சமணமே நிகண்டவாதி, ஆசீவகன் மதம் என்று பிரிந்து திகழ்ந்திருக்கிறது என்று தெரிகின்றது. நிகண்டவாதம் என்பது வர்த்தமானன் மேற்கொண்ட சமணம் எனவும், அவருக்கு மாறுபட்ட அவருடைய மாணவர் மற்கலியால் தோற்றுவிக்கப்பட்ட சமயம் ஆசீவகன் எனவும் பேராசிரியர் கங்காதரன் குறிப்பிடுவார். நிகண்டவாத சமயத்தில் அச்சமயத்தாரின் உருவத்தைப் பற்றியும், ஆடையின்மை பற்றியும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார் அருணந்தியார். மணிமேகலையில் ''சமயக்கணக்கர் தந்திறங் கேட்டகாதை'' என்ற பகுதியில் 167-200 வரிகள் வரை இம்மதத்தார் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவ்விரு சமயத்தையும் எடுத்துக்கொண்டு அருணந்தியார் கொள்கைகளையும், மறுப்புகளையும் தருகின்றார். நிகண்டவாத சமயத்தை முதலில் எடுத்துக் கொண்டுள்ளார். இம்மதக்

கொள்கைகளை 8 பாடல்களிலும், மறுப்பை 18 பாடல்களிலும் தருகின்றார்.

வாச மாமலர் அசோகு பேணிமறை நீதியோடுமலை யும்தவத்து
ஆசையால் உடைஅகன்று மாசினைஅடைந்துஇல் வாழ்தரும்
அறத்தினில்
பாசமானது தவிர்ந்து பண்டிபட உண்டு பாயினொடு பீலிமேல்
நேசமாய் அவை தரித்து வோர்களில் நிகண்டவாதியை
நிகழ்த்துவாம். [143]

இப்பாடல் நிகண்டவாதியை அறிமுகப்படுத்துகிறது.

பொருள் :

மணம் பொருந்திய மலர்களை உடைய அசோக மரத்தைத் தெய்வமாகப் பேணி நான்கு மறைகளோடு மாறுபட்டுத் தவத்தைப் பேணவேண்டும் என்ற ஆசையால் உடை உடுத்துவதை விடுத்து, நாள்தோறும் குளிக்காததால் உடலில் மாசு அடைந்து, இல்லறமாகிய நல்வாழ்க்கையைத் துறந்து, வயிறார உண்டு, உடம்பைப் பாயால் மூடி, மயிற்பீலியைத் தாங்கிக் கொண்டு தமது ஒழுக்கத்தை உயர்ந்தது என்று கூறிக்கொண்ட நிகண்டவாதியின் கொள்கைகளைக் கூறுவாம்.

மலையும் - மாறுபடும், பண்டி - வயிறு, பீலி - மயிற்பீலி, நிகண்டவாதி - திகம்பர சமணர் (திசையை ஆடையாக உடுத்தியவர்கள்)

ஈறி லாதன அநந்த ஞானமுதல் எண்கு ணங்கள்எனும் ஒண்குணம்
மாறி லாதமதி மேவு சீதம்என மன்னி வானவர் வணங்கவே
வேறு லாவுகுண ஞான ஆவரணிஆதி எட்டினையும் விட்டசீர்
ஏறுபான்மையுடை நீடு வாழ்அருகன் எங்களுக்கு இறைவன்
என்றனன். [144]

இப்பாடல் அருகதேவனின் பெருமைகளைக் கூறுகிறது.

பொருள் :

எங்கள் இறைவனாகிய அருகதேவன் கேடற்ற அனந்த ஞானம் முதலிய எட்டு நற்குணங்களையும், தன்னிடத்தில்

கொண்டவன். எனவே அவன் திங்களைப் போல விளங்குகின்றான். வானவர்கள் அவனை வந்து வணங்குகிறார்கள். தீக்குணங்களாகிய ஞானாவரணீயம் முதலிய எட்டுக் குணங்களையும் நெருங்க ஒட்டாமல் ஒழித்தவன். நெடியகாலம் வாழுகின்ற பெருமை உடையவன்.

மதி - திங்கள், மன்னி - விளங்கி, அருகன் - அருகதேவன், எட்டு. 1. அனந்த ஞானம் (எல்லையற்ற அறிவு), 2. அனந்த தரிசனம் (எல்லையற்ற காட்சி), 3. அனந்த வீரியம் (எல்லையற்ற ஆற்றல்), 4. அனந்த சுகம் (எல்லையற்ற இன்பம்), 5. நிர்நாமம் (பெயர் இன்மை), 6. நிர்கோத்திரம் (கோத்திரம் இன்மை), 7. நிர் ஆயுள்யம் (வாழ்நாள் இன்மை அதாவது எல்லையற்ற வாழ்நாள்), 8. சம்மிதா பாவம் (அழிவின்மை), இதற்கு நேர்மாறானவை எட்டு தீக்குணங்கள் எனப்படும். அவை முறையே 1. ஞானாவரணீயம் (அறிவு தடைப்படுதல்), 2. தரிசனா வரணீயம் (காட்சி தடைப்படுதல்), 3. வேதணீயம் (ஆற்றல் குறைதல்), 4. மோகணீயம் (சிற்றின்பம்), 5. ஆயுடிய நாமம் (இப்பிறப்பில் இடப்படுகின்ற பெயரை உடைமை), 6. கோத்திர நாமம் (கோத்திரப் பெயர் உடைமை), 7. ஆயவந்தராயம் (பிறப்பும் இறப்பும் உடைமை), 8. காயவந்திராயம் (அழிவுடைமை).

கருவி கண்படு தொடக்குஒ ழித்துவரு காலம் மூன்றில்நிகழ் காரியம்
பெருக நின்றுஒரு கணத்தி லேயுணர் பெரும் தவக்கடவுள் பீடினால்
மருவி நின்றுவழி பட்ட வர்க்கும் மலைவுஉற்ற வர்க்கும்மனம் ஒத்திடும்
குருசில் எங்கள்இறை என்று பின்னும்நிகழ் குற்றம் இன்மையது கூறுவான். [145]

இதுவும் அது.

பொருள் :

அருகதேவன் ஐம்பொறிகளால் வருகின்ற தொடர்ச்சியைத் தன்னிடத்தில் முற்றிலும் பற்றாது ஒழித்தவன். மூன்று காலங்களிலும் நிகழுகின்றவற்றைத் தன்னுடைய எல்லையற்ற அறிவினால் ஒரு கணத்தில் அறியக்கூடிய தவத்தை உடையவன். தன்னைப் பொருந்தி நின்று வழிபாடு செய்தவர்க்கும், தன்னிடத்தில் மாறுபட்டவர்களுக்கும் ஒரே தன்மையாக அருள் வழங்குபவன்.

அவனுடைய குற்றமற்ற தன்மையை இன்னும் கூறுவேன் கேட்பாயாக. (என்கிறார் சமணர்)

கருவி - ஐம்புலன்கள், தொடக்கு - தொடர்ச்சி.

பசித்தல் தாகம்பயம் செற்ற மோடுஉவகை
மோக சிந்தனை பழித்தல் நோய்
நசித்தல் வேர்வினொடு கேத மோடுமதம்
வேண்டல் ஈண்டுஅதி சயத்தலும்
புசிப்பு வந்திடு பிறப்பு உறக்கம்இவை
விட்டொர் அட்டகுண பூதனாய்
வசித்த வன்உலகின் மேல்இருந்து ஒருசொல்
இகல னுக்கு அருளும் என்றனன். [146]

இதுவும் அது.

பொருள் :

பசி, வேட்கை, அச்சம், மாச்சரியம், உவகை, மோகம், சிந்தனை, பழித்தல், நோய், இறப்பு, வியர்வை, துயரம், அகந்தை, வியப்பு, அனுபவம், பிறப்பு, உறக்கம் இவை அனைத்தையும் முற்றிலும் ஒழித்தவன். எண் குணத்தவன். என் அருகன் பொன் எயில் வட்டத்திருந்து தன்னைச் சார்ந்து, ஒரு சொல் அருளுக என்று வேண்டிய இகலனுக்கு வேண்டியவாறே அருள் பாலிப்பவன்.

செற்றம் - மாச்சரியம், மோகம் - மயக்கம், நசித்தல் - இறப்பு, கேதம் - துயரம், புசிப்பு - உணர்வு, இகலன் - ஆதி அருகன் (பொன்வாயில் வட்டத்தில் இருப்பவன் அநாதி அருகன்)

அந்த வாய்மொழியி னால் அவன்சரணம் ஆதி யோகமுதல் ஆனநூல்
இந்த மாநிலம் மயங்கி டாதவகை இங்கு இயம்பினன் இதன்பொருள்
வந்த காலம்உயிர் தன்ம தன்மிஅறம் மற்றும் விண்மருவு புற்கலம்
பந்தம் வீட்டினோடு அநாதி யாய்இவை படைப்பது இன்றிஉள பத்துமே. [147]

இப்பாடல் சமணமதத்தின் நூலையும் அநாதி பத்தினையும் கூறுகிறது.

பொருள் :

அருகதேவன் தான் வாய்மலர்ந்து சொன்ன கொள்கைகளை விளக்கும் நூல்கள் சரணம், யோகம் ஆகும். அவற்றின் வழி ஒழுகி உலக மக்கள் மயக்கத்திலிருந்து விடுபடவேண்டும் என்பது அவனது நோக்கம். காலம், உயிர், தன்மம், அதன்மம், புண்ணியம், பாவம், விண்ணகம், புற்கலம், பந்தம், வீடு ஆகிய பத்தும் ஒருவராலும் படைக்கப் படாத அநாதியாகும்.

தன்மம் - நல்லறத்தால் விளைந்த உடல், அதன்மம் - தீய செயல்களால் விளைந்த உடல்.

நிற்ற லோடுதலை போதல் அன்னுவயம் நிகழ்த்து நீடு எதி ரேகமும்
உற்ற தாம்இவை கணத்தி லேமருவி உள்ளவா புரிய மாறுதான்
கற்ற காலம்அளவு எய்தி வாழும்உயிர் காய மேவிநிறைவு ஆனதே
பெற்று வேறுவரு தன்மை நேர்அறிவு பெற்ற தாகியுள பேசிலே.

[148]

இப்பாடல் அநாதி பத்தினை விளக்குகிறது.

பொருள் :

காலம் - நிகழ்வு, இறப்பு, எதிர்வு என மூன்று வகைப்படும். இக்காலத்திற்கு உடலைப் பொருந்தி வாழும் உயிர் கட்டுப்பட்டதாகும். உயிர் என்பது உடல் முழுவதும் நிரம்பியிருப்பது. உடலோடு பொருந்தியிருக்கும் இந்த உயிர் பல படிகளை (குழந்தை, இளமை, முதியவர்) வளர்ச்சிக்கேற்ப அறிவைப் பெற்று விளங்குவதாகும்.

பரந்து மீதுதரு மாத்தி காயம் அழிவித்த நித்தமது பண்ணிடும்
நிரந்து கீழ்அதரு மாத்தி காயம்அது நித்த மாய்மிக நிறுத்திடும்
புரந்த புண்ணியம் இதற்கு நன்மைபுகல் பாவம் ஆன அது தீமையே
தரும்பொ ருட்குஇட மது ஆகும் வானமிகு புற்க லன்கள்
அவைசாற்றுவாம். (149)

இதுவும் அது.

பொருள் :

தன்மாத்திகாயம் (தன்மம்) என்பது முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனாக எடுத்த உடல். உடலைப் பெற்றவர்கள் மேலும் புண்ணியத்தைச் செய்கின்ற இயல்பைப் பெற்றவர்கள் ஆவார்கள். ஆதலால் மேலும் இந்த உடம்பு தோன்றாதபடி நித்தமாய் அமையும். அதன்மாத்தி காயம் என்னும் அதன்மம் உடம்புக்குக் காரணமாய் அமைந்து மேலும் மேலும் பிறவிகள் எடுக்கும் வண்ணம் அதை நிலை நிறுத்தும். எனவே புண்ணியம் தன்மாத்திகாயம் பெறுவதற்குக் காரணம். பாவம் அதன்மாத்திகாயம் பெறுவதற்குக் காரணமாகும். பூதங்களில் ஒன்றாகிய வான் எல்லாப் பொருள்களும் இயங்குவதற்கு இடம் கொடுத்து நிற்கும். இதனிடத்தில் தோன்றும் புற்கலப் பொருளைப் பற்றி இனி (அடுத்த பாடலில்) கூறலாம்.

ஏனும் ஒன்றுடைய வாகி எங்கும் அணு
வாய் இரும்புகல் மரங்களும்
பூணும் அங்குஉரு எலாமும் ஆகும்இவை
புற்க லப்பொருள்கள் என்னலாம்
காணும் அங்குஅறு வகைத்தொ ழில்கள்அவை
கட்டு விட்டநெறி கன்மம்மேல்
மாண நின்றுவரும் மாறி மாறிமுன்
வகைந்தது உண்டுவிட மாட்சியே. [150]

இப்பாடல் புற்கலம் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

புற்கலம் என்ற சொல் சடப் பொருள்களைக் குறித்து நிற்கும். உருவமாய்த் திரண்டு இரும்பு, கல், மரம் என்ற பெயர்களைப் பெற்று உலகில் விளங்குகின்ற பொருள்கள் எல்லாம் புற்கலப் பொருள்களாகும். புற்கலப் பொருள்களில் உள்ளவை அறுவகைப்பபட்ட தொழில்களாகும். கட்டுக்களை விட்டு நீங்குவது தவம் எனப்படும். தவத்தை மேற்கொள்ளுவதினால் வருகின்ற பயன் எப்பொழுதும் நிலைபெற்று வளர்வதாகும். அந்த வளர்ச்சிதான் ஆன்மாவைப் புண்ணிய பாவங்களை அனுபவிக்க வைக்கும். இறுதியில்

தவத்தின் பயனாக உயிரானது கட்டுக்களிலிருந்து (துன்பங்களிலிருந்து) விடுபட்டு வீடுபேற்றை அடையும்.

ஒன்று - சடப்பொருள், அறுவகைத் தொழில்கள் - மணம், சுவை, உருவம், ஊறு, ஓசை, பரிணாமம்.

நிகண்டவாதி மறுதலை

அருகனுக்கு அனந்த ஞானம் ஆதி யாதி யாகவே
பெருகநிற்றல் சீதமா மதிக்கு அடைந்த பெற்றியேல்
ஒருவும் இட்ட ஒப்பவன் உயிர்த் திறத்தின் உவ்வபின்
மருவு மிக்க குற்றமேல் அறத்தின் மன்னி னான்எனில். [151]

இப்பாடல் அருகதேவனின் பெருமைகளைப் பற்றிய கருத்துக்களை மறுக்கத் தொடங்குகிறது.

பொருள் :

நிகண்டவாதியே, உன்னுடைய தலைவனாகிய அருகதேவனின் பெருமைகளைக் கூறும்போது வரம்பற்ற ஞானம் உடையவன், எட்டு நற்குணங்களை உடையவன், தீக்குணங்கள் எட்டிலிருந்து நீங்கியவன் என்று கூறுகின்றாய். அதற்கு உவமை சொல்லும் பொழுது திங்களைப் பொருந்தியிருக்கின்ற தண்ணிய ஒளி என்கிறாய். ஒளி பெற்று நீங்குகின்ற சந்திரனைப் போன்று தலைவன் குணங்கள் பெறுவதும் நீங்குவதுமாக இருந்தால் அவனும் உயிர்க்கூட்டத்தில் ஒருவன் தானே. உடனே நீ அவ்வாறு இல்லை, குற்றங்களை விட்டுக் குணங்களைக் கூடுகின்ற அறத்தை நிலைபெற்றவன் என்று கூறினால் (அடுத்த பாடலில் தொடர்கிறது)

அறத்தின் மன்னு வித்தவன் ஒருத்தனாய் அவன்அறத்
திறத்தில் நிற்றல் மற்றொருத்த னால்விளைந்த செய்தியாம்
மறத்தின் அற்ற வர்க்கெலாம் வணக்கம்உன் இறைக்குமேல்
பிறக்கும் இங்கு அவத்தை கொண்டது ஆரைஇன்று பேசிடே. [152]

இப்பாடல் அருகதேவன் கர்த்தா அல்ல என்கிறது.

பொருள் :

உன் தலைவன் அறத்தில் நிலைபெற்றவன் என்றால் அவ்வாறு நிலைபெறச் செய்வித்தவன் ஒருவன் வேண்டும் அல்லவா. நிலைவித்தவன் தானே அறத்தையும் சொல்லியிருக்க வேண்டும். அவன் காட்டுகின்ற வழியில் தானே உன் தலைவனாகிய அருகதேவனும் நடந்திருக்க வேண்டும். எனவே நீ வணங்குகின்ற உன்னுடைய தலைவன் அருகதேவனா, அல்லது அவனுக்கு அறம் உரைத்து நிலைபெறச் செய்தவனா? தெளிவு படுத்துவாயாக.

கருவி கண்படு தொடக்குஒழிந்து கண்டுவாழும் என்றியேல்
உருவு கொண்டு நின்றதுஎன்னில் உண்டு தான்ம ணாதிகன்
ஒருவி நின்றது என்னில்அத்தம் ஒன்றையும் உணர்ந்திடான்
பொருள்தெ ரிந்து போகைகாலம் ஒன்றிலே புணர்ந்திடான். [153]

இப்பாடல் அருகதேவன் சிறப்புக்களை மறுத்து அவன் கர்த்தா அல்லன் என்றுகிறது.

பொருள் :

உன் தலைவனாகிய அருகன் மனம் முதலிய கருவிகளால் அறியும் அறிவை நீங்கி அனைத்தையும் ஒருங்கே அறிந்தான் என்று கூறுகிறாய். இவ்வாறு கூறுவதால் அவன் உடலெடுத்து அதனால் மனம் முதலிய கருவிகளை உடையவன் ஆகின்றான். இல்லை இல்லை அவன் சரீரம் நீங்கி நின்றவன் என்றால் அவன் எல்லாவற்றையும் உணர்ந்து வாழ்கிறவன் என்று கூறுவது குற்றமாகிப் போய்விடும். எனவே அவன் அனைத்தையும் முக்காலத்தையும் ஒருகாலத்தில் உணர்வான் என்று கூறுவது பொருந்தாது.

ஆர்வ கோப மானவை அடைந்து ஒறுப்ப வர்க்கு எலாம்
சேர்வது இன்மை செப்பில்இன்று சீவன் மேவு காயமால்
ஓரும் மன்னர் போலவே உயிர்க்கு அளித்தல் இன்றியே
ஏர்கொள் பொன் எயிலிடத்து இருத்தல் பெற்றது என்கொலோ. [154]

இப்பாடல் அருகன்முத்தி இன்பம் தருவானல்லன் என்கிறது.

பொருள் :

உலகத்தில் உடம்போடு கூடிப் பிறந்த உயிர்கள் காமம், சினம், முதலியவற்றோடு பொருந்தி நின்று வாழ்ந்து, பின் அவற்றைத் தீயன என்று அறிந்து நீக்கினாலும் அந்த உயிர்கள் உடலோடு முத்தி அடைவதில்லை. உன்னுடைய இறைவன் அருகதேவனும் பொன் வட்டத்தில் இருக்கிறான் என்று நீ கூறுவதால் அவன் உடலோடு பொருந்தியிருக்கிறான் என்பது உண்மையாகும். எனவே அவனும் உடம்போடு முத்தி அடைதல் இல்லை. (உடனே நீ) அவ்வாறு இல்லை, ஆய்ந்து முறை செய்கின்ற மன்னவனைப் போல உயிர்களிடத்தில் அருள் பாராட்டுவதே அவனின் இயல்பாகும் என்று விடை கூறலாம். அப்படியானால் மன்னவர்களைப் போல நல்லவர்களுக்கு அருளும், தீயவர்களுக்குத் தண்டனையும் அருகிலிருந்து முறை செய்யாது பொன்னெயில் வட்டத்திலிருந்து எவ்வாறு செய்ய இயலும்?

விளக்கவுரை :

இப்பாடலில் அருகதேவன் உடலோடு கூடி முத்தி அடைந்து பொன்னெயில் வட்டத்திலிருக்கிறான் என்பதை ஆசிரியர் மறுக்கிறார். பின்னர் அரசனைப் போன்று அருள் செய்கிறான் என்பதையும் மறுக்கின்ற பொழுது 145ஆம் பாடலில் வழிபட்டவர்க்கும் வழிபடாதவர்க்கும் அருளுகிறவன் என்பதால் உயிர்களுக்கு முறைசெய்கின்ற அரசன் ஆகமாட்டான் என்பதையும் மறுக்கிறார்.

ஆர்வம் - ஆசை (காமம்), கோபம் - சினம், ஒறுத்தல் - நீக்குதல், சேர்வது - முத்தியடைவது, சீவன்மேவு - அருகதேவன் சீவன் என்பதால் உடம்போடு கூடியவன், ஓரும் - முறைசெய்யும், பொன்எயில் - அருகதேவனின் இருப்பிடமான பொன்னெயில் வட்டம்.

சொல்லது ஒன்று கொண்டு இகலின் ஆத்தன்நாட வேசொலின்
இல்லை யாம்ம ணாதிதான் இயம்பு மாறது எங்ஙனே
நல்ல வாம்ம ணாதிதான் அவர்க்கு நாட வேயிலை
ஒல்லை ஊமர் ஊமருக்கு உரைத்த வாறுஅது ஒக்குமே. [155]

இதுவும் அது.

பொருள் :

(அநாதி அருக பரமனாகிய சகலாத்தன் பொன்னெயில் வட்டத்தில் இருக்கும்போது ஆதி அருக பரமனாகிய இகலாத்தன் கேட்குமாறு) அநாதி அருகன் ஒரு சொல்லினால் ஆதி அருக பரமனுக்கு அறங்கள் அத்தனையும் உரைத்தான். அவன் உரைத்த சொல் ஒன்று கொண்டு ஆதி அருகபரமன் பல நூல்களாக விரித்து எழுதினான் என்று நீ கூறுகின்றனை. ஆதி அருக பரமன் (சித்துநிலை) என்ற நிலையை எய்தியவர்களுக்கு மனம் முதலிய கருவிகள் இல்லை என்றும் நீ கூறுகின்றாய். அப்படியானால் அநாதி அருக பரமன் சொன்ன சொல்லை (மனம் முதலிய கருவிகள் இல்லாத) இவன் எவ்வாறு கேட்டான்? நீ கூறுவது வாய் பேச இயலாத ஊமன் ஒருவன் உரைத்தது கொண்டு மற்றொரு ஊமன் அதை விரித்துக் கூறியதை ஒக்கும்.

விளக்கவுரை :

146ஆம் பாடலில் அருகபரமனின் இரண்டு திறத்தாரைப் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பொன்னெயில் வட்டத்தில் இருப்பவன் அநாதி பரம அருகன் என்றும் அவனிடத்தில் ஒரு சொல் கேட்டுப் பின்னர் நூல் பல விரித்துரைத்தவன் ஆதி பரம அருகன் (சித்தர்) என்றும் இகலன் என்று சொல்லால் பெறவைக்கிறார் அப்பாடலில் ஆசிரியர்.

இகலின்ஆத்தன் - இகலாத்தனாகிய ஆதி அருக பரமன், அநாதிதான் - அநாதியாகிய அருகபரமன், இரண்டாவது வரியிலுள்ள மனாதி என்பதை மனம், ஆதி என்று கொண்டும், மூன்றாவது வரியிலுள்ள மனாதி என்பதை அநாதி என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

இன்ப பூமி சேர்இகலில் நாதன் இவ்விரு நிலத்
துன்பம் அங்கு உணர்ந்திடாமை இங்கு அறிந்து சொல்லிடான்
இன்ப பூமியில் இருந்து இருந்தி யாவும் எய்திடில்
துன்ப பூமி யாம்உணர்ந்து சொல்ல வல்லது இல்லையே. [156]

இப்பாடல் அருகதேவனின் சாத்திரத்தை மறுக்கிறது.

பொருள் :

அருகதேவன் துன்பமில்லாத இன்ப பூமியில் (பொன்னெயில் வட்டத்தில்) இருந்து கொண்டு அறங்களை அருளினான் என்று நீ கூறுகின்றாய். அவ்வாறானால் அருகபரமன் பெரிய பூமியில் உள்ளாகிய துன்பங்களை அறியாதவன் ஆகின்றான். மேலும் நீ கூறியபடி அவனுக்கு மனம் முதலியனவும் இல்லை. ஆதலால் இவ்வுலகத்தின் துன்பங்களை அவன் எவ்வாறு அறிந்து சொல்லமுடியும்? எனவே நீ கூறியபடி ஒரு சொல்லால் அவன் எல்லா அறங்களையும் சொன்னான் என்பது பொருந்தாது. மேலும் இவ்வுலகத் துன்பங்களை அறிந்தே சொன்னான் என்றால் பொன்எயில் வட்டமும் துன்பம் உடைய உலகாகக் கொள்ள வேண்டும். கொள்ளவே மாறுபடக் கூறிய குற்றம் ஏற்படுகிறது.

விளக்கவுரை :

உணர்ந்து சொல்ல வல்லதில்லையே என்ற தொடர் உணர்ந்து சொல்லாத மாறுபடக் கூறும் தன்மையை உணர்த்துகிறது. இப்பாடலில் பொன்எயில் வட்டத்திலிருந்து அறம் உரைத்தான் என்ற கருத்தை ஆசிரியர் லாவகமாக மறுத்துரைத்துள்ளார்.

நிறைந்து காய மோடுசீவன் நின்ற தாகில் இவ்வுடல்
குறைந்த போது தானும்இத்தொடு ஒக்கவே குறைந்திடும்
இறந்து போகும் இக்கடம் இறந்த போது நீர்க்குடத்து
உறைந்து உடைந்தி டக்குடம் உலர்ந்த வாறுஅது ஒக்குமே. [157]

இப்பாடல் ஆன்மா சரீரம் முழுமையும் நிறைந்து நிற்கும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

நிகண்டவாதியே, நீ இந்த உடம்போடு ஆன்மா நிறைந்திருக்கிறது என்கிறாய்: அவ்வாறானால் இவ் உடலில் குறைவு ஏற்படுகிறபோது (ஊனத்தால்) உடம்பிலுள்ள ஆன்மா

தானும் அந்த அளவிற்குக் குறைந்து நிற்கும் என்று கொள்ள வேண்டும். ஆன்மா குறைவதால் ஆன்மாவின் அறிவும் குறைந்ததாகக் கொள்ள நேரிடும். மேலும் உடம்பு என்பது ஒரு காலத்தில் கெட்டு அழியும் பொழுது உடைந்த நீர்க்குடத்தில் உள்ள நீர் வெளியேறுவது போல ஆன்மாவும் கெடவேண்டும். எனவே உடம்பு முழுவதும் ஆன்மா உண்டு என்று நீ கூறும் கருத்து பொருந்தாதது ஆகும்.

காயம், கடம், உடல் - ஒரு பொருள் பல சொற்கள்.

கண்ட நூல்த ரும்தன்மாத்தி காய மோடு அதன்மமும்
உண்டு மீது கீழ்உலாவி உற்று நின்றிடப் பொருள்
கொண்டது என்னில் அத்தமிவ் இரண்டு தன்மை கூடிடா
வண்டு புட்கள் பேரல்எனின் வழங்கிடா கணத்திலே. [158]

இப்பாடல் முன் கருத்தை வலியுறுத்துகிறது.

பொருள் :

நிகண்டவாதியே, ஆன்மாவானது தான் செய்த புண்ணியத்தால் தன்மாத்திகாயம் என்ற மேம்பட்ட உடலை எடுத்து நல்லதையே புசித்து இன்பத்தைத் துய்க்கும், அதிலே திளைத்திடும் என்கிறாய். மேலும் தான் செய்த பாவத்தால் அதன்மாத்தி காயத்தை எடுத்துத் துன்பங்களை அனுபவித்து அதில் திளைத்திடும் என்கிறாய். இப்படி ஒரே பிறவியில் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி அனுபவித்து இரண்டு காயத்தைக் கைக்கொண்டது என்று உன்னுடைய அருகபரமன் கூறினான் என்றால் ஒரு ஆன்மா ஒரு பிறவியில் இரண்டு உடம்பு எடுக்க இயலாது. இல்லை, இல்லை முட்டையிலிருந்து தோன்றுகின்ற புழு சிறிது காலத்தில் குளவியாகப் பறந்து செல்வதைப்போல ஒரே ஆன்மா இரண்டு வடிவங்களை எடுத்தது என்று நீ பதில் கூறுகிறாய். அவ்வாறு நீ சொன்னாலும் அந்தப் புழுக்கூட ஒரே நேரத்தில் இரண்டு உருவங்களைக் கொள்வதில்லை. (அதுபோல) ஆன்மாவானது கணப்பொழுதில் இரண்டு உடம்புகளை எடுக்காது.

விளக்கவுரை :

அதன்மம் - அதன்மாத்திகாயம், பொருள், அத்தம் - இங்கு ஆன்மாவைக் குறித்தன. வண்டு புட்கள்போல் என்ற தொடர் குளவிப் புழுவையும், அதன் வளர்ச்சியையும் உணர்த்துகிறது. சித்தாந்தக் கொள்கைப்படி ஆன்மாவானது தூல காயத்தை விட்டுச் சூக்கும காயத்தைப் பெற்று இன்ப துன்பங்களை அனுபவிக்கும். அனுபவித்த பிறகு தூல காயத்திற்குச் சென்று வேற்றுரு எடாது என்ற கொள்கையைக் கொண்டு நிகண்டவாதி கருத்தை இப்பாடலில் ஆசிரியர் மறுக்கிறார்.

நீடு பாவ புண்ணியங்க ளால் நிரய வானகம்
கூடு வோர்கள் இன்றுநின்று கூட்டுவார்கள் இன்மையின்
ஓடும் மாகணைத் திறத்தின் உற்ற வாறு உரைத்தியேல்
வீடு மாகணைக்கு நாடும் வில்லி போல வேண்டுமே. [159]

இப்பாடல் இறைவன் தேவை என்பதை உணர்த்துகிறது.

பொருள் :

ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களை அறிந்து அவற்றிற்குரிய பயன்களை அவை அனுபவிக்க, செலுத்துகின்ற இறைவன் இல்லை என்று நீ சொன்னால், தாம் செய்த புண்ணிய பாவங்களுக்குரிய சொர்க்கத்தையும் நரகத்தையும் பொருந்தி நின்று அனுபவிப்பவர் இல்லை (உடனே நீ) வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு விரைந்து சென்று இலக்கை அடைந்தது போல ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களே சொர்க்க நரகங்களைத் தருகின்றன என்று நீ கூறினால் கணையைச் செலுத்துகின்ற வில்லாளி போல இறைவன் வேண்டுமல்லவா?

நிரையம் - நரகம், வானகம் - சொர்க்கம், கூடுவார்கள் - ஆன்மாக்கள், கணை - அம்பு, விடு - விடுதல், வில்லி - வில்லைச்செலுத்துகிறவன்.

ஏணது ஒன்று புற்கலத்தின் எய்தும் என்னின் நாசமே
காணல் ஆகும் அக்கடம் கழிந்த தன்மை இல்லவை
பூண வேண்டும் மேலுறும் பொருத்தம் இன்மை ஒன்றினின்
மாண வே அணுப்பொருள் நிகண்ட வாதி வைத்ததே. [160]

இப்பாடல் ஓரறிவுயிர்கள் என்று கூறப்படுகின்ற ஒரு சிலவற்றை மறுத்தல்.

பொருள் :

நிகண்டவாதியே, நீ கூறுகின்ற புற்கலப் பொருள்களாகிய கல்லும் இரும்பும், மரமும் ஓரறிவு உடையது என்று கூறுகின்றாய். அவ்வாறானால் ஓரறிவு உடைய எல்லாம் ஒரு மாதிரியாகவே அழிதல் வேண்டுமே. மரம் அழிகிறது. கல், இரும்புகள் முழுமையும் கெடுவதில்லை. மேலும் அவற்றிற்கு ஓரறிவு உண்டாயின் கல், இரும்பும், தத்தம் வினைக்கு ஏற்ப நரக சொர்க்கத்தைப் பொருந்த வேண்டுமே, பொருந்த வில்லையே. ஓரறிவும் இல்லாத கல், இரும்புகளை அணுப் பொருளாகக் கொண்டு ஓரறிவு உடையது என்று நீ சொல்வதைப் போல எம்மதத்தாரும் கூறவில்லை.

ஏணது - நீ முன்கூறிய பூதங்கள் ஒன்றினால், ஒன்று - ஓரறிவுயிர், நாசம் - அழிவு, பூணவேண்டும் - சொர்க்க நரகத்தை அடைதல் வேண்டும்.

ஆறு காரி யங்கள்மாற வேத வங்க ளாம்எனின்
மாறி வாணி கம்செயாது இருக்க வந்திடா தனம்
மீறி லாத ஊழது என்னின் எங்கும் உள்ளது ஊழதே
பேறு காரியம்விடப் பிறப்பது இல்லை பேசிலே. [161]

இப்பாடல் தவத்தின் கருத்தினை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

ஆறுவகை உவப்புக்களையும் (காரியங்களையும்) விட்டு ஒழித்தலே தவம் என்று கூறுகின்றாய் . பொருள்களைக் கொடுத்து வாங்குகின்ற வாணிகம் செய்யவில்லை என்றால் பொருள் வந்தடையாது. அதுபோலத் தவம் செய்யாதிருந்து

அறுவகை உவப்புக்களை மட்டும் நீங்கினால் தவம் வந்துவிடாது. (நீ உடனே) முன்னை வினைப்பயனால் தவம் கூடும் என்று கூறுகின்றாய். எதனையும் (இந்த அறுவகைக் காரியங்களையும்) கைவிடுதலும் முன்னை வினைப்பயன் தான். எனவே தவமாகிய பேறு தவம் செய்தலாகிய காரியத்தை விட்டால் உண்டாகாது.

விளக்கவுரை :

இப்பாடல் தவம் செய்வதைப் பற்றிய விவாதத்தை எடுத்துக் கொள்கிறது. உழவு, தொழில், ஓவியம், வாணிகம், கற்பித்தல், சிற்பம் ஆகிய காரியங்கள் ஆறினைக் கைவிட்டு விட்டால் தவம் கூடும் என்று கூறுகின்ற கருத்தை மறுக்கிறது. பொருளைச் சேகரிக்க வேண்டுமானால் பொருளைக் கொடுத்து வாங்க வேண்டும். அப்பொழுதுதான் பொருள் சேரும். அதுபோலத்தான் தவம் என்பதும். தவத்திற்குரிய ஒழுக்கத்தைச் செய்வதனால் வருமே தவிர எதனையும் விடுவதால் வராது.

தனம் - பொருள், ஊழல் - முன்வினை, எங்கும் உள்ளது உள்ளே - அனைத்தும் ஊழினால் வருவதே.

உடல்வ ருந்தல் மாதவங்கள் உறுதிஎன்று உரைத்திடில்
படவ ருந்து நோயி னோர்கள் படர்வர் பொன்எயில் எனாய்
திடம்வ ருந்தல் இன்பம்இச்சை செய்தல் செய்தல் செய்தியேல்
கெடஅ ரிந்தி டாய்உன்நாசி கேடில் இன்பம் முன்னியே.

[162]

இப்பாடல் உடலை வருத்துதலே தவம் என்பதை மறுக்கிறது.

பொருள் :

உடலை வருத்துவதே பெரும் தவம் என்று நீ கூறுகிறாய். அப்படியானால் நோய்களின் துன்பத்தால் உடல் வருந்துகின்றவர்களும் கேடில்லாத தவத்தை உடையவராய்ப் பொன்எயில் வட்டமான முத்தி இன்பத்தைப் பெற வேண்டும் என்றாகி விடும். ஆனால் அவர்களைப் பொன் எயில் வட்டத்தாராகச் சொல்ல மாட்டாய். முத்தி இன்பத்தைப்

பெறுவதற்கு இன்பத்தைக் கெடுத்துத் துன்பத்தைக் கொள்ள வேண்டும் என்று நீ கூறினால் முத்தி இன்பத்தைக் கருதி உன் மூக்கை நீயே அறிந்து கொள்வாயாக.

விளக்கவுரை :

உடலை வருத்துவது - தலைமயிரைப் பறித்துக் கொள்வது, வெயிலில் சுடுபாறையில் கிடப்பது, பனியில் நீரில் நிற்பது போன்றவையாம். நாசி - மூக்கு, மூக்கை அறுத்தால் உடல் வருந்தும். அதனால் முத்தி பெறலாமா? என்ற கேள்வியால் இம்மதத்தை ஆசிரியர் நகையாடுகிறார்.

பூர்வ கன்மம் அற்றிடப் புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வது என்னின் அக்கன்மத்து நிச்சயம் இலாமையில்
தீர்வது இன்மை தீரின்வாயில் சேர்வது இன்மை தெண்கடல்
நீர்வ றந்த போது பூஞை மீன் அருந்த நின்றதே. [163]

இப்பாடல் முன்வினைப் பயன்களை ஒரு பிறவியில் புசித்து மோட்சம் அடையலாம் என்ற கருத்தை மறுக்கிறது.

பொருள் :

நிகண்டவாதியே, முன்பிறப்பில் செய்த வினைப்பயனை எல்லாம் இப்பிறப்பிலே உயிரானது நுகர்ந்த களித்த பிறகு, பொன்னெயில் வட்டத்தைப் (மோட்சத்தை) பொருந்தும் என்று நீ சொல்லுகின்றாய். ஆனால் முன்னை வினைப் பயன்களுக்கு எல்லையே கிடையாது. எனவே ஒரே பிறவியில் அனைத்தும் நுகரப்பட்டுத் தீர்க்கமுடியும் என்று கூற முடியாது. எனவே ஒரு பிறவியிலேயே அனைத்தும் நுகரப்பட்டுத் தீர்ந்து விட்டால் உயிர்கள் பொறிகளோடு கூடி அறியவும் முடியாது. மேலும் வீடு பேற்றிற்கு உரிய தவத்தையும் மேற்கொள்ள முடியாது. வினைப்பயனைப் புசித்துக் கழித்தபின் வீடுபேறு அடையலாம் என்று நினைப்பது கடல்நீர் வற்றிய பிறகு மீன்களைத் தின்னலாம் என்று பூனை கருதியதைப் போன்றதாகும்.

விளக்கவுரை :

ஒரு பிறவியில் முன்வினைப் பயன் முழுவதையும் அனுபவித்துக் கழித்து விட்டால் வீடு பேறு அடையலாம் என்ற இம் மதத்தார் கருத்தை உவமையின் மூலம் ஆசிரியர் மறுக்கிறார். கடல்நீர் என்றைக்கும் வற்றாதது போல வினைப்பயன்களும் எல்லையில்லாது தொடர்ந்து கொண்டிருக்குமே தவிர முழுமையும் அனுபவித்து விட முடியாது.

பூர்வகன்மம் - முன்வினைப்பயன், புசித்தல் - அனுபவித்தல், தென்கடல் - தெளிந்த கடல், பூஞை - பூனை.

கூறு கூவல் மன்னும்அக் குடம்கு றித்து நீள்கரை
ஏறல் உற்ற தன்மைநீ ஒருத்தர் இன்றி ஏறுதல்
வேறொருத்தன் அக்குடத்தை மீது நின்று எடுக்கவே
ஏறல் உற்ற தன்மையில் சிவன் திறத்தில் நின்றிடே. (164)

இப்பாடல் இறைவன் அருளால் அன்றி வீடுபேறு அடைய முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

இறைவன் ஒருவனின் உதவி இன்றி ஆன்மா தானே வீடு பேறு அடைய முடியும் என்று நீ கூறுவது எவ்வாறு இருக்கின்றது என்றால் கிணற்று நீரில் வீழ்ந்த குடமானது எந்த ஒருவனின் துணையுமின்றித் தானே உயர்ந்து கரையைச் சேரும் என்று கூறுவதை ஒத்ததாம். யாரேனும் ஒருவன் அக்குடத்தை எடுத்துக் கரையில் சேர்ப்பது போல ஒப்பற்ற தன்மையுடைய சிவனின் அருளாலேதான் வீடு பேறு அடைய முடியும். என்வே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறியில் நிற்பாயாக.

கூவல் - கிணறு. இப்பாடல் வரை நிகண்டவாதி மதத்தை மறுத்து - தம் மதக்கருத்தை ஆசிரியர் நிறுவியுள்ளார்.

ஆசீவகன் மதம்

தமிழகத்தில் வழங்கிய திகம்பர சமணரின் மற்றொரு பிரிவினர் ஆசீவகன் மதத்தார் ஆவர். இச்சமயத்தார் தலைமயிரைப் பறித்துக் கொள்பவர்கள் ஆவர். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும் ''பறி மயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச் - செறியும் முக்குடையுமாகித் திரிபவர்'' எனத் திருஞானசம்பந்தர் புராணத்தில் (பா.602) காட்டுவார். ஆனால் இவ்வாறு மயிர் பறித்தல் என்பது சமணரின் பொதுவான நடைமுறையாகும். ஆசீவகன் மதத்திற்கு மட்டும் உரியது அல்ல. ஆசீவகரின் கொள்கைகளைப் பத்துப் பாடல்களிலும், மறுப்புகளை 6 பாடல்களிலும் அருணந்தியார் குறிப்பிடுகின்றார்.

என்னுயிர் அதற்குப் போல எவர்க்கும் ஒத்து இருப்பன் என்று
தன்னுயிர் வருந்தத் தானும் தலையினைப் பறித்துப் பார்மேல்
மன்னுயிர் எவற்றி னுக்கும் வருந்தவே அறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மை ஆசீ வகன்அம ணங்களிற் கூறும். [165]

இப்பாடல் ஆசீவகரின் இயல்பு கூறிற்று.

பொருள் :

என் உயிருக்கு அருளைத் தேடுவது போல எல்லா ஆன்மாக்களுக்கும் அருளைச் செய்திடுவேன், என்னுடைய உடலை வருத்திக் கொள்வதுதான் தவம் என்பதால் என் தலைமயிரைப் பறித்துக் கொள்கிறேன். உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் தத்தம் உடலை வருத்திக் கொள்வதுதான் உண்மையான அறமாகும் (தவமாகும்) என்று சமணரில் ஒரு பிரிவான ஆசீவன் கூறுகின்றான்.

தலையினைப் பறித்தல் - தலைமயிர் பறித்தல். ஒத்து இருப்பன் என்பது அருள் வழங்கும் தன்மையைக் குறிக்கிறது.

வரம்பிலா அறிவன் ஆதி வைத்தநூற் பொருள்கள் தாமும்
நிரம்பவே அணுக்கள் ஐந்து நிலம்புனல் அனல்கால் சீவன்
பரந்திவை நின்ற பான்மை பாரது கடினம் சீதம்
தரும்புனல் சுடும்தீ வாயுச் சலித்திடும் உயிர்போ தத்தாம். [166]

இப்பாடல் ஆசீவகனின் கொள்கையான அணுக்கள் ஐந்தின் பெயரும் குணமும் கூறுகிறது.

பொருள் :

வரம்பிலா அறிவன் அருகன் உரைத்த நூல்களில் கூறப்படுகின்ற பொருள்கள் ஐந்தாகும். அவை நிலம், புனல், தீ, காற்று, ஆன்மா என்பதாகும். அவை கொண்டுள்ள தன்மையைக் கூறினால் நிலம் கடினமாகும். நீர் குளிர்ச்சியாகும், தீ வெப்பமாகும், காற்று அசையும் தன்மையாகும், உயிர் அறிவுத் தன்மையாகும்.

விளக்கவுரை :

அருகன் - உரைத்த நூல் என்பது ஒன்பது கதிர் என்ற நூலைக் குறிக்கும் என்பர்.

அணுக்கள் - பொருள்களின் நுண்மை. போதத்தாம் - அறிவுத் தன்மை.

பார்புனல் பரக்கும் கீழ்மேல் படர்ந்திடும் தேயு வாயுச்
சேர்வது விலங்கின் உள்ளம் அவற்றொடு சேரும் வேறு
சார்வது பெற்ற போது சார்ந்தஅப் பொருவின் தன்மை
நேர்வதும் ஆகி நிற்கும் இதுபொருள் நிகழ்த்தும் ஆறே. [167]

இப்பாடல் ஐந்திற்குரிய நிற்கும் வழி கூறுகிறது.

பொருள் :

மேலே கூறப்பெற்ற ஐந்து பொருள்களில் நிலமும் நீரும் கீழ் நோக்கி விரியும். தீயும் காற்றும் மேல் நோக்கிப் படரும். உயிரானது உடம்போடு பொருந்தி நிற்கும். உடம்பை விட்டு நீங்கினால் உயிரானது நிலம், நீர், தீ, காற்று இவற்றோடு தனித்தனியாகப் பொருந்தி நிற்கும். உயிரானது இந்த நான்கையும் விட்டுவிட்டு உடம்பையே செறிவாகப் பெற்ற இடத்து அதனையே இடமாகக் கொண்டு விளங்கும்.

விளக்கவுரை :

நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்ற ஐந்தும் பஞ்ச ஆன்மாக்களாகும். விலங்கின் - நீங்கின், ஆறே - முறையாகும்.

உணர்தரா அணுக்கள் நான்கும் ஒன்றுகெட்டு ஒன்றது ஆகா
புணர்தரா ஒன்றில் புக்கொன்று ஆயினும் பொருந்தி வாழும்
அணைதரா புதிய வந்திங்கு அழிதரா பழைய வான
இணைதரா ஒன்றுஒன் றாகி மாறுதல் ஒன்றும் இன்றே. [168]

இப்பாடல் உயிர் ஒழிந்த நால்வகைப் பொருள்கள் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

ஆன்மா ஒன்றைத் தவிர மற்ற நான்கும் ஒன்றையொன்று அறியும் தன்மை உடையன அல்ல. மேலும் ஒன்று கெட்டு மற்றொன்று ஆகாது. ஒன்றிடத்து மற்றொன்று புகுந்து கூடி நிற்காது. என்றாலும் உடம்பில் உயிர் பொருந்தி இருக்கும் பொழுது இந்த நான்கும் அவ்வவற்றிற்குரிய தன்மையில் பொருந்தி நிற்கும். இவை நான்கும் புதிதாகத் தோன்றுவதும், பின் அழிவதும் இல்லை (நித்தியம்). இவை சேரும்பொழுதும் நான்கும் சேர்ந்து கூடுமே தவிரத் தனித்தனியாகக் கூடுவதில்லை. இவை என்றைக்கும் அழிவதும் இல்லை.

விளக்கவுரை :

நான்கும் தோன்றுவதும் அழிவதும் போலக் காணப்படினும் அவை தம் தன்மையிலிருந்து மாறாது நித்தியமாய் இருக்கும் என்பது இப்பாடலில் வலியுறுத்தப் பெறுகிறது.

கொண்டுமுன் விரித்தல் நீட்டல் குறுக்குதல் குவித்தல் ஊன்றல்
உண்டுதின்று உலர்த்தல் மீட்டல் உடைத்திடல் ஒன்றும் ஒண்ணா
விண்டுபின் புறம்பும் போகும் வேறுநின்று உள்ளும் மேவும்
பண்டும்இன்று என்றும் எங்கும் பரந்துஒரு தன்மைப் பாலே. [169]

இப்பாடல் நிலம் முதலிய நான்கும் ஒருவரால் நியமிக்கப் பட்டதல்ல என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

மேலே கூறப்பட்ட நான்கும் தோற்றுவிக்கப் படுதல், விரித்தல், நீட்டல், குறுக்கல், குவித்தல், ஊன்றல், உண்டு தின்று

உலர்த்தல், மீட்டல், உடைத்திடல், என்ற ஒன்றும் இல்லாதவை ஆகும். இவை இந்த உலகத்து எல்லையைக் கடந்து அப்புறத்திற்கும் போகும். இத்தன்மையிலிருந்து வேறுபட்டு வேறு வடிவமும் கொள்ளும். எக்காலத்திலும் எல்லா இடத்திலும் பரந்தும் இருந்தாலும் அவற்றின் இயல்புகள் மாறுபடாது.

கண்ணினில் காண ஒண்ணாச் சனித்த அந்தக் கன்மத் தாலே
நண்ணிடும் உருக்கள் ஆகி நின்றபின் நரரோ காண்பார்
விண்ணினில் தேவர் காண்பர் ஓரணு மிக்க நான்காய்
எண்ணிய பொருள்கள் எல்லாம் இசைவதுஎன்று இயம்புமின்னே. [170]

இப்பாடல் உயிரின் இயல்பு கூறுகின்றது.

பொருள் :

முற்கூறிய அணுக்கள் ஐந்தில் உயிர் என்பது மிக நுட்பமானதாகும். கண்ணால் காணமுடியாது, கன்ம வினையினால் தோன்றி உருவெடுத்து நின்றிடும். உருவத்தோடு பொருந்தி இருந்தாலும் அவ்வுயிரை மனிதர்கள் காணமாட்டார்கள். பொன்எயில் வட்டத்தில் பதிகின்ற தேவர்களே காண்பர். தனி ஒரு அணுவாக உயிர் மற்ற நான்கு அணுக்களோடு கூடிப் பல்வேறுபட்ட உருக்களைப் பெற்று விளங்கும் என்று ஆசீவக சமயத்தின் நூல்கள் கூறுகின்றன.

விளக்கவுரை :

நூல் - ஒன்பது கதிர் என்றும் நூல். சனித்த - உண்டாகிய, நரர் - மனிதர்.

ஒன்றினை ஒருவி மூன்றங்கு உற்றிடா இரண்டு விட்டு
நின்றிடா இரண்டு கூடும் நெறிநிலம் நான்கு நீர்மூன்று
இன்று இரண்டு அழல்கால் ஒன்றாய் இசைந்திடும் பூமி இவ்வாறு
என்றுநீர் தீகால் ஆதி ஈண்டுவது என்று இயம்பும். [171]

இப்பாடல் அணுக்கள் நான்கின் குணங்களே உருவத்தில் கூடி நிற்கும் (உயிர்) என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

ஆன்மா ஒழிந்த நிலம் முதலாகிய அணுக்கள் நான்கும் தம்முள் கூடுகின்ற பொழுது ஒன்றினை விட்டு மூன்று அணு தம்முள் கூடாது. இரண்டு அணுக்களை விட்டு இரண்டு கூடாது. (எனவே கூடுமிடத்து நான்கும் கூடி நிற்கும்) மேலும் நிலம் என்னும் அணுவில் மணம், சுவை, உருவம், ஊறு என்ற நான்கு குணங்கள் இருக்கும். நீர் அணுவில் சுவை, உருவம், ஊறு என்ற மூன்று குணங்கள் இருக்கும். தீயில் உருவமும் ஊறும் இருக்கும். காற்றில் ஊற்று உணர்வு ஒன்றே பொருந்தி நிற்கும். இந்த அமைப்பில் நிலம், நீர், தீ, கற்று என்று கூறும் நான்கின் குணங்கள் கூடி நிற்கும் என்று இம்மதத்தாரின் நூல்கள் கூறுகின்றன.

ஒருவி நீங்கிய, கூடும் நெறி - முறைமை, கால் - காற்று.

வெண்மைநன் பொன்மை செம்மை கழிவெண்மை நீலம் பச்சை
உண்மைஇவ் ஆறின் உள்ளும் கழிவெண்மை ஓங்கு வீட்டின்
வண்மைய தாகச் சேரும் மற்றிவை உருவம் பற்றி
உண்மை இவ் வொட்டுத் தீட்டுக் கலப்பினில் உணரும் என்றான்.

[172]

இப்பாடல் நிறம் ஆறினைப் பற்றியக் கருத்துக்களைக் கூறுகிறது.

பொருள் :

நிறங்கள் ஆறுவகைப்படும். வெண்மை, பொன்மை, சிவப்பு, நீலம், மிக்க வெண்மை, பச்சை என்பனவாகும். இத்தகைய ஆறு வண்ணங்களுள் மிகுந்த வெண்மை என்னும் நிறமே பொன்எயில் வட்டத்திற்கு உரிய சிறப்பான வண்ணமாகும். மற்ற ஐந்தும் உயிரல்லாத அணுக்கள் நான்கினையும் அவற்றின் வடிவுகளையும் கூடி நிற்கும். இந்த வண்ணங்கள் கூடுதல் குறைவில் அமைந்து உருவங்களை அறிந்துவரும்.

விளக்கவுரை :

நிறம் ஆறு என்று கூறி அதில் மிகுந்த வெண்மை பொன்னெயில் வட்டமான (மோட்சத்திற்கு) உரியது என்பதும்,

எஞ்சிய ஐந்து நிறங்கள் நிலம் முதலிய நான்கு அணுக்களில் குணமாக இருக்கும் என்பதும் உயிரில் கூடுதல் குறைதல் நிலையில் கூடி உருவங்களைத் தரும் என்பதும் ஆசீவகனின் கொள்கை.

உண்மை - ஆன்மாவைக் குறித்தது. கழி - மிகுந்த

பேரிழவு இடையூறு இன்பம் பிரிவிலாது இருக்கை மற்றும்
வேறொரு நாட்டில் சேறல் விளைந்திடும் மூப்புச் சாதல்
கூறிய எட்டும் முன்னே கருவின்உட் கொண்ட தாகும்
தேறிய ஊழிற் பட்டுச் செல்வதுஇவ் வுலகம் என்றான். [173]

இப்பாடல் ஊழ்வினைப்பயன் எட்டு வகையாகக் கருவிலே வந்து பொருந்தும் என்கிறது.

பொருள் :

வறுமை, செல்வம் முதலியன கூடுதல், அவை நீங்குதல், துன்பம் உறுதல், இன்பம் உறுதல், பிறந்த நாட்டை விட்டுச் செல்லாமை, வேறு நாட்டில் சென்று சேர்தல், மூப்படைதல், மரணம் என்று சொல்லப்பட்ட எட்டும் முற்பிறப்பின் வினையில் உள்ளதாய், கருவினில் இருக்கும்போதே பற்றிக் கொள்ளப் பட்டதாய் அமையும். எனவே முற்பிறப்பில் செய்த வினையில் அகப்பட்டு அம்முறைமை மாறாமல் இவ்வுலக நிழ்ச்சிகள் யாவும் நடைபெறுகின்றன.

புண்ணிய பாவம் என்னும் இரண்டு அணுப் பொருந்த வைத்தே
எண்ணிய இவற்றி னோடும் ஏழ்என எங்க ளோடே
நண்ணிய ஒருவன் கூறும் ஞானம் இவ் வாறது என்று
கண்ணிய கருத்தி னோர்கள் கதியினைக் காண்பர் என்றான். [174]

இப்பாடல் அணுக்கள் ஐந்துடன் புண்ணிய பாவங்களைச் சேர்த்து ஏழு என்கிறது.

பொருள் :

புண்ணியம், பாவம் என்ற இரண்டினையும் முன் கூறிய அணுக்கள் ஐந்தினோடும் சேர வைத்து உலகப் பொருள்கள் எழுவகைப்படும் என்று சமயத்தின் தலைவன் அருகன்

செய்தான். எனவே ஞானத்தின் உண்மை இயல்பு இத்தகையது என்று அறிந்து அதிலே பொருந்தி வாழுகின்றவர்களே பொன்னெயில் வட்டத்தினைக் காண்பர் என்பான் ஆசீவகன்.

விளக்கவுரை :

எங்களோடு நண்ணிய ஒருவன் என்பது - நிகண்டவாதியும் ஆசீவகனும் கூடிய எங்களில் ஒருவனாகிய அநுவாதியைக் குறிக்கிறது.

ஆசீவகன் மதம் மறுதலை

வாராநெறி வீடானபின் மண்மேல் அவன் வந்து
தாராமையின் நூலானது தானோ உளது இன்றாம்
சேராமையில் அணுவானவை ஐந்தும் ஒரு தேயத்து
ஓரானொரு காலத்தினில் ஒன்றாம் உணர்வு இன்றாம். [175]

இப்பாடல் பொன்னெயில் வட்டத்தை உடைய அருகபரமன் உடம்பெடுத்து வந்து நூல் செய்தான் என்பதை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

ஆசீவகனே, உன்னால் கூறப்படுகின்ற மீண்டும் வாரா நெறியாகிய (வீட்டுப்பேறு) பொன்னெயில் வட்டத்தை அடைந்தவர்கள் மீண்டும் உடம்பெடுத்து வாராதவர்களே ஆவார்கள். ஆதலால் உன்னுடைய அருகபரமன் பொன்னெயில் வட்டத்து இருப்பவன். அவன் உலகத்திற்கு வந்து அறநூல்களைத் தருபவன் அல்லன். அறநூல்களும் தருபவன் ஒருவனால் வருவது அல்லது தானாக வருவதில்லை. மேலும் உன்னால் கூறப்படுகின்ற பொன்னெயில் வட்டத்தில் ஐவகை அணுவும் சேராது. ஆதலால் பொன்னெயில் வட்டத்தில் உள்ள அருகனுக்கு அந்த அணுவால் உண்டாகின்ற உடம்பு இல்லை. உடம்பு இல்லை என்பதால் அவன் ஒன்றினையும் ஓர்வதும் இல்லை. மேலும் ஐந்து அணுக்களால் உண்டாகின்ற எந்தப்பொருளையும் உணரவும் மாட்டான்.

விளக்கவுரை :

பொன்னெயில் வட்டம் என்பது இம்மதத்தார் கருத்துப்படி வீடுபேறாகும். அதனையே வைத்துக் கொண்டு அருகபரமனைத்

தெய்வம் இல்லை என்றும், அவனுடைய பெருமைகளைப் பற்றிய செய்திகளும் உண்மை இல்லை என்றும் ஆசிரியர் இப்பாடலில் மறுக்கிறார். ஐந்து அணுக்கள் என்பது நிலம், நீர், தீ, காற்று, உயிர் இவை ஐந்தும் சேர்ந்தும் உடம்பு வரும் என்பது இம்மதத்தார் கருத்து. அதனையும் ஆசிரியர் மறுக்கிறார்.

இருபான்மையர் இவர்மண்டலர் செம்போதகர் என்றே
வருபான்மையர் இவர்மண்டலர் மண்மேல்வரு நூலும்
தருபான்மையர் எனின் நீதலம் அதில் வாழ்பவர் தம்போல்
ஒரு பான் மையின் உவராகுவர் உணராது உரை செய்தாய். [176]

இப்பாடல் அருகபரமன் இருவகைப்பட்டு மண்டலத்திலிருந்து நூல் செய்தான் என்பதை மறுப்பதாகும்.

பொருள் :

(ஆசீவகனே முன் பாடலில் கூறிய கருத்துக்கு மறுப்பாக நீ கீழ்வருமாறு கூறுதலும் கூடும்) அருக பரமர் மண்டலர் என்றும், செம்போதகர் என்றும் இரு பகுதியினராய் இருப்பர். அவ்விருவரில் நூலை மண்ணுலகில் கூறுகின்றவர் மண்டலர். மண்டலராகிய இவர் உலகத்தின் கண்ணே எழுந்தருளி அணுக்கள் ஐந்தின் செய்திகளை ஒருங்கே அறிந்து உலகத்தின் கண்ணே நூல் தந்து இயங்குபவராவார் என்றும் கூறுவாய். அப்படியானால் அவரும் பூமியில் வாழும் ஆன்மாக்களைப் போன்ற தன்மை உடையவரே ஆவார். ஆதலால் வீட்டுலகில் உள்ள ஓர் உரு இரண்டு வகைப்பட்டு அவற்றில் ஒன்று மானுடத் தன்மையும் மற்றொன்று தெய்வத் தன்மையும் கொண்டு இயங்குவது இயலாது. ஆதலால் நீ அறியாது உரை செய்தாய் ஆவாய்.

உயிரானவை உடல் தீண்டிடல் ஒட்டுக் கலப்பு எய்தும்
பயில்வால் உணர்வு எய்தும்எனும் மொழியானவை பழுதாம்
துயிலார்தரும் அவர்பாலகர் தொடரார்அறி வினைநீ
செயிரார்த ரும் உரையேதரும் இதுவோ உன் செயலே. [177]

இப்பாடல் உயிரானது உடலோடு ஒட்டியும், தீண்டியும் கலப்பதால் அறிவைப் பெறும் என்பதை மறுத்தது.

பொருள் :

ஆசீவகனே, உயிர்களானவை உடலைப் பற்றியும், உற்றும், கலந்தும், செயல்படுவதனால் அறிவைப் பொருந்தும் என்று நீ சொல்லுகின்றாய். அது பிழையாகும். ஏனென்றால் முயிற்சியின்றிச் சோம்பலுற்று உறங்கி வாழ்கின்றவர்களும், மிக்க இளையவர்களும் உடம்பைப் பற்றியும், ஒட்டியும், கலந்தும் வாழ்கின்றவர்கள்தான். அவர்கள் சிறந்த அறிவினை அடைய மாட்டார்கள். எனவே நீ கூறுகிற சொல் குற்றத்தைத் தரும், உன் தொழிலும் குற்றமுடையதே.

தீண்டுதல் - பற்றுதல், ஒட்டுதல் - உற்றுதல்.

அணுவானவை கீழ்மேல் உள ஆனால்அவ யவமும்
நணுகாவென லாமேவரின் நாசம்அவை எய்தும்
அணுகா எனில் இவைதொன்மைகொள் ஆகம்உள வாகுத்
துணிவால் இவை கலவாபல தொகையாம்வகை இலவாம். [178]

இப்பாடல் ஐந்து அணுக்கள் பற்றிய கருத்தினை மறுக்கிறது.

பொருள் :

ஆசீவகனே, உயிரொழிந்த நான்கு அணுக்களில் இரண்டு மேல் நோக்கி எழும் என்றும், இரண்டு கீழ்நோக்கி எழும் என்றும் கூறினாய். இவ்வாறு மேலும் கீழுமாய்ப் பிரிகின்றவை ஒன்றுகூடி உடம்பு உண்டாகும் என்று கூறுவது குற்றமல்லவா. மேலும் எப்படியோ இவை நான்கும் கூடின என்றாலும் அவற்றை நித்தியம் என்று கூறுவது பிழையாகும். மேலும் அவை உடம்பின் அவயவங்கள் ஆவதில்லை என்று கூறின் அணுக்களின் குணமாகிய குருதி, தசை ஆகியவை கலந்து நில்லாது. பல பகுதிகளாகப் பிரிந்து நிற்கும். அவ்வாறு பிரிந்து நிற்பதால் உடம்பாகிய முறைமை தோன்றுவது இல்லையாய் முடியும்.

விளக்கவுரை :

இப்பாடலில் அணுக்கள் நான்கு கூடி உடம்பாகி அதில் உயிர் கலக்கிறது என்ற ஆசீவகரின் கொள்கை லாவகமாக மறுக்கப்படுகிறது. நிலம் முதலிய நான்கு அணுக்களில் நிலமும் நீரும் கீழ்நோக்கியும் மற்ற இரண்டும் மேல் நோக்கியும் பரவும்

என்பது ஆசீவகரின் கொள்கை. அப்படியானால் இரு வகையாய்ப் பிரிந்து நிற்பது எப்படிக் கூட முடியும் என்றும், பிரிந்து நிற்பவை பிரிகின்றது, கூடுகின்றது என்பதால் நித்தம் என்று கூறமுடியாது என்றும், அவை உடம்பின் அவயவங்கள் இல்லை என்பதால் உடலின் முழுவடிவத்தையும் தரமுடியாதவையாய்க் குறை உடம்பாக ஆகிவிடும் என்று கூறி மறுக்கப்படுகிறது.

தொள்ளைகொள் ஆகம் - ஓட்டை உடம்பு (குறை உடம்பு)

மிகையாம்அணு உளவாகையின் அவையாம்மிக என்னில்
தொகைநாலிடை யறலால்அவை தொகும்ஆறில ஆகும்
பகையாகையின் மிசைதாழ்மையின் நிலையாவகை பண்ணும்
நகையாம்உரை கழிஆயிரம் அவை தூணென நண்ணா. [179]

இப்பாடல் நான்கு அணுக்கள் கூடி உருக்களாகும் என்பதை மறுத்துக் கூறியது.

பொருள் :

அணுக்கள் நான்கு இல்லாது வேறு ஒரு அணுவாகிய உயிர் அணு அவற்றைக் கூட்டிட உலகில் பல்வேறு உருவ பேதங்கள் தோன்றின என்று கூறினால் - அது தவறு. நிலம் முதலிய நான்கு அணுவும் மேலும் கீழுமாய்ப் பிரிந்து நிற்பதால் அவற்றை உயிர் அணு கூட்ட இயலாது. ஏனென்றால் உயிர் அணு அறியும் குணம் உடையதே அன்றி - கூட்டும் குணம் உடையது அல்ல. அந்நான்கு அணுக்கள் மேலும் கீழுமாய் இருப்பதால் தாமே கூடாது பகையாக நிற்கும். எனவே ஆன்மா அவற்றின் எந்த இடத்திலும் கூட இயலாது. ஆயிரம் குறுந்தடிகள் ஒன்று சேர்ந்தாலும் தூண் ஆகாது. அதுபோல அணுக்கள் பல கூடி ஓர் உருவம் பெறாது. உன் கொள்கை நகைப்பிற்கு இடமாகும்.

விளக்கவுரை :

மிகை அணு - ஐந்தாவதாகிய உயிர் அணு. இப்பாடலின் கருத்தை மிகவும் உய்த்துணர்ந்து கொள்ளவேண்டும். உயிர் அணு அறிவுடையது என்பதை வைத்துக்கொண்டு ஆசிரியர்

ஐந்தணுக்களின் சேர்க்கை பற்றிய ஆசீவகரின் கொள்கையை மறுத்துள்ளார்.

கூடாஅணு அறியாமையின் வளிகூட்டுதல் கூறின்
நாடாவளி அணுவானவை நணுகச்செயும் அவரை
நீடாவினை தன்னால் எனின் நினைவின்றது இன்றாம்
தேடாய்ஒரு வனைநீஇவை செய்வான் உளன் என்றே. [180]

இப்பாடல் ஐந்து அணுக்கள் தாமே கூடி உடம்பு எடுக்கும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

ஐந்தணுக்களும் தமக்கெனத்தனி அறிவில்லாத காரணத்தால் அவை தமக்குள்ளே கூடி உடம்பாகிய வடிவத்தினை எடுத்துக் கொள்ளுவன அல்ல. காற்று என்ற அணு தான் ஒழிந்த அணுக்கள் மூன்றையும் உயிராகிய அணு கூடும்படி கூட்டுவிக்கும் என்று நீ கூறினால் காற்று அணுக்களைக் கூட்டுவிப்பதற்குரிய கன்மத்தையும் செய்யும், உயிரை அறிய மாட்டாது. காற்றும் உன் கூற்றுப்படி அறிவுடையதன்று. இல்லை, இல்லை, பழைய கன்மத்தினால் காற்று அணு கூட்டுவிக்கும் என்றால் அந்தக் கன்மமும் அறிவை உடையதன்று. எனவே இவ்வணுக்கள் ஐந்தையும் கன்மத்தையும் கூட்டி உடம்பை உண்டாக்குவதற்கு ஒருவன் வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்ப்பாயாக.

வளி - காற்று, வினை - கன்மவினை, ஆசீவகன் - அணுக்கள் ஐந்தும் அறிவுடையதன்று என்று கூறிய கூற்றைக் கொண்டே ஆசிரியர் அம்மதக் கருத்துக்களை மறுத்திருப்பது உணரத்-தக்கது. இப்பாடல் வரை ஆசீவகன் மதம் பற்றிய கருத்துகளும், மறுப்புகளும் அமைந்தன.

பட்டாச்சாரியன் மதம்

இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் மீமாம்சை என்பதும் ஒரு மதமாகக் குறிக்கப்படுகிறது. இந்த மதத்தின் கொள்கைகளை வகுத்துவர் சைமினி என்ற முனிவர். இவரின் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு என்பர். இவர் தந்த

கொள்கை நூலுக்குச் சபரமுனிவர் என்பவர் உரை செய்தார். சபரமுனிவரின் உரைக்கு குமாரிலபட்டர் என்பவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் விளக்கம் தந்தார். குமாரிலபட்டரின் மாணவராகிய பிரபாகரர் என்பவரும் மேலும் ஒரு உரை செய்தார். குமாரிலபட்டர் தாம் எழுதிய உரையில் சபரர் எழுதிய உரையை ஏற்காது சைமினி முனிவரின் நூலுக்குப் புதிய விளக்கம் தந்ததால் அவருடைய உரையினால் ஏற்பட்ட கொள்கைக்குப் பட்டாச்சாரியன் மதம் என்ற பெயர் வந்தது. பிரபாகரர் சபரமுனிவரை ஆதரித்துத் தனியுரை தந்தார். எனவே அவருடைய மதத்திற்குப் பிரபாகரர் மதம் எனப் பெயர் வந்தது. இவை இரண்டும் இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் பூர்வ மீமாம்சை எனப் பெயர் சூட்டப் பெற்றன. தமிழகத்தில் பூர்வமீமாம்சையாகிய இவ்விரண்டு மதக் கொள்கைகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. பட்டாச்சாரியன் மதக்கொள்கைகளை அருணந்தி சிவாசாரியார் பதின்மூன்று பாடல்களில் தந்து மறுப்பினைப் பத்துப் பாடல்களில் தந்துள்ளார்.

வேதமே ஓதிநாதன் இலை என்று விண்ணில் ஏறச்
சேதமாம் கன்மம் செய்யச் செயிமினி செப்பும் நூலின்
நீதியே கொண்டு பட்டா சாரியன் நிகழ்த்தும் நீர்மை
ஓதநீர் ஞாலத் துள்ளே உள்ளவாறு உரைக்கல் உற்றாம். (181)

இப்பாடல் பட்டாசாரியன் மதக்கொள்கையைத் தெரிவிக்கத் தொடக்கமாக அமைந்துள்ளது.

பொருள் :

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையுமே ஓதி, இவ்வேதங்கள் இல்லாது தனி ஒரு கடவுள் இல்லை என்று கூறி வருபவர்கள் பட்டாச்சாரியன் மதத்தவர்கள். அவ்வேதத்தில் கூறப்பெறுகின்ற வேள்வி முதலிய கன்மங்களைச் செய்து, விண்ணுலகத்தை அடைய முடியும் என்ற கொள்கையையும் உடையவர்கள். சைமினியால் அருளப் பெற்ற நூலின் வழியைக் கொண்டு வாழுகின்ற இத்தகைய பட்டாச்சாரியன் கடல்சூழ்ந்த உலகில் நிகழ்த்துகின்ற கொள்கைகளை உள்ளவாறு உரைக்கத் தொடங்குவோம்.

நாதன் - கடவுள், விண்ணில் ஏற - விண்ணுலகை அடைய, சேதமாம் - வழியாம், ஓதநீர் - கடல்நீர்.

உற்றிடும் காமம் ஆதிகுணங்கள்தாம் உயிர்கட்கு உண்டாம்
மற்றிவை தருமே யாயின் மறைமொழி வாய்மை இன்றாம்
கற்றிடு நூலால் போதம் கலப்பது கல்வி இன்றேல்
பெற்றிடு மழவும் மூங்கை என்னவே பேசலாலமே. [182]

இப்பாடல் வேதங்களின் பெருமையையும், கல்வி இல்லாத ஆன்மா அறிவற்றது என்பதையும் கூறுகிறது.

பொருள் :

உலகில் உள்ள உயிர்களுக்குக் காமம், வெகுளி, மயக்கம் போன்ற குற்றங்கள் இயல்பாகவே உள்ளனவாகும். இக்குணங்களை உடைய ஆன்மா வேதங்களைத் தந்தால் அவ் வேதங்களில் உண்மை இருக்காது. குற்றமுடையதாகவே இருக்கும். மனிதன் தான் கற்றிடும் நூல்களின் அளவாகவே அறிவைப் பெறுகின்றான். கல்வி இல்லையேல் மனிதன் குழந்தையாகவும், ஊமையாகவும், அறிவற்றவனாகவும் விளங்குவான் என்று கூறலாம்.

விளக்கவுரை :

இம்மதத்தார் வேதங்களை மட்டும் ஏற்பவர்கள். வேதங்களைக் காமம் முதலிய குற்றமுடையவர்கள் இயற்ற முடியாது. வேதங்கள் குற்றமற்றன. எனவே அவ் வேதங்களைப் படிக்கின்றதனால் மட்டுமே மனிதன் அறிவுடையவன் ஆகின்றான் என்று இவர்தம் கொள்கைகளை இப்பாடல் கூறுகிறது.

உண்டுஒரு கடவுள் வேதம் உரைத்திட உயிரின் தன்மை
கொண்டவன் அல்லன் என்றும் கூறிடின் உருவன் கூடில்
பண்டைய உயிரே ஆகும் படித்தநூல் அளவுஞானம்
கண்டிடும் உருவம் இன்றேல் கருதுவது இல்லை என்றான். [183]

இப்பாடல் வேதம் சுயம்பு ஆகும், கடவுள் செய்யவில்லை என்று கூறுகிறது.

பொருள் :

தானே தோன்றிய வேதங்களைக் கூறுவதற்கும் கடவுள் உண்டு என்றும், அக்கடவுள் உயிர்க்குரிய தன்மை உடையவன் அல்ல என்று யாரேனும் கூறினால் அது முரண்பாடு உடையதாகும். ஏனென்றால் வேதத்தைச் சொன்னான் கடவுள் என்றால் அவனுக்கு உருவம் வேண்டும், அப்படி உருவத்தை உடையவனாயின் அவன் ஆன்மாவுக்குரிய தன்மையை உடையவன் ஆகின்றான். அப்படிச் சரீரம் உடைய ஆன்மாத் தன்மை உடைய கடவுள் தான் கற்ற அளவே அறிவுடையவன் ஆகின்றான். மேலும் அவனுக்கு வடிவில்லை ஆயின் வேதத்தைச் சொல்லுகின்ற தன்மையும் இல்லை. ஆதலால் வேதமானது தானே தோன்றியது ஆகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் இம்மதத்தார் வேதங்களைக் கடவுள் செய்தான் என்பதை மறுப்பதாகக் கூறப்படுகிறது. வேதம் தானே தோன்றியது என்ற கொள்கையையும் வலியுறுத்தப் பெறுகிறது.

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் நரரும் மற்றும்
யாவரும் உரைப்பர் வேதம் இயம்பினர் இன்னர் என்னப்
போவதுஅன்று என்று நாளும் பரம்பரை புகல்வதாகும்
கூவல்நீர் என்னில் கொள்ளோம் மறுமையைக் குறித்த லாலே. [184]

இப்பாடல் வேதம் சுயம்பு என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

திருமால், பிரம்மன் முதலிய தேவர்களும், அகத்தியர் முதலிய முனிவர்களும், சித்தர்களும், மனிதர்களும் வேதத்தைச் சொன்னவர் இன்னார் என்று தமக்குத் தெரியாது என்பதில் உடன்பட்டவர்கள் ஆவர். ஆகையால் வேதமானது காலங்காலமாகப் பழமை உடையதாகும். கிணற்றுநீர் போலத் தானே தோன்றியது என்ற உவமையையும் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஏனென்றால் கிணறு ஒருவனால் தோண்டப் பெற்று அதில் நீர் தோன்றுகிறது. மேலும் கிணற்றுநீர் மறுமை இன்பம் தரக்கூடியதும் அல்ல.

விளக்கவுரை :

இப்பாடல் வேதத்தை இயற்றியவர் யார் என்று தேவர் முதல் மனிதர்வரை யாருக்கும் தெரியாததாகையால் வேதம் சுயம்பு என்ற இவர்தம் கொள்கையைக் கூறுகிறது. சுயம்பு என்பதற்குப் பிறரால் கூறப்படுகின்ற கிணற்றுநீர் என்ற உவமையையும் இம்மதத்தார் மறுப்பர். அதனையும் இப்பாடல் கூறுகிறது.

உன்னிய அங்கம் ஆறும் மூன்றுஉப வேதம் தானும்
தன்னுளே அடக்கி வேறு தங்கிடா வகையைச் சார்ந்து
முன்னமோர் தோற்றம் இன்றி முடிவின்றி நித்தம் ஆகி
மன்னிஓர் இயல்பே யாகி வழங்கிடும் மறையது என்றான். [185]

இப்பாடல் வேதங்களின் பெருமையைக் கூறுகிறது.

பொருள் :

நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களைப் பெற்றுள்ளன. மூன்று உபவேதங்களைத் தன்னுள் அடக்கியுள்ளன. வேதங்களில் கூறப்படாத பொருள் வேறு எந்த நூலிலும் இல்லை. இவ்வேதங்கள் தோற்றமும் முடிவும் அற்றவை. என்றும் நித்தியமானவை. அவற்றின் இயல்பு ஒருபோதும் மாறுவதில்லை. மாறுபாடு அற்றவை என்று வேதத்தின் சிறப்பைப் பட்டாச்சாரியன் கூறுகிறான்.

விளக்கவுரை :

ஆறு அங்கங்கள், சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி என்பன. மூன்று உபவேதம் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம், உன்னிய - கருதப்பட்ட.

செய்தியும் நெறியும் மேவும் தேவரும் பொருளும் எல்லாம்
எய்திய பன்மை யாலே ஓர்இயல்பு இயம்பாது ஆகும்
ஐயமில் காலம் மூன்றும் அறிந்தபின் நெஞ்ச கத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி விளங்கிடும் வேத நூலே. [186]

இப்பாடல் வேதங்கள் நிற்கின்ற முறைமையையும் சொல்லுகின்ற முறைமையையும் கூறுகிறது.

பொருள் :

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் பல செய்திகளும், இச்செய்திகள் நடைபெறுகின்ற நெறிகளும், அவ்வழியிலே செயல்படுகின்ற தேவர்களும் அவர்களால் உலகத்தார்க்கு அளிக்கப் பெறுகின்ற இவ்வுலக, மேலுலக உதவிகளும், வேதங்களில் சொல்லப் பெறுகின்றன. எனவே வேதங்களில் பல்வேறு வகைப்பட்டன எடுத்துரைக்கப்படுகின்றன. ஆதலால் வேதங்களில் கூறப்படுகிற க்ருத்துகளும் ஒரே இயல்புடையன என்று கூறமுடியாது. இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலத்தையும், வேதங்களைப் பயின்று அவற்றின் வழி ஒழுகி அறிந்தவருடைய நெஞ்சம் மெய்ம்மையைப் பொருந்தி விளங்கும்.

தப்பிலா வாகும் தாதுப் பிரத்தியம் தன்னி னோடே
ஒப்பிலா தாம்பி ராதி பதிகாமம் உறுப்பும் கொண்டு
செப்புமாம் வேதம் சொன்ன விதிப்படி செய்யச் சேம
வைப்பதாம் வீடு பாசம் மருவலாம் ஒருவ லாமே. [187]

இப்பாடல் வேதங்களில் கூறப்பட்டவைகளை முறைப்படி நிகழ்த்தினால் வீடுபேறு கிடைக்கும் என்று கூறுகின்றது.

பொருள் :

வேதங்கள் நான்கும் குற்றமற்ற சொற்களால் கூறப் பட்டவையாகும். பகுதி, விகுதி, உவமையில்லாததாகிய பெயர்ப் பகாப்பதம் என்னும் அவயவங்களை உடையதாகும். மந்திரங்கள் ஓதுவது, அவற்றை ஓதி யாகம் முதலியவற்றைச் செய்வது ஆகியவை முறையாக வேதங்களில் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறு கூறப் பெற்றுள்ளவைகளை விதிப்படி செய்தால் பாசங்களை நீக்கி உயிர்களானது வீடுபேற்றை அடையக் கூடும்.

தப்பிலா ஆகும் - குற்றமற்ற சொற்களால் ஆகியவை, தாது - பகுதிகள், பிரத்தியம் - விகுதிகள், பிராதிபதிகம் - பகாப்பதம் (பெயர்ச்சொல்)

போக்கொடு வரவு காலம் ஒன்றினில் புணர்வது இன்றி
ஆக்கவேறு ஒருவர் இன்றி அநாதியாய் அணுக்கள் ஆகி
நீக்கிடா வினையில் கூடி நிலம்முத லாகநீடி
ஊக்கமார் உலகம் என்றும் உள்வதுஎன்று உரைக்க லாமே. [188]

இப்பாடல் இறைவன் இல்லை, உலகம் அநாதி என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

வலிமை நிறைந்த இந்த உலகம் அழிவதும் தோற்றமும் இல்லாதது ஆகும். எனவே காலத்தோடு பொருந்துவது இல்லை. காலத்தைக் கடந்த ஒன்றாகும். இந்த உலகத்தை உண்டாக்குவதற்கும், காத்திடுவதற்கும் கடவுள் என்ற ஒருவன் வேண்டுவதில்லை. எனவே உலகமானது அநாதியாய் உயிர்களோடு சம்பந்தம் உடையதாய், நீக்கப்படாத புண்ணிய பாவங்களோடு கூடியதாய், நிலம் முதலாகிய தத்துவங்களோடு நிலையற்றதாய், என்றைக்கும் உள்ளதாய் விளங்கும் என உலகத்தைப் பற்றிக் கூறலாம்.

நித்தமாய் எங்கும் உண்டாய் நீடுயிர் அறிவு தாணைப்
புத்திதான் ஆதி யாய கருவியின் புறத்தது ஆகிச்
சுத்தமாய் அருவம் ஆகித் தொல்லைவல் வினையின் தன்மைக்கு
ஒத்ததோர் உருவம் பற்றிப் புலன்வழி உணர்ந்து நிற்கும். [189]

இப்பாடல் ஆன்மாவின் முறை பற்றிக் கூறுவதாகும்.

பொருள் :

உலகத்தில் நிலைபெற்ற ஆன்மாவானது அழிவில்லாததாகும். எங்கும் பரந்து நிற்பதாகும். அறிவையே தனக்கு வடிவமாகக் கொண்டதாகும். புத்தி முதலாகிய தத்துவங்களோடு பொருந்துகின்ற பொழுது தனக்குரிய இயல்பை மாறாது பெற்றிருப்பதாகும். தத்துவங்கள் தன்னிடத்திலிருந்து முற்றிலும் நீங்குகின்ற பொழுது குற்றமற்று இருக்கும் இயல்பை உடையதாகும். அருவமானதாகும் தொன்று தொட்ட காலம் முதல் தொடர்ந்து வருகின்ற புண்ணிய பாவங்களுக்கு ஏற்பட உடலாகிய உருவத்தைப் பெற்று இந்திரியங்கள் வழியாகக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து வருகின்ற உணர்வினை உடையதாகும்.

விளக்கவுரை :

புத்திக்குரிய ஆதியாகிய கருவிகள் - இந்திரியம் முதல் பிரகிருதி ஈறாகிய தத்துவங்கள் இருபத்தி நான்கு ஆகும். இவற்றின்

புறத்து ஆதி என்பதால் இத்தத்துவங்களோடு கலந்திருந்தாலும் தனக்குரிய இயல்பிலிருந்து மாறாது ஆன்மா என்பர்.

செயல்தரும் வினைகள் மாய்ந்து சிந்தையில் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும் பலாலமும் தழையும் எல்லாம்
வயல்தனின் மருவி நாசம் வந்தபின் பலத்தை வந்துஇங்கு
இயல்பொடும் தந்தாற் போல என்றும்பின் இயம்பு கின்றான். [190]

இப்பாடல் ஆன்மாவிற்கு உம்மைப் பயன் - இம்மையில் ஊட்டப்பெறும் என்கிறது.

பொருள் :

ஆன்மா முன்பிறப்புக்களில் மனம், மொழி மெய்களால் இயற்றிய புண்ணிய, பாவங்கள் செய்த உடம்போடு தூலநிலை கெட்டு, சூட்சும நிலை பொருந்தும். அவ்வாறு பொருந்துகின்ற பொழுது அதனுடைய வினைப்பயன்கள் ஆன்மாவோடு என்றைக்கும் பற்றியபடியே இருக்கும். மீண்டும் உலகில் பிறப்பு எடுக்கின்ற பொழுது பற்றி நின்ற வினைப்பயன்களும் இப்பிறப்பில் பொருந்தி இருக்கும். இது எதுபோல என்றால் வைக்கோல், தழை முதலானவை உரமாக வயலில் இட்டபோது அவற்றின் வடிவம் அழிந்து, அவற்றின் ஊட்டச்சத்தானது வயலுக்குள்ளே கிடந்து மீண்டும் பயிர் செய்யும் பொழுது அப்பயிருக்கு உரமாகப் பயன் தருவது போன்றதாகும் என்று பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

பலாலம் - வைக்கோல், பலம் - பயன்

நீதியால் நித்த கன்மம் நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்
தீதிலா இச்சா கன்மம் செந்தழல் ஓம்பிச் செய்ய
ஏதுதான் வேண்டிற்று எல்லாம் எய்தலாம் சோம யாகம்
ஆதிதான் ஆசை வீசி அமைத்திட வீடு அது ஆமே. [191]

இப்பாடல் வேதங்களில் கூறப்பெற்ற கன்மங்களால் வீடுபேறு கிடைக்கும் என்று கூறுகின்றது.

பொருள் :

வேதங்களில் கூறப்பட்ட கிரியைகளை நாள்தோறும் தவறாது செய்து வந்தால் நலத்திலிருந்து நீங்கார். தாம் தாம்

விரும்பிய செல்வங்களையும், வளங்களையும் பெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் முத்தீயை வளர்த்து. வேதங்களில் விதித்த சடங்குகளைச் செய்ய வேண்டும். சோமயாகம் முதலிய யாகங்களை அதிகப் பொருள் செலவழித்துச் செய்தால் வீட்டுப்பேறு கிடைக்கும்.

நீதியால் - விதிக்கப்பட்ட, கன்மம் - கிரியைகள், சுபம் - இன்பம், செந்தழல் - முத்தீ, தீதிலா இச்சா - குற்றமற்ற விருப்பம், சோமயாகம் - வேள்விகளில் ஒன்று, ஆதிதான் - அதுமுதலாக, ஆசை - இங்கு பொருளைக் குறித்தது.

கருதிய கன்மம் ஞானம் இரண்டும்கா லாகக் கொண்டு
மருவிடல் ஆகும் வீடு மதிதனை மதித்துச் செய்தி
ஒருவிடில் பதிதன் ஆகும் பதிதனைக் கதியில் உய்க்கத்
தருவதோர் நெறிதான் இல்லை என்னவும் சாற்றி னானே.

[192]

இப்பாடல் விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்யாமல் ஞானம் கிடைக்காது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

வேத சூத்திரங்களால் சொல்லப்பட்ட கிரியைகளைத் தவறாமல் செய்வதாலும், வேதத்தைச் சுயம்பு என்று கருதுகின்ற ஞானத்தாலும் வீட்டின்பத்தைப் பொருந்தலாம். ஞானத்தை மட்டும் கைக்கொண்டு கன்மமாகிய கிரியைகளைச் செய்யாது விட்டால் இழிந்தவர்கள் ஆவர். அதிதகைய இழிந்தவர்களை மீண்டும் நல்ல நெறியில் செலுத்துவதற்கு உரிய கழுவாய்கள் வேதத்தில் கூறப்படவில்லை என்றும் பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

காலாக - வழியாக, ஒருவி - விடுதல்.

பசுப்படுத்து இயாகம் பண்ணப் புண்ணியம் ஆவது என்று
வசிப்பில்நான் மறைகள் சொன்ன வழக்கினால் வாய்மை யாக
நசிப்பிலா மந்தி ரங்கள் நவிற்றலின் இன்பம் ஆகும்
பசிப்புளான் ஒருவன் உண்ணப் பசியது தீர்ந்த பண்பே. [193]

இப்பாடல் கிரியைகளால் யாகம் செய்தவர்களுக்கு வீடுபேறு கிடைக்கும் என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

யாகப் பசுவைக் கொன்று வேதங்களில் கூறப்பட்ட வேள்விகளை முறைப்படி இயற்றினால் புண்ணியம் கிடைக்கும். மேலும் வேதங்களில் கூறப்பெற்றவற்றை உண்மையாகக் கொண்டு மந்திரங்களைத் தவறாது உச்சரித்தால் இன்பம் கிடைக்கும். எனவே இவ்விரண்டினாலும் வீடுபேறு எய்தலாம். இது எது போல என்றால் பசி கொண்ட ஒருவன் உணவு உண்ட உடன் அவனுடைய பசி நீங்கி இன்பம் அடைந்தாற் போன்றதாகும். இவ்வாறு பட்டாச்சாரியன் கூறுகின்றான்.

விளக்கவுரை :

பசுப்படுத்து - யாகப்பசுவைக் கொன்று, நசுப்பிலான் - மறையாத. யாகங்களைச் செய்வதற்கு பசித்துண்டு - துன்பம் நீங்குதலை - சிவஞான போதம் எட்டாம் சூத்திர உதாரண வெண்பா ''பசித்துண்டு பின்னும் பசிப்பானை'' எனக் குறிப்பிடும்.

பட்டாச்சாரியன் மதம் மறுதலை

வேதம் சுயம்புஎன வேதந்த வாய்மொழியில்
வேறும்பிர மாணம் உவதேல்
நீதந்து காண்இங்கு மாதுங்க பாரதமும்
நேர்கண்ட தாகும் அதுபோல்
ஓதும் சொலாய்வருத லானும் கடாதிபட
மோவந்தி டாஒ ருவரா
லேதந்த தாம்மறைக ளாய்வந்த வாய்மொழியும்
வேறுஇந்து சேக ரனதே. [194]

இப்பாடல் முதல் பட்டாச்சாரியன் கருத்துக்களை ஆசிரியர் மறுக்கிறார். இப்பாடல் வேதம் சுயம்பு என்பதை மறுக்கிறது.

பொருள் :

பட்டாச்சாரியனே, வேதம் ஒருவராலும் செய்யப்படாது தானே தோன்றியது என்று கூறுகின்றாய். ஆனால் இதற்கு வாய்மொழியைத் தவிர வேறு எந்தப் பிரமாணமும் இல்லை.

மேலும் அவ்வேதமும் தன்னைப் பற்றி இவ்வாறு ஓரிடத்திலும் கூறவில்லை. மகாபாரதத்தினை நீ பிரமாணம் என்று சொல்லலாம். ஆனால் அப்பாரதமும் வியாசரால் கூறப்பெற்று ஐந்தாவது வேதமாக விளங்குகிறது. எனவே நீ கூறுகின்ற வேதங்களும் ஒருவனால் செய்யப் பெற்றதாக வேண்டும். குடங்கள், துணிகள் வனைவாரும், நெய்வாரும் இன்றித் தானே வந்திடாது. அதுபோல வேதமும் ஒருவனால், பிறை அணிந்த எங்கள் பெருமானால் வந்த மொழியே என்று அறிக.

விளக்கவுரை :

வேதம் சுயம்பு என்றும், அதற்குக் காட்டு மகாபாரதம் என்றும் இம்மதத்தார் கூறுவர். இதனை மறுத்து மகாபாரதம் வியாச முனிவரால் செய்யப்பட்டது என்ற கருத்தைக் கொண்டு வேதம் ஒருவரால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்ற ஆசிரியர் நிலை நாட்டுகிறார்.

உரைதந்தி டான்ஒருவன் எனில்இந்த வானின்இடை
ஒலிகொண்டு மேவி உவதாம்
புரைதந்த வாம்மறைகள் அபிவெஞ்ச மாயொளிர்கை
பொருள்தந்த தீபம் அதுவேல்
வரைதந்த தால்இவ்வுரை கபிலன்சொல் ஆகுமது
மறைநின்ற வாறும் வரவும்
விரைவில் சொலாய் இதனை எதுகொண்டு மேவுவது
விடைகொண்டதால் உன் உரையே. [195]

இதுவும் அது.

பொருள் :

வேதம் தானே தோன்றியது என்றும், அதனை உரைத்தவன் யாரும் இல்லை என்றும் நீ கூறுகிறாய். அவ்வாறு நீ சொல்லுவதால் அவ்வேதங்கள் விண்ணிடத்திலிருந்து ஓசை வடிவாகத் தாமே தோன்றி சொல்லாகி உண்டானதாக வேண்டும். அவ்வாறு கொண்டால் அவை பொருள் விளக்காமல் குற்றம் உடையதாகும். வேதமானது பொருள்கள் அனைத்தையும் விளக்கி - தம்மையும் விளக்கி - விளக்கானது பொருள்களைக் காட்டித் தானும் பிரகாசித்து நிற்பதைப் போல

அமைகிறது என்று நீ கூறினால் அதுவும் பொருந்தாது. ஏனென்றால் விளக்கானது ஒரு எல்லைக்கு உட்பட்டுத்தான் விளக்கும். அதுபோல வேதமும் பரந்துபட்ட நிலையில் அமையாது ஒரு எல்லைக்குள் அகப்பட்டதாய் அமையும். நீ கூறிய இக்கருத்து நிரீசுர சாங்கியத்தான் கூறுகின்ற கருத்தாகும். வேதமானது அருவாய் இருந்து உருவாய்த் தோன்றின என்று நீ கூறும் கொள்கைக்கு ஆதாரம் எது? கூறுவாயாக.

விளக்கவுரை :

இப்பாடலில் வேதமானது சுயம்பு என்பதை மறுத்து, அது விண்ணிலிருந்து ஓசை வடிவாய்த் தோன்றியது என்றால் அதில் பொருள் பிழைபடும் என்று கூறி மறுத்து, வேதத்தைச் சொன்னவன் ஒருவன் வேண்டும் என்று வலியுறுத்துகிறார் ஆசிரியர். மேலும் அருவாய்த் தோன்றி (ஓசையாய்) உருவாய்த் (வேதநூலாய்) தோன்றியதற்கு ஆதாரம் யாது? என்ற வினாவையும் ஆசிரியர் அமைத்துள்ளார். கபிலன் என்பவர் நீரிசுர சாங்கியத்தின் கொள்கையைத் தந்தவர் ஆவார்.

உருவின் கணேமருவி வரில்இன்று தேரர்உரை
உளதுஉங்கள் நூலின் மறையும்
தருகின்ற நாதர்அவர் இவர் என்று நாமமது
தரவந்திடாமை அதனால்
வரும்என்று நேடியெனில் வளர்கின்ற தீவதனில்
வருகின்ற ஆடை பலவால்
ஒருதந்து வாயன் அவன் இவனென்ற போதில்இவை
உளஎன்று நீடி யவையே. [196]

இதுவும் அது.

பொருள் :

வேதமானது யாதோர் உருவத்தைப் பற்றி மனத்தை இடமாகக் கொண்டு பிரகாசிக்கும் என்றுநீ சொல்லுகின்றாய். யாதோர் உருவம் என்பதால் உருவம் பற்றிய வரையறை இல்லாததால் தேரையிடத்து உண்டாகிய ஒலியிலும் நீர் கூறுகின்ற வேதம் பிறக்கும் என்று கொள்ளவேண்டும். மேலும்

வேதத்தைத் தோற்றுவித்தவன் யார்? என்று அவனுடைய பெயரைக் குறிப்பிட்டு வேதம் கூறவில்லை. எனவே தானே தன்னை ஓதத் தக்க ஒருவனைத் தேடி அவனிடத்திலிருந்து வேதம் பிறக்கிறது என்று நீ மறுமொழி தந்தால் அதுவும் தவறாகும். வெளிநாடுகளாகிய தீவுகளில் இருந்து வருகின்ற ஆடைகள் பலவாகும். அவற்றை நெய்தவரை நாம் கண்டதில்லை. அதற்காக நெய்தவரே இல்லை என்று கூறமுடியுமா? எனவே ஆடையைக் கண்டபோதே நெய்தவர் உளர் என்று தோன்றுவது போல வேதத்தின் சொற்களின் அடிப்படையில் அதனைத் தந்தவன் ஒருவன் வேண்டும் என உணரலாம்.

விளக்கவுரை :

இப்பாடலில் ஆடைகளைப் பார்க்கும்போது அதனை நெய்தவர் உண்டு என்ற உவமை போன்று, வேதத்தைப் படைத்தவன் உண்டு என்று ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

தேரர் - தேரை, நாதர் - வேதத்தைத் தருபவர், நாமம் - பெயர்.

மறைநின்று நாலுதிசை யவர்ஒன்ற தாகவரும்
உரைதந்த் வாய்மை அதனால்
நிறைவென்று நீடும்எனில் வனையும் கடாதிபல
சொலவொன்றி நீடி உளதாம்
குறைவின்றி நாடும்மொழி அவைசென்று கூடுவதோர்
குணமுண்டது ஆகும் மலர்தான்
உறைகின்ற மாலைதனில் உளதென்றது ஆகுமெனில்
உணர்வின்றது ஆழி ஒலியே. [197]

இதுவும் அது.

பொருள் :

நான்கு திசைகளிலும் வாழுகின்ற பல்வேறு பட்ட மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசினாலும் அந்நான்கு திசைகளில் உள்ள நாடுகளிலும் நான்கு வேதங்களும் உண்மை எனக் கொண்டு ஓதப்பட்டு வருகின்றன. ஆதலால் வேதங்கள்

ஒருவரால் இயற்றப் பட்டதல்ல என்று நீ கூறலாம். நீ கூறிய பல்வேறு ஊர்களிலும் பல்வேறு குயவர்களால் பல்வேறுபட்ட உருவங்களாகச் செய்யப்பெற்ற மண்குடங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு எல்லாம் காரணமாக (வனைந்தவன்) விளங்குகின்ற ஒருவன் உண்டு என்பது உறுதி. அது போலவே குற்றமின்றி அறியப்படும் சொல்லும் பொருளும் அமைந்த வேதத்திற்கு அதனைப் பொருந்திய கர்த்தா உண்டாதல் வேண்டும். உடனே, இதற்கு நீ மறுமொழியாகப் பல மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளில் மணம் உண்டாவதைப் போல வேதத்தைப் பிழையற ஓதினால் இன்பம் விளையுமென்று கூறுகிறாய் கடலலை ஆரவாரத்தைப் போன்ற உன்னுடைய பதிலும் பொருளற்றதாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் வேதமானது பல மொழிகளில் பல நாடுகளில் ஓதப்படுவதால் சுயமானது என்று கூறுகின்ற கருத்தை ஆசிரியர் மறுத்துரைக்கிறார். வேதங்களில் உள்ள சொல்லையும் பொருளையும் விளங்குமாறு கூட்டுவிக்க ஒருவன் வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

உடல்நின்று நாம்உணரும் அதுகண்ட வாறுஒருவன்
உலகங்க ளேஉ ருவமாய்
இடைநின்று மாமறைகள் அவைஅன்று வாய்மொழிய
இவைகொண்டு லோக நெறியின்
கடன்நின்று வாழும்அது கருதும்பின் ஆணைவழி
கருமம்செய் காசினி யுளோர்
திடமென்று சீர்அரசன் உரைதங்கும் ஓலைதிரு
முகம்என்று சூடு செயலே. [198]

இப்பாடல் வேதத்தைப் படைத்து மொழிந்தான் ஒருவன் என்பதைப் பல சிறப்புக்களால் வலியுறுத்துகிறது.

பொருள் :

உடம்பை இடமாகக் கொண்டு ஆன்மா உலகை அறிந்து வருகிறது. அதுபோலவே இறைவன் பிரபஞ்சத்தைத் தனது மேனியாகக் கொண்டு பிரபஞ்சத்திலேயே எழுந்தருளியிருந்து

பெருமை மிக்க வேதங்களை அருளிச் செய்தான். வேதங்கள் அவனுடைய ஆணையாகும். அவ்வேதங்களில் கூறப்பெற்ற நெறிமுறைகளை ஏற்று உலகமும் வாழந்து வருகிறது. அநாதியான இறைவன் அருளிச் செய்ததால் வேதங்கள் அநாதியாகவும் சுயம்பாகவும் போற்றப் பெறுகின்றன. அது எதுபோல என்றால் ஓர் அரசனானவன் தன் ஆணையை வெளியிடும்பொழுது ஏடுகளில் எழுதி வெளியிடுகின்றான். அந்தத் திருமுகமாகிய ஏடுகளில் உள்ள ஆணைகளின்வழி மக்களும் நடக்கின்றனர். அவ்வாறே இறைவனால் மொழியப்பெற்ற வேதங்களையும் மக்கள் பெருமையாக ஏற்கின்றனர்.

விளக்கவுரை :

இப்பாடலில் வேதங்களின் பெருமைகளைக் கூறி அரசாணை மக்களை நெறிப்படுத்துகிறது போல வேதமும் மக்களை நெறிப்படுத்துகிறது என்கிறார் ஆசிரியர். இப்பாடலில் மறுப்பு ஏதும் கூறப்படவில்லை என்பது கருதத்தக்கது.

முடிவின்றி வேதியர்கள் முதல்வந்த மூவர்களும்
மொழியும் சொல் ஆரியம் எனில்
கடிவின்றி யேகணிதர் அவர்கண்ட வாறதுவென்
வடகண்ட சாதி கடியா
ஓடிவின்றி ஓதுவதுஎன் உரைதங்கு வேதமொழி
உளதென்று கூறும் அவர்தாம்
அடியின்று தான்எனும்அது அறிவின்றி ஈனுமவர்
இலையென்ற ஆதரவதே. [199]

இப்பாடல் வேதம் மூன்று வருணத்தார்க்கு உரியது என்பதை மறுக்கிறது. அதாவது வேதம் எல்லோரும் ஓதக்கூடாது என்பதனை மறுக்கிறது.

பொருள் :

வடமொழியில் உள்ள வேதங்கள், பிராமண சத்திரிய, வைசியர் என்ற மூன்று வருணத்தார்க்கே உரியது என்று நீ கூறுகிறாய். சோதிடம் என்னும் கணிதத்தை வேதத்தின் ஓர்

அங்கத்தினின்றும் நீ நீக்கவில்லை. ஏற்றுக் கொள்கிறாய். அந்தச் சோதிடத்தில் நான்காவது வருணத்தார் வல்லவர்களாக விளங்குகின்றார்களே எவ்வாறு? (அவர்கள் எவ்வாறு வேதத்தில் கூறிய கணிதத்தை அறிந்தார்கள்) மேலும் வடநாட்டுப் பகுதியில் நான்கு வருணத்தாரும் வேதத்தை ஓதுவதற்கு உரிமை உடையவர்கள் என்று கூறப்படுவது ஏன்? மேலும் இவ்வாறு எல்லோராலும் ஓதப்படுகின்ற வேதம் சொல் வடிவாகத்தானே தோன்றுகிறது. அதனைத் தந்தவன் ஒருவன் இல்லை என்று சொன்னால் பிள்ளையைப் பெற்ற தாய் இல்லை என்று கூறுவது போன்றதாகும்.

விளக்கவுரை :

இப்பாடல் மூலம் வேதம் மூவர்க்கு உரியது என்பதை மறுத்து, நான்கு வருணத்தாரும் வேதத்தை ஓதுவது இயல்பு என்று கூறுகிறார் ஆசிரியர்.

ஒடிவின்றி - நான்காவது வருணத்தார் தவிர்தலின்றி, ஈனும் அவர் - உண்டாக்கியவர், வடகண்டசாதி - வடநாட்டில் உள்ள நால்வகை வருணத்தார்.

அறிகின்ற பான்மைஅவ யவம்நின்ற தாகில்அணு
அழியும் கடாதி யெனவே
செறிகின்ற வாறதுஇலை எனின்வந்து சேருமது
திடமென்று கூட ஒருவன்
குறிகொண்டு காரின்முளை வருகின்ற பீசம்அவை
குலையொன்றி வேனில் அழியும்
உறுகின்ற காலமவை உடன்நின்று போயழியும்
உலகென்றும் நீடி யிலதே. [200]

இப்பாடல் பிரபஞ்சம் அழியும் என்பதையும், ஆன்மா அழிவில்லாதது என்பதையும் வலியுறுத்துகிறது.

பொருள் :

நிலையான ஆன்மாவானது தன் அருவ நிலைமாறி உடம்பில் உள்ள உறுப்புக்களோடு கூடி உடம்பாகிறது என்று (பட்டாச்சாரியனே) கூறுவாயானால் உடம்பின் உறுப்புகள் அழியும்போது ஆன்மாவும் அழியவேண்டும். (அழிந்தால்

அது நிலைபேறுடையது அல்ல). இல்லை, இல்லை, உடல் உறுப்புகள்தான் நிலைபேறுடைய ஆன்மாவைச் சேர்கின்றன என்று நீ கூறினால் அதுவும் தவறு. அறிவற்ற சடப் பொருள்கள் தாமே சென்றடைய மாட்டா. ஒருவன் கூட்டினால்தான் உடம்பும் உயிரும் கூடும். கார்காலத்தில் விதையிலிருந்து முளை தோன்றி செடியாக வளர்பவை வேனிற் காலத்தில் வாடி வதங்கும். அது போலவே உலகம் தோற்றம், நிலைபேறு, கெடுதல் என்ற மூவகைத் தொழிலோடு பொருந்தி நிற்கும். உலகம் எந்நாளும் நிலைபேறு உடையது என்பது பொருந்தாது.

விளக்கவுரை :

இப்பாடலில் ஆன்மா அவயவங்களாகத் திகழவில்லை என்பதனையும் அவயவங்கள் ஆன்மாவதில்லை என்பதையும் ஆசிரியர் வலியுறுத்துகிறார். மேலும் உவமை மூலம் உலகம் முத்தொழில் வயப்பட்டது என்று கூறி உலகம் நிலையற்றது என்பதை நிறுவுகிறார். அணு - உயிர், பீசம் - விதையின்முளை.

நிறைவெங்கு மாகிலஉயிர் நெறிநின்று போய்வருதல்
அணைவின்ற தாம் உடலிலே
குறைவின்று எலாமும்உள குடகந்த மாகில்அவை
விடநின்ற வாறு குறியா
உறைகின்ற மாதவர்கள் உடல்நின்று போய்வறிதொர்
உடல்கொண்டு மீள்வது உணராய்
மறைதந்த வாய்மையதில் நிறைவின்றி யேஉலகின்
மலைகின்ற தால்உன் உரையே. [201]

இப்பாடல் ஆன்மா உடலில் நிறைந்து நிற்கிறது என்ற கொள்கைகளுக்கு மறுப்பினைத் தருகிறது.

பொருள் :

பட்டாச்சாரியனே உமது கருத்துப்படி ஆன்மா உலகில் எங்கும் நிறைந்திருக்கும் பொருள் என்பதாகும். அப்படியானால் ஒருவரது ஆன்மாவானது இப்பிறவியில் நல்வினைகள் செய்ததற்கு ஏற்பச் சுவர்க்கத்தைச் சென்று

புண்ணியத்தை அனுபவித்துப் புண்ணியம் தொலைந்த பிறகு மீண்டும் இந்த உலகத்திற்கு வரும் என்னும் உம்முடைய வேதக் கருத்து பொருந்தாதது ஆகும். (உடனே நீ அதற்கு) அவ்வாறன்று, எல்லா ஆன்மாக்களும் உடலோடு கூடி, குடத்திற்குள் இட்டு வைத்த மலரின் மணம் போன்று நின்று குடம் உடைகின்ற வரைக்கும் அதற்குள்ளே நிற்பது போன்றது என்று பதில் கூறலாம். அப்படியானால் குடம் உடைந்தபோது மணமானது வெளியே சிதறிப்போவது போல ஆன்மாவும் சிதறிப் போய்விடும் என்ற முடிவுக்கு வரவேண்டும். மேலும் உடல் கெட்டபொழுது உயிர் கெடாமல் தான் எதில் சேர்வது என்று வழி தெரியாமல் நிற்கும். யோகநெறியில் நிற்கின்ற சான்றோர்கள் தம் உடம்பை விட்டு வேறோர் உடம்பில் புகுவது பொருந்தாமல் போய்விடும். எனவே ஆன்மாவானது எங்கும் நிறைந்தது என்ற கொள்கை வேதங்களில் கூறப்படுகின்ற கொள்கைக்கு மாறுபட்டு அமைந்தது ஆகும்.

விளக்கவுரை :

ஆன்மாவானது உடம்பினுள் எல்லா இடத்தும் நிறைந்திருக்கும் என்ற கொள்கை வினாக்களால் மறுக்கப்படுகிறது. மேலும் ஆன்மாவானது குடத்தில் வைக்கப்பட்ட பூவின் மணம் போன்றது என்று இம்மதத்தார் கூறுகிற உவமையும் மறுக்கப்பட்டு எங்கும் நிறைந்திருக்கும் என்ற கொள்கையும் அவர்தம் வேதத்தில் கூறப்படுகின்ற கொள்கைக்கு மாறுபாடாக அமையும் என்று கூறப்பட்டு மறுக்கப்படுகிறது.

நிறைவு - நிறைந்திருக்கும், நெறி - நித்திய கன்மம் முதலாகிய நல்நெறி. வருதல் - மீண்டும் உலகிற்கு வருதல், அணைவுஇன்றதாம் - வேதக்கருத்து இல்லதாம், குடகந்தம் - குடத்தில் வைக்கப்பட்ட பூக்களின் மணம், மாதவர் - யோகியர்.

அழிகின்ற தால்வினைகள் ஆகின்ற வாறுஎன் எரு
அதுமங்கியான பரிசேல்
ஒழிவின்றி ஓதனமும் அறவுண்ண நாம்வினைகள்
உறுகின்ற வாறது எனலாம்

சுழிகின்ற தால்அறிவு வினைதந் திடாவினைசூர்
கருமங்கள் நாடி உறுவோர்
பழிதின்றி யேஉதவும் அதுபண்ப தாகஅருள்
பரமன்கண் ஆகும் வினையே. [202]

இப்பாடல் கன்மமும் ஆன்மாவும் தாமே கூடும் என்பதை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

ஒருவனுடைய உடலோடு கூடிநின்று ஒருவன் செய்த கன்மங்கள் உடல் கெட்டவுடன் தாமும் கெடும். ஆதலால் அடுத்த பிறவியில் வினை செய்தவனை எப்படி வந்து பற்றும்? என்று நாங்கள் கேட்கிற கேள்விக்கு (நீ உடனே) வயலில் இட்ட எரு தனது தூல முறைமை கெட்டு சூட்சும முறைமையாகி உரம் போன்று அமைந்து பயிருக்கு நன்மை கொடுக்குமாறு போல, செய்த கன்மவினையும் உடலோடு பொருந்தி நின்று தூல முறைமை கெட்டு ஆன்மாவோடு சூட்சும முறையில் தாமே பொருந்தி நிற்கும் என்று நீ சொல்லலாம். அது எப்படி இருக்கிறது என்றால் நாம் உண்ட உணவு செரித்து மலமாக உடலைவிட்டு வெளியேறியபின் மீளவும் நமக்கு நன்மையைத் தரவரும் என்று கூறுவார் கூற்றுப் போன்றதாகும். எனவே உடம்போடு கூடிச் செய்த வினை உடம்பு கெடும்பொழுது தாமே அறிந்து தம்மைச் செய்த ஆன்மாவோடு வினை கூடுதல் இயலாது. ஒருவனைப் பணிக்கு அமர்த்தியவன் அவனுடைய பணிகளைக் கண்டு அந்தப் பணிகளுக்கு ஏற்ப உரிய ஊதியத்தைப் பழுதின்றிக் கொடுக்கும் தன்மைபோல ஒரு ஆன்மா செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்பத் தக்க பயன்களை ஆன்மாவுக்குக் கொடுப்பவன் பரமேசுவரனாகிய இறைவன் என்பதை உணர்வாயாக.

விளக்கவுரை :

இப்பாடலில் ஒரு ஆன்மா உடலோடு கூடியிருந்து செய்கின்ற கன்ம வினைகளுக்கு ஏற்பப் பயன்கள், அவ்வுடம்பு கெட்டு மீண்டும் மற்றொரு உடம்பு எடுக்கும்பொழுது ஆன்மாவோடு தாமே சென்று கூடும் என்ற கருத்து மறுக்கப்படுகிறது. தழை உரமாகிப் பயன்தருகிறது என்ற

உவமையும், உண்ணும் உணவு மலமாகி வெளிவந்த பிறகு மீண்டும் பயன்தரும் என்ற கூற்றைப் போன்றது என்பதால் மறுக்கப்படுகிறது. இவ்வாறு மறுக்கப்பட்டு வினைகள் தாமே சென்று கூடும் என்ற கொள்கை பொருந்தாது என்று கூறப்படுகிறது.

எரு - உரம், வினைஞர் - தொழில்செய்வோர், உறுவோர் - தொழில் கொள்வோர்.

கருமங்கள் ஞானமது உடன்நின்ற லால்மருவ
கதிதங்கல் ஆவது எனின்நீ
தரும்அங்க ராகமுதல் அவைதங்க மேலறிவு
தவிரும்பின் வீடும் அணையா
பொருள்நின்று தேடிவரு பயன்உண்டு போகவினை
புரிகின்ற வாறது எனவே
திருநின்ற போகம்வளர் அவிசென்று மேவியது
செலவுண்டு சூழ்வ செயலே. [203]

இப்பாடல் செய்த கிரியைகள் ஞானத்தோடு கூடி மோட்சத்தைத் தரும் என்ற கருத்தினை மறுக்கிறது.

பொருள் :

நாள்தோறும் செய்கின்ற கருமங்களை(கிரியை) ஞானத்தோடு கூடிச் செய்யுமிடத்து வீட்டின்பம் கிடைக்கும் என்று நீ கூறுகிறாய். கிரியைகளைச் செய்யுமிடத்துப் பெரும்பொருள் வேண்டும். அப்பொருளை அடைய ஆசை ஏற்படும். அவ்ஆசை முதலியன ஏற்படுவதால் ஆன்மாவுக்குப் பாச ஞானம் கூடும். பாச ஞானம் மோட்சத்தைத் தராது. ஒருவன் பொருளைத் தேடி அதனால் உண்டாகின்ற பயனை அனுபவித்து அப்பொருள் அழிந்துபோக மீண்டும் பொருளைத் தேடுவதற்கு முயற்சிப்பான். அதனைப் போல யாகம் முதலிய கிரியைகளைச் செய்வதினாலே அவற்றால் ஏற்பட்ட புண்ணியத்தால் சுவர்க்க போகங்களைப் பொருந்தி, அப்புண்ணியம் தொலையும் அளவும் அங்கே நின்று, புண்ணியம் தொலைந்த பிறகு மீண்டும் புண்ணிய கிரியைகளைச் செய்ய விரும்புவதாகவே உமது கொள்கை அமைகிறது. எனவே உம் கொள்கை வீடுபேறு அடைய வழி வகுக்காது.

விளக்கவுரை :

இப்பாடலில் இம்மதத்தாரின் மோட்ச கருத்து மறுக்கப்படுகிறது. இம்மதத்தார் பொருட் செலவால் பெரிய கிரியைகளைச் செய்தால் மோட்சம் கிடைக்கும் என்பர். பொருட் செலவில் கிரியைகளைச் செய்வது பொருள் தேடவேண்டும் என்று ஆசையைத் தூண்டுமே அன்றி மோட்சத்திற்கு வழி வகுக்காது. மேலும் கிரியைகளால் ஏற்பட்ட புண்ணியங்கள் அனுபவித்துக் கழிந்தால் மீண்டும் கிரியை செய்யவேண்டும் என்ற ஆவலைத் தூண்டுமே தவிர மோட்சத்தைத் தராது என்று கூறப்பெற்று இவர்தம் கொள்கை இப்பாடல் வரை மறுக்கப்படுகிறது.

பிரபாகரன் மதம்

பிரபாகரன் மீமாம்சையின் ஒரு பகுதியாகும். பட்டாச்சாரியன் மதத்திலிருந்து வேறுபட்டவன் என்றாலும் இம்மதத்தாரும் சைமினி நூலுக்கு உரை செய்தவரே ஆவர். இவர்தம் கொள்கைகள் இரு பாடல்களில் கூறப்பெற்று மறுப்பும் இருபாடல்களில் கூறப்படுகின்றன.

அருந்தவனாம் சைமினிபண்டு ஆரணநூல் ஆய்ந்தானாய்த்
திருந்தும்உல கினிற்கொண்டு செப்பியநூல் திறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட் டாசானில் வேறாகிப்
புரிந்துஉரைசெய் நெறியதனைப் புவனிமிசைப் புகன்றிடுவாம்.
[204]

இப்பாடல் இம்மதத்தாரை அறிமுகம் செய்கிறது.

பொருள் :

அரிய தவத்தை உடையவனாகிய சைமினி முனிவன் தந்த வேதத்தை ஆராய்ந்தவன். மேலும் நல்ல உலகின் கண்ணே தான் சொல்லுகின்ற வழிக்குப் பொருந்தியவற்றை வேதத்திலே நின்று எடுத்துக் கொண்டு சைமினி முனிவனின் சூத்திர வடிவிலே பொருந்தி பட்டாச்சாரியன் மதத்தில் இருந்து சிறிது வேறாகி நிற்பவன் பிரபாகரன் அவன் சொல்லுகிற கருத்தை நாமும் பூமியின்மிசை சொல்லுவோமாக.

அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வம்எனும் அதுதோன்றித்
தருஞ்செயல்நின்று அழியில்பின் பலிப்பிப்பது ஆகுமது
வருஞ்செயல்ஒன்று இன்றியே மண்சிலைபோ லாம்முத்தித்
தருஞ்செயல்ஈது எனவுணர்ந்து தாரணிமேல் அவன்சாற்றும். [205]

இப்பாடல் பிரபாகர மதத்தாரின் நெறியைக் கூறுகிறது.

பொருள் :

ஒரு ஆன்மா செய்த கன்மத்தின் பயன் அபூர்வம் என்ற நிலையை அடைகின்றது. ஆன்மா கன்மத்தைச் செய்கின்ற பொழுது அறிவோடு கூடிநின்று தொழிற்பட்டு, கன்மம் முடிந்தபொழுது அதற்குரிய அந்தப்பயனை இந்த அபூர்வமே ஆன்மாவை வீட்டுப் பேற்றினைப் புசிக்கச் செய்கிறது. (அனுபவிக்கச் செய்கிறது) வீடுபேறு என்பது மண், கல் போல அறிவு செயல் அற்ற நிலையாகும்.

விளக்கவுரை :

இப்பாடல் இம்மதத்தாரின் இரு கொள்கைகளைத் தருகிறது. 1. அபூர்வம் என்பதே கன்மப்பயனைத் தருகிறது. 2. வீடு என்பது அறிவு செயல் அற்ற நிலையாகும்.

பிரபாகரன் மறுதலை

வேறுபலன் தருவதுதான் வினையென்று வேதங்கள்
கூறவோர் அபூர்வம்தான் கொடுக்கும்எனக் கொண்டஉரை
மாறுதரும் மறையோடு முன்பின்றி வந்ததால்
தேறியவிண் பூமுடிமேல் சேர்ந்துமணந்து இகழ்ந்ததுவாம். [206]

இப்பாடல் அபூர்வம் வினைப்பயனைத் தரும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

முப்பிறப்பில் செய்த நல்வினை, தீவினைக்கு ஏற்ப உயிர் இப்பிறப்பில் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது என்று உன் வேதங்கள் கூறுகின்றன. ஆனால் நீயோ முன்பிறப்பில் செய்த வினைகளுக்கு ஏற்ப அபூர்வம் இப்பிறப்பில் பயனைத் தரும்

என்று கூறுகிறாய். இக்கருத்து வேதத்தோடு மாறுபட்டதாகும். மேலும் இவ்வாறு நீ கூறுவது வாட்டமில்லாது பொழிந்த ஆகாயப் பூவானது முன்பு மணமில்லாது இருந்து தலையில் சூடிய பிறகு மணம் உண்டானது என்று கூறுவதைப் போன்றதாகும்.

விளக்கவுரை :

இப்பாடல் பிரபாகரன் மதத்தின் முதல் கருத்தை மறுக்கிறது. மறுப்பு மேலோட்டமாக அமைந்துள்ளது. அதாவது அபூர்வம் வினைப்பயனைத் தரும் என்பது மீமாம்சர் ஏற்கும் நால்வகை வேதங்களுக்கு மாறுபட்டது என்னும் அளவில் மறுக்கப்படுகிறது. ஆகாயப் பூ என்பதே இல்லை, அது தலையில் சூடப்படுவதும் இல்லை. தலையில் சூடுவதால் மணம் தருவதும் இல்லை. இந்த உவமை மூலம் பிரபாகரன் கொள்கை பொருளற்றது எனக் கூறப்படுகிறது.

ஆனந்தம் கதியென்ன அறிவுஅழிகை வீடுஎன்கை
ஊனம்பின் உணர்வழிந்தோர்க்கு உளதாகும் உயர்முத்தி
தானிங்குச் சிவப்பொழியத் தழல்நிற்கும் ஆறில்லை
ஞானங்கெட்டு உயிர்நிற்கும் எனும் உரைதான் நண்ணாதால். [207]

இப்பாடல் ஆன்மா அறிவு கெட்டு முத்தியடையும் என்பதனை மறுக்கிறது.

பொருள் :

பிரபாகரனே, வேதங்கள் பரமானந்தமாகிய பேரின்பமே வீட்டுப்பேறு என்று கூறுகின்றன. ஆனால் நீயோ ஆன்மாவானது தன்னுடைய அறிவு கெட்டு மண்போலவும் கல்லுப் போலவும் இருத்தல் வீட்டுப்பேறு என்கிறாய். அறிவு கெட்டு ஆன்மா முத்தி அடையும் என்றால் மூர்ச்சை அடைந்து அறிவு கெட்டவர்களுக்கும் வீட்டின்பம் உண்டாக வேண்டும். மேலும் நெருப்பானது தன்னுடைய சொரூபமான சிவப்பு கெட்டால் தானும்கூடக் கெடும் அதுபோல ஆன்மாவும் தன் இயல்பான அறிவு கெட்டால் தான் மட்டும் நின்று வீட்டின்பத்தை அனுபவிக்கும் என்று சொல்லுதல் பொருந்தாது. எனவே உன்னுடைய உரை குற்றமுடையதாகும்.

ஆனந்தம் - பேரின்பம், உணர்விழந்தோர் - மூர்ச்சையடைந்தோர்.

சத்தப்பிரமாவதி மதம்

உபநிடதங்களின் கருத்துக்களையும், பொருள் நிலையையும் ஆராய்ந்து ஒழுங்குபடக் கூற எழுந்த நூல் பிரம்ம சூத்திரம் எனப்படும். இதனை வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம் உத்திர மீமாம்சை என்னும் பெயர்களில் குறிப்பதுண்டு. இந்தப் பிரம்ம சூத்திரம் 545 சூத்திரங்களை உடையது. இவை நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்படும். இதனைச் செய்தவர் பாதராயணர். பாதராயணர் என்பவரும், வியாசரும் ஒருவரே என்னும் கருத்தும் நிலவுகிறது. இது பிரம்மஞானத்தை வலியுறுத்துகிறது. முடிந்த பொருள் ஒன்றே என்று கூறுகின்றது. இந்நூல் பற்றி எழுந்த மதங்கள் அனைத்தும் ஏகான்ம வாதம் உடையன எனக் கொள்ளப்படுகிறது. தமிழ் மொழியில் இம்மதத்தை ''ஒரு பொருட் கொள்கை'' என்பர். இக்கொள்கை, பிரம்ம சூத்திரங்களுக்கு உரை எழுதினோர் கொண்ட கருத்து வேறுபாடுகள் பற்றிச் சத்தப்பிரம வாதம், மாயா வாதம், பாற்கரிய வாதம், கீரிடாப் பிரம்மவாதம் என நான்கு வகையாகப் பகுத்துரைக்கப் படுகிறது. வேதாந்த மதம் என்று இவைகளைக் கூறுவதுண்டு. அதற்குரிய காரணத்தை கி.லெட்சுமணன் கீழ்க்கண்டவாறு கூறுவார். (இந்திய தத்துவ ஞானம் பக் 297)

''வேத உபநிடதங்களில் காணப்பெறும் முரண்பாடுகளை நீக்கி ஒருமைப்பாடு காணவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் உபநிடதத்தில் கூறப்பெறுவது இதுதான் என்ற கருத்துக்களை வரையறுத்துக் கூறவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. அத்துடன் இல்லாது வேத உபநிடதங்களின் உட்பொருளை மக்கள் அறியத் தவறியதால் அவற்றிற்கு எதிராக அவைதிகக் கிளர்ச்சிகளும் எழுந்தன. இம்மூன்று காரணங்களால் உபநிடதக் கருத்துக்களைத் தொகுத்து வரையறை செய்வதில் அறிஞர்கள் ஈடுபட்டனர். இச்செயலில் முதன் முதலில் ஈடுபட்டவர் பாதராயணர் ஆவார். அவர் தன்

செயலிற்கு ஓர் வடிவு கொடுத்து நூலாக்கி, அதற்கு வேதாந்த சூத்திரம் என்றும், பிரம்ம சூத்திரம் என்றும் பெயரிட்டார். அவரின் கொள்கைகளை ஆராய்ந்த சமயக் கருத்துக்களே வேதாந்த மதமாயிற்று.

இத்தகைய வேதாந்தக் கொள்கை ஏற்பட்ட பின்னும் உபநிடதக் கொள்கைகள் விளக்கம் பெறாமையால், வேதாந்த சூத்திரத்திற்குப் பிற்காலத்தில் பல விளக்க உரைகள் எழுந்தன. அவ்வுரைகளில் சிறப்பிடம் பெற்றது சங்கரரின் விளக்கமாகும். இவரின் காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டாகும். 32 ஆண்டுகள் வாழ்ந்த இவர் உபநிடதப் பேருரைகள், பகவத்கீதைப் பேருரைகள், பிரம்ம சூத்திரப் பேருரைகள் என்ற பேருரைகளை வழங்கினார். இவரின் கொள்கைளில் அடிப்படையானது, ''இறைவன் வேறு - உயிர் வேறு அல்ல, இரண்டும் ஒன்று'' என்பதாகும். எனவே இவரின் கொள்கை அத்வைதம் ஆயிற்று.

இந்த வேதாந்த மதங்களில் சத்தப் பிரமவாதம், மாயாவாதம், பாற்கரிய வாதம் ஆகிய மூன்று மதங்களையும் அருணந்தி சிவாசாரியார் எடுத்துக் கூறி மறுக்கிறார். சத்தப்பிரம வாதக் கொள்கைகளை நான்கு பாடல்களிலும், அதன் மறுப்புகளை எட்டுப் பாடல்களிலும், மாயாவாத மதத்தின் கொள்கைகளை 15 பாடல்களிலும், மறுப்புகளை 18 பாடல்களிலும், பாற்கரிய மதத்தின் கொள்கைகளை 2 பாடல்களிலும், மறுப்பை 5 பாடல்களிலும் அமைத்துள்ளார். சத்தப்பிரம வாதத்தை முதலில் அறிமுகப் படுத்துகிறார். இம்மதம் கொள்கையாலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது. சத்தமானது மயக்கத்தினால் உலகமாகும். இதனை அறிவதே வீடு என்று கூறி, உலக வேறுபாட்டினை அறியாதவன் சத்தப்பிரமவாதி என்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

''வரையாது உரைவா'' (பா. 208) என்ற தொடர் தொடக்கத்திலேயே அவர்களது கொள்கையை மறுத்து விடுகிறது. ஆதி சங்கரரின் ஏகான்மவாதக் கொள்கையை அருணந்தி சிவாசாரியார் மாயாவாதி மதமாகக் கொண்டு மறுக்கிறார். அம்மதத்தையும் கொள்கை அளவிலேயே அறிமுகப் படுத்துகிறார். நானே பிரமம் என்றுரைத்து,

உலகமெல்லாம் பேய்த்தேரெனக் கருதி, ஊனே புகுந்து, உயிர்களுக்கு உபதேசம் செய்து வருபவர் என்றும், பேயாகி வேதாகமங்களுக்குப் பொருந்தாமல், தனக்குப் பொருந்த தானே சொல்லுகின்றவர் என்றும் அவர்களை அறிமுகப் படுத்துகிறார். மாயாவாதியின் அறிமுகம் மற்ற மதங்களைக் காட்டிலும் ஆசிரியரின் கடுஞ்சொற்களுடன் அறிமுகமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ''மானமதிகேடன், மாயாவாதிப் பேய்'' என்ற தொடர்கள் அவரின் வன்மைக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

பாற்கரியன் மதமும் கொள்கையளவிலேயே அறிமுகப் படுத்தப்பெறுகின்றது. மாயாவாதியோடு மாறுபட்டு, இறைவனை வேறுபட்டதாகவும், வேறுபடாததாகவும், நிலை நிறுத்தி, வேதநூலை ஓதியும் வருபவன் பாற்கரியன் என அறிமுகப்படுத்தப் படுகிறது. இவ்வாறு ஏகான்மவாதம் மூன்று பிரிவாக அறிமுகப் படுத்தப் பெற்றுள்ளது.

இம்மதப் பிரிவுகளைப் பற்றிச் சிவஞானபோத மாபாடியத்தின் அவையடக்கத்தில் சிவஞான முனிவர் குறிப்பிடுவதும் நினைவு கூறத் தக்கதாகும்.

உரையா னதுமை யலினால் உலகாம்
புரையோர் உணரும் பொருள்பொய் இதனை
விரையாது உணரும் அதுவீடு எனவே
வரையாது உரைவா திவகுத் தனனே. [208]

இப்பாடல் சத்தப் பிரமவாதியின் அடிப்படைக் கொள்கையை விளக்குகிறது. அதாவது சத்தமே பிரபஞ்சம் என்கிறது.

பொருள் :

சத்தமானது மயக்கத்தினால் பிரபஞ்சமாகத் தோன்றியது. அறியாதவர்கள் சத்தத்திற்கு மாறாக வேறு பொருள் உண்டு என்று கூறுவது உண்மையன்று. சத்தமே பிரமமாகும். வேறு பொருள் இல்லை என்று அறியும் அறிவே வீட்டின்பம் ஆகும் என்று சத்தப்பிரமவாதி தன் கொள்கைகளை எடுத்துரைத்தான். மையல் - மயக்கம், புரையோர் - அறியாதார்.

பரிணா மம்விவர்த் தனம்மா யம் அதில்
தருமாம் உலகுள் வதுசத் தமதே
பொருணா வதுசொல் நலமல் லவெனின்
மருவா துபொருள் திறம்மற்று இலையே. [209]

இப்பாடலும் சத்தமே பிரபஞ்சம் என்பதனை வலியுறுத்துகிறது.

பொருள் :

சத்தத்தின் பரிணாமம், விவர்த்தனம் ஆகிய மயக்கங்களே உலகமாகும். இந்த மயக்கங்களினாலே உலகத்துப் பொருள்கள் உண்டாகின்றன. ஆகையால் சத்தம் ஒன்றுமே உள்ளது. சத்தத்திற்கு உரிய பொருள் என்று சொல்லப்படுவது சத்தத்தின் நன்மையேயாகும். சத்தத்தின் நன்மையல்ல பொருள். பொருளின் நன்மையே சத்தம் என்று கூறினால், சத்தம் கூடாது ஒரு பொருள் உண்டாவதில்லை. ஆதலால் சத்தத்தின் நன்மையே பொருளாகும்.

பூமா எனவே உரையும் பொருளும்
ஆமாம் பொருள்ஒன் றில்அணைந்து இலதால்
நாம்ஆ தரவெய்து சொல்நன் கருவாய்த்
தாமாம் பொருள்நெற் பொரிதான் எனவே. [210]

இதுவும் அது.

பொருள் :

பூ எனவும் மா எனவும் இரண்டு சொற்கள் உள்ளன. அவற்றுக்குப் பொருள் கூறுமிடத்து மலர் என்றும் இலக்குமி என்றும் கூறலாம். அப்படிக் கூறப் படும் பொருள் ஒன்றிலே நிலம் என்றும் விலங்கு என்றும் பொருள் கொள்ளுமாறு வழங்கப்படுதலும் உண்டு. எனவே சொல்லுவார் உள்ளக் கருத்தின் அடிப்படையிலேயே பொருள் வழங்கப் பெறுகிறதே தவிரப் பொருள்களிலிருந்து சொற்கள் பிறக்கவில்லை. அது எதுபோல என்றால் நெல்லை வறுத்தால் பொரி கிடைக்கிறது. எனவே நெல்தான் பொரியாயிற்றே தவிரப் பொரி என்ற தனிப்பொருள் இல்லை. அதுபோலவே சொல்லப்படுகின்ற ஓசைதான் பொருளைக் குறிக்கிறது. எனவே பொருளுக்கு அடிப்படையாக அமைவது சத்தமேயாகும்.

சொல்வந்து எழலும் பொருள்தோன் றுதலால்
சொல்லே பொருள் என்று துணிந்திடும் நீ
சொல்லும் பொருளும் உடன்நின் றதெனின்
சொல்லும் பொருள்இன்று சொல்நின்றதுவே. [211]

இதுவும் அது.

பொருள் :

ஒரு சொல்லைக் கூறுமிடத்து அது உணர்த்தும் பொருள் அங்கு இல்லை என்றாலும் அப்பொருள் அவனுக்கு அங்கு உணரப்படும். இதிலிருந்தே சொல்லே முக்கியம் என்பதை உணரலாம். இல்லை, இல்லை சொல்லும் பொருளும் உடன் நின்றே தோன்றுகிறது என்று கூறின் ஒரு சொல்லுக்கு அர்த்தம் (பொருள்) உரைக்குமிடத்து அந்த அர்த்தமும் சொல்லாகத் தான் நிற்கிறது. ஆதலால் சத்தமே பிரமம் என்று கொள்ள வேண்டும்.

சத்தப்பிரமவாதி மதம் மறுதலை

உரையா னதுமை யலினால் உலகேல்
உரையாய் ஒருமையலும்உள் ளதென
வரையாது உணரும் அதுவண் கதியேல்
வரையா மறையோடு மலைந் தனையே. [212]

இப்பாடல் சத்தம் பிரபஞ்சம் என்பதை மறுக்கிறது.

பொருள் :

சத்தமானது பரிணமித்து விவர்த்தனமான மயக்கத்தால் உலகமாகிறது என்று நீ கூறினாய். அப்படியானால் சத்தந்தான் சர்வமும் ஆகும் என்பதன்றிச் சத்தத்திலே உண்டாகின்ற மயக்கம் உண்டு என்று கூறாதே. மேலும் சத்தமே பிரமம் என்று உணர்தலே நல்ல முத்தி என்று கூறினாய். அவ்வாறானால் வேதத்தில் சொல்லப்பட்ட கன்மத்தையும் ஞானத்தையும் செய்வதும் உணர்வதும் முத்தியாகும் என்று கூறுகின்ற கொள்கையிலிருந்து நீ மாறுபட்டுக் கூறுபவன் ஆகின்றாய்.

விளக்கவுரை :

இப்பாடலில் சத்தமே அனைத்தும் என்பதை. இரு கோணங்களில் ஆசிரியர் மறுக்கிறார். சத்தமே அனைத்தும் என்றால் அதில் மயக்கமாகிய பரிணாமம் ஏற்பட வேண்டியதில்லையே. வேதத்தை ஏற்றுக்கொள்கிறவர் இம்மதத்தார் ஆதலின் சத்தமே பிரமம் என்று உணர்வதே வீடு என்று கூறுவது வேதத்திற்கு மாறுபாடு ஆகுமே என்று கூறி ஆசிரியர் மறுக்கிறார்.

அருவம் உரையா தலின்அவ் வுருவாய்
மருவும் பரிணா மம்மறந் திடுமாம்
பருகும் ததியானது பாலது எனில்
உருவம் அதுவாய் அழியும் உரையே. [213]

இப்பாடல் சத்தம் உருப்பெற்று பிரபஞ்சமாகிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

சத்தமானது (சொல்) அருவமாகும். அந்த அருவமே உலக வடிவாகப் பரிணமித்துத் தோன்றுகிறது என்று நீ கூறுகின்றாய் என்று சொன்னவுடன் (நீ) அல்ல, அல்ல குடிக்கும் பகுதியான பாலானது தின்னும் பகுதியான தயிராக உருப்பெற்றது போல அருவமாகிய சத்தம் உருவமாகிய உலகமாகத் தோன்றிற்று என்று நீ கூறினால் அத்தயிர் மீண்டும் பாலாகும் தன்மையில்லாமல் தயிராய் நின்று அழியும் தன்மை போலச் சத்தமும் பிரபஞ்சமாக உருப்பெற்றால் மீளவும் சத்தமாகும் தன்மை இல்லாமல் பிரபஞ்சமாகவே அழியும்.

விளக்கவுரை :

இப்பாடலில் சத்தமாகிய சொற்களே உலகமாகிறது என்பதனை ஆசிரியர் மறுக்கிறார். மேலும் சத்தந்தான் எல்லாம் என்றால் சத்தம் உலகப் பொருளாகி, காலம் செல்லச் செல்ல அவ்வுலகமாகவே அழியுமே தவிர மீண்டும் சத்தமாவதில்லை. இதனைப் பால், தயிர் உவமை மூலம் நிறுவுவது குறிப்பிடத் தக்கது.

ஆயம் உடன்அந் தவிவர்த் தனமும்
மாயவ் வுவதென்று சொல்எவ் விடமும்
ஆய்நின் றமையின் உரையின் நலமும்
ஆயும் பொருளுக்கு அறிநா மமதே. [214]

இதுவும் அது.

பொருள் :

சத்தத்திலிருந்தே உலகம் தோன்றுகிறது. அதில் பல்வேறு வடிவங்களாகப் பொருள்கள் பரிணமித்து வருகின்றன என்று நீ கூறுகிறாய். அப்படிக் கூறுகின்ற பொழுது சத்தத்திற்கு அழிவு உண்டாகவேண்டும் என்று கூறமாட்டாய். மேலும் சத்தத்திற்குப் பொருள் இருப்பதாலேயே சத்தத்திற்கு நன்மை உண்டாகின்றது. அந்தப் பொருளை ஆராய்கின்ற இடத்துச் சத்தம் என்பது பொருளுக்குப் பெயர்ச்சொல்லாய் இருப்பது ஒன்றே பெறப்படுகிறது.

விளக்கவுரை :

இப்பாடலில் சத்தத்தைக் காட்டிலும் சத்தத்தின் பொருளுக்கே சிறப்பும், நிலைபெறும் தன்மையும் உண்டு என்று ஆசிரியர் விளக்குகிறார். இல்லை, இல்லை, சொல்லே பிரணாமத்தால் பொருளாகத் தோன்றுகிறது என்றால் நெருப்பு என்று சொன்னவுடன் நெருப்பு தோன்றி வாய் சுடவேண்டும். அவ்வாறு நிகழ்வதில்லை. எனவே நெருப்பு என்ற சொல் இடுகுறிப் பெயராகத்தான் நிற்கிறது என்கிறார் ஆசிரியர். நாமம் அதே - இடுகுறிப் பெயர்ச்சொல்.

உரைபோல் பொருளுக்கு உருவின் மையின்அவ்
உரையே பொருள்என் றனைஇன்று அரியென்
உரையே கவிமா லவனுக்கு உளதாம்
உரையாய் கவியா கவொர்மா லினையே. [215]

இதுவும் அது.

பொருள் :

சத்தத்தைப் போலப் பொருளுக்கும் (அர்த்தம்) உருவம் இல்லாமையால் சத்தமே பொருள் என்று கூறினாய். அரி என்று சொல்லப்பட்ட சத்தம் பல பொருளை உடையது. திருமால், குரங்கு என்ற பொருள்களுக்குப் பெயராகச் சொல்லலாம். அதனைப் பொருளின் தன்மையில் நின்று (திருமாலாகிய பொருள்) சத்தத்தைக் கொள்ளாமல் சத்தத்தின் தன்மையிலே நின்று பொருளைக் கொண்டால் அதாவது பொருளாம் அரி என்பதற்குத் திருமாலைக் கொள்ளாமல் குரங்கு என்று கொள்ளவேண்டி வரும்.

விளக்கவுரை :

இப்பாடல் மூலம் சத்தமும் அர்த்தமும் வேறு. அதாவது சொல் தன்மையும் பொருள் தன்மையும் வேறாகும் என்று ஆசிரியர் நிறுவுகிறார். சத்தமும் அர்த்தமும் ஒன்றாக இருந்தாலும் இரண்டையும் வேறாகக் காணவேண்டும் என்பதும் புலனாகிறது.

நெல்லில் பொரியா வதுநீடு அழலில்
சொல்லில் பொருள்ஒன் றொடுதொக் கிடலால்
கல்வித் திறமாம் உரைகாட் சியினல்
மல்லல் பொருள்சா லவளம் தருமே. [216]

இப்பாடல் சத்தத்திலும் பொருளே சிறப்புடையது என்பதைக் கூறுகிறது.

பொருள் :

நெல்லிலிருந்து பொரி தோன்றுகிறது. அது போலவே சொல்லிலிருந்து அர்த்தம் தோன்றுகிறது என்று நீ கூறுகின்றாய். அவ் உவமை பொருத்தமானதல்ல. ஏனென்றால் நெருப்பில் வறுத்தால் தான் நெல் பொரியாகும். தானாகப் பொரி ஆகாது. பூ, மா முதலிய ஒரு சொல்லில் பல பொருள் அமைந்து கிடக்கின்றது. அத்தகைய பொருள்களை அறியக் கற்பதே சத்தமாகும். சொல்லிலிருந்து அர்த்தத்தைப் பிரித்துப் பார்த்தால் பொருளினுடைய தன்மையை (நன்மையை) அறியலாம். எனவே நீ கூறுகிற சத்தத்தை விட அர்த்தமே சிறப்புடையது.

விளக்கவுரை :

இப்பாடலில் சொல் தருகின்ற அர்த்தத்தை அறிந்து கொள்வதே அறிவாகும். அந்த அறிவின் அடிப்படையில் பார்க்கும் பொழுது சொல்லைக் காட்டிலும் அதன் அர்த்தமே சிறப்புடையது என்பதை உணரலாம், என்று கூறிச் சத்தமே சிறப்புடையது என்று கூறும் இம்மதத்தாரின் கொள்கையை மறுக்கிறார் ஆசிரியர். (மல்லல் - வளப்பம்)

முன்கண் டபொருள் பெயர் ஆதலினால்
பின்கண் டபிழம்பு உணரும் பெயரால்
நன்கண் டபொருட்கு ஒருநா சம்அதின்று
என்கண் டனைகாரணம் இன்று அழிவே. [217]

இப்பாடல் அர்த்தமே சிறப்புடையது என்பதனை வலியுறுத்துகிறது.

பொருள் :

அறிவாற்றலால் உணர்ந்து கொள்ளப்பட்ட அர்த்தமே சத்தமான பெயராக நிற்கிறது. பொருளை அறிந்த அறிவின் காரணத்தால் அறியப்பட்ட பொருளை சத்தமான பெயரைக் கொண்டு மீண்டும் அறிகின்றோம். எனவே அர்த்தத்திற்குக் கேடில்லை. சத்தத்திற்குக் கேடு உண்டு. காரியமாகிய சத்தம் அழிதலே அன்றிக் காரணமாகிய அர்த்தம் அழியுமென்று நீ சொல்வது தவறாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் அறிவின் திறத்தால் ஒரு பொருளையும் அதற்குரிய பெயரையும் அறிந்து கொண்டுவிட்டால் பின் பெயரைக் கூறுகின்ற பொழுதெல்லாம் பெயரை நாம் இயல்பாக அறிந்து கொள்கிறோம். அப்பொழுது பெயரை விடப் பொருளே முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது சத்தத்தை விட அர்த்தமே நிலைபேறு உடையதாகிறது. எனவேதான் சொல்லை நினையாது (அழித்து) அர்த்தத்தை (பொருளை) கொள்கின்றோம். ஆதலால் சத்தம் அழியும், அர்த்தம் அழியாது. ஆனால் இம்மதத்தார் அர்த்தம் அழியும், சத்தம் அழியாது என்கின்றனர். இதனை எங்கு அறிந்தாய்? என்று நகையாடுகிறார் ஆசிரியர். பிழம்பு - உருவம், நாசம் - கேடு.

பொருள்இந் திரியம் உணர்வோடு புமான்
இருளின் றியிடும் ஒளிஇத் தனையும்
மருவும் பொழுதில் வருஞா னமதின்
ஒருவும் பெயர்அர்த் தம்உதித் திடுமே. [218]

இப்பாடலும் சத்தத்தை விட பொருளே சிறந்தது என்கிறது.

பொருள் :

ஆன்மா ஒரு பொருளை அறியும் பொழுது அறியப்படும் பொருளும், அதனைக் காட்டும் இந்திரியமும், அதனோடு கூடி உயிரும், அந்தக் கரணங்களும், அவற்றுக்கு மூலமாகிய பிரகிருதியும் அதன்மீது படிகின்ற ஒளியும் ஆகிய இவ்வளவும் வேண்டும். இத்தனையும் சேர்ந்தால்தான் ஒரு பொருளைக் காணுகின்ற அறிவு ஆன்மாவுக்கு உண்டாகின்றது. அந்நிலையில் பொருளைக் காட்சியாக அறிந்து கொள்கிறது. அந்த நிலையில் அதற்குப் பெயர் என ஒன்றில்லை. பிறகு பெயரோடு சேர்த்து உணரும்போது அறிவு தெளிவாகிறது. எனவே பொருள் தோன்றிய பிறகே அதனைப் பெயரோடு சேர்த்து உணரும்பொழுது அறிவு தோன்றுகிறது எனலாம்.

விளக்கவுரை :

இருளின்றி இடும் ஒளி - என்பதற்குக் கன்மத்திற்கு ஈடான திரேதாயி என்ற ஒளி என்று கூறுவாரும் உண்டு. இப்பாடலில் ஒரு பொருளை அறியும் பொழுது ஆன்மாவுக்குள் பல ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்ட பிறகு பொருளை ஆன்மா கண்ணால் காண்கிறது. கண்டவுடன் அதற்குரிய பெயரையும் நினைக்கிறது. காட்சியையும் பெயரையும் சேர்த்தவுடன் அப்பொருளைப் பற்றிய அறிவு தோன்றுகிறது. அறிவு தோன்றியவுடன் பெயரை விட்டு விட்டுப் பொருளை மட்டுமே அறிவு பற்றிக் கொள்கிறது. எனவே பெயராகிய சத்தம் பெருமை உடையது அல்ல என்கிறார் ஆசிரியர். ஒருஉம்பெயர் - நீங்கும் சத்தம்.

அர்த்தம் தெளிதற்கு ஒலியா னதுபோல்
சத்தம் பொருள்தான் அறிதற்கு உவதாம்
நித்தம் அதுவன்று உரைநின்று அழியும்
சித்தன் ஒருவன் உரைசெய் தனனே. [219]

இப்பாடல் சத்தம் பிரமம் என்பதை மறுத்து சத்தம் பிரமம் ஆகாது என்கிறது.

பொருள் :

இருளில் கிடக்கும் பல பொருள்களை வேறுபடுத்தி அறிய வேண்டுமானால் வெளிச்சமாகிய ஒளியின் துணை தேவைப்படும். அதுபோலப் பல்வேறு வகைப்பட்ட பொருள்களைப் பிரித்து அறிவதற்குச் சொல்லாகிய சத்தம் தேவைப்படுகிறது. அந்தச் சத்தம் நிலைபேறு உடையதல்ல. மேலும் பொருளாகிய காரணம் இல்லை என்றால் சத்தமாகிய (சொல்) காரியம் தோன்றாது. எனவே சிவபெருமானால் தான் ஓசை என்பது தோற்றுவிக்கப்பட்டது. அத்தகைய ஓசையையே தலைவனாகிய பரமன் என்று கூறுவது பொருந்தாது.

விளக்கவுரை :

இப்பாடல் சத்தத்தை நிலையற்றது என்று கூறி நிலையற்றதாகிய சத்தத்தைப் பிரமம் என்று கூறுவது பொருத்தமுடையதன்று என்று கூறுகிறது. மேலும் அந்த ஓசையை உண்டாக்கியவன் சிவபெருமான், அவன்தான் பிரமம் என்று வலியுறுத்துகிறது.

மாயாவர்தி மதம்

நானே பிரமம் என்றுரைத்து ஞாலம் பேய்த்தேர் எனஎண்ணி
ஊனே புகுந்து நின்றுஉயிர்கட்கு உபதேசங்கள் உரைத்துவரும்
மானமதி கேடனுமாய மாயா வாதி பேயாகித்
தானேஉரைக்கும் அந்நூலின் உண்மை தன்னைச் சாற்றுவாம்.
[220]

இப்பாடல் மாயாவாதியை அறிமுகப் படுத்துகிறது.

பொருள் :

நானே பிரமம் என்று உரைத்து உலகம் உள்ளிட்ட பொருள்கள் அனைத்தும் கானல் நீர் போன்றவை என்று எண்ணி, தான் ஒரு உடம்பில் நின்று உயிர்களுக்கு உபதேசங்கள் உரைக்கின்ற நாணமில்லாத, அறிவில்லாத கேடனாகிய மாயாவாதி பித்தேறி உரைக்கின்ற அவரது கருத்துக்களைத் தொகுத்து உரைப்பாம்.

விளக்கவுரை :

ஆன்மா, சிவம் என்ற இரண்டை எண்ணாது அகம், பிரமம் என்று சொல்லுகின்றவன் மாயாவாதி. ஆனால் அப்படிச் சொல்லுகின்றவன் தான் ஒரு உடம்புக்குள் புகுந்துகொண்டு பிறருக்கு உபதேசிக்கின்றான். தான் பிரமமாயின் ஓர் உடம்புக்குள் புகுதல் வேண்டாமே. மேலும் மற்ற உயிர்களும் தன்னைப் போலப் பிரமம் என்பதால் அவற்றுக்கு உபதேசம் வேண்டாமே என்ற கருத்துக்களை ஊனே புகுந்து நின்று உயிர்களுக்கு உபதேசங்கள் உரைத்து வரும் என்ற வரியால் பெறவைக்கிறார் ஆசிரியர். நானே பிரமம் - அகம்பிரமம்.

அறிவாய் அகில காரணமாய் அனந்தா னந்தமாய் அருவாய்ச்
செறிவாய் எங்கும் நித்தமாய்த் திகழ்ந்த சத்தாய்ச் சுத்தமதாய்க்
குறிதான் குணங்கள் ஒன்றின்றிக் கூறும் வேதம் தனக்கு அளவாய்ப்
பிறியா அனுபூ திகம்தனக்காய் நின்றது அந்தப் பிரமம்தான்.
(221)

இப்பாடல் பிரமநிலை கூறுகிறது.

பொருள் :

பிரமம் என்பது அறிவே வடிவாகவும், உலகிற்குக் காரணமாகவும், எல்லையில்லாத ஆனந்தமாகவும், உருவமின்றியும், எங்கும் நிறைந்ததாகவும், சத்தாயும், கேடு இல்லாததாயும், அசுத்தத்துடன் கூடாது சுத்தமாகவும் ஓர் அடையாளமும் குணமும் இல்லாததாகவும், வேதங்களுக்கெல்லாம் அளவாகவும், நீக்கமில்லாத

அநுபூதியைத் தனக்கே உடையதாகவும் கொண்டு விளங்குகிறது.

ஒன்றாம் இரவி பலபாண்டத்து உண்டாம் உதகத்து அங்கங்கே
நின்றார் போல உடல்தோறும் நிகழ்ந்து நிற்கும் பொருள்மேற்கண்
சென்றாற் போலப் புலன்களுக்கும் சிந்தை தனக்கும் தெரிவரிதாம்
என்றால் காட்சி முதலாய இருமூன்று அளவைக்கு எட்டாதால்.
[222]

இப்பாடல் ஆன்மா ஒன்றில்லை எல்லாம் பிரமமே என்கிறது.

பொருள் :

வானத்திலே உள்ள ஒரே ஞாயிறு மண்மீது வைக்கப்பட்ட பல பாத்திரங்களில் உள்ள நீர் நிலைகளில் தனித்தனியே தோன்றுவதைப் போல ஏகமாகிய பிரமம் உடல்கள் தோறும் தனித்தனியே தோன்றுகிறது. அச்சூரியன் பாத்திரங்களில் உள்ள நீரால் பற்றிக்கொள்ள முடியாது தனித்து இயங்குகிறான். அதுபோலவே பிரமப் பொருளும் உடலில் அகப்படாது மேற்பட்டு இந்திரியங்களுக்கும், கரணங்களுக்கும் அறிதற்கு அரிதாய் நிற்கும். மேலும் இவ்வாறு கூறுவதனால் காட்சி முதலாகிய அளவைகளுக்கு எட்டாததாயும் விளங்குகிறது.

இருமூன்று அளவைகள் - காட்சி, கருதல், உரை, உவமை, அருத்தா பத்தி, இன்மை (அபாவம்).

இருளில் பழுதை அரவெனவே இசைந்து நிற்கும் இருங்கதிர்கள்
அருளப் பழுதை மெய்யாகி அரவும் பொய்யாம் அதுவேபோல்
மருவில் சகமும் சத்தாகி மருவித் தோன்றும் மாசில்லாத்
தெருளில் சித்தே சத்தாகும் பித்தாம் சகத்தின் செயல்எல்லாம்.
[223]

இப்பாடல் பிரபஞ்சம் பொய் எனக் கூறுகிறது.

பொருள் :

இருளில் கிடக்கின்ற கயிற்றினைக் கண்ட ஒருவன் அதனைப் பாம்பு என எண்ணி அஞ்சுகின்ற பொழுது சூரியனுடைய கிரணங்கள் தோன்ற கயிறு என்ற மெய் நிற்க,

பாம்பு என்ற பொய்யானது மறையும். அதுபோலப் பொய்யாகிய பிரபஞ்சத்தினுடைய (உலகம்) செயலும் முதலில் மயக்கத்தாலே மெய்யாகத் தோன்றும். பின்னர் பிரமஞானம் விளங்கிய காலத்து உலகப் பொருள்கள் எல்லாம் பொய் என்று தோன்றும். பிரம்மமே மெய் என விளங்கும்.

பழுதை - கயிறை, அரவு - பாம்பு, சகம் - உலகப் பொருள்கள் எல்லாம், சித்து - பிரமம், பித்தாம் - பொய்யாம்.

உலகம் தானும் நிருவசனத்து உண்டாம் இன்றேல் உதியாது
நிலவி உண்டேல் அழியாது நிற்ப தாகும் மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர இன்றாம் வெள்ளி நின்றதாம்
குலவு சகமும் அவிகாரம் பரமார்த் தத்தில் கொள்ளாதால். [224]

இப்பாடல் உலகம் பொய்யானது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

உலகமானது நிருவசனம் என்று கூறப்பட்ட பிரமத்திலிருந்து தோன்றும். அதிலிருந்து தோன்றவில்லை என்றால் வேறு எந்தப் பொருளிலிருந்தும் உலகம் தோன்றாது. உலகத்தை யாரும் தோற்றுவிக்காமல் தானே தோன்றினால் அதுவும் ஒரு முதலாய் அழியாது நிற்கும். ஆனால் உலகம் அழிகிறதே. எனவே உலகம் உண்மைப் பொருள் போலத் தோன்றினாலும் அது பொய்யானதாகும். அது உண்மை போலத் தோன்றுவது, பின்னர் அது பொய்யாவது எவ்வாறு என்றால், வெள்ளி போலப் பிரகாசிக்கும் சிப்பியையும், வெள்ளியையும் தீயில் இட்டால் சிப்பி கெட்டு வெள்ளிதான் நிற்கும். மேலும் மெய்போலத் தோன்றும் பிரபஞ்சமும், பிரமமும் நிரூபணம் செய்தால் பிரபஞ்சம் பொய்யாகவும், பிரமம் மெய்யாகவும் கொள்ளப்படும்.

நிருவசனம் - சொல்லுக்கு அடங்காத மேற்பட்ட பிரமம், மித்தை - மயக்கம், சுத்தி - சிப்பி என்ற கிளிஞ்சல், அபிகாரம் - மாற்றமில்லாத பிரமம், பரமார்த்தம் - ஞானநிலை.

தாங்கும் உலகுக்கு உபாதானம் சத்தாம் சிலம்பி நூல்தன்பால்
வாங்கி வைத்துக் காப்பது போல் வையம் எல்லாம் தன்பக்கம்
ஓங்க உதிப்பித்து உளதாக்கி நிறுத்தி ஒடுக்கத்து இலதாக்கும்
ஆங்கு வந்த வாறுஅதனால் சத்தாம் சகத்தின் அமைவுஎன்லாம்.
[225]

இப்பாடல் பிரமம் உலகத்தைத் தோற்றுவித்தலைக் கூறுகிறது.

பொருள் :

ஆதாரமாகி எதனையும் தாங்குகின்ற உலகிற்கு முதற்காரணமாக விளங்குவது சத்துப் பொருளாகிய பிரமமே ஆகும். அது எதுபோல என்றால் சிலந்தியானது நூலைத் தன்னிடத்திலே இருந்து தோற்றுவித்து பிறகு அந்நூலை ஓரிடத்திலே பின்னி (வைத்து) பாதுகாத்துப் பின்பு அந்நூல் அழியும்படி தான் நீங்குகின்ற தன்மை போன்றதாகும். அதுபோலவே பிரமம் உலகப் பொருள் அனைத்தையும் தன்னிடத்திலிருந்து தோற்றுவித்து அவற்றைக் காத்து பின் இல்லையாம்படி அழித்திடும். இவ்வுலகத்துச் செயல்கள் எல்லாம் சத்துப் பொருளாகிய பிரமத்திற்கே உரியதாம்.

உபாதானம் - முதற்காரணம், சிலம்பி - சிலந்தி, ஒடுக்கத்து - முடிவுக் காலத்து.

மன்னும் பிரமம் தனில்வானாய் வானின் வளியாய் அந்தவளி
தன்னில் அழலாய் அழலின்பால் சலமாய்ச் சலத்தில் தாரணியாய்ச்
சொன்ன இதனின் மருந்தாகித் தோற்றும் மருந்தில் அன்னமாய்
அன்னம் அதனில் துவக்குஆதி ஆறு தாது ஆயினவால். [226]

இது பூதங்கள் ஆறு தோன்றுவதைக் குறிக்கிறது.

பொருள் :

கேடு இல்லாத நிலைபெற்ற பிரமத்திலே வான் தோன்றி, வானத்திலே வாயு தோன்றி, அவ்வாயுவிலே அனல் தோன்றி, அனலிலே நீர் தோன்றி, நீரிலே நிலம் தோன்றி, நிலத்திலே செடிகொடிகளாகியவை தோன்றுகின்றன. அவற்றிலிருந்து உயிர்களுக்கு ஆகிய உணவு தோன்றுகிறது. உணவு உண்ட உயிர்களுக்கு உடம்பில் ஆறு தாதுக்களும் உண்டாகின்றன.

சலம் - நீர், தாரணி - பூமி, மருந்து - செடிகொடியைக் குறித்தது, ஆறு தாதுக்கள் - தோல், எலும்பு, நரம்பு, மச்சை, குருதி, சுக்கிலம்.

ஆறு தாதுக் களும்கூடி வந்த கோசம் அன்னமயம்
மாறில் பிராண கோசமயம் மன்னும் அதனின் மனோமயம்தான்
வேறுவரும் விஞ் ஞானமயம் மேவும் அதனின் அது தன்னில்
கூறிவரும் ஆனந்தமயம் கோச மயம்பின் கூடியதால். [227]

இப்பாடல் ஆன்மாவை மூடியிருக்கும் உறைகளைப் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

ஆறு தாதுக்களுடன் கூடி உண்டாவது அன்னமய கோசமாகும். அன்னமய கோசத்திலிருந்து உயிரானது உண்டாகத் தோன்றுவது பிராணமய கோசம். அதனோடு மனம் கூடுகின்ற பொழுது தோன்றுவது மனோமய கோசம். அவற்றோடு அறிவு கூடும்பொழுது தோன்றும் விஞ்ஞானமய கோசம், அவற்றோடு வாக்கு முதலாகியவை கூடி ஆனந்தத்தைத் தருவது ஆனந்தமய கோசம்.

விளக்கவுரை :

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற ஐந்து உறைகளுக்குள்ளே (மூடி) இருப்பதுதான் ஆன்மா. கோசம் என்பது உறையைக் குறிக்கும்.

கோச உருவில் பிரமம்தான் கூடித் தோன்றும் நீடும் ஒரு
காசம் மருவும் கடந்தோறும் நின்றால் போலக் கதிரவன்தன்
வீசு கிரணம் உருவின்கண் வெளிப்பட் டிடுவது அதிற்பற்றும்
பாசம் அதனுக்கு இன்றாகும் என்றால் பரத்தில் பற்றுண்டோ.
[228]

இப்பாடல் பிரமம் பாசத்தைப் பற்றுவதில்லை என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

இந்த ஐந்து கோசங்களாகிய உருவின் கண்ணே பிரமமானது கூடிப் பிரகாசிக்கும். அது எதுபோல என்றால் எட்டமுடியாத ஆகாயத்தின் கண்ணே பொருந்தியிருக்கும் சூரியனுடைய கிரணமானது, பூமியிலே வைக்கப்பட்ட பாத்திரங்கள் தோறும் உள்ள நீரில் தனித்தனி தோன்றுவதைப் போலப் பிரமமும் சூரியனைப் போல எட்டாததாக இருந்தாலும் உருக்கள் தோறும் தனித்தனியாய் நிற்கும். அப்படி நின்றாலும் உருக்கள் (தம் பாசத்தால்) பிரமத்தைப் பற்றாது. எனவே பிரமமும் உருவினுடைய பாசத்தைப் பற்றாது.

அலகின் மணிகள் அவைகோவை அடைந்த பொழுதின் அங்கங்கே
நிலவும் ஒருநூல் பலநிறமாய் நின்றால் போல நீடுஉருவம்
பலவும் மருவும் பேதத்தால் பன்மையாகும் பிரமம் தான்
குலவு போக போக்கியங்கள் கொள்ளும் போன்று கொள்ளாதால்.

[229]

இப்பாடல் பிரமத்திற்குப் போகநுகர்வு இல்லை என்பதை விளக்குகிறது.

பொருள் :

எண்ணற்ற பல நிறத்தோடு கூடிய மணிகளைக் கோர்வையாகக் கோர்த்தவிடத்து, கோர்த்த வெண்மை நூலானது அம்மணிகளுக்கு ஏற்ப, பல நிறங்களாகத் தோன்றுவதுபோல, உலகத்தில் தோற்றுவிக்கப் பட்ட யோனிகளாகிய உடம்புகள் பலவாக விளங்குவதால் அவற்றோடு கூடிய பிரமமும் பலவாக அங்கங்கே தோன்றும். மேலும் மணிகளில் பொருந்திய நூலும் தன் தன்மை கெடாது நின்றாற் போலப் பிரமம் யோனிகளுக்கு உரிய போகங்களை நுகர்வது போலத் தோன்றினாலும் உண்மையில் பிரமத்திற்கு நுகர்வு என்பது இல்லை. கோவை - கோர்க்கப்பட்ட மணிமாலை.

போற்றும் செயலால் பலநாமம் புனைந்து போக போக்கியத்தில்
தோற்றும் நனவு கனவினுடன் சுழுத்தி துரியம் எய்தும் இதற்கு
ஏற்ற கரணம் நிரைநிரையே ஈரேழ் நால்ஒன்று எல்லாமும்
மாற்றி நிற்கும் கேடின்றி வந்த போகம் மாய்ந்திடவே. [230]

இப்பாடல் உலகோடு பிரமம் பல பேதப்பட்டு போக போக்கியத்திற்கும், அவத்தைக்கும் எடுத்துக் காட்டாக நிற்கும் முறைமை கூறுகிறது.

பொருள் :

பிரமமானது உலகத்தோடு பொருந்தி நிற்பதால் பரமான்மா என்றும், சீவான்மா என்றும் பல பெயர்களைப் பொருந்தி நிற்கிறது. ஆதலால் பிரமத்திற்கும் நுகர்வுகள் இருப்பதுபோல் தோன்றும். கனவு, நனவு, உறக்கம், பேருறக்கம் என்ற நான்குநிலை வேறுபாடுகளையும் உடையது போலவும் தோன்றும். இவ்வாறு இருப்பதற்கு உயிர்களோடு பொருந்தி நிற்கும் கருவிகளே காரணம் ஆகும். நனவில் 14, கனவில் 4, உறக்கத்தில் 1, பேருறக்கத்தில் 1 என்பனவற்றில் நிரல் நிரையாகப் பொருந்தி அவற்றைக் கடந்தும் நிற்கிறது.

விளக்கவுரை :

இப்பாடல் பிரமத்திற்குப் பெயர் வடிவம் இல்லை என்பதையும், உலகத்துப் பொருளோடு பிரமம் பொருந்தி இருப்பதால் பெயர்களையும், வடிவத்தையும் பெறுகிறது என்றும், அப்பொருள்களுக்குரிய நுகர்வுகளை நுகர்வது போலவும் மாயையாகத் தோன்றுகிறது என்றும் வலியுறுத்துகிறது.

நனவுக்குரிய 14 கருவிகள் : செவி, மெய், கண், வாய், மூக்கு, என்ற ஐந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்து, சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு ஆகும். கனவுக்கு அந்தக்கரணம் நான்கு : சித்தம், மனம், அகங்காரம், புத்தி, சுழுத்தி (உறக்கம்) ஒன்று - சித்தம் (உள்ளம்), துரியத்திற்கு - பேருறக்கம் ஒன்று - பிரமம்.

கருவி எல்லாம் நான்எனவே கருதல் பந்தம் அக்கருத்தை
ஒருவ முத்தி உண்டாகும் உள்ளம் வித்தம் செய்தியினால்
மருவும் மாயா காரியங்கள் அவித்தை மாய வேமாயை
பிரியும் பிரிய ஞானம் அது பிறக்கும் பிறவா பேதமே. [231]

இப்பாடல் சிவயோகம்பாவம் தோன்றும் விதத்தைக் கூறுகிறது.

பொருள் :

கருவிகள் பதினான்கோடு கூடி அவற்றை நான் என்று கருதி நிற்பது பந்தமாகும். அக்கருவிகள் பதினான்குடன் கூடாது நீங்கி துரியத்தில் நின்றால் சிவயோகம் பாவம் தோன்றி முத்தி உண்டாகும். பந்தத்திற்கு வித்து மூலப் பிரகிருதியாகும். அந்த மூலப் பிரகிருதியின் செயலாலே மாய காரியங்களாகிய சுக துக்கங்கள் பொருந்துகின்றன. அவித்தையாகிய மூலப் பிரகிருதியின் செயல் கெட மாயை நீங்கும். மாயை நீங்க ஞானம் உண்டாகும். ஞானம் உண்டாகிய இடத்துச் சிவயோகம்பாவம் பிறக்கும்.

பந்தம் - கட்டுநிலை, ஒருவ - நீங்க, உள்ளம் வித்தாம் செய்தியினால் மருவும் என்றது - உள்ளம் அவித்தையாகிய அறியாமையின் காரணத்தினால் பொருந்தும். சிவயோகம்பாவம் - இறைவனது தன்மையை உணர்ந்து அவனோடு உயிர் இசைந்து நிற்கும் அனுபவ நிலையாகும்.

ஆன கன்ம அனுட்டயங்கள் அந்தக் கரண சுத்திதரும்
ஊனம் இன்றி அச்சுத்தி ஞானம் அதனை உண்டாக்கும்
ஞானம் அதுதான் பிரமத்தை நானென்று உணர்த்தும் நான் பிறந்தால்
வான மதிநீர்த் துளக்கம் எனக் காணும் தன்னை மாயையிலே. [232]

இப்பாடல் நானே பிரமம் என்று உணரும் நிலையை உணர்த்துகிறது.

பொருள் :

விதிக்கப்பட்ட கிரியைகளையும், அனுஷ்டானங்களையும் பின்பற்றினால் அந்தக் கரணம் சுத்தமடையும். அதன் காரணத்தால் நானே பிரமம் என்ற ஞானம் உண்டாகும். அந்த

ஞானம் தோன்றிய தன்மை முற்றினால் வானத்தில் உண்டான சந்திரன் நீரின் கண்ணே விளங்கித் தோன்றுவது போல மாயையிலிருந்து பிரிந்து தன்னை உள்ளபடி உணரும்.

விளக்கவுரை :

சந்திரன் குட்டையிலுள்ள நீரினில் தோன்றுகின்றபோது நீரின் அசைவிற்கு ஏற்பச் சந்திரனின் நிழல் அசையும். ஆனால் சந்திரன் அசையாது. அதுபோல மாயையோடு சேர்ந்த பிரமம் மாறுவது போலத் தோன்றினாலும் பிரமத்திற்கு மாற்றம் இல்லை.

கன்ம அனுட்டையங்கள் - கிரியைகள், அனுஷ்டானங்கள், சுத்தி ஞானம் - நானே பிரமம் என்ற ஞானம்.

தானே தானாய் அனுபோகம் தன்னில் தன்னை அனுபவித்திட்டு
ஊனே உயிரே உணர்வேயென்று ஒன்றும் இன்றி உரைஇறந்து
வானே முதலாம் பூதங்கள் மாய மாயா தேமன்னி
நானே பிரமம் எனத்தெளியும் ஞானம் பிரம ஞானமே. [233]

இப்பாடல் பிரமஞானம் இன்னது என்பதை விளக்குகிறது.

பொருள் :

அகம், பிரமமாய் அனுபூதி தன்னில் தன்னை அனுபவித்து, ஊன் என்றும் உயிர் என்றும், உணர்வு என்றும் ஒரு பேதமும் இன்றி, இதுதான் என்று சொல்லுகின்ற சொல்லுமின்றி ஆகாயம் முதலாய பூதங்கள் கெடவும் தான் ஒரு காலும் கெடாது நிலைபெற்று அகம்,பிரமம் என்று தெளியும் ஞானமே பிரம ஞானமாகும்.

சாற்றும் மறைதத் துவமசிமா வாக்கியங்கள் தமை உணர்ந்தால்
போற்றி அதுநீ ஆனாய் என்று அறைவது அல்லால் பொருள்இன்றே
தேற்றும் இதனைத் தெளியாதார் தெளியப் பஞ்ச ஆதனமேல்
ஏற்ற இயம நியமாதி யோகம் இருநான்கு இயற்றுவரால். [234]

இப்பாடல் தத்துவமசி வாக்கியத்தின் பொருளை உணர்த்துகிறது.

பொருள் :

சொல்லப்படுகின்ற வேதத்தின் முடிவாகிய தத்துவமசி முதலாகிய மகாவாக்கியங்கள் சொல்லும் பகுதியை உணரும் காலத்து, அது நீயானாய் என்பதல்லது மற்றொரு பொருளைச் சொல்வதற்கில்லை. ஆதலால் இப்படி உறுதியைச் சொல்லும் மகாவாக்கியங்களின் உண்மையைத் தெளியாதவர்கள் அந்த முறையைத் தெளிவதற்காகப் பஞ்ச ஆசனம் முதலாகிய பூசை முறைகளையும், இயமம் முதலாகிய எட்டுவகை யோகங்களையும் வறிதே செய்வார்கள்.

விளக்கவுரை :

பஞ்சஆசனம் - கூர்ம ஆசனம், அநந்த ஆசனம், சிங்க ஆசனம், பத்ம ஆசனம், யோக ஆசனம், யோகம் இருநான்கு: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

மாயாவாதி மதம் மறுதலை

ஏகம் நானென இயம்பி இப்படி அறிந்து முத்தியடை மின்என
மோகமான உரைசோகம் இன்பொடு முடிந்தி டாதுமலடு ஆகிய
காக மானது கருங்க லின்தசை பறித்த மூம் கரிய குஞ்சியின்
தாக மரப்பசி தவிர்க்க வாயிடை கொடுத்தது என்றுரைசெய்
தன்மையே. [235]

இப்பாடல் ஆன்மா உண்டு என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

மாயாவாதியே, நீ - நானே பிரமம் என்று சொல்லி, பின்பு கருவிகளை நீங்கி, உண்மையைத் தெளிந்து முத்தி அடையுங்கள் என்று மயங்கிச் சொல்லுகின்றாய். நீ இவ்வாறு நான் பிரமம் ஆவேன் என்று பாவனை செய்ய வேண்டும் என்று கூறுகின்றபோதே நான் என்பதாலும், பிரமன் ஆவேன் என்பதாலும் இரண்டு பட்டு, பெறுவானும் (நான்) பெயருமாகவும் அமைகிறது. மேலும் பிரமத்தை

விகாரமற்றதாகக் கூறுகிறாய். அது மீளவும் மயங்கி சீவான்மாவாக வேறுபட்டது என்றும் கூறுகின்றாய். அது கன்மத்தின் அடிப்படையில் இன்பமாகிய முத்திநிலை அடையவேண்டும் என்றும் கூறுகிறாய். இவ்வாறு நீ மயங்கிக் கூறுவது எதுபோல இருக்கிறது என்றால் ஒரு மலட்டுக் காகமானது பசியால் வருந்துகிற தன் குஞ்சுக்குப் பசியை நீக்க வேண்டிக் கரிய கல்லில் உண்டாகிய இறைச்சியை வாங்கிக் குஞ்சின் வாயில் கொடுத்தது என்று சொல்லுகின்ற தன்மையாகும்.

விளக்கவுரை :

இம்மதத்தார் நானே பிரமம் என்று பிரமத்தையும் (கடவுள்), இரண்டு ஆன்மாவையும் ஒன்றாகக் கூறுகின்றவர்கள். இக்கொள்கையை ஆசிரியர் இரண்டு விதமாக மறுத்து ஆன்மா தனியாக உண்டு என்று வலியுறுத்துகிறார். 1. நான் என்பதாலும் பிரமம் என்பதாலும் சொல் இரண்டு படுவதுபோல ஆன்மாவும் பிரமமும் வேறுபட்டது. 2. பிரமம் விகாரமற்றது என்று கூறிய பிறகு அது சீவனாகப் பேதிக்கிறது என்று கூறுவதனாலேயே இரண்டும் வெவ்வேறாகிறது.

மோகமான உரை - மதத்தார் கூறுகின்ற கொள்கைகள், சோகம் இன்பொடு முடிந்திடாது - பாவனை இன்பத்தோடு கூடுதல்.

நீடு வேதம்அள வாக ஏகமெனும் நீதி தாண்நிகழ்வது ஆகுமேல்
நாடி ஞாதிருவும் ஞானம் ஞேயமுடன் நாளும் நான்மறையும்
ஓதலால்
ஓடும் ஆகும் உனது ஏகம் ஓதும்இவை ஊன மாகிஉரை மாறுகோள்
கூடுமாகும் அனு பூதி தானும்அது கூடிடாது அறிவி லாமையால்.
[236]

இப்பாடல் ஞானம் பற்றிய கருத்தினை மறுக்கிறது.

பொருள் :

அனாதியாக உண்டர்கிய வேதம் பிரமம் ஒன்றே

உள்ளது, அதைத்தவிர வேறுபொருள் இல்லை என்று சொல்லுவதாக நீ கூறுகிறாய். இது ஏற்புடையது அல்ல. வேதத்தில் அறிவான், அறியப்படும் பொருள், அறிவு என்ற மூன்று உள்ளன என்று வரையறுக்கப்பெற்றுள்ளது. அந்த அடிப்படையில் பார்த்தால் ஒன்று என்ற உன்னுடைய வாக்கியம் குற்றமுடையதாகிறது. (தத்துவமசி என்ற வாக்கியம்) சீவான்மா இல்லை என்று நீ சொல்வதால் அதற்கு ஏற்படுகின்ற அநுபூதியும் இல்லை என்றே கூற நேரிடும்.

விளக்கவுரை :

பிரமம் ஒன்றுதான் உள்பொருளாக உண்டு என்று வேதம் சொல்லுகிறது என்றால் அவ்வேதத்தில் சொல்லுகின்ற ஞாதுரு - அறிவான் (ஆன்மா), ஞானம் - அறியப்படும்பொருள் (சிவசக்தி), ஞேயம் - அறிவு (பிரமம்) என்று மூன்று உள்ளன என்று கூறுவது கொள்கை மாறுபாடாகும் என்கிறார் ஆசிரியர். மேலும் ஆன்மா இல்லை என்பதால் அது அனுபவிக்க வேண்டிய முத்தியும் இல்லை என்கிறார் ஆசிரியர்.

நீதியால் ஒளிகொள் பானு வானதுஅகல் நீரி லேநிகழு மாறுபோல்
ஆதி தான்உருவம் ஆய காயம்அதில் மேவி ஆவதிலை யாகுமாம்
தீதிலா அருவம் ஆத லால்நிழல்கள் சேர வேறிடம் இலாமையால்
ஓதில் ஓர்அகலின் நீரிலே ஒருவர் காண லால்இலது உன் ஏகமே.

[237]

இப்பாடல் பிரமம்தான் ஆன்மாவாகக் காட்சியளிக்கிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

கிரணங்களை உடைய சூரியனும், பூமியில் உள்ள பாத்திரங்களில் இருக்கின்ற நீரில் படிந்து பல சூரியன்களாகத் தோற்றமளிப்பது போலப் பிரமம் உலகப் பொருள்களில் பிரதிபலிக்கிறது என்று நீ கூறுகின்றாய். அருவமாகிய பிரமப்பொருள் அது உலகப் பொருளாகிய உருவங்களாகக் காட்சியளிக்கிறது என்பது பொருந்தாது. மேலும் நீர் உள்ள பாத்திரங்கள் நிழலில் இருந்தால் சூரியனின் எதிரொளி காணப்படாது. அதுபோலப் பிரமம் பொருந்தா உடம்புகளும் காணப்படவேண்டும். (அதாவது நிழலில் உள்ள கலத்தில்

சூரியன் இல்லாது பாத்திரம் மட்டும் காணப்படுவது போலப் பிரமம் கூடாத உடம்பும் காணப்பட வேண்டும்). மேலும் பாத்திரங்களில் சூரியனைக் காண்பதற்கு ஒருவன் இருப்பது போலப் பிரமத்தைக் காண்பதற்குரிய சீவான்மா வேண்டும் என்பதால் நீ கூறுகிற அகம், பிரமம் என்பது இல்லையாம்.

விளக்கவுரை :

இம்மதத்தார் பிரமத்தை அருவம் என்பர். ஆனால் பிரமம் உடம்புகளில் கூடி சீவான்மாவாகவே பிரதிபலிக்கிறது என்பர். இதனை ஆசிரியர் உருவமற்றது எவ்வாறு உருவங்களாகப் பிரதிபலிக்கலாம் என்று கூறி மறுக்கிறார். மேலும் நீரில் தோன்றுகின்ற சூரியன் என்று அவர்கள் எடுத்துக்கொண்ட உவமையும் மறுக்கிறார். சூரியன் ஒளியால் பாத்திரங்களில் உள்ள நீரில் சூரியன் பலவாகத் தோன்றுகிறது. ஆனால் அதே நேரத்தில் சூரிய ஒளி படாத பாத்திரத்து நீரில் சூரியன் தோன்றுவதில்லை. ஆதலால் சூரியன் காணுகின்ற பாத்திரமும், சூரியன் காணப்படாத பாத்திரமும் இருப்பதால் பிரமம் கூடிய உடம்பும், பிரமம் கூடாத உடம்பும் உள்ளவாகுமே என்கிறார் ஆசிரியர்.

வேறு வாயில்புல னோடு மேல்மனமும் மேவி டாதுபிர மாணமும்
கூறிடாது அறிவு தான் எணாஉ ணர்தல் கோடுநீ முயலின் நாடிணாய்
ஈறி லாதபரம் ஏக மேஎன இயம்பு நீஇசையும் ஞானமும்
பேறது ஆவதிலை பேத மானஇது பேணவேஉனது பேசிலே. [238]

இப்பாடல் பிரமம் வேறு சீவன் வேறு என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

ஓர் உடம்போடு உயிரானது கூடாமலும், பொறிகளோடு புலன்களோடு மனத்தோடு கூடாமலும் எதனையும் அறியாது. எனவே ஒன்றோடு ஒன்று கூடித்தான் அறிய முடியும். இதனையே அறநூல்களும் கூறுகின்றன. ஆனால் நீயோ பிரமமானது உடம்போடு தானாய் நின்று அறியும் என்று கூறுகின்றாய். நீ இவ்வாறு கூறுவது உரையளவைக்கு

மாறுபட்டதாகும். இது எவ்வாறு இருக்கிறது என்றால் முயலுக்குக் கொம்பு உண்டு என்று சாதிப்பது போன்றதாகும். மேலும் பிரமம் ஒன்றே உளது என்று நீ கூறுவதும் பயன் தராது. ஏனென்றால் பிரமமாகிய பரம்பொருளும் அதனை அறியும் சீவான்மாவும் இரண்டு உள்ளன என்று கொண்டால்தான் சீவான்மா முத்திப்பேறு அடைய முடியும்.

விளக்கவுரை :

இப்பாடலில் பிரமம் உடம்புகளில் நின்று தானே அறியும் ஆற்றல் உடையது என்று இம்மதத்தார் கூறும் கருத்தை மறுக்கிறார் ஆசிரியர். எதுவும் கூடினால்தான் அறிய முடியும் என்று வேதங்கள் கூறுவதால் வேதத்தை ஒத்துக்கொள்ளும் இம்மதத்தார் வேதக்கருத்தை ஏற்காத குற்றத்திற்கு ஆளாகி, உரை அளவைக்கு மாறுபட்டவர் எனக்கூறி மறுக்கிறார். பிரமாணம் - வேதங்கள், கொழு - கொம்பு.

இலகு சோதிமணி எனவும் ஏகம்எனின் இதனில் ஏகமது விலகிணாய்
குலவு காசும்ஒளி அதுவும் நீடிவண் குணமும் நாடுவதொர் குணியுமாம்
பலவு மான குணம் ஒருவும் ஏகமது எனவும் நீபகரின் நிகரிலா
உலக மானதனை உதவு மாறதிலை உணர்வு தானுமிலை உணிலே. [239]

இப்பாடல் பிரமம் வேறு - ஆன்மா வேறு என்பதை உறுதிப்படுத்துகிறது.

பொருள் :

மிக்க ஒளியும் மணியும் போலப் பிரமமும் உலகும் பிரித்துக் காண முடியாதபடி ஏகமாக இருக்கிறது என்று நீ கூறுகின்றாய். இந்த உவமை பொருந்தாது. மேலும் ஒன்றாகிய பிரமமானது இச்சா, ஞான, கிரியைகளா்கிய பல குணங்களிலிருந்து நீங்கி நிற்கும் என்று கூறினால், அக்குணங்கள் பிரமத்திற்கு இல்லாததாகி உலகை உண்டாக்கி, காத்து அழிக்கும் தொழில் நடத்தும் உணர்வும் இல்லாமல் ஆகிவிடும்.

விளக்கவுரை :

குணம் வேறு, குணி வேறு, எனவே உவமை தவறு என மறுக்கப்பெறுகிறது. மேலும் பிரமத்திற்குக் குணங்களே இல்லை என்றால், உலகைத் தோற்றி, காத்து, அழிக்கும் குணம் அதன் தொழில்கள் இல்லாதாகி, பிரமமே இல்லாததாகி விடும் என்கிறார் ஆசிரியர்.

காசு - மணி (மாணிக்கம்) உதவுமாறு - தோற்றி, காத்து, அழிக்கும் நிலை.

புற்றின் நேர்பழுதை தொக்க போதுமயிர் புளக மாகஅர இரவிலே
உற்றதாம் அதனை ஒக்க வேஉலகு உதிக்கு மாறும் ஒரு சத்திலே
பெற்ற தாகும்எனின் அப்பி ரமந்தியுடை யோரும் அப்பிரம பேதமாய்
நிற்பர் நீ பகரின் முற்றும் ஐயநிலை பெற்றும் இன்பதுஅது
இலாததாம். [240]

இப்பாடல் பிரமம் நிர்விகாரம் என்பதனை மறுக்கிறது.

பொருள் :

(நீ கூறுகிற மற்றொரு உவமை) புற்றுக்குப் பக்கத்திலே கயிறு கிடப்ப இருட்டில் அக்கயிற்றைக் கண்டவர்க்குப் பயத்தாலே மயிர் புளகித்துப் பாம்பு என்று நினைத்து அச்சப்படுவர். அதுபோலப் பிரபஞ்சமும் ஒப்பற்றதாகிய பிரமத்திலே தோன்றுகிறது என்றும், அதனோடு கூடியதால் அப்பிரபஞ்சமும் இருப்பது போலத் தோன்றும் என்று நீ கூறுகிறாய். அப்படியானால் உலகம் அனைத்தும் பிரமத்திலிருந்து வேறல்ல. அதன்படி கயிற்றைக் கண்டு பாம்பு என்று மயங்கி அஞ்சுகிறவன் அப்பிரமத்தில் ஒரு கூறாக வேண்டும். இதன்படி அந்தக் கூறு மயக்கமுடையது என்றால் அதற்கு அறிவு உடையதாய் - பிரமமாய் இன்பத்தை அடைகிறது என்பது பொருந்தாது.

விளக்கவுரை :

பிரமம் உலகப் பொருளாய்க் காட்சிதந்து பின் உலகம் கருவிகளிலிருந்து நீங்கி முக்தியடையும் என்பது இம்மதத்தார்

கொள்கை. இதனை ஆசிரியர் மறுக்கிறார். கயிற்றைப் பாம்பாகக் கண்டு அஞ்சுகின்றவனிடத்திலும் பிரமம் இருக்கிறது. அவனிடத்தில் பிரமம் அறிவற்ற மயக்கமுடையதாக இருந்தால் எவ்வாறு முத்தியடைய முடியும்? பிரமமும் அறிவற்றதாக நிற்குமே என்கிறார் ஆசிரியர்.

ஓதியே உலகம் அதனை நீயும்நிரு
வசன மாகஉரை செய்வதுஎன்
பேதை யோய்உவதும் இலதும் அல்லபொருள்
பேசு வாரும்உள ரோசொலாய்
ஆதி யேஉவது வருத லால் இலதில்
ஆவது இன்மை அது அழிந்துபோம்
நீதி யால்உவது இலாமை நேர்வதுஎனின்
நேர்மை ஆகியது நின்றதே. [241]

இப்பாடல் உலகம் அநாதி அல்ல என்பதனை மறுத்துரைக்கிறது.

பொருள் :

நீ வேதத்தை ஓதுகிறவன். அவ்வாறு இருந்தும் உலகை முன்பு இல்லை என்றும் பின்பு நிருவசனமாகிய பிரமத்திலே தோன்றப்பட்டது என்றும் சொல்வது ஏன்? ஒரு பொருள் இல்லதுமன்று, உள்ளதுமன்று என்று சொல்லுவார் உளரோ. எனவே நீ அறியாதவனே ஆகிறாய். உடனே நீ, ஆதிதோறும் தோன்றி வருதலால் இல்லை என்பது இல்லையாய் உள்ளதாகிறது. பின் அது இல்லையாம்படி அழிந்து போகின்ற முறைமையால் இல்லாமை உடையதாகின்றது. எனவே தான் பிரபஞ்சத்திற்கு உள்ளதும் இல்லாததும் பொருந்தியது என்று நீ கூறினால் அழிந்து போகின்ற பிரபஞ்சம் மீளவும் பிரமத்திலே உண்டாகுமிடத்து முன்புபோலவே தோன்றுவதால் அதற்கு மூலகாரணம் இருந்து அழியாததாக நிற்கிறது. (எனவே இல்லை என்பது இல்லையாகிறது).

விளக்கவுரை :

பிரபஞ்சம் இல்லாத தன்மையும் உள்ளதாம் தன்மையும் ஒரே நேரத்தில் உடையது என்று கூறமுடியாது என்றும்,

உலகத்திற்குத் தோற்றம் உண்டு என்றால் அதற்கு இருப்பு உண்டு. இல்லாத பொருள் என்றைக்கும் தோன்றுவதில்லை என்றும் ஆசிரியர் இங்கு வலியுறுத்துகிறார்.

வேறது ஆகிஅது போல் இருந்தமையில் வெள்ளி சுத்தி எனில் ஐயமே
கூறலாம் ஒரு பரத்தோடு ஒத்தபொருள் கொண்டு விண்டநிலை
கண்டனம்
மாறிடாது நிலம் நீர தாகிஅனல் வாயு வாகிஅவை மாறியும்
சேறி லாதுவிவ காரம் அன்றுபர மார்த்த மாய்அது செறிந்ததே. [242]

இப்பாடல் உலகம் மெய்யாகத் தோன்றிப் பொய்யாகிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

பொய்யாகிய உலகம் பிரமம் போல மெய்யாகித் தோன்றுகிறது. எதுபோல என்றால் சிப்பியானது வெள்ளியைப் போன்று பிரகாசித்தது போன்றதாகும் என்று கூறுகின்றாய். அப்படியானால் சிப்பியை வெள்ளியென்று ஐயப்பட்டாற் போல உலகையும் பிரமமோ இல்பொருளோ என்று ஐயப்பட்டே சொல்லவேண்டும். அதாவது முதலில் பிரபஞ்சம் பிரமத்தோடு ஒத்த பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் இல்பொருளாக மாறிக் கொள்ளப் பெற்றது என்றாகிறது. நிலம் நீராகாவோ, அனல் காற்றாகவோ அல்லது நீர் நிலமாகவோ, காற்று அனலாகவோ மாறாது. ஆகவே இவ்வுலகம் விகாரத்திலும் பரமார்த்தத்திலும் மெய்யானது என்றே கொள்ளவேண்டும்.

விளக்கவுரை :

உலகத்தை உள்பொருளாகக் கொண்டு பிறகு உண்மை ஞானம் தோன்றிய பிறகு உலகம், பொய், மெய்யான பொருள் பிரமமே என்று அறியப்படுகிறது என்ற கொள்கையை இம்மதத்தார் உடையவர்கள். இதற்கு இவர்கள் காட்டுகிற உவமை முதலில் சிப்பியை வெள்ளியாக நினைத்து, பிறகு அதன் உண்மை நிலையான சிப்பி என்று அறிவது போல என்பதாம் இதன்ன ஆசிரியர் மறுக்கிறார். எவ்வாறென்றால்

உலகத்தில் உள்ள ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறுகிற நிலை இல்லை. நிலம் நீராக மாறிக் காட்சி தராது. அல்லது நீர் நிலமாக மாறிக் காட்சி தராது. ஆகவே உலகமானது அவர்கள் கூறுகிறபடி மாறுவதற்கு வழியில்லை. எனவே விகார நிலையிலும் (மாறுபட்ட) பரமார்த்த நிலையிலும் (உண்மை நிலை) மெய்யானதே என்று கூறி அவர்கள் கருத்தை மறுக்கிறார் ஆசிரியர்.

மாய நூலது சிலம்பி வாயின்இடை வந்த வாறுஅதனை மானவே
ஆய தேஉலக மான தும்பிரமம் அதனி லேஎனில் அடங்கிநின்று
ஏயும் ஆகும்ஒரு சித்தும் அத்துடன் நிலாதது என்றுபின் இயம்பின்நீ
பேயனே கடம் மிருத்தில் வந்தது பிறப்பது ஆவதிலை பேசிலே.

(243)

இப்பாடல் உலகத்திற்குக் காரணம் பிரமம் என்பதை மறுக்கிறது.

பொருள் :

பொய் நூலானது சிலந்தியின் வாயினிடத்தில் தோன்றி நின்று கெட்டு மீளவும் அதனிடத்திலே நூலாகத் தோன்றி வந்தாற்போல உலகமானது பிரமத்திலே தோன்றி நின்று கெட்டபின் மீளவும் பிரமத்திலே முன்பு போலவே தோன்றும் என்று கூறுகிறாய். அது தவறு. ஏனென்றால் பிரமம் சித்துப் பொருள். உலகமோ அசித்துப் பொருள். சித்துப் பொருளிலிருந்து அசித்துப் பொருள் எவ்வாறு தோன்றும்? உடனே நீ அதற்குப் பதிலாக நூலாகிய சடப்பொருளில் சிலந்தியானது அகப்படாது நிற்பதுபோலப் பிரபஞ்சமாகிய சடத்திற்குள் பிரமம் கூடி நில்லாது காரணமாக நிற்கும் என்று பதில் கூறலாம். அதுவும் தவறு. ஏனென்றால் குடத்திற்குக் காரணம் மண்ணாக இருந்தாலும் அதுதானே தோன்றிவிடாது. ஆதி காரணமாகிய மண்ணும் நிமித்த காரணமாகிய குயவனும், துணைக் காரணமாகிய திரிகை (சக்கரம்) யும் கூடித் தொழில் செய்தால்தான் குடம் தோன்றும். எனவே பிரபஞ்சத்திற்கு ஆதி காரணம் அமைந்து தோன்ற வேண்டுமே தவிரத் தானே தோன்றிப் பொய்யாக நிற்காது.

விளக்கவுரை :

இப்பாடலில் உலகமானது பொய் என்றும் அவ்வுலகம் பிரமத்திலிருந்து தோன்றி நின்று அடங்குகிறது, மீளவும் தோன்றுகிறது என்ற இம்மதத்தாரின் கொள்கையை ஆசிரியர் மறுக்கிறார். சித்துப் பொருளிலிருந்து அசித்து தோன்றாது என்பது முதல் மறுப்பாகும். இதற்குப் பதிலாக இம்மதத்தார் இல்லை, இல்லை, சிலந்தி நூலிலே சிலந்தி காரணமாக நிற்குமே தவிர அதற்குள் அடங்கி நிற்காது என்று பதில் கூறினால் அதுவும் தவறு என்கிறார். ஒரு பொருள் தோன்றுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டுமே தவிர ஒரு காரணம் மட்டும் போதாது. அந்த அடிப்படையில் இது தவறு என்கிறார். எனவே உலகம் மெய்யானது என்பதும், உலகத்திற்கு ஆதி காரணமாக இறைவன் வேண்டும் என்பதும் பெறப்படுகிறது.

வேற தாகும்உரு வத்தி லேபரம் வெளிப்ப டும்என விளம்பில்நீ
ஊறிலா உரு அசத்தி லேபிரமம் உண்டு தான்உணர்வு இலாததுஎன்
மாறி வாயுவும் அனாதி யானவையும் வந்தி டாமையினில்
இன்றெனில்
ஈறு தான்உடைய தாய தோபிரமம் என்கொ லோஇவை இறப்பதே.
[244]

இப்பாடல் பிரமம் உலகப் பொருளாகக் காட்சி தருகிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

பிரமப் பொருள் உலகத்தில் பல்வேறுபட்ட உருவங்களாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு நிற்கிறது என்று நீ கூறுகின்றாய். அப்படியானால் சடப் பொருளிலும் (உயிரற்ற பொருள்) பிரமம் இருத்தல் வேண்டும் என்றாகிறது. மேலும் ஒருவன் கனவு காணுகின்ற நிலையில் அல்லது உறக்க நிலையில் அவனோடு பிரமம் கலந்திருக்குமானால் அவனிடத்தில் அறிவு நிகழாதது ஏன்? (அதற்கு நீ பதில் கூறவேண்டும்) உடனே நீ பிராணவாயு, மனம் முதலிய அந்தக் கரணங்கள் அந்த இடத்தில் நீங்கியதனால் அறிவு நிகழவில்லை

என்று விடை கூறலாம். அப்படியானால் பிரமத்திற்கும் சில நேரங்களில் அறிவு நிகழ்வதில்லை என்று பொருள் பட்டு விடும். அல்லது கனவு (உறக்க நிலையில்) பிரமம் நின்றாலும் பிராணவாயுவும் அந்தக் கரணங்களும் நீங்கின என்று கொள்ள நேரிடும். ஆதலால் பிரமம் அறிவுப் பொருளாகவும், அறிவற்ற பொருளாகவும் காட்சி தருகிறது என்று கூறுவது தவறாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் உலகம் பொய்யானது, உலகத்தில் காணப்படும் பொருளாகப் பல வடிவுகளில் பிரமம்தான் காட்சியளிக்கிறது என்ற இம்மதத்தாரின் கொள்கையை ஆசிரியர் மறுக்கிறார். இதை ஒத்துக்கொண்டால் உலகத்தில் உள்ள உயிரற்ற பொருள்களிலும் பிரமம் இருப்பதாகக் கொள்ள நேரிடும். அடுத்து உலகப் பொருளாகப் பிரமம்தான் காட்சியளிக்கிறது என்றால் உலகப் பொருளாகிய மனிதன் உறக்க நிலையில் அறிவற்றவனாகக் காட்சி அளிக்கின்றானே ஏன்? என்று ஆசிரியர் கேட்கின்றார். அதற்குப் பதிலாகப் பிராணவாயுவும் அந்தக் கரணங்களும் நீங்கியதால்தான் உறக்க நிலையில் அறிவற்ற நிலை ஏற்படுகிறது என்று இம்மதத்தார் கூறும் கருத்தையும் ஆசிரியர் ஏற்கவில்லை. ஏனென்றால் அதை ஏற்றால் ஒன்று பிரமத்திற்குச் சில நேரங்களில் அறிவற்ற நிலை ஏற்பட்டு விடும். மற்றொன்று பிரமமும் ஈறுடையதாக (முடிவுடையதாக)க் கொள்ள நேரிடும் என்று கூறி ஏற்க மறுக்கிறார்.

பற்றது இன்றிஉடல் நின்றிடும்பரம் எனப்ப கர்ந்தனை பரிந்துடன்
உற்றுஉடம்பு நரை திரைகள் நோய்சிறை உறுப்பு அழிந்த இவையும் உள்ளபின்
குற்றம் என்றுஇதனை விட்டி டாதுவிட என்ற லும்குலைவு கொண்டிடும்
பெற்றி கண்டும் ஒரு பற்று அறும்பரிசு பேச வேஉளதுஉன் ஆசையே. [245]

இப்பாடல் பிரமத்திற்கு உடலில் பற்றில்லை என்பதை மறுக்கிறது.

பொருள் :

உலகத்தில் உள்ள உடம்புகளில் பிரமமானது நின்றாலும் அவ்வுடம்புகளோடு பிரமம் பற்றில்லாது நிற்கும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறானால் பிரமம் என்ற உடம்பில் நரை, திரை, நோய், சிறை இவற்றினால் உறுப்புகள் அழிந்த பின்னும் இவ் உடம்பைப் பொல்லாதது என்று எண்ணிச் சீவான்மா அவ்வுடலை விட்டு நீங்குவதில்லை. இப்படியிருக்க நீயோ வீடுபேறு என்பது சீவான்மா உடம்பைவிட்டு நீங்குவது என்று கூறுகின்றாய். உடல் நீங்கும் என்று சொன்ன அளவில் உடம்பிற்குள் இருக்கும் உயிர் அஞ்சி நடு நடுங்குகிறதே தவிர அதில் பற்றில்லாமல் இருப்பதில்லை. எனவே உன்னுடைய கூற்றுப்படி உடம்பிலே உள்ள பிரமம் உடம்பில் பற்றில்லாமல் இருக்கிறது என்பது தவறாகும். உன் ஆசையினால்தான் இதைக் கூறுகின்றாயே தவிர உடம்பிலுள்ள உயிர் உடம்பில் கொண்டுள்ள பற்றை விடுவதில்லை.

விளக்கவுரை :

உலகில் உள்ள பல உடம்புகளாகப் பிரமம் காட்சி அளித்து அவ்வுடம்பில் பற்றில்லாது பிரமம் விளங்குகிறது என்ற கொள்கை உடையவர் இம்மதத்தார். இதனை ஆசிரியர் மறுக்கிறார். உடம்பில் உள்ள உயிருக்கு உன் கருத்துப்படி (பிரமத்திற்கு)ப் பற்றில்லை என்றால், நரை, திரை, மூப்பு ஏற்பட்ட துன்ப காலத்தில் அவ்வுடலை விட்டு உயிர் பற்றறுப் பிரிய வேண்டியதுதானே. ஆனால் இத்தகைய துன்பம் வந்த காலத்திலும் உயிரானது உடம்பை விட்டு நீங்குவதில்லை. மேலும் உடம்பிலிருந்து உயிர் நீங்கப் போகிறது என்று ஒரு பேச்சுக்குச் சொன்னால் பற்றற்ற உயிர் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே. ஆனால் இன்றைக்கும் உயிர் நடுங்குகிறதே தவிரப் பற்றற்று இருப்பதில்லை. எனவே உடம்பில் உயிருக்குப் பற்றில்லை என்று கூறுவது இம்மதத்தாரின் ஆசையான சொல்லே தவிர உண்மையில்லை.

சோதி மாமணிகள் ஊடு போனதொரு நூலும் ஆணநிலை சொல்லிடும்
நீதியால் மணிகள்பேத மாகியொரு நூலில் நின்றமை நிகழ்த்தினாய்
ஆதி தான்ஒருவ னாகி யேபல அணந்த யோனியில் அமர்ந்தவன்
பேதி யாதநிலை பேசி னாய்உலகு பேதமே இலது அபேதமே. [246]

இப்பாடலில் பிரமாவும் ஆன்மாவும் ஒன்று என்ற அபேதவாதம் மறுக்கப்படுகிறது.

பொருள் :

பல நிற மணிகளைக் கோர்க்கக்கூடிய நூல் ஒரு நிறமாக இருந்தாலும் மணிகளுக்கு ஏற்ப நிறம் மாறுபடும். அதுபோல ஒன்றாகிய பிரமம் எண்ணற்ற உடல்களாக அது உலகில் தோன்றினாலும் பிரமம் ஒன்றேயாகும் என்று நீ கூறுகிறாய் அப்படியானால் உன்னுடைய கொள்கையான அபேதவாதம் மறுக்கப்படுகிறது. அதாவது பிரமத்திற்கும் உலகத்திற்கும் வேறுபாடு இல்லை என்ற கொள்கை உன்னாலே மறுக்கப்படுகிறது. ஏனென்றால் பிரமத்தின் தன்மைக்கும் உலகத்தின் தன்மைக்கும் வேறுபாடு உண்டு என்று இந்த உவமையால் நீ நிருபிக்கிறாய்.

விளக்கவுரை :

இம்மதத்தார் பிரமம் ஒன்றே உள்பொருள், இந்த உள்பொருளே உலகில் பல வடிவங்களாக (பொருளாக)க் காட்சி தருகிறது என்ற கொள்கையினை உடையவர்கள். இதற்கு அவர்கள் காட்டும் உவமை வெள்ளைநிற நூலில் பலநிற மணிகள் கோர்க்கப்படும் பொழுது அந்த நூல் பல நிறமாகக் காட்சி அளிப்பது போன்றதாகும் என்பது. அந்த உவமையை வைத்துக்கொண்டே அவர்தம் அபேதவாதக் கொள்கையை ஆசிரியர் மறுத்துவிடுகிறார். அதாவது பிரமமும் உலகப் பொருள்களும் ஒன்று என்ற அபேதவாதம் (பேதமற்றது) அவர்தம் கொள்கையாகும். நூல் நிறம் வேறு, மணிகளின் நிறம் வேறு என்பதால் இங்கு பேதப்படுகிறது. இந்த உவமையின்படி பார்த்தால் பேதம்தானே ஏற்படுகிறது, எவ்வாறு அபேதத்திற்கு உவமையாகும் என்கிறார் ஆசிரியர்.

ஒத்து நின்றுடலின் இன்ப துன்பமவை உற்றும் உற்றிடுவது இன்றெனும்
பித்த உன்னுரையில் உற்றதே இலது பெற்றது இன்இலது பெற்றதேல்
துய்த்தல் என்னுறுதல் சீவ பாவமது சொல்லின் ஒன்றினுந் தோய்வு
இலாமை நீ
வைத்து நித்தமன வாக்கு இறந்தபரம் என்ன மாணம் இலை இன்னமே. [247]

இப்பாடல் அகம் பிரமம் என்று கூறுவதை நகையாடுகிறது.

பொருள் :

உடம்போடு கூடி நின்ற உயிர் உடம்பு அனுபவிக்கின்ற சுக துக்கங்களை அனுபவிக்கின்றது. இது உலக இயற்கை. ஆனால் நீயோ உடம்போடு கூடிய பிரமம் சுகதுக்கங்களை அனுபவிப்பதில்லை என்று கூறுகிறாய். பித்தனே, நீ கூறுகிற வார்த்தை பொருந்துவதில்லை. உன் சாத்திரத்திலும் உண்டானதன்று. இத்தகைய உமது கொள்கை உலக இயற்கைக்கு மாறானதாக இருக்கின்றதே என்று கேட்டால் நீ பரமான்மா துய்ப்பதில்லை, உடம்பில் காணுகின்ற சீவான்மாதான் துய்க்கின்றது என்று கூறுகின்றாய். இப்படி நீ கூறுவது வேடிக்கையாக உள்ளது. சீவான்மா அனுபவிக்கிறது என்றால் அந்தச் சீவான்மாவைப் பரமாத்மாவாகக் கொண்டு அதனை நித்தம் என்றும், மனம் சொல்லைக் கடந்தது என்றும், அதுவே பிரமம் என்றும் நீ கூறுவது உனது நாணமின்மையைக் காட்டுகிறது.

விளக்கவுரை :

உடம்பு அனுபவிக்கின்ற இன்ப துன்பத்தை உடம்பாக நிற்கும் பிரமம் அனுபவிப்பதில்லை என்று கூறுகின்ற இம்மதத்தார் அனுபவத்தில் உடம்பிலிருந்த ஏதோ ஒன்று அனுபவிக்கின்றதே அது எது என்று கேட்டால் அது சீவான்மா என்று கூறுகின்றார்கள். அனுபவிப்பது சீவான்மா என்றால் இன்ப துன்பத்தை அனுபவிப்பது எப்படி பிரமமாக முடியும்? அழிவற்றதாக மனம் வாக்குக்கு அப்பாற்பட்ட பெருமை உடைய பிரமமாக எவ்வாறு இருக்க முடியும்? இதுதான் பிரமம் என்றால் அப்படிக் கூறுவது நாணத்தைத் தருவதாகும் என்று கூறி நகையாடுகிறார் ஆசிரியர்.

எங்கும் நின்றிடில் அவத்தை இன்றிடும் இசைந்திடும் கரணம்
என்னில் நீ
அங்கு நின்றபரம் எங்கு ஒளித்தது அது நின்ற தேல் அவை அடங்கிடா
இங்கு நின்றதொரு காந்த மானகல் இரும்பு சந்நிதி இயங்குநேர்
தங்கி நின்றதுஎனில் நீங்கி மீளும்வகை தங்கிடாது உன்உரை
தப்பதே. [248]

இப்பாடல் கரணங்கள் அவத்தைப்படும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

பிரமம் சீவான்மாவாக உடம்புகள் தோறும் நிறைந்திருக்கும் என்று நீ கூறுகிறாய். அப்படியானால் அந்தப் பிரமத்திற்கு அவத்தைகள் இல்லாது இருக்க வேண்டும். அவத்தைப் படுவது சீவான்மா இல்லை, அந்தக் கரணங்களின் சம்பந்தம் என்று நீ விடை கூறலாம். அப்படியானால் கரணங்கள் அவத்தைப் படும் பொழுது சீவான்மா எங்கே மறைந்து நின்றது? சீவான்மா அவ்விடத்தில் தான் நின்றது என்றால் சீவான்மாவின் வழி நடக்கும் கரணங்கள் அவத்தைப் படமாட்டா. (உடனே நீ அதற்கு) காந்தத்தின் முன்னிலையில் இரும்பு ஆட்படுவது போலச் சீவான்மா முன்னிலையில் அந்தக் கரணங்கள் இயங்குகின்றன என்று கூறலாம். அப்படியானால் இரும்பு காந்தத்தோடு கூடினால் அதனை விடுத்துத் தானாக நில்லாது. அதுபோல அந்தக் கரணங்களும் சீவான்மாவோடு கூடினால் நீங்காது என்பதே பொருத்தமானதாகும். எனவே நீ கூறுகிற உவமை தவறானதாகும்.

விளக்கவுரை :

பிரமம் ஒன்று. அது உலகில் பல உடம்போடு காட்சி தருகிறது. அந்த உடம்பில் பிரம்ம் சீவான்மாவாக இருக்கிறது என்பது இம்மதத்தாரின் கொள்கை. இதனை ஆசிரியர் மறுக்கிறார். பிரமம் வேறு சீவான்மா வேறு என்பதுதான் உண்மை என்கிறார்.

இருள்பொ திந்ததுஒரு பரிதி இவ்வுலகில்
இசையில் இன்று உடலம் நான்எனும்
மருள்பொ திந்ததொரு பிரமம் இங்குஉளது
மருவி நின்றஉரு ஒருவியே
தெருள்பொ திந்துபரன் நான் எனும் தெளிவு
சென்ற போதுகதி என்றிடும்
பொருள்பொ திந்ததுஎனில் அமல னுக்குமலம்
வருத லால்உளது புன்மையே. [249]

இப்பாடல் பிரமம் தானே மருட்சியால் சீவான்மாகிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

உடம்புகள் தோறும் பிரமமே சீவான்மாவாகக் கலந்து நிற்கிறது. அவ்வாறு நிற்கும்பொழுது இருளால், மூடப்பெற்ற ஆதித்தன் (சூரியன்) போலப் பிரமப் பொருளும் மயக்கத்தினால் உடம்பே நான் என்று கருதி நிற்கிறது. அத்தகைய மயக்கம் நீங்கி இவ்வுடல் நான் அன்று, நானே பிரமம் என்று ஞானம் தோன்றுகின்றபோது முத்தி ஏற்படுகிறது. அப்போதுதான் பிரமம் நான் என்பது விளங்கும் என்று நீ கூறுகிறாய். இது பொருத்தமன்று ஏனென்றால் மல, மாயை அற்ற பரம்பொருள் உடம்போடு கூடுகின்ற பொழுது மலத்தோடு கூடும், பிறகு நீங்கும் என்று கூறுகின்ற உரை வெற்றுரையாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் பிரமம் சீவான்மாவாக உடம்பில் கலந்து நிற்கிறது, அப்போது மயக்கம் ஏற்படுகிறது. அதாவது மல, மாயை ஏற்பட்டுத் துன்பம் ஏற்படுகிறது. பின்னர் அது ஞானத்தால் தெளிவாகிறது. இதுதான் முத்தி என்ற இம்மதத்தாரின் கொள்கையை ஆசிரியர் வெற்றுரை என்கிறார். ஏனென்றால் மயக்கம் ஏற்படுகிறது என்றாலேயே அது பிரமத்திற்கு இழுக்காகும்.

சுத்தம் ஆனது பரத்தி னுக்கு அணைவது
இன்று சுத்தமது அநாதிநீ
வைத்த மாயம்உறு சித்து அசுத்தம்உற
மற்று அதற்குமலம் வைத்தனை
ஒத்த சீவன்மலம் கன்மம் மாயைஉறு
கின்ற காரணம் உணர்ந்திடாய்
பித்த னேவிறகி னில்பி றப்பதுஎரி
என்னில் வேறுபொருள் பெற்றதே. [250]

இப்பாடல் மருட்சியால் சீவான்மாகவும், தெருட்சியால் பரப்பிரமமும் ஆகும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

உடம்பில் இடம் பெற்று நின்ற பரமான்மாவாகிய சீவான்மா மலத்தை அனுபவித்து, பின்விடுபட்டுத் தூய்மையாகிறது என்று நீ கூறுகின்றாய். அப்படிக் கூறினால் உன் கருத்துப்படி பிரமத்திற்குச் சுத்தமாகிய தூய்மை இடையில் வந்ததாகி விடும். உண்மையில் பிரமப் பொருள் என்பது தோற்றமில் காலந்தொட்டே தூய்மையானதாகும். அது மலத்தோடு தொடர்பில்லாதது. இவ்வாறு இருக்க முன் கருத்தாகிய மாறுபட்ட கருத்து தோன்றக் காரணம் என்ன எனில் ஆன்மா மலம், கன்மம், மாயை ஆகிய இவற்றினுடைய இயல்பைத் தெளிவுற அறியாதது தான் காரணமாகும்.

(இவ்வாறு நாங்கள் உன் தவறை உணர்த்துகின்ற பொழுது நீ உடனே) அவ்வாறன்று, விறகினுள்ளே மறைந்திருக்கும் நெருப்பு வெளிப்பட்டுத் தோன்றும் போதுதான் ஒளி வீசும், விறகுக்குள் இருக்கும்பொழுது ஒளிவிடுவதில்லை. அது போலவே உடம்போடு கூடியிருக்கிற பொழுது ஒளிவிடாத பிரமம் உடம்பாகிய தொடர்பிலிருந்து நீங்கும்போது ஒளி வீசுகிறது என்று நீ கூறலாம். அப்படியானால் நெருப்புக்கு இரு தன்மை இருக்கிறது. ஒன்று மறைந்திருப்பது, மற்றொன்று வெளிப்படுவது. அதுபோல சீவான்மாவாகிய பரமான்வாவும் இரண்டு தன்மைக்குரியதாகி விடும்.

விளக்கவுரை :

பிரமம் என்பது மூலப்பொருள். அது நித்தமானது, சுத்தமானது. இதுதான் உண்மை. இதனை விடுத்து பிரமம் - சீவான்மாவாகிறது. அது இன்ப துன்பத்தை அனுபவிக்கிறது என்றெல்லாம் கூறுவது சீவான்மா பற்றி அறியாமையால் கூறுவதாகும் என்று ஆசிரியர் வலியுறுத்துகிறார். விறகு உவமையால் இம்மதத்தாரின் கொள்கை மாறுபடுகிறது. என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

உன்னில் நீயும்அனு போகம் என்ற பொழுது
உற்றிடும் துவிதம் மற்றுஅது இங்கு
என்னில் இல்லைஎனில் இல்லை நீயும்அறி
வின்மை கண்டஇடம் உண்மையேல்
மன்னும் ஓர்உணர்வு வந்திடும் உணர்வு
எலாமும் மாயையெனில் மாயையே
சொன்னது ஓர்பிரமம் ஆயிடும் பிரமம்
மாயை யாய்அறிவு சோருமே. [251]

இப்பாடல் பெறுவான் இன்றியே அனுபவம் உண்டு என்பதை மறுக்கிறது.

பொருள் :

இம்மதத்தார் பிரமம் தானே தன்னை அனுபவிக்கும் என்று கூறுகின்ற பொழுது பொருள் ஒன்றே என்ற கொள்கை முரண்படுகிறது. எவ்வாறென்றால் பெறுவான் ஒன்று, பேறு என்பது ஒன்று என்ற இருமை (துவிதம்) தோன்றுகிறது. பெறுவான் இல்லை என்றால் பேறும் இல்லை என்பதை உணரவேண்டும். அடுத்து அறியாமை கெட்ட விடத்து உண்மை தோன்றி அந்த உண்மை நிலையே முத்தி நிலையாகும் என்று நீ கூறினால் அந்த அறிவு கெடும் இடத்திலும் ஆன்ம அறிவு சிறிது இருக்கத்தான் செய்யும். இல்லை அப்படி அறியும் அறிவு எல்லாம் மாயை அறிவு ஆகும் என்று நீ கூறினால் அறிவும் பிரமமாகி - மாயை நீங்குமிடத்து தனியே உள்ள அறிவும் பிரமமாகி - அப்பிரமமும் மாயைக்குரியதாகி விடும்.

விளக்கவுரை :

இப்பாடலில் இரண்டு கருத்துக்களை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பிரமம் தானே தன்னை அனுபவிக்கும் என்றால் அவர்கள் கருத்துப்படி இரண்டு அன்று என்ற கொள்கை அடிபட்டு விடுகிறது. ஏனென்றால் அனுபவிப்பவன் வேறு, அனுபவம் வேறு. எனவே இரண்டு தன்மையாகிறது. இரண்டற்றது என்பது தவறாகி விடுகிறது. அடுத்து அறியாமை கெட்டபிறகு ஞானம் உண்டாகிறது, அதுதான் முத்தி என்றால் உடம்போடு கூடியிருக்கிற பிரமத்திற்கும் மாயை உண்டாம் என்பதாகிப் பிரமத்தின் பெருமை கெட்டு விடுகிறது என்கிறார் ஆசிரியர்.

ஆர ணங்கள்தரு தத் துவம்அசிப தங்க ளின்பொருள் அறிந்திடாய்
காரணம் அதுவும் நீயும் என்றுஇருமை கண்டு வேறதுஇன்மை
கருதிடாய்
நார ணன்பிர மனாலும் நாடரிய நாய கன்கழல்கள் நண்ணிநீ
ஏர் அணைந்துபொலி சாத னங்கள் கொடு யோக ஞானமும்
இயற்றிடே. [252]

இப்பாடல் தத்துவமசியின் பொருளை விளக்குகிறது.

பொருள் :

மாயாவாதியாகிய நீ, வேதத்தில் முடிந்த முடிவாகக் கூறப்பெற்ற தத்துவமசி என்ற வாக்கியத்தின் உண்மைப் பொருளை அறிந்தாய் இல்லை. காரணமாகிய கர்த்தாவும் (இறைவன்) காரணமாகிய ஆன்மாவும் இரண்டுபட்டு நின்று கூடி நிற்பதை அறிந்திடாய். இரண்டு பொருளும் பிரிப்பின்றி நிற்கும் என்பதே அவ்வாக்கியத்தின் பொருள் என்பதை உணர்ந்திடாய். எனவே பிரமன் திருமாலால் காண்பதற்கு அரிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பொருந்துவதற்குரிய சாதனங்களைத் தெரிந்து கொண்டு போகத்தையும் ஞானத்தையும் கடைப்பிடித்துச் செயல் படுவாயாக.

பாற்கரியன் மதம்

ஆதி சங்கரருக்குப் பின் தோன்றிய அத்துவைதிகளுள் இளையவரும் உண்டு. முதியவரும் உண்டு. இளையவர்களில் பாஸ்கராச்சாரியார் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரையின் அடிப்படையில் தோன்றிய கொள்கை பாற்கரியன் மதம் என வழங்கப் பெறுகிறது. சங்கரரின் கொள்கை அபேதம் எனப்படும். இராமானுசரின் கொள்கை பேதாபேதம் எனப்படும். பாற்கரியன் மதத்தார் இப்பேதா பேதத்தில் மாறுபாடு அற்றவர்கள் என்றாலும் இராமானுசர் கொள்கையிலிருந்து சில நுண்ணிய வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இவர்தம் கொள்கைகளை அருணந்தியார் இரண்டு பாடல்களில் குறிப்பிட்டு மறுப்பினை ஐந்து பாடல்களில் தந்துள்ளார்.

மன்னும் மறையின் முடிவுஎன்று மாயா வாதி உடன்மலைந்து
பின்னம் ஆகிப் பிரமத்தைப் பேதா பேதம் சாதித்துப்
பன்னும் ஒருநூல் அதுவாகப் பாரின்மீது பாற்கரியன்
சொன்ன இதனை இந்நூலின் அகத்தே தோன்றச் சொல்லிடுவாம்.
[253]

இப்பாடல் பாற்கரியன் மதத்தின் கொள்கைகளை வரையறுத்துக் கூறுகிறது.

பொருள் :

நிலைபெற்ற வேதத்தின் முடிவு இது என்று தம் கொள்கைகளை வகுத்து மாயாவாதியோடு வேறுபட்டுப் பிரமத்தை வேதமாகவும் (வேறுபட்டது) அபேதமாகவும் (ஒன்றுபட்டு) நிலைநிறுத்தி ஓதுகின்ற நூல் வேதமாக இருக்க, அதனுடைய உண்மையினை அறியாது பூமியின் மீது பாற்கரியன் சொன்ன கொள்கைகளை இந்நூலின் அகத்தே தெளியச் சொல்லுவாம்.

சித்தே உலகாய்ப் பரிணமித்துச் சீவனாகித் திகழ்ந்தமையால்
சத்தே எல்லாம் முத்தியினைச் சாரக் கண்ட ஞானங்கள்
வைத்தே மொழியும் மாமறைகள் சொன்ன மரபே வந்தக்கால்
ஒத்தே கெட்டுப் பிரமத்தோடு ஒன்றாய்ப் போம்என்று உரைத்தனனே.
[254]

இப்பாடல் பார்கரிய மதத்தாரின் பிரமம் பற்றிய கொள்கையைத் தொகுத்துரைக்கிறது.

பொருள் :

அறிவு வடிவமாகிய பிரமமானது சித்தாகும். அது உலகமாகத் தோன்றி வளர்ந்து ஆன்மாக்களுமாக விளங்கும். ஆதலால் அனைத்தும் பிரமமே ஆகும். வீட்டின்பத்தை அடைய விரும்பும் உயிர்கள் அறியவேண்டிய ஞானங்களை வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. அந்த வாக்கியங்களை வேதத்தின்படி அறிந்து ஓதி, ஒழுகி ஆன்மா தன்மை கெட்டு பிரமப் பொருளோடு ஒன்றி வீடுபேறு அடையும்.

விளக்கவுரை :

இம்மதத்தார் பிரமம், உயிர் இவற்றை வேறு வேறாகக் கொண்டாலும் அதாவது பிரமப் பொருளை பேதமாகவும், அபேதமாகவும் கொண்டாலும் அனைத்துமே பிரமமாகக் கொள்பவர்கள். தத்துவமசி என்ற வாக்கியத்தின் உண்மைப் பொருளை அறிந்து ஞானமடைந்து செயல்பட்டால் வீடு பேறு அடையலாம் என்பது இம்மதத்தாரின் கொள்கை. (கெட்டு - ஆன்மா தன் தன்மை கெட்டு)

பார்கரியன் மதம் மறுதலை

இயம்பு கின்றதுஉலகு ஆயி டாதுசடம் இன்றி நின்றுசட மாகியே
முயங்கு கின்றமையில் இலவணத்து இரதம் முழுது மேகனதை
முயல்கை போல்
பயந்தது என்னில்அறி யப்ப டும்பொருளும் அறிவும் என்றுபல
ஆகுமோ
தியங்கு கின்றதுஎன் உரைத் திடாய்கடினம் ஆதி யாகிவரு
சித்தனே. [255]

இப்பாடல் பிரமம் உலகமாகப் பரிணமிக்கிறது என்பதை மறுக்கிறது.

பொருள் :

நீ சொல்லுகின்ற பிரமம் உலகமாகப் பேதமாகிடாது. எனவே பிரமம் அசத்துப் பொருளை (சடப்பொருளை) நீங்கி நிற்கும். (அந்தச் சத்துப் பொருளிலிருந்து அசத்துப் பொருளாகிய உலகம் தோன்றாது) அசத்தும் தானாகச் சத்தோடு கூடாது. நீ அதற்கு உடனே நீரில் இட்ட உப்பானது நீரில் கலந்த தன்மை போன்றது என்று கூறலாம். அப்படியானால் நீரோடு கூடிய உப்பானது நீராக (ஏகமாக) நிற்பதன்றித் தனித்து நிற்பதில்லை. அதுபோலப் பிரமமும் ஒன்றாக நிற்பதன்றிப் பிரமமாகிய அறிவும் உலகமாகிய அறியப்படும் பொருளுமாகப் பேதித்து நிற்குமா? அறியாது கூறுகிறாய்.

விளக்கவுரை :

இப்பாடல் பிரமமானது உலகப் பொருள் யாவற்றையும் தன்னுள் அடக்கி ஏகமாய் நிற்கும் என்ற இம்மதத்தாரின் கொள்கையை மறுக்கிறது. பிரமம் சத்துப் பொருள். உலகமோ அசத்துப் பொருள் (ஞானமற்றது). என்பதால் அவர்தம் கொள்கை பொருத்தமற்றது என்கிறார். மேலும் இம்மதத்தார் நீரிலே கலந்த உப்பானது நீராகவே தோன்றுவது போலப் பிரமம் உலகப் பொருளோடு கலந்து ஒன்றாய் நிற்கும் என்று கூறுவதையும் மறுக்கிறார். எப்படி உப்பானது நீரிலே கலந்தாலும் நீராகவே காட்சி தருமோ அதுபோலவே பிரமமும் உலகப் பொருளாகவே காட்சி தரவேண்டும். ஆனால் ஞானமுடைய சித்தாகவும், அறிவற்ற அசத்தாகவும் பொருள்களை நாம் காணுகிறோமே? என்று கூறி ஆசிரியர் மறுக்கிறார். இம்மதத்தவரை ஈற்றடியில் கடினம் ஆதியாகி வரும் சித்தனே என்று குறிப்பிடுகிறார். இதற்குப் பொருள், ''மாபூதங்கள் முதலானவையும் நானேயாவான் என்று வரும் அறிவனே'' என்று பழைய உரையாசிரியர் குறிப்பார். கடினம் - பூதகுணம், இலவணம் - உப்பு, இரதம் - சாறு (நீர்)

உன்னு கின்ற பிர மத்தி லேசிறிதுஇவ்
வுலகம் ஆனதென ஓதின் நீ
மன்னு கின்றசில கால மோடுஅழியும்
அழிய வந்துஉதவு மாயையால்
தன்னில் ஒன்றும்எனில் வருத லோடுஇறுதி
தருதலால் அதுச டத்ததாம்
உன்னோடு அச்சகமும் உண்மை யன்றுசடம்
என்ன வேஉறுதி மன்னுமே. [256]

இப்பாடல் பிரமத்தில் சிறிது பேதம் பிரபஞ்சம் என்பதை மறுக்கிறது.

பொருள் :

யாவராலும் நினையமுடியாது நின்ற பிரமமானது சிறிது பேதித்து இந்த உலகமாகத் தோன்றிற்று என்று நீ சொல்லுகின்றாய். அவ்வாறானால் உலகம் சிறிது காலம் நிலைபெற்று நின்று அழிகிறது. அவ்வாறு அழிந்து மீளவும் மாயையிலே தோன்றி வருகிறது. ஆதலால் மாயையிலே ஒடுங்கி மாயையிலே தோன்றுகிறது எனலாம். இல்லை, இல்லை ஒடுங்கும் காலத்திலும் பிரமத்திலே ஒடுங்கித் தோன்றும் காலத்திலேயும் பிரமத்திலே தோன்றுவது என்றால் அவ்வாறு தோன்றி ஒடுங்குவதாகிய உலகம் பிரமத்தின் ஒரு பகுதி என்றால் பிரமமும் உலகம் போல அசத்து ஆகும். ஆதலால் நானே பிரமம் என்று கூறுகின்ற நீயும், பிரமமும் சடப் பொருளாகிய அசத்து என்று கூறுதலே உண்மையாகும்.

விளக்கவுரை :

இப்பாடல் பிரமத்திலிருந்து சிறிது பேதப்பட்டு உலகம் உருவாகிறது என்பதை மறுப்பதாகும். உலகம் தோன்றி நின்று கெடுகின்ற அசத்தாகிய அறிவற்ற பொருளாகும். பிரமத்தின் ஒரு கூறுதான் உலகம் என்றால் அந்த ஒரு கூறாகிய உலகம் அசத்தாகும் என்பதினால் பிரமமும் அசத்தாகி விடுகிறது. ஏனென்றால் சத்திலிருந்து அசத்து தோன்ற இயலாது என்று கூறி ஆசிரியர் மறுக்கிறார். (உன்னுகின்ற பிரமம் - யாவரும் நினைக்க அரிதாகிய பிரமம்)

வித்தெ ழுந்துமர மாய்வி ளைந்தமை விளம்பி னாய்உவமை வேறுநீ
நித்தம் என்றஉரை பொய்த்து நீடுசட மாய் எழுந்து அழியும் நின்பரம்
ஒத்து எழும்பொழுது வித்தினுக்கு அவனி உண்டு தாரகம் உனக்குஎனா
பித்தன் என்றுஉலகு உரைத்திடும் பிரமம் ஆயினாய் இவை
பிதற்றியே. [257]

இப்பாடல் பிரமத்திலிருந்து பிரபஞ்சம் (உலகம்) தோன்றும் என்பதை மறுக்கிறது.

பொருள் :

மரம் கெட்டவிடத்து வித்திலே இருந்து மரம் உண்டானாற் போல உலகம் கெட்ட விடத்தும் பிரமத்திலே இருந்து உலகம் தோன்றுகிறது என்று உவமை கூறுகிறாய். அவ்வாறானால் அந்த வித்து முதலில் மரத்தில்தான் இருக்கிறது. பின்பு அம்மரம் அழிந்தவுடன் விதையானது தான் கெட்டு மரத்தை உண்டாக்குகிற பரிணாமத்தைப் பெறுகிறது. அப்படியானால் நீ கூறுகிற பிரமமும் உலகமும் வேறு என்றாகி உம் கொள்கை பொய்யாகிறது. பிரமமும் உலகத்தை உண்டாக்கி, உலகமும் பிரமத்தை உண்டாக்கி விடும் என்பதால் இரண்டும் அசத்து என்ற கருத்து உனக்கு எதிராக உருவாகிறது. மேலும் வித்து மரமாகின்ற பொழுது பூமி அதைத் தாங்குகிறது. எனவே பூமி ஆதாரமாகிறது. அவ்வாறானால் நீ கூறுகிறபடி உலகம் பிரமமாகிற போது ஆதாரம் ஏது? இப்படி நீ மயங்கிக் கூறுவதால் உன்னைப் பித்தனென்று உலகோர் கூறுகின்றனர்.

விளக்கவுரை :

பிரமத்தின் ஒரு கூறுதான் உலகம் என்று கூறும் இம்மதத்தார் ஒரு உவமையைக் கூறுகின்றனர். அந்த உவமை மரத்திலிருந்து விதை - விதையிலிருந்து மரம் என்பதாகும். இதை வைத்துக்கொண்டே ஆசிரியர் மறுத்து விடுகிறார். அதாவது இந்த உவமையின் மூலம் பிரமமும் உலகமும் வேறு வேறாய் நிலைத்து நிற்கும் எனப்பட்டு நான் பிரமம் ஆயினேன் என்ற கொள்கை பொய்யாகிவிடும். தாரகம் - ஆதாரம்.

சூட கம்கடகம் மோதி ரம்சவடி தொடரோடு ஆரம்முடி தோடுநாண்
ஆட கம்தருவ தாகும் இப்படி அனைத்தும் அப்பிரமம் ஆகுமேல்
நீடும் அப்பணிகள் செய்து ளோர் அவை புனைந்து ளோர்களை
நிகழ்த்திடும்
நாடிடும்சகம் இயற்று வோர்க்கொடு நடத்து வோர்உளர்ந விற்றிலே.
[258]

இப்பாடல் பிரமத்திலிருந்து தோன்றிய உலகம் பல பெயர்களைப் பெற்றுள்ளது என்பதை மறுக்கிறது.

பொருள் :

சூடகம், கடகம், மோதிரம், சவடி, சங்கிலி, மகுடம், தோடு முதலிய வேறுபட்ட அணிகலன்கள் யாவும் பொன்னிலிருந்தே உருவாக்கப் பட்டும், வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றன. அதுபோல உலகத்துப் பொருள் யாவும் பிரமத்திலிருந்து தோன்றி வெவ்வேறு பெயர்களைப் பெற்றாலும் எல்லாம் (பொன்போல) பிரமமாய் இருக்கும் என்று நீ கூறுகிறாய். அவ்வாறானால் அணிகலன்கள் செய்தவரையும், அணிகலன்கள் அணிந்தோரையும் அவ்வணி நினைக்க வைக்கின்றது. அதுபோலப் பிரமத்திலிருந்து வேறாக இவ்வுலகத்தைத் தோற்றுவிப்பாரும், நிலை நிறுத்துவாரும், ஒடுக்குவாரும் உளர் என்று கொள்ள நேரும். எனவே நீ கூறும் உவமை பொருந்தாது.

விளக்கவுரை :

உவமையைக் கொண்டே பிற சமயத்தாரின் கருத்துக்களை ஆசிரியர் மறுக்கும் திறன் படைத்தவர் என்பதற்கு இப்பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆடகம் - பொன்.

அறிவி னோடுசெயல் மாறில் வீடுஅதனை
அணுக ஒணாதுஅவை இரண்டினால்
உறுதி யானபிர மத்தி னோடுஅழிய
ஒன்றலாம் என உரைத்திகாண்
இறுதி யேல்அதனொடு இசைவது இன்றுஇசைவது
உள்ள தாயிடின்அவ் இன்பமே
பெறுதி நீஉடலொடு உயிர்க ளாய்அறிவு
பிரியு மாறுசெயல் பெறுவதென். [259]

இப்பாடல் ஆன்மா வேறு, பிரமம் வேறு என்பதைக் காட்டி நிற்கிறது.

பொருள் :

ஞானமும் கிரியையும் மாறி விட்டால் வீட்டினை அடைய முடியாது. அவை இரண்டினாலும் சென்று அவற்றுக்கு ஆதாரமாகிய பிரமத்திலே அவை அழிய உயிர் வீடு அடையலாம் என்கிறாய் நீ. பிரமத்திலே கூறுகிறபொழுது ஞான கிரியைகள் அழிந்து கூடலாம் என்பது உன் கருத்து. அப்படியானால் ஞான கிரியைகள் அழிய பிரமத்தைச் சென்று கூடவேண்டியதில்லை. ஞானக் கிரியைகள் கெட்டால் பிரமத்தோடு கூடுவதற்கு ஒரு முதலும் இல்லையாம். ஞானக்கிரிகைகள் கெடாமல் ஒன்றுவது உள்ளவாம் என்றால் நீ எப்பொழுதும் அந்தச் சுகத்தை அனுபவிப்பதன்றி உடம்போடு உயிர்கள் அறிவு நீங்கும்படி அவத்தைகள் அனுபவிப்பது ஏன் என்பதற்குப் பதில் கூறவேண்டும். ஆதலால் ஆன்மா என்பது பிரமத்திலிருந்து வேறுபட்டது என்பதை அறிவாயாக.

விளக்கவுரை :

இம்மதத்தார் ஞானக்கிரியைகளின் வழி வீடு அடையலாம் என்று கூறுகின்றபோது ஞானக்கிரியைகளைச் செய்து பின் விடவேண்டும் என்கிறார்கள். இதனை வைத்துக் கொண்டே ஆசிரியர் ஞானக் கிரியைகள் கெட்டால் பிரமம் தேவையில்லை, கெடாமலே கூடலாம் என்றால் வீட்டின்பத்தை இவ்வுலகத்திலே பெறலாம் என்றாகிவிடும். உடம்போடு உயிர் கூடி பிரமமாய் நிற்கும்பொழுது அவத்தைகள் ஏற்படுவது ஏன்? என்ற ஒரு வினாவைக் கேட்டுப் பிரமம் உடம்பிலே கூடினால் அவத்தைகள் ஏற்படாது என்று பெறவைத்து ஆன்மா வேறு, பிரமம் வேறு என்பதை நிறுவுகிறார் ஆசிரியர்.

நிரீச்சுர சாங்கியன் மதம்

இந்திய மெய்ப்பொருளியலில் சாங்கிய - யோகம் கொள்கைகளும் தமக்கெனச் சிறப்பிடங்களைப் பெற்றனவாகும். உபநிடதங்களுள் சாங்கியச் சிந்தனைகள் நுண்ணிய அளவில்

காணப் பெறுவதால் உபநிடத காலத்திற்கு முன் இக்கொள்கைகள் தோற்றம் கொண்டன எனலாம். இக்கொள்கைகளை நிறுவியவர் கபிலமுனிவர் அவருக்குப்பின் அவரின் சீடர்களான அசூரி, பஞ்சசீசர் ஆகியோர்கள் தத்தம் நூல்களின் வாயிலாக இக்கொள்கையைப் பரப்பினர். ஆயின் அந்நூல்கள் கிடைத்தில. கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் எழுந்த ''சாங்கியக் காரிகை'' என்னும் நூல் சாங்கிய நூல்களில் குறிப்பிடத் தக்கது. .இதனை எழுதிய ஆசிரியர் ஈஸ்வர கிருஷ்ணர். இந்நூலிற்குக் 'கௌபாடரது' உரை மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'யுக்தி தீபிகை' அடுத்துச் சிறப்பிடம் பெற்ற சாங்கிய நூலாகும். இதன்பின் நீண்டகால இடைவெளிக்குப் பின் சாங்கியப் பிரவசன சூத்திரமும் அதற்கு விஞ்ஞான பிட்சு எழுதிய விரிவுரையும் குறிப்பிடத்தக்கனவாக அமைந்தன. சாங்கியத்திற்கு ஆதாரமான முற்பட்ட நூல்கள் காணப்பெறவில்லை என்றாலும், ஈஸ்வர கிருஷ்ணர் போன்றோர் நூல்கள் சாங்கியக் கொள்கைகளை விளக்கப் பயன்படுகின்றன என்பது வெளிப்படை.

யோகத்திற்கு உரை நூல் செய்தவர் பதஞ்சலி முனிவர் ஆவார். இந்நூலின் பொருளும், கபில முனிவரின் கருத்தும் ஒற்றுமையுடையனவாக இருந்திருக்கின்றன. எனவேதான் சாங்கியமும் யோகமும் ஒருசேரவே மெய்ப்பொருளில் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் இரண்டிற்கும் உற்ற வேற்றுமையை அறிஞர்கள் எடுத்துக் காட்டாது விடுத்தாரில்லை. சாங்கியம் கூறாத கடவுட் கொள்கையை யோகம் கூறுவது குறிப்பிடத் தக்க வேற்றுமையாகும். யோக சூத்திரங்களுள் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வியாசர் என்பவர் தலைசிறந்த உரை எழுதியுள்ளார்.

சாங்கியம், கொள்கைகளை விவரிக்க - யோகம் அக்கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடித்தற்கான வழிகளைக் கூறுகிறது எனலாம். எனவேதான் சாங்கியத்தை நிரீச்சுர சாங்கியம் என்றும், யோகத்தைச் சேச்சுர சாங்கியம் என்றும் கூறுவர். இத்தகைய நிலை சாங்கிய யோக மெய்ப்பொருளியல் வரலாற்று நிலையாகும். சாங்கிய மதத்தின் பிரிவாகிய நிரீச்சுர சாங்கிய மதத்தின் கொள்கையை ஆசிரியர் ஒரு பாடலிலேயே

கூறிவிடுகிறார். சாங்கிய மதக்கொள்கை வரலாற்றில் பரந்து பட்டுக் காணப்பெற்றாலும், தம் கருத்திற்கு உரியதை மட்டும் எடுத்துரைக்கின்ற நிலையில் ஒரே பாடலில் அம்மதக் கொள்கைகளை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மறுப்பினை 3 பாடல்களில் கூறுகிறார் ஆசிரியர். சேச்சுர சாங்கியம் பற்றிப் பேசப்படவில்லை.

மூலம் புரியட் டகம்விகிர்தி ஆகி மூன்றாய்ப் பிரகிருதி
தூலம் சூக்கம் பரமாய் அச் சுத்த புருடன் சன்னிதியில்
பாலன்சேட்டை புரிந்து உலகம் யோனி பலவாய்ப் பரந்து ஒடுங்கும்
சால என்று நிரீச்சுவர சாங்கியன் தான் சாற்றிடுமே. [260]

இப்பாடல் நிரீச்சுர சாங்கிய மதத்தின் கொள்கைகளைக் கூறுகிறது.

பொருள் :

பிரகிருதி என்றும், பூமான் என்ற புருடன் என்றும் உலகத்துப் பொருள்கள் இரண்டு வகைப்படும். இதில் பிரகிருதி மூன்றாகும். அவை மூலம், புரியட்டகம், விகிர்தி என்பன. அவை தூலமாகவும், சூட்சுமமாகவும், பரமாகவும் விளங்கும். புருடன் பிரகிருதியின் சன்னதியில் ஒரு குழந்தையைப் போல அறியாமையுடன் விளங்குவான். உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் தனது என்றே கருதி நிற்பான். இவ்வாறு கருதியதைத் தவறு என்று நினைந்து அதனை விட்டு நீங்கித் தான்வேறு, பிரகிருதி வேறு என்று உணருகின்ற பொழுது ஞானம் பிறக்கும். அந்த ஞானமே வீடுபேற்றைத் தரும் என்று சாங்கியன் தன் கருத்தைக் கூறிடுவான்.

விளக்கவுரை :

1. மூலம் - சித்தம், 2. புரியட்டகம் - ஓசை ஊறு, வடிவம், சுவை, நாற்றம் என்ற ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் ஆகிய எட்டும் கூடிய நுண்ணுடம்பு. 3. விகிர்தி - தூல உடம்பு உலகையும் குறிக்கும். இந்த மூன்று வகையாகப் பிரகிருதி அமையும். இவற்றைத் தனது என்று கொள்வது புருடனுடைய குணமாகும். உலகம் வேறு, தான்வேறு என்று எப்பொழுது நினைக்கின்றானோ அப்பொழுது முத்தி கிடைக்கும்.

நிரீச்சுர சாங்கியன் மதம் மறுதலை

சுத்தன் அறிவன் புருடன் எனில் சூழா தாகும் பிரகிருதி
பெத்தம் நீங்கி னாலும்பின் பெத்தன் ஆவன் பேரறிவால்
கத்தம் மேவும் பிரகிருதி கண்டு கழிக்க மாட்டானேல்
முத்தன் ஆகான் சுத்தனுக்கு மூலம் பிரகி ருதிஇலையாம்.(261)

இப்பாடல் புருடன் பிரகிருதிக்குள் அகப்படுவான் என்பதனை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

புருடன் (ஆன்மா) என்பவன் தூய்மையான அறிவினை உடையவன் என்பது உண்மையானால் சுத்தமில்லாத பிரகிருதி அவனைச் சூழ்ந்து பிணிக்கும் என்பது பொருந்தாது. (மேலும் அவன் அறிவுடையவன் என்றால்) முத்தனாய் நின்றவிடத்து பெத்தம் (அஞ்ஞானம்) அவனைப் பற்றாது. இல்லை அது பிரகிருதிக்குள்ளதாய் இருக்கும் என்றால் பெத்தம் நீங்கினவிடத்தும் அறியாது நின்றதால் பெத்தத்தைப் பொருந்தினவன் ஆவான். புருடன் தன்னுடைய பேரறிவால் பிரகிருதியைத் தீங்குடையது என்று கண்டு அதனை விட்டு நீங்க இயலாதவன் என்றால் அவனை அறிவுடையவன் என்று கூறுவது பொருந்தாது. சுத்தமாக இருக்கின்ற பிரமத்திற்கு மூலப் பிரகிருதி உண்டாகாது. மூலப் பிரகிருதி கூடுவதும் நீங்குவதும் ஆன்மாவுக்கே உரியதாகும்.

விளக்கவுரை :

இவர்தம் கொள்கை ஆன்மபுருடன் சுத்தமான அறிவுடையவன் என்பதாகும். ஆனால் ஆன்மா உலகப் பொருள்களின் முன்னே அறிவற்றதாய் இருக்கும் என்கிறார்கள். இதனை ஆசிரியர் மறுக்கிறார். தூய்மையான அறிவுடையவன் என்றால் தூய்மையற்ற பிரகிருதி அவனை எவ்வாறு பிடிக்கும்? மேலும் பாசத்தோடு பொருந்திய பெத்தனாய் நிற்கின்றபொழுது அறிவுடையவனாக மாட்டான், பெத்தனாகவே இருப்பான். அவன் அறிவோடு

கூடி நின்றாலும் பிரகிருதியின் செயலை அறிந்து விட்டானானால் பிரகிருதியிலிருந்து நீங்கமாட்டான் என்று மறுத்துப் பிரகிருதி புருடனைப் பிணிக்காது, ஒருக்கால் பாசமாகிய கட்டுக்களை நீங்குகின்ற பொழுது பிரகிருதி மீண்டும் அவனைப் பிணித்தால் அஞ்ஞானமே ஏற்படும். அஞ்ஞானம் ஏற்பட்டால் வீடுபேறு கிடைக்காது என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

பெத்தன் - பாசத்தோடு கட்டுப்பட்டவன், முத்தன் - பாசத்திலிருந்து நீங்கியவன்.

புருடன் பிரகி ருதிபெற்றால் போதம் சிறிதுஅங்கு உண்டாகிக்
குருடன் முதுகில் முடவனிருந்து ஊர்ந்தாற் போலப் பிரகிருதி
இருன்தன் னிடத்தே இருந்து இயங்கும் கன்மால் இறையன்று
இரண்டினையும்
மருள்தன் உருவாய்ச் சேட்டிப்பித்து அறியும் அமலன் அரனேயாம்.
[262]

இப்பாடல் பிரகிருதியோடு கூடி நிற்பவன் ஆன்மாவேயன்றி கர்த்தா அல்ல என்கிறது.

பொருள் :

அவ்வாறல்ல, தூய்மையான அறிவுடையவனாகப் புருடன் பிரகிருதியோடு கூடிய பொழுது சிறிது அஞ்ஞானம் உண்டாகி அதனால் ஊனமடைந்து முடவனைப் போல ஆகின்றான். புருடனாகிய முடவன் பிரகிருதியாகிய குருடனின் தோள்மேல் அமர்ந்து கொண்டு அவனை வழிநடத்த இருவரும் இயங்குவதைப் போல உலக நிகழ்ச்சிகளைக் கொள்ள வேண்டும் என்று நீ கூறலாம். அவ்வாறு இயங்குகின்ற பொழுது புருடனின் வினைகளுக்குப் பயனாகப் பிரகிருதியோடு கூடி அனுபவிப்பான் என்றும் நீ கூறலாம். அப்படியானால் பிரகிருதியோடு கூடி நிற்பவன் ஆன்மாவே ஆகும். அவன் பிரமம் அல்ல. அந்தப் புருடனையும் அவனோடு பிரகிருதியையும் கூட்டி இயங்கச் செய்வது அவனுடைய கன்ம பயன்கள் என்றால் புருடன் ஆன்மா என்பது தெளிவாகப் புலனாகும். (ஏனென்றால் பிரமத்திற்குக் கன்மபலன் இல்லை). எனவே கன்மத்தால் ஆன்மாவை இயங்கச் செய்கின்றவன், கன்மத்தை அறிந்து அதற்குத் தக்க

பயனைக் கொடுப்பவன் சிவனாகிய இறைவன் ஆவான், இதனைப் புரிந்து கொள்.

விளக்கவுரை :

புருடன் பிரகிருதியால் அஞ்ஞானம் பெறுகிறான் என்ற கருத்தை வைத்துக்கொண்டே புருடனாகிய ஆன்மா வேறு, பிரமம் வேறு என்பதையும், புருடன் அனுபவிக்கின்ற அனுபவங்களுக்குக் கன்மவினைதான் காரணம் என்பதால் புருடன் பிரமமாக முடியாது என்பதையும், கருமத்தின் பலனைத் தருகின்றவன் இறைவனாகிய அரன் என்பதையும், ஆசிரியர் இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

இறையன்று - கன்மத்துக்கு ஈடான தொழிலை நடத்துபவன் இறைவன் அல்ல ஆன்மாவே. சேட்பித்து - கூட்டுவித்து, மருள்தன் உருவாய் - அஞ்ஞானமே தனக்கு உருவமாக ஆன்மாவினை நடக்கச் செய்து (பிறகு கன்மத்தின் வழி பயனைத் தருவார்)

அறியான் புருடன் பிரகிருதி அசேத னம்கா ரியத்தினுக்குக்
குறியாய் நாதன் உளன்என்று கூறும் முத்தி விவேகம் எனில்
செறிவாம் தனைபோ காதுஅறியில் சேர்த் தோன் வேண்டும்
செயலிற்போம்
நெறியால் பணிசெய்து உடல்பாசம் நீக்கிக் கொள்நீ நின்மலனால்.
[263]

இப்பாடல் புருடனையும் பிரகிருதியையும் நடத்துவோன் கர்த்தா என்கிறது.

பொருள் :

புருடனாகிய ஆன்மா ஒன்றையும் தான் அறியமாட்டான். பிரகிருதி என்பதும் சடப்பொருள் ஆகும். ஆதலால் இவை காரியப் படுதற்குக் காரணமாகிய ஒரு கர்த்தா வேண்டும். இதனை நீ அறிவாயாக. முத்தி என்று சொல்லப்பட்டது, பந்தம் (பாசம்) நமக்குள்ளது அல்ல என்று அறியும் விவேகமே என்று நீ கூறுகின்றாய். ஒவ்வொரு பொருளையும் அறிகின்ற பொழுது பாசஞானமும், பசு

ஞானமும் கூடி அறிய வேண்டும் ஆகையால் பாசபந்தம் நீங்காது. பாசபந்தம் நீங்கவேண்டுமானால் அதைக் கூட்டியவன் தான் நீக்க வேண்டும். அந்தக் கர்த்தாவின் அருளால்தான் பாச பந்தம் நீங்கும். பாசபந்தம் நீங்கும் படியாகச் சரியை, கிரியை, யோக, ஞானங்களில் நின்று தொண்டு செய்து கர்த்தாவின் அருளால் பாச பந்தத்தை நீக்கிக் கொள்வாயாக.

விளக்கவுரை :

இம்மதத்தார் புருடனாகிய ஆன்மா பிரகிருதியின் (உலகம்) முன்னால் அறிவற்ற குழந்தையாக இருந்து பாசபந்தம் கொண்டு பின் அவற்றிலிருந்து நீங்கி ஞானம் பெற்று முத்தியடையும் என்பர். இதனை ஆசிரியர் மறுக்கிறார். புருடன் எதனையும் தானாக அறியும் ஆற்றல் உடையவன் அல்ல. உலகமோ சடப்பொருள். இவை இரண்டும் தானாகக் கூடாது, விலகாது. இவற்றைக் கூட்டி அனுபவிக்கச் செய்த பின்பு முத்திதர இறைவன் வேண்டும் என்று முதலில் கூறித் தம் கருத்தை ஆசிரியர் வலியுறுத்துகிறார். பின்னால் புருடன் எந்தப் பொருளையும் அறிகின்ற பொழுது விருப்பு வெறுப்புக்கு ஆளாகிப் பாசபந்தம், கன்மபந்தத்திற்கு ஆட்படுகின்றான். பாசபந்தம் கன்மவினையால் ஏற்படுகிறது. இந்தக் கன்ம வினையை அறிந்து பாசபந்தத்தை அனுபவிக்கச் செய்து பின் அவற்றிலிருந்து புருடனை நீங்கச் செய்து முத்தியைத் தருபவன் இறைவன், அவனை அறிவாயாக என்கிறார் ஆசிரியர். அசேதனம் - அறிவற்றது.

பாஞ்சராத்திரி மதம்

பாஞ்சராத்திரம் என்னும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகக் கொண்டு ஒழுகும் வைணவ சமயம் பாஞ்சராத்திரம் எனப்படும். இவ்வாகமம் வாசுதேவனால் முதற்கண் அனந்தன், கருடன், விடுவச்சேனன், கபாலி, பிரமன் ஆகிய ஐவர்களுக்கும் ஐந்து நாட்களில் அறிவுறுத்தப்பட்டமையால் 'ஐந்து அறிவு' என்னும் பொருள்தரும்படி பாஞ்சராத்திரம் என்னும் பெயர் பெற்றது. இவ்வாகமம் திருமால் ஆலயத்திற்குரிய விதிகள், குண்டமண்டலம் அமைப்பதற்குரிய விதி, கொடிமர விதிகள், அதில் கொடியேற்றும்

விதிகள், தீக்கை விதிகள், வழிபாட்டு முறைகள், நாராயண பலி, ஸ்ரீ வைகுண்ட இலக்கணம், மந்திரமிதி, ஆச்சாரிய இலக்கணம் ஆகியவற்றை விரிவாகக் கூறுகிறது. இவ்வாகமம் 108 சமித்தைகளாக விளக்கப்பட்டுள்ளது என்பர். வைணவக் கொள்கைகளை விளக்கும் அருணந்தி சிவாசாரியார் பாஞ்சராத்திர ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கியிருக்கிறார். வைணவத்தில் பாஞ்சராத்திரம், பைசானசம் என்ற இரு ஆகமங்கள் குறிப்பிடத் தக்கன. பாஞ்சராத்திரம் ஆகமத்தின்படி ஸ்ரீரங்கம், காஞ்சி, திருக்குடந்தை ஆகிய திருத்தலங்களில் வைணவ வழிபாடு நடைபெறுகின்றது. பைசானச ஆகமப்படி திருவல்லிக்கேணி, திருமாலிருஞ் சோலை ஆகிய திருத்தலங்களில் வழிபாடு நடைபெறுகிறது. இவ்விரு ஆகமங்களில் அருணந்தி சிவாசாரியார் பாஞ்சராத்திர ஆகமத்தை எடுத்துக் கொண்டிருப்பதால் இவ்வாகமம் அவர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது புலனாகிறது. பெரும்பாலும் இவ்வாகமங்கள் கூறும் தசாவாதரக் கொள்கையை எடுத்துக் கொண்டு ஆசிரியர் தம் மறுப்பை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

இம்மதத்தின் அறிமுகம், இம்மதக் கடவுளாகிய திருமாலின் நிலையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. சமயவாதிகளைப் பற்றிய நிலையில் எதுவும் கூறப் பெறவில்லை. திருமால் மூலமுதல்வனாய், உருவமற்றவனாய், எவ்விடத்தும் மறைந்து நிற்பவனாய், ஞான வடிவாய் நிற்பவன். அவன் உயிர்களைக் காத்தருள வேண்டித் திருமேனியினைத் தாங்கினான். கருமையான கடலில் யோகநித்திரை கொண்டான் என்று திருமாலின் பெருமையினை அறிமுகப் படுத்துகிறார். இம்மதத்தின் கொள்கைகளை 7 பாடல்களிலும், மறுப்பை 31 பாடல்களிலும் அமைத்துள்ளார்.

ஆதியாய் அருவம் ஆகி அகண்டபூ ரணமாய் ஞானச்
சோதியாய் நின்ற மாயன் சுவேச்சையால் உருவு கொண்டு
நீதியார் கருணை யாலே நீள்கடல் துயின்று நூலும்
ஓதினான் என்று பாஞ்ச ராத்திரி உரைப்பன் உற்றே. [264]

இப்பாடல் பாஞ்சராத்திரி மதத்தின் கடவுள் கொள்கையைக் கூறுகிறது.

பொருள் :

மாயன் எல்லாப் பொருளுக்கும் ஆதியாகவும், உருவமற்றவனாகவும், எங்கும் நிறைந்திருப்பவனாகவும், ஞானமே வடிவாக இருப்பவனும் ஆவான். மாயன் என்னும் திருமால் உயிர்களை உய்விப்பதற்காகத் தன்னிச்சையாகப் பல உருவங்களை எடுத்தான். உயிர்களுக்கு அருளவேண்டும் என்ற முறைமையினாலே திருப்பாற்கடலில் அரிதுயில் கொண்டு அனாதியாகிய வேதங்களை அருளிச் செய்தான் என்று பாஞ்சராத்திரி கூறுவான்.

அகண்டபூரணன் - எங்கும் நிறைந்திருப்பவன், சுயேட்சை - தன் விருப்பம்.

உந்தியில் அயனை ஈன்றும் அவனைக்கொண்டு உலகு உண்டாக்கி
அந்தநல் உலகு அழிக்க அரனையும் ஆக்கு வித்துத்
தந்திடும் சகத்தி னுக்குத் திதிகர்த்தா தானே யாகி
வந்திடும் தோற்றம் ஈறு நிலைமையும் பண்ணும் மாயன். [265]

இப்பாடல் மாயன் முத்தொழிலுக்கும் உரியவன் என்கிறது.

பொருள் :

வைகுண்டத்திலிருக்கும் பரமபுருஷனாகிய திருமால் தனது திருவுந்தித் தாமரையிலே சிருஷ்டி காரணமாகப் பிரமனை உண்டாக்கி, அவனாலே இவ்வுலகத்தை உண்டாக்கிவித்தும், அப்படிப் படைக்கப் பெற்ற உலகத்தை ஒடுக்குவதற்காகப் பிரமனிடத்திலிருந்து உருத்திரனை உண்டாக்கி, அவனைக் கொண்டு உலகத்தை ஒடுக்கியும், தன்னால் உண்டாக்கப் பட்ட உலகத்திற்குக் காக்கும் தலைவனாகத் தானே ஆகி, விளங்கினான். இவ்வாறு உலகத்தின் தோற்றம், நிலைபேறு இறுதி என்ற மூன்றினுக்கும் திருமாலே தலைவன் ஆவான்.

மீன் ஆமை கேழல் நர சிங்கம்வா மனனாய் வென்றி
ஆனாத இராமர் மூவர் ஆயனாய் அளித்தான் கற்கி
தானாயும் வருவன் இன்னம் என்றுஅவன் சாற்றித் தேவர்
கோனாயும் நிற்பன் என்று கூறுவன் குறிப்பி னோடே. [266]

இப்பாடல் மாயனின் தசாவதரம் பற்றிக் கூறுகிறது.

பொருள் :

உலகத்தைக் காப்பதற்காக மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், பலராமன், தயரதராமன், கண்ணன் ஆகிய அவதாரங்களாகத் திருமால் தோன்றினான். வருங்காலத்தில் குதிரை வடிவாகிய கல்கி என்னும் அவதாரமாகத் தோன்றி இவ்வுலகத்தைக் காப்பான். இவ்வாறு பத்து அவதாரங்களை எடுத்தாலும் அவனே (திருமாலே) தேவர்களின் தலைவனாகவும் இருப்பான் என்று பாஞ்சராத்திரி சமயத்தான் அறிவோடு கூறுவான்.

ஏழ்கடல் செலுவில் ஏற்றும் இருங்கிரி முதுகில் ஏற்றும்
தாழ்தலம் முழுதும் கண்டும் தபனியன் உடல்பி ளந்தும்
வாழுலகு அளந்தும் மன்னாய் மன்னர்க்கு மன்ன ராயும்
பாழ்பட உழறிப் பாரும் நோக்கும்பின் பரியும் ஆயே. [267]

இப்பாடல் தசாவாதரத்துச் செய்திகளின் சிறப்பு கூறுகிறது.

பொருள் :

திருமால் மச்ச அவதாரம் எடுத்த காலத்தில் தன்னுடைய செதிலில் ஏழு கடல்களை அடக்கியும், பாற்கடல் கடையப் பட்ட பொழுது மத்தாகப் பயன்படுத்தப்பட்ட பெருமலையைக் கூர்ம அவதாரத்தில் தன் முதுகில் தாங்கியும், கடலுக்குள்ளே ஆழ்ந்து போன பூமியை வராக அவதாரத்தில் தன் ஒற்றைக் கொம்பிலே தாங்கி எடுத்தும், நரசிங்க அவதாரத்திலே இரணியன் உடம்பைப் பிளந்தும், வாமன அவதாரத்தில் தன் இரண்டு அடியால் உலகை அளந்தும், 21 தலைமுறை சத்திரியரை பரசுராமராய் அவதரித்து அழித்தும், தயரதன் மைந்தன் ராமனாய் அவதரித்து இராவணனைக் கொன்றும், பலராமனாய் அவதரித்து யோகநெறியில் தலைப்பட்டும், கண்ணனாய் அவதரித்து அசுரர்களைக் கொன்றும் இவ்வுலகத்தைக் காத்தான். இனிவரும் ஊழிக் காலத்தில் கல்கி என்னும் குதிரையாய் அவதரித்து உலகைக் காப்பான் திருமால்.

பொய்கை வாய் முதலை வாயில் போதகம் போத மாட்டாது
ஐயனே நாதா ஆதி மூலமே என்று அழைப்ப
உய்ய யாம் பணிமால் ஓலம் ஓலமென்று ஓடிச் சென்று
வெய்யவாய் முதலை வீட்டிக் கரிக்கும்வீடு அருளினானே. [268]

இப்பாடல் ஆதிமூலமே பரமன் என்கிறது.

பொருள் :

பொய்கையிடத்தில் இறங்கிய யானை அப்பொய்கையில் இருந்த முதலையின் வாயில் அகப்பட்டுக் கரையேற மாட்டாமல் ஐயனே, நாதா, ஆதிமூலமே என அழைப்ப, யாம் ஈடேறும்படி அருளுகின்ற பரமபுருடனாம் திருமால் விரைந்து சென்று யானையைக் கொடிய முதலை வாயில் இருந்து விடுவித்து யானையையும் முதலையையும் வைகுண்டப் பதவி அடையச் செய்தான்.

அலைகடல் கடைந்தும் வானோர்க்கு அமுதினை அளித்தும் தீய
கொலைபுரி அசுரர் தம்மைக் கொன்று உல கங்கள் காத்தும்
கலைமலி பொருள்அன் பர்க்குக் கருணையால் உரைத்தும் மிக்க
தலைமையில் நிற்பன் மாயன் என்றும்பின் சாற்றி னானே. [269]

இப்பாடல் மாயனின் பெருமை கூறுகிறது.

பொருள் :

பாற்கடலைக் கடைந்தபோது துணையாக நின்று அதில் தோன்றிய அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்து, உலகில் கொடிய கொலைத் தொழிலைச் செய்த அரக்கர்களைக் கெடுத்து, தேவர்களைக் காத்து, சர்வகலைகள் பொருந்திய வேதத்தைத் தனது கருணையினாலே அடியவர்களுக்கு அருளி இவ்வாறு அருள் மிக்கவனாக, தலைமை உடையவனாக மாயன் விளங்குகிறான் என்று பாஞ்சராத்திரி கூறினான்.

மாயையாய் உயிராய் மாயா காரியம் ஆகி மன்னி
மாயையால் பந்தம் செய்து வாங்கிடும் அவனால் அன்றி
மாயைபோ காதுஎன்று எண்ணி மாயனை வணங்கப் பின்னை
மாயைபோம் போனால் மாயன் வைகுண்டம் வைப்பன் அன்றே.
[270]

இப்பாடல் மாயன் அளிக்கும் முத்தியைக் கூறுகிறது.

பொருள் :

பரமபுருஷனாகிய திருமால் உலகத்தின் சிருஷ்டிக் காலத்தில் மாயசொரூபியாக விளங்கி, மாயையின் வழியிலே மயங்குகிற ஆன்மாக்களுமாகி விளங்குகிறான். மாயையினின்றும்

தோன்றும் உயிர்களைக் கட்டுக்குள் அகப்படுத்தி மீளவும் நீக்கி நிற்பான். மாயன் அவன் ஆகையால் அவனாலன்றி மாயை நீங்காது. பதிவிரதையைப் போல மற்றொரு தெய்வத்தினை நினையாது திருமாலையே வணங்கி வழிபாடு செய்தால் பந்தமாகிய மாயை நீங்கும். அம்மாயை நீங்கவே பரமபுருஷனாகிய திருமால் ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்திலே சேர்த்து வீடுபேற்றைத் தருவான்.

பாஞ்சராத்திரி மதம் மறுதலை

ஆதிதான் ஆகில் ஆதிக்கு அந்தம்உண் டாகும் அந்தக்
கோதி லான் இறைவன் என்று கூறிடும் வேதம் ஞானச்
சோதியாய் நின்றான் ஆகில் தோய்ந்திடான் மாயை ஞானத்
தீதிலா உருவம் என்னில் சேர்ந்திடான் தாதுச் சென்றே. [271]

இப்பாடல் திருமால் ஆதியாவான் என்பதை மறுக்கிறது.

பொருள் :

பாஞ்சராத்திரியே, நீ உன் கடவுளை ஆதி என்று கூறுகிறாய். ஆதி என்றால் ஆதிக்கு முடிவு உண்டாகும். அதன்வழி உன்னுடைய கர்த்தா ஆதியும் முடிவும் உடையவனாய்த் தலைமைப் பண்பை இழக்கிறான். அது எவ்வாறு என்றால் வேதநூல் ஆதியும் அந்தமும் இல்லாதவனையே கர்த்தாவாகிய தலைவன் என்று சொல்லுகிறது. மேலும் உன்னுடைய இறைவன் ஞான ஒளி வடிவாகவும், அருவமாகவும் எங்கும் நிறைந்தவனாகவும் விளங்குவான் என்றால் மாயையில் அகப்பட்டு உருவம் (உடல்) கொள்ள மாட்டான். அவ்வாறு அவதாரம் எடுத்துக் கொண்ட திருமேனிகளும் ஞானத்தின் வடிவே என்று நீ கூறினால் அதுவும் பொருந்தாது. ஏனென்றால் ஞானத்திரு மேனிக்குத் தாதுக்கள் உடையவை ஆகா. (தாதுக்கள் - தோல், தசை முதலியவை) திருமால் எடுத்த உருவ வடிவங்கள் எல்லாம் தாதுக்கள் உண்டாகி அழிந்தவை என்று புராணங்கள் கூறுகின்றனவே.

விளக்கவுரை :

இப்பாடல் திருமாலின் அவதாரங்கள் உடல் தோற்றமாக அமைந்ததால் கடவுள் தன்மை அற்றவை என்று கூறி

பாஞ்சராத்திரி மதக் கொள்கையை மறுக்கிறது. ஞானவடிவாக இருக்கின்ற இறைவன் மானிட வடிவத்திற்கு உரிய தோல், தசை, எலும்பு முதலியவற்றைக் கொண்டு அவதாரம் செய்வது பொருத்தமற்றது என்கிறார் ஆசிரியர்.

தாதுவா னதுஏது என்னில் சங்கரன் பலிக்குச் செல்லத்
தீதிலாக் கோதண்டத்தைத் திறந்து அவன் விட்ட போது
போதுவது உதிரம் அன்றோ பேரந்து மூர்ச் சித்து வீழ்ந்தான்
நாதனார் எழுப்பப் பின்னே நடந்தனன் கிடந்த வன்தான். [272]

இப்பாடல் முன்பாடலின் தொடர்ச்சி.

பொருள் :

திருமாலுக்குத் தாதுக்கள் ஏது? எவ்வாறு உண்டானது என்று நீ கேட்கலாம். சிவபெருமான் திருமாலின் அகந்தையைக் கெடுப்பதற்காகப் பிச்சா பாத்திரம் ஏந்திப் பிச்சைக்கு எழுந்தருளினார். பிறர் அளித்த பலிகளால் அவர் ஏந்திய பிச்சா பாத்திரம் நிறையவில்லை. இதனைக் கண்ட திருமால் யான் இதனை நிறைப்பேன் என்று தன் அகந்தையாலே நெற்றியின் குருதிக் குழாயைத் திறந்தார். அதிலிருந்து இரத்தம் புறப்பட்டது. அந்த இரத்தம் அப்பாத்திரத்தை நிரப்பவில்லை. அதனால் இரத்தத்தை இழந்த திருமால் மயங்கி விழுந்தான். தேவர்கள் கேட்டுக் கொண்டதால் சிவபெருமான் திருமாலை எழச் செய்தார். எனவே உம்முடைய இறைவனுக்குத் தாதுக்கள் உண்டு என்பது அறியப் பெறும்.

விளக்கவுரை :

இப்பாடல் புராண வரலாறு கொண்டு திருமால் தாதுக்களால் உடம்பைப் பெற்றவர் என்றும், மயக்கம் அடைந்தார் என்றும் கூறி மாயன் பரமன் அல்ல என்கிறார் ஆசிரியர். கோதண்டம் - நெற்றி.

இச்சையால் உருவம் கொள்வன் அரிஎனில் இகழ்வேன் விக்கண்
எச்சனாய் உண்ணப் புக்கு அங்கு இருந்த அன்று ஈச னாலே
அச்சமார் தலை அறுப்பு உண்டு ஆன்தலை ஆக்கிக் கொள்வான்
நச்சினார் போற்ற நாதன் நரரணன் தலை கொடுத்தான். [273]

இப்பாடல் தன்னிச்சையாகத் திருமால் உருவெடுத்தான் என்பதை மறுக்கிறது.

பொருள் :

திருமால் தன்னிச்சையாக உருவெடுத்துக் கொண்டான் என்றால் பார்வதியை இகழ்ந்து தக்கனால் செய்யப்பெற்ற வேள்வியிடத்தே (சிவபெருமான் பங்கு ஏற்காத வேள்வியிடத்தே) திருமால் வேள்வித் தலைவனாக இருந்து வேள்வியின் அவியுணவை உண்ண முற்பட்ட பொழுது வீரபத்திர தேவர் திருமாலுடைய தலையை அச்சமுண்டாகும் படி அறுக்க, இழந்த தலையைத் திரும்ப உண்டாக்கிக் கொள்ள முடியாதவனாய் இருந்தான். தேவர்கள் வேண்டுதலுக்கு இணங்கச் சிவபெருமானே மீண்டும் தலையைப் படைத்து அளித்தான். எனவே திருமாலுக்குத் தானே உருவெடுத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லை.

விளக்கவுரை :

இப்பாடலிலும் புராண வரலாற்றைக் கொண்டே அவர்தம் கொள்கை மறுக்கப் பெறுகிறது. எச்சன் - வேள்வித் தலைவன், அச்சமார் - அச்சம் உண்டாகும்படி, நச்சினார் - தேவர்கள்

நூலினை உரைத்து வேத நூலினை நுவலும் வண்ணம்
மால்அருள் செய்தான் என்றாய் மறைநீதி உலகி யற்கை
சாலவே தெரியாதாகிக் கிடந்தநாள் சகத்து யார்க்கும்
ஆலின்கீழ் இருந்து வேதம் அருளினான் அறைந்தான் நூலே. [274]

இப்பாடல் திருமால் வேதத்தை அருளினான் என்பதை மறுக்கிறது.

பொருள் :

வேதங்களைப் ப்டைத்து வேதங்களை ஓதும் முறைமையையும் திருமால் அருளிச் செய்தான் என்று நீ கூறுகிறாய். வேதநூல் ஒழுங்கும், உலக இயற்கையும் தெரியாததாகித் தலை மயங்கிக் கிடந்த காலத்தில் உலகத்தோர் யாவரும் தெரிந்து கொள்ள வேண்டி, கல்லால மரத்தின்

கீழிருந்து வேதநூலை அருளிச் செய்து, அதன் பொருள் தெரியவேண்டி ஆகம நூலும் அருளினான் சிவபெருமான்.

விளக்கவுரை :

இப்பாடலில் வேத ஆகமங்களை அருளியது திருமால் அல்ல. சிவபெருமானே என உலக இயல்பு கொண்டு ஆசிரியர் கூறுகிறார். ஆலின்கீழ் - கல்லால மரத்தின் கீழ்.

அயன்தனைப் பயந்தான் என்றாய் அரி அயன் சிரம்சே திப்பப்
பயந்திடான் தலை மால் தானும் படைத்திடான் சிரத்தைக் கிள்ளும்
சயம்தரும் அரனைத் தந்தான் அயன்என்கை தப்பே அன்றோ
தியங்கிடாது உணராய் எல்லாம் சிவன்செயல் என்று தேர்ந்தே.[275]

இப்பாடல் திருமால் பிரமனையும், பிரமன் உருத்திரனையும் படைத்தான் என்று கூறுவதை மறுக்கிறது.

பொருள் :

பிரமனைத் திருமால் படைத்தான் என்று கூறுகிறாய். ஐந்து முகம் கொண்ட பிரமன் ஒரு காலத்தில் சிவபெருமான் போன்று தனக்கும் ஐந்து முகங்கள் என்பதால் தானும் சிவனும் ஒத்தோம் என்று தருக்கடைந்திருந்தான். அதனால் சிவ பெருமான் அவனுடைய நடுத்தலையைக் கிள்ளி எறிந்தார். அவனுடைய தந்தையாகிய திருமால் அத்தலையை உண்டாக்கி இருக்கலாமே. பிரம்மாவின் தலையைக் கிள்ளத் தக்க ஆற்றலுடைய பரமேசுவரனைத் தலை இழந்த பிரம்மா படைத்தான் என்பது தவறன்றோ. எனவே அனைத்துச் செயலும் பரமேசுவரன் செயல் என்று மயங்காமல் அறிவாயாக.

விளக்கவுரை :

இப்பாடலில் பிரம்மனுக்கு ஆற்றல் இல்லை என்பதைப் புராணக் கதையின் வாயிலாக ஆசிரியர் மறுத்துச் சிவ பெருமானுக்கு முதன்மை தருகிறார். சேதிப்பு - கிள்ள.

சீவர்கள் சனனம் போலச் சிலர்வயிற்று உதித்த மாலைத்
தேவு என்றே வையம் காக்கச் சுவேச்சையால் செனித்தான் என்பாய்
பூவன் பின் படைக்க மாட்டாது அரனடி போற்ற வேதக்
கோவந்து முகத்தில் தோன்றிச் சிருட்டியைக் கொடுத்தல் கூறும்.

[276]

இப்பாடல் திருமால் பிரமனைத் தோற்றினான் என்பதை மறுக்கிறது.

பொருள் :

உலகத்தில் உள்ள உயிர்களின் பிறப்புப்போல திருமால் உலகத்திற்கு அருள வேண்டித் தானே உருவெடுத்துக் கொண்டான் என்றும், அவனிடத்திலே பிரம்மா தோன்றினான் என்றும், பிரம்மாவாலே பிரபஞ்சம் தோற்றுவிக்கப்பட்டது என்றும் கூறுகின்றாய். சிவபெருமான்தான் தன் எல்லையற்ற கருணையினால் உலகத்தைத் தோற்றுவிக்க, பிரம்மா முதலிய காரணர்களை உண்டாக்கி உலகத்தைப் படைக்கச் செய்தான். ஆனால் பிரம்மனோ படைப்புத் தொழிலைச் செய்ய மாட்டாது திகைத்திருந்தான். சிவனை நோக்கி அருள வேண்டினான். சிவபெருமான் பிரமனுக்கு இரங்கி அவன் நெற்றியிலிருந்து வெளிப்பட்டு அவனுக்குப் படைப்புத் தொழில் செய்ய அருள் பாலித்தான்.

விளக்கவுரை :

இப்பாடலில் திருமால் பிரமனைத் தோற்றுவிக்கவில்லை என்றும் சிவன்தான் தோற்றுவித்தான் என்றும், பிரமன் படைப்புத் தொழிலைச் செய்யச் சிவன்தான் வழிகாட்டினான் என்றும் கூறிப் புராணக்கதைகளைச் சுட்டிக்காட்டி ஆசிரியர் அவர்தம் கொள்கையை மறுக்கிறார்.

சீவர்கள் - உயிர்கள், பூவன் - பிரம்மன், வேதக்கோ - சிவபெருமான்.

நாரணன் அயனை ஈன்றும் அயனும்நா ரணனை ஈன்றும்
காரணம் ஒருவருக்கு அங்கு ஒருவர் தாம்இருவ ருக்கும்
வாரணம் உரித்த வள்ளல் காரணன் என்றுமன்ற
ஆரணம் உரைக்கும் பக்கத்து அவர்களும் அடைந்தார் அன்றே.

[277]

இப்பாடல் சிவபெருமானின் காரணமாகப் பிரமன், திருமால் செயல்படுகிறார்கள் என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

திருமால் பிரம்மனைத் தோற்றுவித்தும், பிரம்மன் திருமாலைத் தோற்றுவித்தும் ஒருவர் படைப்புக்கு காரணமாக ஒருவர் காரியப்பட்டு வருகின்றனர் என்று சொல்லுகிறாய். இது பொருந்தாது. இவ்விருவரும் காரியப்பட்டு வருவதற்கு முதற்காரணமாக அமைகின்றவன் யானைத் தோலைப் போர்த்திய பரமேசுவரனே ஆவான் என்று வேதங்கள் உரைக்கின்றன. சிவபெருமான் இரு புறங்களிலும் பிரம்மனும் திருமாலும் அடங்குவார்கள். அறிவாயாக.

அழிப்புஅரி ஏவல் என்றாய் அரிதனை அழிக்கும் அன்று அங்கு
அழிப்பது தவிர்க்க மாட்டான் அங்கமும் அழித்தே பூண்டான்
அழிப்புஅரி ஏவல் என்றுஅங்கு அறைந்ததும் அழிந்தது அன்றோ
அழித்திடும் அரனே ஆக்கம் நோக்கமும் ஆக்கு வானே. [278]

இப்பாடல் அழிப்பவனே தோற்றுவிப்பான் என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

திருமால் ஏவலின்படி உருத்திரன் உலகத்தை அழிப்பான் என்று நீ கூறுகிறாய். முற்றழிப்புக் காலத்துப் பிரமனும் திருமாலும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள மாட்டார்கள். மேலும் திருமால் பல அவதாரங்களை எடுத்தபோது அவற்றைச் சிவபெருமான் சங்கரித்துக் கொண்டான் என்பதற்கு அடையாளமாகப் பன்றியின் கொம்பு, சிங்கப்பல், ஆமையோடு, கொக்கு இறகு முதலியவற்றை வெற்றியின் சின்னமாக அணிந்து கொண்டான். ஆதலால் திருமாலின் ஆணையின்படி உருத்திரன் உலகத்தை அழித்தான் என்று கூறுவது தவறு. சிவபெருமான் தன் உள்ளக் குறிப்பின்படி உலகத்தை ஒடுக்குவான். எனவே எவன் ஒடுக்குகிறானோ அவனே உலகத்தைத் தோற்றுவிக்கவும், நிலை நிறுத்தவும் வல்லவன் ஆவான் என்பதை உணர்வாயாக.

விளக்கவுரை :

இப்பாடலில் திருமாலின் அவதாரச் சிறப்பைக் கொண்டே மறுத்து முத்தொழிலுக்கும் உரியவர் சிவபெருமான் என்பதை நிலைநாட்டுகிறார் ஆசிரியர். அங்கம் - அவதாரங்களின் உறுப்புக்கள்.

வானம்கீழ் மண்ணும் எல்லாம் மாயனே காப்பான் என்றாய்
தான்அஞ்சும் சலந்த ரன்றன் உடல் கீண்ட சக்க ரத்தை
ஆன்அஞ்சும் ஆடுவான்பால் பெற்றுஉலகு அளித்த வார்த்தை
தரணெங்கும் ஆகும் எல்லாம் சங்கரன் காப்பே ஆமே. [279]

இப்பாடல் திருமால் காத்தல் தொழிலுக்கு உரியவர் என்பதை மறுக்கிறது.

பொருள் :

வானத்தையும், மண்ணுலகத்தையும் எல்லாவற்றையும் திருமால் காப்பான் என்கிறாய். முன்பு ஒரு காலத்தில் சலந்தரன் என்னும் அரக்கனை அழிக்கத் தக்க ஆயுதம் வேண்டித் திருமால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தார். அத்தவத்தை அழிக்க வந்த அந்த அரக்கனை சிவபெருமான் தம் சக்கரப் படையால் அழித்தார். அந்தச் சக்கரப் படையைப் பெறுவதற்காகத் திருமால் நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்கள் கொண்டு சிவபெருமானை வ்ழிபட்டார். ஒரு நாள் ஒரு பூ குறையவே தனது கண்ணையே பறித்து மலராகக் கொண்டு வழிபட்டார். சிவபெருமானும் சக்கரப் படையை அருளினார். இவ்வரலாறு உலகெங்கும் வழங்கப்படுகிறது. எனவே காத்தல் தொழிலைச் சிவபெருமானே செய்தார் என அறியவேண்டும்.

விளக்கவுரை :

திருமால் காத்தல் பெருமையை உடையவர் என்றால் சலந்தரனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியாதது ஏன்? அப்போது திருமாலையே காத்தவர் சிவபெருமான் தானே. எனவே காத்தல் தொழிலுக்கு உரியவர் சிவபெருமான் என்று வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

மாலினார் சேலினராய் வாரிகள் அடக்கிக் கொண்டு அன்று
ஆலியா உலகம் எல்லாம் அழிப்பவன் நானே என்னச்
சேலினார் தமைப் பிடித்துச் செலுவினை இடந்து கண்ணைச்
சூலியார் மேல் அணிந்தான் சூலிதான் ஆகும் அன்றே. [280]

இப்பாடல் மச்சவதாரத்தை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

திருமால் பிரளய காலத்தில் உலகத்தைக் காப்பதற்காக மச்சவதாரம் எடுத்துத் தன் செதிலுக்குள்ளே ஏழு கடல்களையும் அடக்கிக் கொண்டார் என்று நீ கூறுகிறாய். அதனாலேதான் உலகத்தை அழிப்பவனும் நானே என்று கூறித் திருமால் செருக்கடைந்தான். அவனின் செருக்கை அடக்குவதற்காகச் சிவபெருமான் மீனினுடைய செதிலையும் அரிந்து, திரிசூலத்தால் கண்ணையும் இடந்து, அணிகலன்களாக அவற்றை அணிந்துகொண்டார்.

விளக்கவுரை :

இப்பாடல் மச்ச அவதாரத்தை நகையாடுகிறது. மீனாக அவதாரம் எடுத்தார் திருமால் என்றால் அந்த மீனையே கொன்று அதன் உறுப்புக்களை அணிந்து கொண்ட சிவபெருமான் தான் வல்லமை உடையவர் என்கிறார் ஆசிரியர். வாரி - கடல் , சூரியார் - சூலத்தை ஏந்திய சிவபெருமான்.

ஆமையாய் மேருத் தாங்கி அடைகலாய்க் கிடந்த போது
நாம்எனா உலகு ஆதார நாதன்என்று அகந்தை பண்ண
ஆம்எனார் அன்றும் என்னார் அமரரும் அரனார் பார்த்துத்
தாம்அநாள் ஆமை யாரைத் தகர்த்து ஓடு தரித்தார் அன்றே. [281]

இப்பாடல் கூர்ம அவதாரத்தை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

பாற்கடலைக் கடைந்த காலத்தில் திருமால் மேரு மலையைக் கூர்ம வடிவெடுத்துத் தாங்கி ஆதார சிலைபோல் கிடந்தபோது உலகத்திற்குக் கர்த்தாவும் ஆதாரமும் நாமே

என்று அகங்காரம் கொண்டவிடத்துத் தேவர்களும் அதனை ஆமோதித்துப் புகழ்ந்திருக்க அதனைப் பார்த்துப் பரமேசுவரன் ஆமையைத் தகர்த்து அதன் ஓட்டைத் தன் எலும்பு மாலையோடு அணிந்து கொண்டார். ஆதலால் சிவபெருமானே கர்த்தா என்று அறிவாயாக.

விளக்கவுரை :

இப்பாடலில் சிவபெருமான் ஆமையோட்டை அணிந்ததைக் கொண்டு திருமாலின் கூர்ம அவதாரத்தைச் சம்ஹரித்தவர் எனக் கூறிச் சிவபெருமானுக்கு உயர்வு தருகிறார். இதில் தேவர்களும் அதனை அங்கீகரித்தார்கள் என்பதனை எதிர்மறையாகத் தருகிறார். அதாவது ஆம் எனார் என்னார் அமரரும் என்பது செய்யுளில் காணப்படும் தொடராகும்.

எழுதலம் இடந்து பன்றி யாய்இருங் கொம்பில் ஏற்றுத்
தொழுதுஉலகு இறைஞ்ச நின்ற சோதிநான் என்றபோதுஅன்று
அழுதுஅல மந்து வீழ அருங்கோடு பறித்து அணிந்தான்
கழுதுஅல மந்த காட்டில் ஆடிடும் கடவுள் அன்றே. [282]

இப்பாடல் வராக அவதாரத்தை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

பிரளய காலத்துக் கடலில் மூழ்கிய ஏழு உலகங்களையும் பன்றி வடிவம் கொண்டு தன்னுடைய ஒற்றைக் கொம்பினால் ஏற்றுக் கொண்டு சுமந்து மீட்டார். இதனால் உலகோர் திருமாலைப் புகழ்ந்து போற்றினார்கள். ஆதலால் திருமாலும் அனைத்திற்கும் தானே தலைவன் என்று அகங்காரம் கொண்டார். இதனைக் கண்ட பேய்கள் சுழன்று ஆடுகின்ற சுடுகாட்டில் ஆடலைச் செய்த கடவுளாம் சிவபெருமான் அப்பன்றி அழுது சோகத்தில் பூமியில் விழும்படியாகச் செய்து அதன் கொம்புகளைப் பறித்துத் தனது அணிகலனாக அணிந்து கொண்டார்.

விளக்கவுரை :

சிவபெருமான் பன்றிக் கோட்டினை அணிந்ததைச் சிறப்பித்து, திருமாலின் வராக அவதாரத்தின் சிறப்பை மறுக்கிறார் ஆசிரியர். கழுகு - பேய், அலமந்த - உலவுகின்ற.

இங்குஅடா உளனோ மால்என்று இரணியன் தூணை எற்ற
உங்கள்தா மோத ரன்தான் உருநர சிங்க மாகி
எங்கடா போவது என்னா உடல்பிளந்து இறை யான்என்ன
அங்கடா சிம்பு ளாகிஎடுத்து அடர்த் தான் அரன்தான். [283]

இப்பாடல் நரசிங்க அவதாரத்தை மறுத்துக் கூறியது.

பொருள் :

இரணியன் இந்த இடத்தில் திருமால் உள்ளானோ என்று தூணைத் தட்டிக் காட்ட அந்தத் தூணில் உங்கள் தெய்வமாகிய திருமால் நரசிங்க வடிவாகத் தோன்றி இரணியனை, எங்கடா போவாய்? என்று பிடித்து உடலைப் பிளந்தார். அதனால் உலகுக்கெல்லாம் நாமே தலைவன் என்று ஆணவம் கொண்டார். ஆனால் சிவபெருமான் சிம்புள் என்னும் பறவை வடிவு எடுத்து நரசிங்கத்தைக் கொன்று அதன் தோலைத் தாம் அமருகின்ற ஆசனமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

விளக்கவுரை :

நரசிங்க அவதாரமாகிய நரசிங்கத்தைச் சிவபெருமான் அழித்தார் என்ற புராண வரலாற்றின் மூலம் திருமாலின் சிறப்பை மறுக்கிறார் ஆசிரியர்.

எற்ற - தூணைத் தட்டிக் கேட்க, இறையான் - தானே தலைவன், சிம்புள் - ஒருவகைப் பறவை.

தானம்என்று இரந்து செல்லத் தனக்குமூ வடிகொடுப்ப
வானமும் அளந்து கொண்டு மாவலி தன்னைப் பின்னை
ஈனமாம் சிறையில் இட்டான் இறையன்று ஒன்று ஈந்தோர் தங்கட்கு
ஊனம்செய் திடுவோர் தாங்கள் உத்தமர் அல்லர் ஆகும். [284]

இப்பாடல் வாமன அவதாரத்தை மறுக்கிறது.

பொருள் :

ஒரு காலத்தில் திருமால் வாமன அவதாரம் கொண்டு மாவலி அரசனிடத்தில் மூன்றடி நிலம் வேண்டும் என்று யாசித்துச் செல்ல, அவனுக்கு அவ்வரசன் தானமாக மூவடி மண் கொடுப்ப, தானம் பெற்ற திருமால் இரண்டடிகளால் உலகத்தையும் வானத்தையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடமின்மையால் அந்த அரசன் தலைமீது வைத்து அழுத்திப் பின்னர் அவனைக் கொடுமையான சிறையில் இட்டார். ஆதலால் அவர் இறைவர் அல்ல. ஏனென்றால் ஒருவன் ஒன்றனைத் தானமாகக் கொடுக்க அதனை ஏற்றுக் கொண்டவர் தானம் செய்தவருக்கு நன்மை செய்தலன்றித் தீமை செய்தால் அவர் உத்தமர் ஆவதில்லை.

விளக்கவுரை :

இப்பாடலில் தானம் பெற்றவர், பெறுபவர் இயல்பை எடுத்துக் கூறித் திருமாலின் வாமன அவதாரத்தை மறுக்கிறார்.

மாயமான் தன்னைப் பொய்ம்மான் என அறி யாது அரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன் மனைவியைக் கொடுத்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை மதிகெட்டு அங்கு அவனைக் கொன்று
நாயனார் தமைப்பூ சித்தான் கொலைப்பாவம் நணுகிடாமே. [285]

இப்பாடல் இராம அவதாரத்தை மறுக்கிறது.

பொருள் :

ஒரு காலத்தில் இராமனாய் அவதாரம் எடுத்துச் சீதையுடன் காட்டில் வாழுகின்றபோது இராவணன் மாயமானை ஏவினான். அதனைப் பொய்மான் என்று அறியாது அரக்கனுடைய மாயையில் அகப்பட்டுத் தன் மனைவியை இராமன் பறிகொடுத்தான். அத்தகையவனை மாயைக்குத் தலைவன் எனக் கூறுகிறாய் இராமன் இலங்கைக்குச் சென்று இராவணனைக் கொன்று அவன் படையையும் அழித்தான். அத்தகையவன் கொலைப்பாவம் தன்னை அணுகாதிருக்க இராமேசுவரத்திற்கு வந்து சிவனைப் பூசித்தான்.

விளக்கவுரை :

இராமன் சிவபெருமானை வழிபட்டதால் திருமாலைக் காட்டிலும் சிவபெருமான் தலைமை மிக்கவர் என்று வலியுறுத்துகிறார் ஆசிரியர். மாயை - இறை.

பரசுடன் பிறந்தான் தானும் பத்தனாய்ப் பரசி னாலே
அரசுஅறுத்து அரனை நோக்கி அருந்தவம் புரிந்தான் அன்று
பரசிய பரசு ராமன் பலதேவன் உலகம் எல்லாம்
உரைசெயும் உமையாள் கோனை உள்நினைந்து யோகில்
நின்றான். [286]

இப்பாடல் பரசுராம அவதாரத்தை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

பரசு என்ற மழு ஆயுதத்தோடு பிறந்த பரசுராமன் தான் சிவபெருமான் பக்தனாய் வாழ்ந்து மழுவாயுதத்தால் அரசர்களை அழித்து அந்தப் பாவம் தீரச் சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிந்தான். மேலும் பல தேவன் அவதாரத்தில் உம்முடைய திருமால் உமையவளின் கணவனான சிவனை வணங்கி உலகமெல்லாம் புகழும் வண்ணம் யோகநெறியில் நின்றார்.

விளக்கவுரை :

பரசுராமன், பலராமன் சிவபெருமானின் பக்தர்களாக அவரை வணங்கி யோகத்தில் வாழ்ந்ததால், பரசுராம, பலராமராகிய திருமாலைக் காட்டிலும் சிவபெருமான் தலைமை உடையவர் என்பதை இப்பாடல் மூலம் நிறுவுகிறார்.

ஓதிய வாசு தேவர் தமைஉப மனியு தேவர்
தீதிலா நோக்கம் செய்து சிவகரம் சிரத்தில் சேர்த்தி
ஆதிபால் அடிமை ஆக்க அரிஉடல் பிராணன் அத்தம்
ஈதெலாம் கொள்நீ என்று அங்கு இறைஞ்சினர் அறிந்தி டாயே.
[287]

இப்பாடல் வசுதேவரைத் தலைவர் அல்ல என்று மறுக்கிறது.

பொருள் :

உபமன்யு முனிவர் திருமாலின் அவதாரமாகிய வசுதேவருக்குத் தம்முடைய திருக்கண் நோக்கம் சாற்றி வசுதேவரின் தலையிலே தம்முடைய சிவக்கரத்தை வைத்துச் சிவதீட்சை கொடுத்தருளினார். ஆதலால் சிவபெருமானுக்கு வசுதேவராம் கண்ணன் அடிமையானார். சிவபெருமானுக்கு ஆட்பட்ட கண்ணன் தன் உடல் பொருள், ஆவி அத்தனையும் ஏற்றுக்கொள்க என்று சிவபெருமானிடத்தில் இறைஞ்சி வேண்டினார் என்பதை அறிவாயாக. திருமால் அவதாரமாகிய வசுதேவர் துவாரகையில் இருக்க உபமன்யு முனிவர் கயிலாயத்திற்கு எழுந்தருள அவரை நோக்கி வசுதேவர் எங்கு செல்கிறீர் என்று கேட்க அவர் கயிலாயத்திற்குப் போகிறேன் என்று கூற அதற்கு வசுதேவர் கயிலாயத்திற்கு செல்லாமல் இங்கேயே நாங்கள் தரிசிப்பதற்கு அருள் செய்யவேண்டும் என வணங்கினார்.

விளக்கவுரை :

வசுதேவனாம் கண்ணனுக்கும் உபமன்யுவிக்கும் இடையில் நடைபெற்ற செய்தியை ஆசிரியர் இங்கு குறிப்பாகக் காட்டுகிறார். வணங்கிய வசுதேவருக்கு உபமன்யு முனிவர் சிவதீட்சை செய்தார் என்பது புராண வரலாறு. இதனைக் கொண்டு கண்ணனைக் காட்டிலும் சிவபெருமான் தலைமை பெற்றவர் என்பதை நிறுவுகிறார் ஆசிரியர்.

பின்வரும் பரிதான் ஆகி அரிஎன்றாய் பின்பு வந்தால்
என்வரும் ஈசனல்என்று அறிகிலோம் இவுளி யார்க்கு
முன்வரும் அவதா ரங்கள் முடிந்தமை அறிந்தாய் அன்றே
பொன்வரும் சடையி னான்தன் புகழ்எங்கும் புக்கது அன்றே. [288]

இப்பாடல் கல்கி அவதாரத்தை மறுத்துக் கூறுகிறது.

பொருள் :

வருங்காலத்தில் திருமால் குதிரை வடிவாம் கல்கி அவதாரம் எடுப்பான் என்று கூறுகிறாய். இதுவரை முன்னெடுத்த அவதாரங்களில் திருமாலைச் சிவபெருமான்

ஒறுத்தார் என்பதை யாம் கூறியவற்றால் அறிந்திருப்பாய். ஆதலால் இனிவரப் போகின்ற கல்கி அவதாரத்தால் சிவபெருமானால் திருமாலுக்கு என்ன நேரும் என்பதை யாம் அறியோம். பொன்நிறம் கொண்ட சடையினை உடைய சிவபெருமானின் புகழ் உலகமெங்கும் நிறைந்து விளங்குவதாகும்.

கைவரை மூல மேயோ எனக்கரிக்கு உதவும் காட்டின்
மொய்வரை எடுத்தான் மூலம் ஆயிட வேண்டு மோதான்
ஐயனே முறையோ என்றால் அரசனோ அங்குச் செல்வான்
வையகம் காப்பான் செல்கை வழக்கு அன்றோ ஊர்காப் பான்போல்.
(289)

இப்பாடலில் ஆதிமூலமே என்று யானை அழைத்தது சிவனையே என்று நிறுவுகிறார் ஆசிரியர்.

பொருள் :

முதலை வாயில் அகப்பட்ட யானை ஆதிமூலமே என ஓலமிட்டது. இதனைக் கேட்ட உடன் ஓடிச்சென்று அதனுடைய இடரை அழித்தவர், காட்டில் மலையை எடுத்துத் தாங்கி ஆநிரைகளைக் காத்த திருமால் ஆவார். ஆதலால் அவரைத் தலைவனாக்கி விடவேண்டுமா? திருமால் தலைவன் அல்ல. ஒரு அரசனை நோக்கி ஒருவன் கூப்பிட்டால் அரசன் அங்கு செல்லமாட்டான். ஊர்காப்பான் செல்வான். அதுபோல உலகத்தைச் சிவபெருமான் ஆணையினால் காப்பவன் திருமால். ஆதிமூலமே என்று அழைத்தமைக்கு ஆதி மூலமாகிய சிவபெருமான் செல்லாது ஊர்காப்பான் போலத் திருமால் சென்று இடர் களைந்தார்.

விளக்கவுரை :

அருணந்தியார் வழக்கில் உள்ள முறைமை கொண்டு இங்கு மறுத்துரைப்பது நினைவு கூறத்தக்கது. ஆதிமூலம் என்று சொல் குறிப்பிட்ட ஒரு கடவுளைக் குறிக்காது. தலைமையாளரைக் குறிக்கும் எனக்கொண்டு அத்தலைமை பரமேசுவரனுக்கு உரியது என்று கூறுவது அவரின் மறுப்புப் புலமையைக் காட்டுகிறது.

அன்றியும் யானை மாலுக்கு அடிமையாய் மூலமேயோ
என்றிடும் அதனால் மால்தான் இறைவன்என்று இயம்ப வேண்டா
உன்றனக்கு அடிமை ஆனார் உன்னை எம் பெருமான் என்றால்
இன்றுநீ வணங்கும் உன்றன் எம்பெரு மானோ நீயே. [290]

இதுவும் அது.

பொருள் :

மேலும் யானையானது திருமாலுக்கு அடிமையாய் ஆதீமூலமே என்று அழைத்தது என வைத்துக் கொண்டாலும் அதனாலேயே திருமால்தான் உலகத்திற்கெல்லாம் இறைவன் என இயம்பலாமோ? இயம்ப வேண்டாம். ஏனென்றால் பாஞ்சராத்திரனே உனக்கு அடிமையானவர் உன்னை எம்பெருமானே என்றால் நீ வணங்குகின்ற திருமாலாக ஆகிவிடுவாயா?

விளக்கவுரை :

வினாவாகத் தன்னுடைய மறுப்புரையை அமைத்து இம்மதத்தாரின் கொள்கையை ஆசிரியர் மறுப்பது போற்றுதற்கு உரியதாம்.

ஞாலம்உண் டவனால் உண்டார் நல்லமுது அமரர் என்றாய்
வேலைநஞ்சு எழமா லாதி விண்ணவர் வெந்து சென்ற
காலம் இன்று எமக்குக் காவாய் கடவுளே என்ன நாதன்
ஆலம்உண் டிலனேல் தேவர் அமுதம் உண் டிடுவது எங்கே. [291]

இப்பாடல் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

ஞாலமாகிய மண்ணை உண்டவனாகிய கண்ணனின் உதவியால் தேவர்கள் அமுதத்தை உண்டார்கள். (என்று நீ கூறுகிறாய்) பாற்கடலில் அமுதம் உண்டாவதற்கு முன்னால் மிகக் கொடிதாகிய ஆலகால விஷம் தோன்றிட, திருமால் முதலான தேவர்கள் வருந்தி, சிவபெருமானிடத்தில் சென்று இக்காலத்தில் எம்மைக் காப்பாயாக என்று வேண்டிட

நாதனாகிய சிவபெருமான் அந்த விஷத்தை உண்டிடவில்லை என்றால் தேவர்கள் அமுதத்தை உண்ணுவது ஏது?

விளக்கவுரை :

சிவபெருமான் நஞ்சுண்ட செயலால் தேவர்களுக்கு அமுதம் கிடைத்துப் பயனடைந்தார்கள். அப்பயனைச் சிவபெருமான் தந்ததால் முழுமுதற் தெய்வமாகிறார் என்று ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

அஞ்சிஅன்று அரிதான் ஓட அசுரனைக் குமர னாலே
துஞ்சுவித்து ஒருபெண் ணாலே தாரகன் உடல்து ணிப்பித்து
அஞ்சிடப் புரம்தீ யூட்டிச் சலந்தரன் உடல்கீண்டு ஓத
நஞ்சினை உண்டும் அன்றோ நாயகன் உலகம் காத்தான். [292]

இப்பாட்டல் உலகத்தின் காத்தல் கடவுள் சிவபெருமானே என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

அன்றொரு நாள் சூரபதுமனுக்கு அஞ்சித் திருமால் திருப்பாற் கடலை நீங்கி ஓடிச் சிவபெருமானிடத்தில் முறையிட்டதால் முருகனை உண்டாக்கி அக்கடவுளாலே சூரபதுமனை அழித்தார். மேலும் தாரகன் என்னும் அசுரனுக்கு அஞ்சித் திருமால் உள்ளிட்ட தேவர்கள் தன்னிடம் முறையிட்டதால் சிவபெருமான் காளி என்னும் சக்தியைக் கொண்டு தாரகனுடைய உடலைப் பிளந்தார். திரிபுரத்து அரக்கர்களுக்கு அஞ்சித் திருமால் உள்ளிட்ட தேவர்கள் எல்லாம் தன்னிடம் முறையிட்டதால் சிவபெருமான் திரிபுரத்தை எரித்தார். சலந்தரன் என்னும் அரக்கன் திருமாலைத் திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளாமல் விரட்டிட அஞ்சிய திருமால் தன்னிடம் முறையிட்டதால் சிவபெருமான் சக்கர ஆயுதத்தால் சலந்தரன் உடலைப் பிளந்தார். பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டு உலகையும் சிவபெருமான் காத்தார்.

விளக்கவுரை :

திருமாலுக்குக் காத்தல் தொழில் உரியது என்று இம்மதத்தார் கூறிட அதனை மறுத்துத் திருமால் உள்ளிட்ட

தேவர்களையும், உலகத்தையும் எவ்வாறெல்லாம் சிவபெருமான் காத்தார் என்று புராணங்களின் வழிநின்று கூறிச் சிவபெருமான் அனைவரையும் காக்கின்ற பெருமை படைத்தவன் என்பதை ஆசிரியர் இப்பாடலில் நிறுவுகிறார்.

குமரன் - முருகன், பெண் - காளி, புரம் - திரிபுரம், கீண்டு - பிளந்து.

பார்த்தனார் இரதம் ஏறிப் படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்தஅம் பாலே எய்து கொன்று அர சாளேன் என்னத்
தேர்த்தனில் இருந்து மாயை செய்துமால் கொல்லச் செப்பும்
வார்த்தைநூல் ஆக்கிக்கொண்டாய் புரங்கொல்நூல் மதித்தி டாயே.
[293]

இப்பாடல் கிருஷ்ணன் கீதை உரைத்ததால் அவன் தலைவன் என்பதை மறுக்கிறது.

பொருள் :

(அருச்சுனன் தேரில் நின்று போரிடத் தொடங்கும் போது) எதிரில் நின்ற படைகளைப் பார்த்தபோது அவர்கள் நட்பினராக, உறவினராகத் தோன்றினார்கள். அப்படிப்பட்ட அவர்களை அம்பாலே கொன்று அரசாள வேண்டியதில்லை என்று அருச்சுனன் சொல்ல, அங்கு தேர்ப்பாகனாக இருந்த கிருஷ்ணன் தன் சூழ்ச்சியால் பாரதப் போரை நடத்த முற்பட்டதோடு, அருச்சுனன் மனதைத் தெளிவிக்க அனைத்தையும் நாமே கொல்வேன், நீயன்று என்று மயங்கிச் சொன்ன சொல்லையே(கீதை) நூலாகக் கொண்டான் (என்று நீ அதனைச் சிறப்பிக்கின்றாய்) அவ்வாறானால் திரிபுரத்தில் உள்ளார் பூசனைகளைக் கைவிடமுடியாத ஒரு காலத்தில் திருமால் கூறிய மயக்க நூலையும் நூலாகக் கொள்ளலாமா.

விளக்கவுரை :

இப்பாடலில் புரங்கொல் நூல் மதித்திடாயே என்ற தொடருக்குப் பழைய உரை திரிபுரத்தில் உள்ளவர் சிவபூசையைக் கைவிடும் பொருட்டாக விஷ்ணு புத்தமுனியாக இருந்து தெய்வம் ஒன்றில்லை என்று மயக்குவித்துச்

சிவலிங்கத்தை கைவிடுத்த நூலையும் நீ நூலாகக் கொள்வாயா? என்பதாகும். இத்தகைய புராணக் கதையும் அக்காலத்து வழங்கி வந்திருக்கிறது என்பது தெரிகிறது. இப்பாடல் மூலம் கீதை கூறியவன் கிருஷ்ணன் என்ற பெருமையை நகையாட மற்றொரு புராணக் கதையைக் கூறியிருப்பது சிந்தனைக்கு உரியதாகும்.

பார்த்தன் - அருச்சுனன், சார்பை - நட்பும் உறவும் ஆனவரே, மாயை செய்து - சூழ்ச்சி செய்து, கொல்ல - பாரதப்போரினை நடத்தி எதிரிகளைக் கொன்றது.

மாயைதான் உயிர்கள் ஆகாது உயிர்கள்தாம் மாயை ஆகா
மாயவன் இவைதான் ஆகான் இவைதானும் மாயன் ஆகா
ஏயுமாம் அனாதி யாக இறைபசு பாசம் என்றே
தூயவன் கலப்பி னாலே எல்லாமாய்த் தோன்று வன்காண். [294]

இப்பாடல் திருமால் தலைவன் அல்ல என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

மாயையானது சடம் ஆகையால் அது ஆன்மாக்கள் ஆகாது. ஆன்மாக்கள் இச்சா ஞான கிரியைகள் உடையதால் அவை மாயையாகிய சடப்பொருள் ஆகாது. உன்னுடைய மாயவனும் (திருமால்) மாய வடிவை உடையவன் என்று நீ கூறுவதால் சடமாகிய மாயையாகவும் ஆன்மாக்களாகவும் நில்லான். மாயையும் ஆன்மாவும் கூடித் திருமால் ஆகமாட்டா. மாயையாகிய பாசமும் ஆன்மாவாகிய பசுவும் இவைகளை நடத்துகின்ற பதியாகிய இறைவன் அநாதியாகும். அநாதியும் நின்மலனும் ஆகிய (தூயவனாகிய) இறைவன் எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று எல்லாமாய்த் தோன்றுகின்றான். இதனை அறிவாயாக.

விளக்கவுரை :

இம்மதத்தார் எல்லா உயிரிடத்தும் இறைவன் கலந்திருக்கின்றான் என்று அல்லாது திருமால் அவதாரம் எடுத்து ஆன்மாவாக விளங்கினான் என்று கூறுவதால்

இதனைக் கொண்டு ஆசிரியர் அவன் தலைவன் அல்ல என்று மறுக்கிறார். மேலும் இறைவன் என்பவன் அநாதியானவன் என்றும் அவன் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்பானே அன்றிப் பொருளாக மாட்டான் என்ற அடிப்படையில் கூறி, திருமால் ஆன்மாவாக விளங்குவதால் (தசாவதாரம்) தலைவன் அல்ல என்று மறுக்கிறார்.

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி
ஆசற்ற ஆக மங்கள் அறைந்திட அறிவின்று இங்கே,
மாசற்ற மால்மா சாகி மாயையும் உறுவன் என்னில்
கூசிப்பின் கொள்வார் நல்லோர் உனக்காம்இக் குழப்பு நூலே. [295]

இப்பாடல் தசாவதாரத்தைக் கூறுகிற நூல்களை அறிஞர்கள் ஏற்கமாட்டார்கள் என்று கூறுகிறது.

பொருள் :

பசுக்களாகிய ஆன்மாக்கள் தம்மைப் பற்றுகின்ற அஞ்ஞானமாகிய பாசங்களிலிருந்து நீங்க பதியாகிய இறைவன் திருவடியை அடைதலே முத்தி என்று குற்றமற்ற ஆகமங்கள் கூறுகின்றன. அவ்வாறு இருந்தும் மாசற்ற திருமால் தானே மாயையும் ஆகி அறியாமை உடையதாகிய ஆன்மாவும் ஆகி (அவதாரமாகி) நிற்பான் என்று நீ கூறுவது அறிவுக்குப் பொருத்தமானதல்ல. அதனைக் கூறுகிற மயக்க நூல் உனக்கே உரியதாகும். அத்தகைய உன்னுடைய மயக்கமுடைய நூலை அறிஞர்கள் நூல் என்று சொல்லுவதற்கு நாணி அதனை ஏற்கவும் மாட்டார்கள்.

விளக்கவுரை :

திருமால் தசாவாதாரம் எடுத்த பொழுது இராம, கிருஷ்ண அவதாரங்களில் ஆன்மாவாக வாழ்ந்ததால் ஆகம நூல்கள் உரைக்கும் இறை தத்துவத்திற்கு முரணாகும் என்பதைக் கொண்டு ஆசிரியர் திருமாலை இறைவன் அல்ல எனக் கூறுகிறார். அவனை இறைவனாகும் கொள்ளும் நூல்களும் ஏற்புடையதல்ல என்கிறார்.

பிரமம்நான் என்ற போது பிரமனோடு அரியும் கூடி
பரமனார் இகலி டாமல் பார்த்துஇடர் பண்ணி நின்ற
உரமனார் அழல் உருபம் தன்னையும் உணர மாட்டான்
கரம்மன் ஆன் திகிரி ஏற்றான் கடவுள்என்று அறைவது என்னே.
[296]

இப்பாடல் அடி, முடி தேடியவரலாற்றால் திருமால் தலைவன் அல்ல என்று உரைக்கிறது.

பொருள் :

முன்னொரு காலத்தில் பிரமனோடு திருமாலும் கூடி நானே பிரமம் என்று ஒருவருக்கொருவர் மாறுபட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இவர்தம் அகந்தையை அழித்து உண்மையை உணர்த்துவதற்காகச் சிவபெருமான் அவர்கள் திருமுன் அழல் வடிவாய்த் தோன்றி உங்களில் ஒருவன் என் அடியையும், மற்றொருவன் என் முடியையும் தேடிக் காணுதல் வேண்டும். அவ்வாறு கண்டவரே பெரியவர் ஆவார் என்று கூறிட இருவரும் உடன்பட்டு அன்னமும், பன்றியுமாய் வடிவெடுத்து இருவரும் முடி, அடியைக் காணமாட்டாதவராய் விளங்கினர். இத்தகைய நிலையில் சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமாலைத் தலைவன் என்று சொல்லுவது எவ்வாறு?

விளக்கவுரை :

பன்றி வடிவு எடுத்த திருமால் சிவபெருமானின் அடியைத் தேட முடியாதவன் என்பதால் அவனைத் தலைவன் என்று சொல்லுவது பொருத்தமற்றது. இகலிடாமல் - சண்டையிடாமல், உரமனார் - சிவபெருமான், கரம்மன்ஆன் - கரத்தில் நிலைபெற்றுத் திகழுகின்ற.

தேர்அரி இறையன்று என்றே சிவமுனி ததீசி யோடே
போர்புரிந்து இகல மாலைப் புக்கவன் பிடித்து அடித்து
மார்பினில் உதைத்து மால்தன் சக்கரம் வயிற்றில் வைத்திட்டு
ஏர்மலி படைப டைத்திட்டு அரிபட எறிந்தான் அன்றே. [297]

இப்பாடல் திருமால் இறைவன் அல்ல என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

திருமால் இறைவன் அன்று என்பதை உணர்ந்து கொள்வாயாக. தசீசி என்னும் முனிவர் சிவபக்தர். இவருடன் திருமால் போர் புரிந்தபோது முனிவர் திருமாலின் மார்பை உதைத்து அவனது சக்கரத்தை முறித்து அவனுடைய வயிற்றிலேயே அச்சக்கரத்தை வைத்துவிட்டார். மேலும் தன்னுடைய சக்தியால் வேறொரு சக்கரப் படையைத் தோற்றுவித்து, அதன்மூலம் திருமால் மயங்கி விழும்படி செய்தார். (எனவே) திருமாலை இறைவன் எனக்கூறாய்.

சூலிகாண் இறை, மால் அல்லன் சூலியைத் தொழும்துர் வாசன்
மாலினார் மார்மி திப்பத் திருமறு மார்பன் ஆகி
நூலினார் மார்பன் நோன்தான் பட்டிடம் சுத்தம் என்று
பாலினார் கடலான் ஆங்கே பரிவொடும் திருவை வைத்தான். [298]

இப்பாடல் திருமறு மார்பனுக்குப் பொருள்கூறி இறைத்தன்மையை மறுத்தது.

பொருள் :

சூலத்தை ஏந்திய சிவபெருமானே இறைவன், திருமால் அல்ல. சிவபெருமானை வழிபாடு செய்த துர்வாசர் என்ற முனிவர் திருமாலின் மார்பில் மிதித்து வடுவை உண்டாக்கினார். அன்றிலிருந்து திருமால் திருமறுமார்பன் எனப்பட்டான். திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் அந்த வடு உள்ள இடம் தூய்மையானது என்று எண்ணி மார்பின் அவ்விடத்தில் திருமகளை வைத்தான்.

விளக்கவுரை :

திருமறு மார்பன் என்ற சொல்லைத் தம் கொள்கைக்கு ஏற்ப புராண வரலாற்றோடு இணைத்துத் திருமாலின் தலைமைப் பண்பை நகையாடுகிறார் ஆசிரியர்.

சூரி - சிவபெருமான், பாலினார் கடலான் - திருப்பாற் கடலான், திரு - திருமகள்.

தவகுண னாய்மால் சென்று தீவியைச் சக்கரத்தால்
அவகுணம் செய்துஅன்று ஓடப் பிருகுவந்து அவளைப் பார்த்துச்
சிவன்அலது அறியேன் ஆகில் இதுசெய்தோன் செறிக பத்துப்
பவம்என மொழிய மாலும் பயப்பட்டுப் பதறி வீழ்ந்தான். [299]

இப்பாடல் தசாவதாரத்தின் நிகழ்வைக் கூறியது.

பொருள் :

முன்னொரு காலத்தில் பிருகு முனிவரின் மனைவியான தீவியைத் திருமால் விரும்பி முனிவர் இல்லாத நேரத்தில் அவளை புணரும்படியாகச் சொல்ல அதற்கு அவள் உடன்படவில்லை. எனவே அவளுடைய உடம்பில் சக்கராயுதத்தால் புண்கள் உண்டாகும்படி செய்து விட்டுச் சென்றார். அதனை அறிந்த முனிவர் சினம் கொண்டு நான் சிவனது அடியவன் என்பது உண்மையானால் இதனைச் செய்தவன் பத்துப்பிறப்பு எடுப்பானாக என்று சபித்தார். இதனை அறிந்த திருமால் பயப்பட்டுப் பதறி வீழ்ந்தார்.

விளக்கவுரை :

தசாவதாரத்திற்குப் புராணக் கதை ஒன்றை ஆசிரியர் கூறி அவதாரம் இரட்சிப்பதற்காக அல்ல, சாபத்தால் விளைந்தது என்று நகையாடுகிறார். தவகுணம் - திருமால் தீவியிடம் தவகுணத்தில் சென்றான். அவகுணம் - நற்குணத்திற்கு மாறுபட்ட செயல், பத்துப்பவம் - பத்துப்பிறப்பு.

பயப்பட்டுப் பரனை நோக்கித் தவம் பண்ணப் பரனும் தோன்றி
நயத்து அஞ்சல் என்று வேண்டிற்று என்னென நாரணன்தான்
பெயர்த்தருள் பிருகு சாபம் என அன்பன் பிருகு என்ன
உயக்கொள்நீ பவம்தோறு என்ன ஓம்என்றான் உலக நாதன். [300]

இப்பாடல் முன்பாடலின் தொடர்ச்சியாகும்.

பொருள் :

பயப்பட்டு வீழ்ந்த திருமால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். தவத்தின் பயனாய்ச் சிவபெருமான் தோன்றி அஞ்சவேண்டாம், நீ யாது வேண்டினாய் எனக் கேட்டார். திருமால்

பிருகுமுனிவன் அளித்த சாபத்தைத் தீர்க்க வேண்டும் என்றான். ஆனால் சிவபெருமானோ என் அன்பன் இட்ட சாபத்தை நீக்கமுடியாது என்றார். உடனே திருமால் அப்படியானால் எடுக்கும் பத்துப் பிறப்புந்தோறும் என்னைக் காத்தல் வேண்டும் என்றார். சிவபெருமானும் அதற்கு உடன்பட்டுக் காப்பேன் என்றார்.

இப்படிப் பிருகு சாபத்து ஈரைந்து பிறப்பில் வீழ்ந்து
மெய்ப்படு துயரம் உற்று வருபவன் விமலன் அல்லன்
எப்படி யானுஞ் சொன்னேன் இறைஅரி அல்லன் என்றே
மைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கி டாயே. [301]

இப்பாடல் முன்பாடற் தொடர்ச்சி.

பொருள் :

இவ்வாறு பிருகுமுனிவரின் சாபத்தினால் பத்துப் பிறவிகள் எடுத்துத் திருமால் ஒவ்வொன்றிலும் துன்பமுற்றான். இவ்வாறு துன்பமுற்றவன் மலக்கட்டிலிருந்து நீங்கிய இறைவன் ஆகமாட்டான். எவ்வாறு நோக்கினும் திருமால் இறைவன் அல்ல. நஞ்சுண்ட கறையை உடைய சிவபெருமானே முழு முதற் கடவுள். அவனுடைய திருவடிகளை வணங்குவோமாக.

விளக்கவுரை :

அருணந்தியார் பிறமத மறுப்புகளின் இறுதியில் பாஞ்சராத்திரி மதத்தின் கருத்துக்களை மறுக்கும்பொழுது பத்து அவதாரங்களை மறுப்பதே தம் மறுப்புக் கொள்கையாகக் கொண்டமையால் பத்து அவதாரங்கள் எடுத்தற்குரிய காரணமாகப் பிருகுமுனிவரின் புராணத்தைக் கூறித் திருமாலை முழுமுதற் இறைவனாகக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்துவது குறிப்பிடத் தக்கதாகும். இப்பகுதியினை நிறைவு செய்யும் பாடல் இது ஆதலால் ''மைப்படி கண்டன் அண்டன் மலரடி வணங்கிடாயே'' என்று முடிக்கிறார் ஆசிரியர்.

சிவஞான சித்தியார் பரபக்கம் விளக்கவுரை நிறைவுற்றது.

****

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
அங்கியானது	52	அறிந்திடா	78
அங்குரம்	108	அறியான்	263
அஞ்சி அன்று	292	அறிவதே	137
அணுவான	178	அறிவாய்	221
அநாதிமுத்த	134	அறிவினொடு	259
அநாதியேல்	50	அறிவு உடற்	43
அந்தவாய்	147	அறிவுதான்	53
அயன்தனை	275	அறிவு பூத	42
அரிசனம்	141	அனைத்தினை	95
அரியினொடு	100	அன்றியும்	290
அருவுணர்வு	125	ஆசையுற்று	60
அருகனுக்கு	151	ஆதிதான்	271
அருஞ்செயலின்	205	ஆதிநடு	02
அருந்தவனாம்	204	ஆதியாய்	264
அருமறை	05	ஆனந்தம்	207
அருவமே	23	ஆமையாய்	281
அருவம்	213	ஆயம்உடன்	214
அருவெனில்	89	ஆரணங்கள்	252
அர்த்தம்	219	ஆர்வகோப	154
அலகின்	229	ஆறு காரியங்	161
அலகிறந்த	99	ஆறு தாதுக்	227
அலைகடல்	269	ஆனஐம்பொறி	40
அவயவம்	138	ஆனகன்ம	232
அழிகின்ற	202	இங்கு அடா	283
அழித்திடும்	93	இச்சையால்	126
அழிந்துணர்வை	113	இச்சை வெறுப்பு	273
அழிப்பு அரி	278	இடித்து மின்னி	34
அறத்தின்	152	இந்திர	12
அறிகின்ற	200	இந்திரிய	123

பாடல்	பாடல் எண்
இந்நூலை	103
இப்படிப்பிருகு	301
இப்படிஅன்றி	17
இயம்புகின்ற	255
இயம்பு	04
இயல்புகாண்	45
இருபான்மை	176
இருளில்பழுதை	223
இருள்பொதிந்	249
இலகுசோதி	239
இல்லதுகருணை	86
இறந்திடும்	54
இறைவனை	11
இன்பபூமி	156
இன்பம் எய்தி	49
இன்பொடு	21
ஈங்குவான்	76
ஈசன்அருள்	03
ஈசனார்	27
ஈண்டுஅளவை	12
ஈறிலாதன	144
உடல்நின்று	198
உடல்பூதம்	109
உடல்வருந்தல்	162
உணர்வுகார	117
உணர்வுகார்	74
உண்டுஒரு	183
உந்தியால்	265
உயிரானவை	177
உயிரினை	80
உருஇயல்	67
உருவமும்	20
உருவம்எலாம்	111
உருவாதி	120
உருவின்கணே	196
உருவொடு	88
உரைதந்திடான்	195
உரைபோல்	215
உரையான - உ	212
உரையான - பு	208
உலகம்தானும்	224
உலகினை	84
உள்வழக்கு	73
உள்ளதாவது	33
உள்ளதுகடாதி	85
உற்றிடும்	182
உற்றெழு	91
உன்னிய	185
உன்னில்	251
உன்னுகின்ற	256
ஊடுவது	31
எங்கள்	90
எங்குமாய்	81
எங்கும்	248
எப்பொருட்கும்	127
எப்பொருளும்	107
எழுதலம்	282
எனக்குநீ	83
என்னுயிர்	165
என்றுமிலாது	110
ஏகம்நானென	235
ஏணதுஒன்று	160

பாடல்	பாடல் எண்
ஏழ்கடல்	267
ஐந்து கந்தம்	133
ஐந்து நான்கு	41
ஒத்து நின்று	247
ஒத்து உறு	15
ஒரு காலத்து உண	116
ஒரு காலத்து ஓரி	124
ஒரு கோட்டன்	01
ஒரு பொருளை	101
ஒரு மரத்தின்	130
ஒருவன் என்று	70
ஒன்றாம் இரவி	222
ஒன்றினை	171
ஓங்கிய	94
ஓதிய வாசு	287
ஓதியே உலகம்	241
கடத்தினில்	139
கண்டநூல்	158
கண்ணினில்	170
கந்தம்	48
கரணம்	55
கருதிய	192
கருமங்கள்	203
கருவிகண்	145
கருவிதன்	153
கருவியும்	140
கருவிஎல்	231
கழிந்தஉணர்	122
காணொணா	51
காண்டலே	35
காமமாதி	62

பாடல்	பாடல் எண்
காயத்தின்	22
காயமுடன்	121
காரணகாரி	71
காரணம்	46
காரியமாய்	128
குடைநிழலும்	132
குரோத	61
குற்றவீடு	69
கூடாஅணு	180
கூறுகூவல்	164
கூறுசேர்	39
கேடிலா	114
கைவரை	289
கொண்டுமுன்	169
கொன்றிடல்	92
கோசஉரு	228
சந்தானம்	115
சாற்றிய	82
சாற்றுபெயர்	14
சாற்றும்மறை	234
சித்தே	254
சிலபொருளை	96
சீவகர்கள்	276
சுத்தம் ஆனது	250
சுத்தவடிவு	09
சுத்தன்	261
சூடகம்	258
சூலிகாண்	298
செயல்தரு	190
செய்திடும்	18
செய்தியும்	186

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
சொல்லது	155	நீர்போல	98
சொல்வந்து	211	நூலினை	274
சொன்னநால்	75	நூலுரை	106
சோதிமாமணி	246	நெல்லில்	216
ஞாலம்உண்ட	291	பசித்தல்	146
ஞானஞேய	79	பசுப்படுத்து	193
தப்பிலா	187	படிக்கும்	63
தவகுண	299	பண்டைமறை	06
தாங்கும்	225	பயப்பட்டு	300
தாதுவானது	272	பரசுடன்	286
தானம்என்று	284	பரந்து	149
தானேதானாய்	233	பரிணாமம்	209
தின்னும்	131	பழுதிலா	36
தேர்அரி	297	பற்றது	245
தேவரும்	184	பாசத்தை	295
தையலார்	28	பார்த்தனார்	293
தோல்இரத்தம்	59	பார்புனல்	167
தோற்றிய	72	பிரமம்	296
நாரணன்	277	பின்வரும்	288
நானேபிரம்மம்	220	புண்ணிய	174
நித்தமாய்	189	புத்தனவன்	105
நிறைந்து	157	புருடன்	262
நிறைவெங்கு	201	புற்றின்	240
நிற்றலோடு	148	பூதத்தே	24
நீடுபாவ	159	பூதம் அதின்	16
நீடுபுகழ்	08	பூதமானவை	56
நீடுவேதம்	236	பூதம்மேவு	47
நீதியால் ஒளி	237	பூதம் ஆனவை	37
நீதியால் நித்த	191	பூமா எனவே	210
நீதியார்	64	பூர்வ கன்ம	163
நீரின் வந்து	38	பெறுவதிங்கு	87

பாடல்	பாடல் எண்
பேயும்நர	119
பேரிழவு	173
பொய்கை	268
பொருளது	142
பொருள்இத்	218
பொன்குலாவு	58
போகத்தை	225
போக்கொடு	188
போதமிகு	10
போதமும்தவிர	136
போதமும் மெலி	44
போதமுண்டு	77
போதமே	135
போற்றும்	230
மண்புனல்	68
மதிநிலா	30
மரங்கள்	129
மருத்து	112
மருவிய	66
மறைநின்று	197
மன்னும்மறை	253
மன்னும்பிர	226
மாயநூலது	243
மாயமான்	285
மாயைதான்	270
மாயையாய்	294
மாய்ந்து	19
மால்அயன்	07
மாலினார்	280
மிகையாம்	179
மீன்ஆமை	266
முடிவின்றி	199
முத்திநிலம்	97
முழுதுணர்ந்து	65
முன்கண்ட	217
முன்நூலும்	104
முன்னாக	102
மூலம்புரி	260
வரம்பிலா	166
வாசமாமலர்	143
வாசமார் குழலி	29
வாராநெறி	175
வாழவே	26
வானம்கீழ்	279
வித்தெழுந்து	257
வினையுணர்வு	118
வீட்டினை	32
வெண்மை	172
வேதம்சுய	194
வேதமே ஓதி	181
வேதன்நாரா	57
வேறது ஆகி	242
வேறதாகும்	244
வேறுபலன்	206
வேறுவாயில்	238

சமயக்குரவர் நால்வர் வணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூர் திருத்தாள் போற்றி.

சந்தானக்குரவர் நால்வர் வணக்கம்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள் புரிந்த
அருள்நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லை நகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.



Sree Vinayaga,Mdu-10.Ph:600300